வெள்ளிக்கிழமை

முகூர்த்தநாள்



சாவிடப்பிள்ளை

34, சிந்தாமணி :: திருச்சி-2

பேராசிரியர். தி.வ. மெய்கண்டார் அவர்களின்
அன்பளிப்பு

இரண்டாம் பதிப்பு : 1968

உரிமையுடையது.

விலை ரூ. 2-50

சக்திவேல் பிரஸ், திருச்சிராப்பள்ளி-2.

வெள்ளிக் கிழமை

1

"விடிந்தால் வெள்ளிக்கிழமை, எனக்கு மிக விசேஷமான நாள் என் வாழ்வில் எத்தனையோ வெள்ளிக்கிழமைகள் வந்து போய்விட்டன; இன்னும் வர இருக்கின்றன. ஆனலும் இந்த வெள்ளிக்கிழமைக்கு மட்டும் இவ்வளவு பெரிய சிறப்பு எங்கிருந்து வந்தது! நினைக்க நினைக்க நெஞ்சு இனிக்கிறது. வியப்பு பெருகிடுகிறது. இளம் வயதிலே—பள்ளிப் பருவத்திலே என் அன்பைப் பெற்ற கிழமை ஞாயிற்றுக்கிழமை யொன்றுதான். இப்போதோ—ஆயிரம் ஞாயிற்றுக்கிழமைகள் வந்தாலும் நாளை வரப் போகிற ஒரு வெள்ளிக்கிழமைக்கு ஈடாகுமா—என்ற கேள்வி என் இருதயத்திலே கொடி போட்டுக்கொண்டு குதிரைமீது செல்லும் மாவீரனைப் போல கம்பீரமாக எழுகிறதே; அது எப்படி?

இன்று மாலையிலே தெருவிலே பிச்சை யெடுத்துக் கொண்டு போயிற்று ஒரு பரதேசிக் கும்பல். அதிலே ஒருவன், "குதிரை பிறந்தது வெள்ளிக்கிழமை ராஜா தேசிங்கு" என்று பாடிக்கொண்டே போனான். நான் ராஜா தேசிங்கு பெரிய எழுத்துப் புத்தகத்தில் அந்தப் பாட்டை எத்தனையோ முறை படித்துமிருக்கிறேன்; கேட்டுமிருக்கிறேன். அப்போதெல்லாம் இல்லாத உணர்ச்சி இன்று மட்டும் ஏற்படுவானேன்! ராஜா தேசிங்கின் குதிரை வெள்ளிக்கிழமை பிறந்தால் என்ன, சனிக்கிழமை பிறந்தால் என்ன; அல்லது பிறக்காமலே போனால்தான் என்ன என்று அலட்சியச் சிரிப்பு கொட்டிய என் உள்ளத்திலே இப்போது மட்டும் அந்த கிராமீயப் பாட்டு ஆழப்பதிந்து ஏதேதோ

இன்பக்கனவுகளை உற்பத்தி செய்வதின் மர்மந்தான் என்ன? அடுத்தத் தெருவில் இருக்கும் என் தோழி கிளியோ–அவளது கிருஸ்தவ மதத்திற்கு ஆண்டிலே ஒரு வெள்ளிக்கிழமை மகாத்மியம் பொருந்திய வெள்ளிக்கிழமை யென்றும்—அன்று ஏசுநாதருக்கு ஏற்றநாளென்றும் கூறி சர்ச்சுக்குப் போவாள். அப்போதெல்லாம் வெள்ளிக் கிழமைக்கு என் நெஞ்சத்தில் இவ்வளவு பெரிய முக்கியத் துவம் ஏற்பட்டதேயில்லை.

'வெள்ளிக்கிழமையும் அதுவுமா–வீடு வாசல் சுத்தம் செய்யாமல்–சாணமிட்டு மெழுகாமல்—கோலமிட்டு அழ கூட்டாமல்—குடும்பப் பெண் இப்படிச் சோம்பேறித்தன மாக இருக்கலாமா?' என்று பல வீடுகளில் மாமியார்கள் போராட்டத்திற்குத்துவஜாரோகணம் செய்வதை நான் கண் டிருக்கிறேன். வீட்டுக் குலதெய்வத்திற்கு வெள்ளிக்கிழமை மாலையிலே நல்ல விளக்கு ஏற்றிவைத்து படையல் போடுவ தையும் பார்த்திருக்கிறேன்.

பெண்களுக்கு–மாங்கல்யம்—மஞ்சள்—குங்குமம் எவ் வளவு புனிதமானதோ, அவ்வளவு புனிதமானது வெள் ளிக்கிழமையும் என்று எங்கள் தெருவில் நடந்த விகடக் கச்சேயொன்றில் பாகவதர் குறிப்பிட்டு தெருப்பெண் களின் ஏகோபித்த பாராட்டுதலைப் பெற்றதும் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. கிழமைகளின் பெயரை யாரா வது அடுக்கிக்கொண்டு போகும்போது எனக்கு சிரிப்பு பொங்கிக்கொண்டுவரும்.

திங்கட்கிழமை—சோமவாரம்! சோமவார விரதத்திற்கு திவ்யமான நாளாம்! 'செவ்வாயோ வெறுவாயோ' என் பார்கள்! பொன் அகப்பட்டாலும் புதன் அகப்படாதாம்— அவ்வளவு அருமையானதாம் அந்தக் கிழமை. செவ்வாய்க் கிழமை இரவு தூங்க ஆரம்பித்து வியாழக்கிழமை காலையில் எழுந்திருக்கிறானே; அவனுக்குத்தான் புதன் அகப்படாது என்று நான் கிண்டல்கூட செய்வேன். இப்படியெல்லாம் கிழமைகளைப்பற்றி கிழங்கள் வர்ணிக்கும்போது அவைகளை

கேலிக்குரியதாக ஆக்கிய என்னை இந்த வெள்ளிக்கிழமை- அதுவும் நாளைக் காலையில் வர இருக்கிற வெள்ளிக்கிழமை- இப்படிக் கவர்ந்து விடுவானேன்!

உலக உத்தமர் மகாத்மா காந்தி கொல்லப்பட்ட நாள் கூட வெள்ளிக்கிழமைதான். உலக மக்களின் கண்ணீரால் குளிப்பாட்டப்பட்டு — பெருமூச்சுக்களால் அலைக்கழிக்கப் பட்டு-மறைந்துபோன வெள்ளிக்கிழமை! அந்த வெள்ளிக் கிழமை, காந்தியின் சவத்தை ஏந்திய மடியாகமட்டுமின்றி, என்னைக் களிப்பிலாழ்த்தும் மஞ்சமாகவும் மாறிடும் சக்தி வாய்ந்தது என்பதை இப்போதுதான் உணருகிறேன். உணருகிறேனா...அல்லது ஏதாவது உளருகிறேனா? சே! சே! வாய்விட்டுப் பேசிவிட்டோம் போலிருக்கிறதே—யார் காதிலாவது விழப்போகிறது! விழுந்தால் காலையில் ஊர் முழுவதும் தம்பட்டமடித்து நம் தலையைக் குனியவைத்து விட்டுத்தான் மறுவேலை பார்ப்பார்கள்!''

சிந்தாமணி, படுக்கையில் புரண்டுகொண்டேயிருந்தாள் சிந்தனை அலைகள் அவள் உள்ளத்திலே புரண்டு புரண்டு எழுந்தன.

தலையைத் தூக்கி சுற்று முற்றும் பார்த்துக்கொண் டாள், யாராவது விழித்துக்கொண்டிருக்கப் போகிறார்கள் என்ற அச்சம் அவளை அப்படிச் செய்யவைத்தது.

அருகிலிருந்த விளக்கைத் தூண்டிவிட்டு சுவரில் தொங்கிக்கொண்டிருந்த கடிகாரத்தை நோக்கினாள். மணி ஐந்து! அதேசமயத்தில் அவள் வீட்டுத் தெருக்கோடியில் உள்ள கடிகார மண்டபத்திலேயிருந்து ஐந்து பெரிய ஓலி கள் எழுந்து, பொழுது விரைவில் விடியப்போகிறது என்பதை அவளுக்கு அறிவித்தன. மணிக்கூண்டு கடிகாரக் கணக்குப்படி வழக்கமாகக் கூவிக்கொண்டிருக்கும் சேவலும் தனது 'கொக்கரக்கோ' கீதத்தை ஆரம்பித்து சூரியனுக் குத் திருப்பள்ளி எழுச்சி பாடிற்று! சிந்தாமணிக்கு அப் போதுதான் ஆச்சரியம் அளவுகடந்து போயிற்று; இரவு முழுதும் தூங்காமலிருந்திருக்கிறோமே என்று!

சேவலின் முழக்கத்தை அவள் எத்தனையோ நாள் கேட்டிருக்கிறாள். அத்தனை நாளும் அதைப்பற்றி அவள் சிந்தனை செய்தது இல்லைதான்! சேவல் என்பது ஆண்— பெட்டை என்பது பெண். இதையெல்லாம் இப்பொழுது ஏன் அவள் நினைத்து தனக்குத்தானே புன்னகை புரிகிறாள்! சேவல் கூவுகிறது, தன் வாழ்க்கையிலும் சேவல் கூவும் கட்டம் வந்து விட்டதா அவள் எண்ணுகிறாளா? அந்த இன்ப நினைவுகளால் தனக்குத்தானே வெட்கப் பட்டுக்கொள்கிறாளா? மணிக்கூண்டுக் கடிகாரம் — பெரிய கோயில் மணி, இவைகள் எல்லாம் விடியற்காலையில் எப் போதும்போல் தங்கள் கடமையைச் செய்துகொண்டு தானிருக்கின்றன. மணிக்கூண்டு யந்திரத்தில் பழுது ஏற் பட்டாலன்றி, ஆலயத்து மணிக்காரன் தூங்கிவிட்டாலன்றி அந்த வைகறை யொலி நிற்பதேயில்லை. ஆனால் சிந்தா மணியின் இருதயத்திலே மட்டும் என்றுமில்லாத யாழ் ஒலி முழங்குகிறது! இந்த ஒலி வழக்கமாக ஒலிக்கும் கடிகார ஒலியோ — ஆலய மணி யொலியோ அல்ல! அவை களினும் மேம்பட்ட ஒலி!

வைகறையில் சங்கு ஊதும் தாதன் தெருவிலே போகி றான். அமைதிப் படுக்கையிலே சுருண்டு முடங்கிக்கிடந்த இரவு, அசதியை உதறிவிட்டு சோம்பல் முறித்தபடி எழுந்து உட்காருகிறது போலும்—அந்த ஊமைச் சத்தந் தான் தாதனின் சங்கு மூலம் வெளிப்படுகிறதோ என்னவோ? தெள! தெள!! தெள!!! இந்தச் சங்கு முழக்கம் சிந்தாமணியை எங்கேயோ ஒரு புதிய உலகத்திற்கு அழைப்பது போலவே அமைந்துவிட்டது. "ஊதுகிற சங்கை ஊதிவைத்தால் விடிகிற பொழுது விடியட்டுமே!" என்று பழமொழி சொல்வார்கள். சேவல் கூவுவதாலோ. தாதனின் சங்காலோ-ஆலய மணியாலோ-பொழுது விடி வதில்லை யென்பது அவளுக்குந் தெரியும். ஆனால், அன்று மட்டும் அவர்களால்தான் பொழுது விடியப்போகிறது என எண்ணி, பொழுது விடியக் காரணமாக இருக்கும் சேவலை—தாதனை—ஆலயத்து மணிகாரனை—மணிக்கூண் டுக் கடிகாரத்தை அவள் வாழ்த்திக்கொண்டேயிருந்தாள்.

அவர்கள் எல்லாம் சேர்ந்துதான் மலையடிவாரத்திலோ —கடலுக்கடியிலோ தூங்கிக்கொண்டிருக்கும் கதிரவனை எழுப்பிவிடுகிறார்கள் என்று நினைத்தாள். கதிரவன் கனாத்துத் தூங்கிவிட்டால், வெள்ளிக்கிழமை வருவதற்கு நேரமாகிவிடும் என்று அவள் பயந்தாள். தாதன் போனதும்—'நல்ல காலம் பிறக்குது—நல்ல காலம் பிறக்குது!' என்ற பரம்பரைப் பல்லவியுடன் பவனிவரும் குடுகுடுப்பைக்காரனின் கூச்சல்! அது அவளுக்கு கூச்சலாகவா இருந்தது!

குடுகுடுப்பைக்காரர்கள் இரவு நேரங்களில் மயானத்தில் படுத்திருப்பார்களாம். அப்போது அவர்கள் கனவில் இஷ்ட தேவதைகள் தரிசனமாகி, அந்த ஊரில் யார் யார் வீட்டுக்கு நல்ல காலம் வரப்போகிறது. எங்கெங்கே 'அய்யோன்னு' ஒருத்தன் போகப் போருன் என்ற செய்திகளையெல்லாம் பட்டியல் போட்டுத் தந்து விடுவார்களாம். அந்தப் பட்டியலை குடுகுடுப்பைக்காரன் பொழுது விடிவதற்குள் ஊரில் சொல்லிவிடவேண்டுமாம். அதற்காகவே விடியற்காலை ஒருமுறை வந்து இஷ்ட தேவதை சொன்னதாக ஏதேதோ சொல்லிவிட்டுப் போவான். பின்னர்—பொழுது விடிந்தபிறகு மறுபடியும் ஒருமுறை வந்துபழைய துணிக்காக இரவு பாடிய பல்லவியைக் கொஞ்சம் புதுப்பித்து மெருகேற்றிப் பாடுவான். இது அவ்வளவும் அவன் பிழைப்புக்காக ஏற்படுத்திக்கொண்ட பொய்யுரைகள் என்பதை சிந்தாமணி நன்கு அறிவாள். அவள் வீட்டிலே இதுவரை குடுகுடுப்பைக்காரனுக்கு ஒரு கிழிந்த பழைய துணியும் போட்டது கிடையாது. இப்போது மட்டும் அவனுக்கு ஒரு புதிய துணி உடனே கொடுக்கவேண்டும் போலிருந்தது அவளுக்கு! "நல்ல காலம் பிறக்குது!" என்று அவன் சொல்கிறானும்! என்ன பைத்தியக்கார நினைவு!

"குடு குடு குடு!" அவன் கையிலேயுள்ள குடு குடுப்பை-குழந்தைகளைப் பூரிக்கவைக்கும் கிலுகிலுப்பை போல புதிய சக்தி பெற்றதோடு -- அவளையும் குழந்தைபோல ஆக்கி விட்டது. சிந்தாமணி படுக்கையை விட்டு எழுந்து பலகணி வழியே வீதியை நோக்கினாள். கிழக்கு வானம் வெளுக்கத்

துவங்கிவிட்டது. சிந்தாமணியின் எதிர்காலத்தைப் பற்றிய புதிய அறிவிப்பா அது? அதோ, உழுவர்கள் மாடுகளை ஓட்டிக்கொண்டு கலப்பைகளைச் சுமந்தவாறு கழனி நோக்கிப் புறப்பட்டுவிட்டார்கள்!

வயலுக்குச் சென்றதும் மாடுகளைக் கலப்பைகளில் பூட்டுவார்கள்! குடும்பத்தை கலப்பைக்கும் கணவன் மனைவியை அந்த மாடுகளுக்கும் ஒப்பிட்டுப் பேசுவார்களே; அப்போதெல்லாம் சிந்தாமணி வாய்விட்டுச் சிரித்து-கலப்பையிலே பூட்டுகிற மாடுகள் இரண்டும் காளைகளாயிற்றே, அப்படித்தான் குடும்பத்திலும் இரு ஆண்கள் வாழ்க்கை நடத்துகிறார்களா?' எனக்கேட்டுக் கேலிசெய்வாள்! இப்போது அவள் கண்ணெதிரேதான் காளைகளும், கலப்பைகளும், கலப்பை சுமக்கும் உழவர்களும் தென்படுகிறார்கள். இப்போது அந்தப் பழைய கேலி—கிண்டல் எல்லாம் எங்கேயோ போய் ஒளிந்துகொண்டுவிட்டன. இல்லறத்தை நடத்த இருவரின் அன்பும் ஒத்துழைப்பும் தேவை என்பதை வலியுறுத்தவே அந்த உதாரணம் பெரியவர்களால் கையாளப்பட்டது என்ற உண்மையை உலகிற்கு எடுத்துச் சொல்ல அவள் தயாராக நின்றுகொண்டிருப்பது போலக் காணப்பட்டாள்.

இரவு — முல்லை மலர்கள் பூத்துக் குலுங்கிய வானச் சோலையில்—இப்போது தன்னந்தனியாக ஓரே ஒரு செம் பருத்திப் பூ மட்டும் காட்சியளித்தது! அதுவும் கிழக்கு திசையில்!

இரவு முழுதும் எண்ணங்களால் சூழப்பட்டு — தூங்காமல் தொல்லைப்பட்டு — அந்தத் தொல்லையிலும் ஒரு சுகங் கண்டு — புதியதோர் பாதையிலே அடியெடுத்துவைக்கும் ஆனந்தத்தோடு புறப்பட்ட அவளுக்கு-கிழக்கிலே காணப்பட்ட இளங்கதிர், அபாயம் அறிவிக்கும் ஒரு சிகப்பு விளக்குப் போலவும் தென்பட்டது! திடுக்கிட்டாள். பின் சமாளித்துக்கொண்டாள்.

இன்னும் சிறிது நேரத்தில் தோழிகள் வந்துவிடுவார்கள் நீராட அழைப்பதற்கு! தினந்தோறும் தோழிகள் வந்துகொண்டுதானிருக்கிறார்கள். கிராமத்திலும் சேராமல் — நகரத்திலும் சேராமல் — நடுநிலைமை வகிக்கிற வேதபுரத்துப் பெரியகுளம் காலை ஏழு மணி வரையிலே அந்தப் பகுதியிலேயிருக்கிற பெண்களுக்குத்தான் சொந்தம். பருவப் பெண்கள் அதிகாலையிலேயே கூட்டைவிட்டுப்புறப்படும் புறுக்கள் போல வீட்டை விட்டுப் புறப்பட்டு ஆண்கள் நடமாட்டம் ஆரம்பமாவதற்குள் தங்கள் கடமைகளை முடித்துக்கொண்டு வீட்டில் போய் அடைந்துவிடுவார்கள். அப்படிக் கிளம்பும் புறுக் கூட்டத்தின் ஒரு பகுதியிலே சிந்தாமணி அங்கம் வகிக்கிறாள். அவளும் பருவக் கொடியன்றோ! அந்தக் கூட்டத்திலேயே காலையில் சிறிது தாமதமாகப் படுக்கையைவிட்டு எழுவது சிந்தாமணிதான்!

தோழிகள் வந்து தொல்லை கொடுத்து எழுப்பி அவளை நீராட அழைத்துச் செல்வார்கள்.

அதிலே யொருத்தி திருப்பாவையை மனப்பாடம் பண்ணியவள் — அவள் பெயரும் ஆண்டாள்தான்! அவள் தினந்தோறும் ஒரு திருப்பாவை பாடி சிந்தாமணியை எழுப்புவாள் —

''உங்கள் புழக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பினகான்
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய்! நாணுதாய்!''

எனப் பாடுவாள் இசையோடு! இன்னொருத்தி,

''எல்லே! இளங்கிளியே இன்னம் உறங்குதியோ?''

என்று கூச்சல் போடுவாள். இப்படியெல்லாம் கொட்டமடிக்கும் தோழிகள் — இப்போது வரப்போகிறார்கள். அவர்களுக்கு நேராக அவள் விழித்துக்கொண்டு இருந்தால் —

'இத்தனை நாள் இல்லாமல் இன்று மட்டும் எப்படியடி அதி காலையில் விழித்துக்கொண்டாய்?'' என்று கேட்பார்கள்— அதற்குப் பயந்துகொண்டு சிந்தாமணி தூங்குவதுபோல படுத்துக்கொண்டாள்.

வழக்கம்போல தோழிகள் வந்துவிட்டார்கள். சிந்தா மணி கண்களை இறுகமூடிக்கொண்டு அயர்ந்து தூங்குவது போலப் பாசாங்கு செய்துகொண்டிருந்தாள். ஆண்டாள் பாட ஆரம்பித்துவிட்டாள் திருப்பாவையை!

'' தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரியத்
தூபம் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமன்மகளே! மணிக்கதவம் தாள் திறவாய்!''

என்றபடி சிந்தாமணியின் அழகிய கருவிழிகளை மூடி யிருக்கும் இமைக் கதவுகளைத் தன் விரல்களால் திறந்து விட்டாள் ஆண்டாள். நன்றாகத் தூங்கியவள்போல சிந்தாமணியும் கண்களைக் கசக்கிக்கொண்டு எழுந்து உட்கார்ந்தாள்.

உப்! இப்போது.....நாங்கள் உன்னைத் திருப்பாவை பாடி எழுப்புகிறோம், இன்னும் கொஞ்சநாள் போனால் அவரை எழுப்பி அவரது நண்பர்கள் திருப்பாவை பாடுவார்கள்!''

''யாரையடி! யாரை?'' என்றபடி சிந்தாமணி வெட்கித் தலை குனிந்து கொண்டாள்.

'' அவரைத்தான், அதுவும் எப்படி எழுப்புவார்கள் தெரியுமா? அடி ஆண்டாள்! அந்தத் திருப்பாவையைப் பாடிக்காட்டடி!'' என்றாள் ராதா!

ஆண்டாள் திருப்பாவையைத் தொடங்கினாள்.

'' குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டிலின்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறிக்
கொத்தலர் பூங்குழல் நப்பின்னைக் கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா வாய்திறவாய்!''

ஆண்டாள் பாடி முடிப்பதற்குள் சிந்தாமணிக்கு ஆத்திரமும் வெட்கமும் தாங்கமுடியவில்லை.

"ஆண்டாள்! இது என்ன விகாரமான பாட்டு! நிறுத்து! நிறுத்து!" என உத்தரவு போட்டாள் சிந்தாமணி.

"இது இந்த ஆண்டாளின் பாட்டில்லையடியம்மா; பெரியாழ்வாரின் திருப்புதல்வி ஆண்டாள் அம்மை, பெருமாளே நோக்கிப் பாடிய பக்திரசப் பாட்டாகும்பெண்ணே!" எனக் கூறிச் சிரித்தாள் ஆண்டாள். அந்தப் புருக்கூட்டமே நகை முழக்கம் செய்துகொண்டு புறப்பட்டது திருக்குளம் நோக்கி!

சிந்தாமணி, தனது சிறுத்த இடையில் செப்புக்குடம் தாங்கி நட்சத்திரங்களுக்கிடையே நிலவு போல நடை போட்டாள். தாமரையில்லாத அந்தத் தடாகத்திற்கு அவள் தாமரையானாள். தந்தமோ-தங்கமோ என மயங்கிடும் நிலையிலுள்ள அவளது அழகுமேனி முழுமையும் சுவைத்திடும் பாக்கியம் அவள் உடுத்தியிருக்கும் பச்சை வர்ணச் சேலைக்குக்கூட கிட்டுவதில்லை; அந்தப் பளிங்கு நீர்த் தடாகம் அந்தப் பெரும் பாக்கியத்தை நாள்தோறும் அதிகாலையில் பெற்று மகிழ்கிறது. தடாகத்து நீரை அள்ளி இறைத்து – ஆடிப்பாடி – அவளையுமறியாது எழுந்த உணர்ச்சிப் பிரவாகத்தோடு நீராடி நீந்தி விளையாடினாள், சிந்தாமணி.

அவள் எதிர்பார்த்த வெள்ளிக்கிழமையல்லவா வந்து விட்டது—விரைவில் வீடு திரும்பவேண்டும்; அவர்கள் வந்தாலும் வந்துவிடுவார்கள்-அதற்குள் அலங்காரங்களை முடித்துக்கொள்ள வேண்டும் என்ற அவசரம் வேறு அவளை நிலைதடுமாறச் செய்தது. அப்படி அவளுக்கு என்றுமில்லாத மகிழ்ச்சியைத் தரக்கூடிய அந்த நிகழ்ச்சி தான் என்ன?

2

அவளுக்குத் திருமணம் நிச்சயமாகிவிட்டது. பெங்களூரிலிருந்து பெண்வீடு பார்க்க வரப்போகிறார்கள். அதுவும் ஒரு முறைக்காகத்தான். மற்றபடி பேசவேண்டியவைகள் எல்லாம் முன்கூட்டியே பேசப்பட்டு — மணமகன் படத்தை மணமகளும் — மணமகள் படத்தை மணமகனும் பார்த்துத் தங்கள் விருப்பத்தை வெளியிட்டுவிட்டார்கள். அடுத்த மாதம் திருமணத்திற்கு நாள் குறிக்கவேண்டியது தான் பாக்கி.....அதற்குள் சம்பிரதாயப்படி பெண்வீடு, பிள்ளைவீடு பார்த்தாகவேண்டுமே-பிள்ளைவீடு பார்த்தாகிவிட்டது.

பெங்களூர் மாப்பிள்ளை மிகப் பெரிய இடம். ஏராளமான சொத்துக்கு அதிபதி. எடுபிடி ஆள் அம்புகள் தேவைக்குமேல் உண்டு. ஏழெட்டு வீடுகள்; ஏறத்தாழ அரண்மனை மாதிரி! இத்தனைக்கும் அவன் ஒருவனே சொந்தக்காரன். வீட்டுக்கு ஒரே பிள்ளை. வயதான விதவைத் தாயார். பையன் பெயர் அழகப்பன். காரணப் பெயர் என்றுதான் சொல்லவேண்டும், அவ்வளவு கவர்ச்சிகரமான காளை. அவனது புகைப்படத்தைப் பார்த்துவிட்டு —சிந்தாமணி, பூந்தோட்டங் கண்ட பொன்வண்டின் நிலை பெற்றாள். புன்முறுவல் தேங்கியிருக்கும் இதழ்கள். அவைகளுக்கு மெருகேற்றி அழகூட்டும் அரும்பு மீசைகள். எடுப்பான மூக்கு. ஏறு நோக்கு. பேசாத அந்தப் படமே ஒரு காதல் காவியத்திற்கு முன்னுரை தீட்டும் சக்தி பெற்றதாக இருக்குமானால் நேரில் காணும் அந்த உருவம் எத்துணை காந்த தன்மை கொண்டதாகயிருக்குமோ என நினைந்து மகிழ்ந்தாள் சிந்தாமணி. இன்பம் ததும்பும் அவளது சந்தேகத்திற்கு விளக்கம் சுருக்கமாகத் தரப்பட்டது அவளது பெற்றோர்களால்!

"அழகில் அர்ச்சுனன் — அதற்குமேல் கேட்காதே போ!" என்னூர் பாரதத்தைக் கரைகண்ட அவளது தகப்பனார் சிவநேசர்.

அப்போது அருகேயிருந்த ஆண்டாள்—குறும்புக்காரி யாயிற்றே; சும்மாயிருப்பாளா — துருதுருத்த வாயை மூடிக்கொண்டு!

"அழகில் மட்டுந்தானே மாமா அர்ச்சுனன்? செய்கையில் அப்படியொன்றுமில்லையே?" என்று கேட்டு வைத்தாள். நல்லவேளை நாம் கேட்கவேண்டிய கேள்வியை ஆண்டாள் கேட்டாளே என்ற களிப்பு சிந்தாமணிக்கு!

"குணத்தில் தருமனம்மா தருமன்" என்ருள் சிந்தாமணியின் தாயார் சிவகாமி.

"குதிரைப் பந்தயப் பழக்கமுண்டோ?" எனச் சடக்கெனக் கேள்வியை வீசினுள் ஆண்டாள்!

"குறும்புக் கழுதை—அவர் குதிரையில் ஏறி உட்கார்ந்தால்...அடடா...சிவாஜி மகாராஜா மாதிரி இருக்கும்."

"ஆங்...இப்படி ஏதாவது தெரிந்த உவமையாகச் சொல்லுங்கள்" எனக்கூறி ஆண்டாள் சிரித்தாள்.

சிந்தாமணியோ சிந்தையெல்லாம் தேன்மணக்க நின்ருள். இந்த நிகழ்ச்சி மாப்பிள்ளை வீடு பார்த்துவிட்டு வந்த நாளன்று நடந்தது.

சிந்தாமணிக்கும் அவள் பெற்ருருக்கும் பெங்களூர் சம்பந்தம் மிகவும் பிடித்துவிட்டது. "ஏனய்யா பிடிக்காது! லக்ஷ்மண சொரூபனும், அதோடு லக்ஷாதிபதியுமாம்! சிவநேசனுக்கு சரியான அதிர்ஷ்டம் அடித்ததய்யா!" இப்படி ஊரிலே பேச்சு கிளம்பிற்று. சிந்தாமணிக்கோ எழில்மயமான எதிர்காலம், கனவுகளில்—நினைவுகளில் வந்து நின்று நர்த்தனம் புரிந்தது.

தடாகத்திலே நீராடிக்கொண்டிருக்கிருள். அவள் நினைவுகளோ சதிராடிக்கொண்டிருக்கின்றன.

"அர்ச்சுனன் மாதிரி அழகன் என்ருரே அப்பா!... ஆகா! நான் எவ்வளவு பாக்கியம் செய்தவள்! பாரதம் நடந்ததோ நடக்கவில்லையோ — பொய்யோ — புளுகோ அதைப்பற்றியெல்லாம் எனக்குக் கவலையில்லை...அதிலே

வரும் அர்ச்சுனன் என்ற கதாபாத்திரம் ஆணழகன்— அவனுடைய முதுகின் அழகைக் காணவேண்டுமென்று பார்வதி தேவியே ஆசைப்பட்டு அந்த ஆசையைத் தன் கணவன் பரமசிவனிடம் கூறினாளாம். மனைவியின் ஆசையைத் தீர்த்துவைக்க எண்ணிய பரமசிவன், அர்ச்சுனனை வலுச்சண்டைக்கு இழுத்து — இருவரும் சண்டைபோடும் போது அவனது முதுகைப் பார்வதியின் பக்கம் திருப்பி அந்த அழகை அவள் கண்டு ரசிக்குமாறு செய்தாராம். அப்படிப்பட்ட அழகனும் அர்ச்சுனன். இல்லாவிட்டால் அல்லி அவன் அடிமையாவாளா? பவளக்கொடி படருமா அவன்மீது! சுபத்திரை சுற்றித் திரிவாளா அவனை! அந்த எழில் மன்னனுக்கு என்னுடையவரை ஒப்பிடுகிறார்களே; அவர் எதிரே நிற்பதற்கு நான் ஏற்றவள்தானு? அவருடைய தகுதிக்கும் என்னுடைய தகுதிக்கும் ஏணிவைத்தாலும் எட்டாதே! எட்டாத பழம்—கிட்டாத பொருளன்றோ எனக்குக் கிடைத்துவிட்டது. அம்புலியைப் பிடித்துக் கொடம்மா என்று சிறுவயதில் அடம் செய்வேன். அம்மா, முயன்று முயன்று இப்போதுதான் அந்த அம்புலியைப் பிடித்துக் கொடுத்ததுபோலிருக்கிறது எனக்கு!

* * *

பருவமென்னும் பட்டு விரித்து, நினைவுகள் என்னும் மல்லிகை பரப்பிய இதய மஞ்சத்திலே என்னுடையவரை மடியிலே படுக்கவைத்து அழகு பார்க்கும் அந்த எதிர் காலம்.....

'விண் பெற்ற வெள்ளித்தட்டே!" என அவர் அழைக்க...!' இந்த மண் பெற்ற பேறே!" என நான் அவரை மடக்க.....தோல்வியால் துவண்டு அவர் என் தோளில் சாய...அடடா அந்த எதிர்காலம்.....

கண்பொத்தி விளையாடும் என் கை பற்றி அவர் இழுக்க...நான் தடுக்க... 'தடையில்தான் வளருதடி காதல் இன்பம்! தந்திடுவாய் இதழ்த் தேன்' என்று—தருவதற்கு முன் எடுத்துக்கொள்வார்! எதிர்பார்த்தேன் நடந்ததென்று எண்ணிக்கொள்வேன் — அந்த நன்னாட்கள் வருவதற்கு ஏன்தான் தாமதமோ?

உல்லாசப் படகு—அதில் ஓய்யார கீதம்—கதைகளில் வரும் காதலர்கள்—காட்சிகளில் தோற்றுகின்ற இன்பபுரி வெண்புருக்கள்—அவர்கள் எல்லாம் தோற்றோட நேரிட்டாலும் ஆச்சரியமில்லை. காதல் மகா காவியத்தின் சாகாத பாத்திரங்கள் எனைக் கண்டு நாணவேண்டும். இல்லறத்து விளக்கு இவளன்றோ—இதுவன்றோ நல்ல குடும்பம்—பல் கலைக் கழகமெனும் சொல்லுக்கு எடுத்துக்காட்டு என ஊர் முழுவதும் புகழவேண்டும்...

*　　*　　*

சிந்தாமணி உடலை நீரிலும்—உள்ளத்தை நினைவுகளிலும் மூழ்கடித்துக்கொண்டிருந்தாள்.

இன்ப நினைவுகள் அவள் நெஞ்சத்தைத் தாக்கும் போது—நீரலைகள் அவள் மேனியில் படுவதும் அவளுக்குக் கூச்சத்தைத் தந்தது.

அவள் கற்பனை செய்துகொண்டிருந்த மணவாளனின் மென்மை மிகுந்த கரங்களோடு—அலைகளின் அணைப்பை ஒப்பிட்டுப் பார்த்துத் தனக்குத்தானே வெட்கப்பட்டுக் கொண்டாள்.

ரோஜாவின் மென்மை பரவியிருக்கும் அவள் உடலில்—மிருதுவான பாதங்களில்—தடாகத்து மீன் குஞ்சுகள் கடித்துக் கடித்து ஒரு புதிய பரபரப்பை உண்டுபண்ணின. உடலைக் கடித்து அன்புத் தொல்லை கொடுக்கும் அந்தமீன் குஞ்சுகளோடு போட்டி போட்டுக்கொண்டு அவளது தோழிகள் அவளது உள்ளத்தை உதடுகளால் கடித்து உபத்திரவம் செய்ய ஆரம்பித்தனர். பல் படாத கடிதான்! ஆயினும் பருவக்கொடியன்றோ—

ஆயிரமாயிரம் உணர்ச்சிகளால் தாக்கப்பட்டு மெய் மறந்து போனாள். ஆண்டாளும், ராதாவும் மற்ற தோழிகளும் சிந்தாமணியின் எதிர்கால எழிலோவியத்தை கேலித் தூரிகை கொண்டு எழுதிக் காட்டினர். மதுவை வாயிலே ஊற்றும்போது கசப்பாகத்தானிருக்கிறது. சிறிது நேரத்திற்குப் பிறகு அது தரும் இன்ப மயக்கத்தை எண்ணும்

போது—ஆரம்பத்தில் ஏற்படும் கசப்பை அடியோடு வெறுத்துவிடுவதில்லை. வெறும் முகச் சுளிப்போடு நின்று விடுகிறார்கள். அந்த முகச் சுளிப்புதான் தோழிகள் கிண்டல் செய்யும்போது சிந்தாமணியின் முகத்திலும் ஏற்பட்டது. இன்னும் சிறிது அவரைப் பற்றிப் பேசமாட்டார்களா? என்ற ஆவலே அவளுக்கு அதிகமாயிற்று. கசப்பைச் சமாளித்துக்கொண்டே 'இன்னும் இன்னும்' என்று கள் பருகுகிறவனுக்கு ஏற்ற உதாரணமானுள் அவள்.

"சிந்தாமணியின் புருஷன் பெயர் என்ன தெரியுமாடி?" ஒருத்தி!

"பில்வமங்களா?" இன்னொருத்தி!

"போடி...வேலையில்லே உனக்கு?" இது சிந்தாமணி.

"ஏண்டியம்மா சிந்தாமணி, உன் மாமியாருக்கு சரியாகக் கண் தெரியாதாமே, அரைப் பார்வைதானுமே... தட்டுத் தடுமாறித்தான் நடக்கமுடியுமாமே!"

"ரொம்ப நல்லதாப் போச்சு! சிந்தாமணி பாடு கொண்டாட்டந்தான்! அல்லும் பகலும் அத்தானேடு அந்தப்புரத்தில் இருந்துகொண்டே 'அடுப்பங்கரையில் இருந்தேன் அத்தை' என்று ஏமாற்றலாம்.

"சமையல் வேலையை யாரடி மேற்பார்வையிடுவது!"

"அப்படியானுல், அத்தானை அடுப்பங்கரையிலேயே உட்காரவைத்துக்கொண்டு, அத்தை கேட்கும்போது, 'அவர் வெளியே போயிருக்கிறார்' என்று பொய் சொல்லிவிட்டுப் போகிறுள்!"

"ஏண்டி ஆண்டாள்! சிந்தாமணி கல்யாணத்துக்கு என்னடி பரிசு கொடுப்பது?"

"நான் ஒரு பாலாடை — கெண்டி தரப்போகிறேன்! ஏதாதா நீ?"

"நான் தொட்டில்!"

"சுசீலா! நீ?"

"நான் ஓடாத கடிகாரம் ஒன்று தரப்போகிறேன். அப்போதுதான் கால வரையறையின்றிக் காதல் டூயட் முழங்கிக்கொண்டேயிருக்கும்."

"அடி சரோ! நீ என்னடி?"

"நான் கம்பராமாயணம் எளிய உரைநூல் ஒன்று தருவதாக இருக்கிறேன். கற்காததைக் கற்றுக்கொள்ள!"

"காந்தா! உன் பரிசு என்ன?"

"'டேப் ரிகார்டர்' என்று ஒன்று வந்திருக்கிறதே; அது!

இரவிலே பேசுவதைப் பதிவு செய்து.....காலையிலே கேட்டு...ஒருவரைப் பார்த்து ஒருவர் வெட்கப்பட நல்ல சாதனம்!"

"சரிதான் — காந்தா அனுபவத்தைக் கக்குகிறாள் — கல்யாணமானவள் அல்லவா?.....சரி.....ஜெயா! உன்னுடைய பரிசு எது?"

"என்னுடைய பரிசா! சிந்தாமணியின் கன்னங்களுக்கு இரண்டு இரும்புக் கவசங்கள்!"

"போதும்—போதும் நிறுத்துங்கள், உங்கள் பரிசும் பவிஷும்!" என்று தண்ணீரை அள்ளி அவர்கள்மீது இறைத்தாள் சிந்தாமணி.

"ஏண்டியம்மா! இன்றைக்குப் பெண் பார்க்க யார் யார் வருகிறார்கள்?"...என்றாள் ஆண்டாள்.

"எனக்குத் தெரியாது— தாயார் வருவார்கள்!"

"யாருடைய தாயார்?"

"அவருடைய தாயார்தான்!"

"எவருடைய தாயார்?"

சிந்தாமணியின் கன்னம் இப்போது அசல் செந்தாமரையாயிற்று! பதில் சொல்லாமல் தண்ணீரில் தலையை அமுக்கி மூழ்க ஆரம்பித்தான்.

"எப்படியடி திடீரென்று பெண் வீடு பார்க்க வருகிறார்கள் ?"

"நாள் பார்த்து தந்தி கொடுப்பதாகச் சொல்லியிருந்தார்களாம். நேற்று தந்தி வந்ததாம் ; இன்று வருவதாக !"

"ஆமாம் ஆமாம் ; இன்னைக்கு வெள்ளிக்கிழமை— நல்ல நாள் ! மாப்பிள்ளை வீடும் பெரிய வைதீகந்தான் போலிருக்கு !"

"சம்பந்திகள் இரண்டு பேருமே...வைதீகப் பழங்கள் ! மாப்பிள்ளை எப்படியோ ?"

"மாப்பிள்ளையும் பெண் பார்க்க வருவாராடி சிந்தாமணி ?"

பேசாமல் குளித்துக்கொண்டிருந்த சிந்தாமணியின் வாயைக் கிளறினார்கள்.

"வந்தாலும் வரலாம்" என்று இதழசைத்தாள் அந்தப் பருவ மயில்.

அதைக் கண்டு அனைவருமே கொல்லென நகைப்புக் கொட்டினர்.

அந்த சிரிப்பொலியை ரசித்தவாறே குளத்தின் அடுத்த படித்துறைப் பக்கம் ஒரு கம்பீரமான மனிதன் பல் துலக்கியவாறு வந்து நின்றான்.

சிரிப்பொலி திடீரென அடங்கியது. ஒருவருக் கொருவர் மெதுவாகப் பேசிக்கொண்டார்கள்.

"அடி அடி...அதோ பார் டைகர் ! டைகர் !" என்று ஒருவருக்கொருவர் அச்சத்தோடு சுட்டிக்காட்டினர்.

"வந்துவிட்டானு.....மண்டுகம் ?" என்று கேலியும் ஆத்திரமும் கலந்த குரலில் கேட்டாள் சிந்தாமணி.

"நான் அப்பொழுதே சொன்னேன் — சீக்கிரம் வீட்டுக்குப் போகலாமென்று ! இந்தப் பாவிப்பயல் பார்வையிலே படாமல் போகலாம்னு கேட்கிறீங்களா ?" என்று அங்கலாய்த்தாள் காந்தா !

அடுத்த படித்துறையிலே நின்றவாறு அவர்களையே கண்களால் விழுங்கிக்கொண்டிருந்தான் அந்த மனிதன். டைகர் என்று அவர்கள் அழைத்ததற்கு ஏற்ப தோற்ற முடையவன்தான் அவன். அவனது முகத்திலே மிருக சுபாவத்தின் சாயல் செதுக்கப்பட்டிருந்தது. அவனது பெரிய விழிகளிலே பயங்கரம் பளிச்சிட்டது. அவன் பல் துலக்கும் அந்தத் தோரணை மூலமாகவே உள்ளத்தில் கொழுந்துவிட்டு உடலைத் தகித்துக்கொண்டிருக்கும் காமத் தீக்கு ஆளாகித் தவிக்கிறான் என்ற நிலை புரிந்தது. சிந்தாமணியும் தோழிகளும் அவசர அவசரமாக குளத்தை விட்டுக் கரையேற முயன்றனர். அவர்கள் பக்கம் திரும்பி நின்று எதைப்பற்றியும் கவலைப்படாமல் விலங்குப் பார்வை வீசிக்கொண்டிருந்த அவன் தோளிலே இன்னொருவன் கைவைத்து—"என்ன டைகர்! உலகத்தையே மறந்து விட்டாய் போலிருக்கே?" என்று கூச்சலிட்டான். திடுக்கிட்ட டைகர், "அடேடே! வேம்புவா? வாப்பா—வா!... பார்த்தாயா? ...தேவலோகமே இந்தத் திருக்குளத்தில் இறக்குமதியானதுபோல் இருக்கிறது!" என்றான் அந்தப் பெண்களின் காதில் விழும்படியாக!

"ஓகோ — அதுதான் தேவேந்திரன் இந்தப் பக்கம் விஜயமோ?" என்றான் வேம்பு.

"டேய் வேம்பு—தெரியுமா சேதி?.....சிந்தாமணிக்கு கல்யாணம் நிச்சயமாயிட்டுது!"

"அடே—அப்படியா? எப்ப?"

"இன்னம் தேதி குறிக்கிலே... இன்னாக்கு பெண்வீடு பார்க்க வர்ராங்க!"

"அப்ப..உன் கதை என்ன ஆச்சு?"

"என் கதை இனிமேல்தான் தொடரப்போகிறது. நேற்று சிவதேசனிடம் சென்று கடைசியாகப் பெண் கேட்டேன். எனக்கும் அந்தக் கிழட்டுப் பயலுக்குமுள்ள பழைய சொந்தபந்தம் எல்லாம் சொல்லி, எனக்குத்தான் சிந்தாமணி உரியவள் என்று கூறினேன், வாதாடினேன் வக்கீலைப்போல!"

"ஐட்ஜ்மெண்ட் என்ன ஆச்சு?"

"சாதகமில்லே! கிழட்டுக் குரங்கு மறுத்துவிட்டது கிளியைத் தருவதற்கு!"

"கிளி என்ன சொல்லுகிறது?"

"சொன்னதைச் சொல்லுகிறது கிளிப்பிள்ளே! கிழவன் — கிழவி இருவரும் என்ன சொல்கிறார்களோ; அதையே சொல்கிறது!"

"பிறகு...என்ன செய்வதாக உத்தேசம்?"

"அவன் கல்யாணம் நடக்க முடியாமல் செய்வேன்! பெண்வீடு பார்க்க வருகிறார்களாம் பெண் வீடு!..... ஓழுங்காகவா வந்துசேரப் போகிறார்கள்?

"என்ன டைகர் சொல்றே?"

"இந்த டைகர் சமாச்சாரந்தான் உனக்குத் தெரியுமே .....சிந்தாமணி எனக்குச் சொந்தமாக என்னென்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ; அவ்வளவும் எடுக்கப் போகிறேன்."

"அதான் சரி—சபாஷ் டைகர்! வேறு என்ன? இந்த ஊரிலே நீ ஒரு பெரிய புள்ளி! மைனருக்கு மைனர்—பெரியவங்களுக்குப் பெரியவன்! உன்னைக் கண்டா ஊரே பயப்படுது...இந்த உதவாக்கரை சிவநேசன் மாத்திரம் உன்னை மதிக்கிலேன்னு..... அதை விடக்கூடாது!"

"வேம்பு!...பெங்களூரிலேயிருந்து வர்ர மாப்பிள்ளே வீட்டு மோட்டாரு...ரோட்டுமேலதானே வரணும்?"

"சந்தேகமில்லாம!"

"மோட்டாரு—முழுசா வந்துசேராது பாரு!"

"அடி சக்கை! அது பிரமாதம்!"

"முதல்லே வரும்போதே...சகுனத்தடை...மாப்பிள்ளே வீட்டுக்காரன் சரியா வாங்கிகிட்டு போய்ச்சேரப் போரூன்"

"டைகர்! ஆள் எல்லாம் ரெடியா?"

"எல்லாம் தயார்—உன்னைத்தான் தேடிகிட்டு இருந்தேன் — நல்லவேளை; நீயும் ஊர்லேயிருந்து வந்துட்டே!"

"லேடி டாக்டர் வந்தாச்சுல்லே?"

"வந்தாச்சே!.....அவுங்கதானே உன்னைக் கூப்பிட்டுக்கிட்டு வரச்சொன்னுங்க...பத்து நாளா உன்னைப் பார்க்காம ஏக்கம் பிடிச்சு கிடக்கிறுங்க அம்மா!"

"அப்படியா?..."

என்று இளித்துக்கொண்டே டைகர் குளத்தில் இறங்கி முகம் கழுவிக்கொண்டான்! அதற்குள் சிந்தாமணியும் மற்றவர்களும் கரையேறத் துவங்கினர், ஒருவர் பின் ஒருவராக! கடைசியாக சிந்தாமணி, ஈரப் புடவையுடனும்... அதனல் விளைந்த புதிய அழகுடனும்—இடையில் குடமெடுத்து படிகளில் ஏறினுள். அப்போது டைகர் வீசியெறிந்த சிறிய கல் ஒன்று அவள் தோள்பட்டையிலே வந்து விழுந்தது!

சிந்தாமணி திடுக்கிட்டுத் திரும்பினுள். திடீரென ஏற்பட்ட அதிர்ச்சியில் கால் தவறியது. படியில் படிந்திருந்த பாசியின்மீது அவள் பாதம் பதிந்தது. சிந்தாமணி அதைச் சமாளிக்க முடியவில்லை, வழுக்கிவிழுந்தாள். ஐந்தாறு படிகளில் உருண்டு, தண்ணீரில் போய் குப்புற விழுந்தாள். அதற்குள் தோழிகள் அலறிக்கொண்டு ஓடிப்போய் சிந்தாமணியைத் தூக்கினர். டைகரும் வேம்புவும் இருந்த இடம் தெரியவில்லை; மறைந்துவிட்டார்கள். சிந்தாமணிக்கு நெஞ்சிலே மிகப் பலமான அடி பட்டுவிட்டது, அவள் பிரக்ஞை யிழந்தாள். பேச்சில்லை, மூச்சு மட்டும் இழைந்தது. தோழிகள் அவளைத் தூக்கிக்கொண்டு வீடு நோக்கி நடந்தனர். சிவநேசரும் சிவகாமியும் அலறியடித்துக்கொண்டு அழுது புலம்பினர். அவசர அவசரமாக அவளை டாக்டர் வீட்டுக்குக் கொண்டுபோனுல்தான் பிழைப்பாள் என்றனர் தெருவினர். சிவகாமி, "அய்யோ—நல்ல நாளும் அதுவுமா—பெண்வீடு பார்க்க வர்ர வேளையிலே—இப்படி ஆச்சே!" என்று கதறினுள். "அழுவதற்கு நேரமா இது?" என அதட்டினர் ஊரார்.

சிந்தாமணி, லேடி டாக்டர் ஆனந்தியின் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டாள். அவள் பிழைப்பாளா என்ற சந்தேகம் பலமாக எழுந்துவிட்டது சிவநேசருக்கும்—சிவகாமிக்கும்!

3

லேடி டாக்டர் ஆனந்தி கொஞ்ச வயதினள். இரண்டு மூன்று வருடங்களாகத்தான் அவள் வேதபுரத்திலே மருத்துவ மனையைத் துவக்கித் தொழில்புரிந்து வருகிறுள் என்ரு லும், அந்த வட்டாரத்திலே பெயர்பெற்ற லேடி டாக்டராக ஆகிவிட்டாள். ஆனந்தியின் தொழில் திறமையைவிட பழகும் தன்மை பலரையும் கவரக்கூடியது. பருவமும் அத் தகையது. உருவமும் அதற்கு ஒத்துழைக்கக்கூடியது தான். பெயருக்கேற்ப ஆனந்தமாகவே எப்போதும் காணப்படுவாள். நோயாளிகள் உயிருக்கு மன்ருடிக் கொண்டிருக்கும் நேரத்திலேகூட அவர்களுக்குத் தன் புன்னகைமூலம் ஆறுதல் வழங்குவாள். எந்த நேரத்திலும் எப்படிப்பட்ட நிலைமையிலும் பிணியால் பீடிக்கப்பட்ட வர்கள் வந்தால் அவர்களை அனுதாபத்தோடு கவனித்து ஆகவேண்டியவைகளைக் கவனிப்பதில் ஆனந்திக்கு நிகர் யாருமில்லை என்று ஊரே பாராட்டும். வியாதியால் துடிப் பவர்களிடம் வெகுண்டு பாயும் குணம் அவளிடத்தில் இல்லை. இது அவள் தொழிலுக்குத் தேவையான அரிச்சு வடிதானே என்று நினைக்கலாம். ஆனல் அந்தப்பாலர் பாடத்தை மறந்துவிட்டு எத்தனை பாதகர்கள் 'ஸ்டெதாஸ் கோப்பை' தூக்குக் கயிறுபோல தங்கள் கழுத்திலே தொங்கவிட்டுக்கொண்டு, பாசக்கயிற்ரோடு காட்சியளிக் கும் புராண காலத்து யமனைப்போல நோயாளிகளை உற்று நோக்குகிருர்கள்! உறுமிப் பாய்கிருர்கள்!! அப்பப்பா! அந்த உத்தமர்கள் உலவும் மருத்துவ உலகத்திலேதான் சில சமயம் அப்பாவி நோயாளிகள் சிக்கிக்கொண்டு உயிரை விடமுடியாமல் தினறிச் செத்துக்கொண்டிருக்கி ருர்கள். அவர்களுக்கெல்லாம் ஆனந்தி கானல் நீரைப் போலக் காட்சியளித்ததில் வியப்பெதுவும் இல்லைதான்! நோயாளிகளைக் குணப்படுத்துவதில் மருந்துக்கு அடுத்த படியான இடத்தை மருத்துவனின் இன்முகந்தான் பெறு கிறது. இந்த உண்மையை ஆனந்தி உணர்ந்திருந்ததோடு

மட்டுமல்ல; அதுபோலவே உழைத்திடவும் அக்கறை எடுத்துக்கொண்டாள். அதனல் அவள் பெயர் வேத புரத்து வட்டாரத்திலே செல்வாக்கோடு மின்னிக்கொண் டிருந்தது. மருத்துவ மனைக்கு வரும் கிழவிகள், ஆனந் திக்கு பாட்டி முறை ஆகிவிடுவார்கள். நடுத்தர வயதினர் அம்மா என்ற அன்பழைப்புக்கு ஆளாவார்கள். சமவய தினர் சகோதரிகள் என்ற உறவு முறையால் பிணைக்கப்படு வார்கள். அவள் உள்ளத்திலே அப்படி எண்ணுகிருளோ— அல்லது வைத்தியத் தொழிலின் வளர்ச்சிக்காக அந்த முறையைக் கையாளுகிருளோ — அதுபற்றி காய்ச்சல்காரர் களுக்கு என்ன கவலை! அவர்களுக்குத் தேவையானது உடல் நலம்! அதனல் ஆனந்தியின் உள்ளத்திலே புகுந்து ஆராய்ச்சி நடத்த அவளது வாடிக்கை நோயாளிகளும் சரி — புதிய வரவுகளும் சரி — அக்கறை எடுத்துக்கொண்ட தில்லை. ஊரிலே யாரும் எடுத்துக்கொள்ளாத அந்த அக் கறையை டைகர் மட்டுமே எடுத்துக்கொண்டான். ஆனந் தியின் உள்ளம் எப்படிப்பட்டது என்ற கண்டுபிடிப்பிலே அவன் செலவழித்த நாட்கள் பல! அவன் ஆனந்தியை அடிக்கடி சந்திக்கிற நிலைமைகளை உண்டாக்கிக்கொண் டான். நோயாளி அல்ல; ஆயினும் தன் நோய் தீர்க்கும் மாத்திரை அவளிடம் இருக்கிறதா என்பதை எப்படியாவது தெரிந்துகொள்ளத் துடித்தான். டைகர் — ஆனந்தியின் வைத்திய சாலையைத் துவக்குவதற்காக வேதபுரத்திலே பட்டிருக்கிற கஷ்டங்கள் ஏராளம்.

ஆனந்தி, அந்த ஊரில் குடியேறித் தொழில் நடத்த விரும்பியபோது — அவளது அண்ணன், தங்கைக்குத் தக் கது செய்து உதவவேண்டுமென்று வேதபுரத்திலேயுள்ள தன் பால்ய நண்பன் ஒருவனுக்குத்தான் கடிதம் எழுதி யிருந்தான். அந்த நண்பன்தான் டைகர்! தோழனின் வேண்டுகோளை அலட்சியம் செய்யாமல் — ஆனந்தியின் மருத்துவமனை ஆரம்பிப்பதற்கான காரியங்கள் அத்தனை யும் பார்த்துக்கொடுத்தான். ஊரிலே செல்வாக்குள்ள மைனர்; வீட்டுக்கோ செல்லப்பிள்ளை! கிராமங்களில் அவர்

கள்தானே கிருஷ்ணபரமாத்மாவாகத் திரியமுடிகிறது! டைகரைச் சுற்றி எப்போதுமே ஒரு வாலிபப் பட்டாளம். அவன் குடித்து மிச்சம்வைத்த டீயைக் குடிக்க! புகைத்து வீசியெறிந்த சிகரெட் துண்டைப் புகைக்க! மற்ற நேரங்களில் அவன் இட்ட வேலையைச் செய்து வயிறுவளர்க்க! இத்தகைய பட்டாளமொன்று பக்கபலமாக இருக்கும் போது டைகர் போன்றவர்கள் வேதபுரம் போன்ற ஊர்களிலே வீரர்களாக உலவமுடியாதா என்ன? டைகருக்கு இயற்பெயர் அதுவல்ல! பெற்றோர்கள் இட்ட பெயர் ராம கிருஷ்ணன். பரமஹம்சரிடத்திலே பக்திமிகுந்தவர் செத்துப்போன அவன் அப்பா! அதனல் அவரது நினைவாக அப்பெயர் சூட்டினர். பரமசாதுவாக வளருவான் தன் மகன் என்று பறைசாற்றிக்கொண்டிருந்தார். அவனே டைகர் என்ற பட்டத்துக்குரியவனாக—வேதபுரத்து வீரனாக வளர்ந்துவிட்டான். ராமனுக்கு அருகிலே ஒரு குரங்குப் பட்டாளம்—இவனுக்கும் அப்படித்தான்! கிருஷ்ணனுக்கு பாண்டியர் பட்டாளம் தேவைப்பட்டது! இவனும் அந்நிலைக்கு உயர்ந்துகொண்டிருந்தான்.

எப்படியோ ஒருவிதத்தில் தந்தை வைத்த பெயர் அவனுக்குப் பொருத்தமாகவே அமைந்திருந்தது. ராம கிருஷ்ணன் டைகரானான். அந்த டைகரின் வேட்டையில் சிக்கிய இளமான்கள் ஏராளம். சிந்தாமணி, அவனுக்கு சொந்தக்காரி. மாமன் மகள், ஒரு உறவுக்கு! அவளைத் திருமணம் என்ற பெயரால் சுவைக்கவேண்டுமென்று திட்டமிட்டான் டைகர். சிந்தாமணியின் தந்தை டைகரின் மிரட்டல்களுக்குப் பணியவில்லை. மிஞ்சல்—கெஞ்சல் எதுவுமே அவரை அவன்பக்கம் சாய்த்திட உதவவில்லை. அவருக்குத் தெரியும் அவனது நடவடிக்கைகள் அனைத்தும்! ஊருக்கேதெரியும்—ஏன்; ஆனந்திக்குக்கூடத்தான் தெரியும்; டைகர் எப்படிப்பட்டவன் என்று! டைகருக்கு மட்டுமே ஆனந்தி எப்படிப்பட்டவள் என்று தெரியாமல் இருந்தது. அந்த ரகசியத்தை வெளியிடத்தான் போலும், வேம்பு ஆனந்தி வீட்டுக்கு வேலைக்காரனாக வந்து சேர்ந்

தான். ஊரார் கைதேர்ந்தவள்—கனிவு மிக்கவள் என்று பாராட்டுகிறார்கள். நோயாளிகளோ அவள் தரும் மருந்தாலும், அதைவிட மேலான அன்புப் பணியாலும் நலிவு நீங்கி வாழ்த்துகின்றனர்.

அத்தகையவள் தன் சொந்த வாழ்வைப் பொறுத்தவரையில் ஒரு சாதாரணப் பெண்ணைவிட மிகவும் கேவலமான நிலைமைக்கு ஆளாகிவிட்டாள். அந்த நிலைமை அவளாகத் தேடிக்கொண்டதல்ல. தேடாமலே வந்தது! வந்த பிறகு அவளாலே விலக்கமுடியாத விருப்பத்துக்குரிய நிலைமையாகவும் ஆகிவிட்டது! வேலைக்கார வேம்புவைத் தட்டிக்கொடுக்க ஆரம்பித்தான் டைகர்! வெண்புரு வேட்டைக்காரர்களுக்கு வேம்பு போன்றவர்கள்தானே அம்புகள்! அந்த அம்பைக் கூரேற்றினான், இரண்டுநாள். தேநீர்! இரவு நேரங்களில் டைகரோடு ஊர்வலம் அவ்வளவுதான். வேம்பு உண்மைகளைக் கக்க ஆரம்பித்தான்.

ஆனந்தியின் குடும்ப விசாரணையில் ஆரம்பித்த பேச்சு டைகரின் குறிக்கோளின் எல்லைக்கோட்டை வந்து தொட்டு நின்றது. "ஆனந்தி துணிச்சல்காரி தானப்பா! தன்னந் தனியாக வாழ்க்கை நடத்துகிறளே, கைகாரி!" என்று பாராட்டி வேம்புவின் வாயைக் கிண்டினான்.

"ஆமாம், அந்தக் குடும்பத்திலேயே ஆனந்தி அம்மா தான் தைரியசாலி! நல்லவங்க! அவுங்க அண்ணன் ஒரு பயந்தாங்கொள்ளி, விளக்குவச்சால் வெளியே கிளம்ப மாட்டாரு! இத்தனைக்கும் அவரு "இடிமுழக்கம்" அப்படிங்கிற பத்திரிகைக்கு ஆசிரியர்!" என்று டைகருக்கு வேண்டாத விஷயங்களை விவரித்துக் கொண்டிருந்த வேம்புவின் நாக்கைச் சிரமப்பட்டு வளைத்து நெளித்து, அதைச் சூடேற்ற சிறிது சுவையான பானத்தையும் அளித்து டைகர், தன் பேச்சுத் திறமையைப் பயன்படுத்தி வெற்றி கண்டான்.

"இவ்வளவு கெட்டிக்காரியாயிருந்தும் ஒரு நாள் ஏமாந்து போய்ட்டாங்க எங்கம்மா?"

"எப்படிடா வேம்பு—எப்படி?"

"அஞ்சாவது மைலிலே அய்யனூருன்னு ஒரு பெரிய பண்ணையிருக்கே தெரியுமா?"

"ஆமாம் தெரியும்! அந்தப் பண்ணைக்காரரைக்கூட எனக்குப் பழக்கமாச்சே! பாலகங்காதரத் தேவர்!"

"ஆங்...அந்த தேவர் வீட்டிலே ஒருநாள் ராத்திரி பிரசவம்னு...அவசரமா ஆள் ஓடிவந்தான்!"

"ஆனந்தியை அழைக்கவா?"

"ஆமாம்! அம்மாளும் உடனே என்னைக் கூட்டிக் கிட்டு பண்ணையிலேயிருந்து வந்த காரிலே புறப்பட்டாங்க! நாங்க ரெண்டுபேருமா போய்ச் சேர்ந்தோம்!"

"எங்கே? பண்ணை வீட்டுக்கா?"

"ஆமாப், அப்படித்தான் சொன்னுங்க! நல்ல இருட்டு; தெருவிலே மினுக்கு மினுக்குன்னு விளக்கு எரிஞ்சுகிட்டு இருந்தது! வாசல்ல போயி இறங்கினேம். உள்ளே பிரசவ வேதனையில் யாரோ சத்தம் போட்ட மாதிரி காதில் விழுந்துகிட்டேயிருந்தது. பண்ணைக்காரரு...அவருதான் தேவரு...அம்மாளை வரவேற்று உள்ளே அழைச்சுகிட்டு போனாரு! நான் மாத்திரம் வாசல்ல உட்கார்ந்திருந்தேன். எனக்கு ஒரு சந்தேகம்; "என்னடா இவ்வளவு பெரிய மனுஷர் காரெல்லாம் வச்சிருக்கார், வீட்டு வாசல்லே ஒரு நாதியைக்கூடக் காணுமே" அப்படின்னு யோசிச்சேன்!"

"உம், அப்புறம்?"

"அப்புறம் என்ன...ரொம்ப நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தேன். உள்ளே சத்தத்தையே காணும்; பிரசவவேதனை சத்தம் கேட்டதே; அதுவும் இல்லே!"

"ஓகோ குழந்தை பிறந்துட்டதாக்கும்!"

"அதான் இல்லே!...குழந்தை பெக்கிற ஆளே அங்கே இல்லேங்கிறது எனக்கு அப்பறந்தான் தெரிஞ்சது!"

"என்ன—என்ன? விபரமாச் சொல்லு!"

"என்னடா — சத்தமே காணும்னு கதவுப் பக்கம் போனேன். கதவு உள்ளே தாள்போட்டிருந்தது! சரி; ஜன்னல் பக்கம் கவனிப்போம்னு பார்த்தேன். ஜன்னலெல்லாம் மூடியிருந்தது. காதைத் தீட்டிக்கிட்டு கேட்டேன். ஆனந்தியம்மாவோட குரல் கேட்டது! அய்யோ பாவி! என்னை விடு! விடு!" என்று சத்தம்! எனக்குப் பொறுக்கமுடியவில்லை; புரிந்துகொண்டேன். பலநாளா வலைவீசி, இந்தப் பாலகங்காதரத் தேவர் இன்னைக்கு நினைச்சதை முடிச்சுட்டான் அப்படின்னு தெரிஞ்சுபோச்சு எனக்கு! ஓகோன்னு கூச்சல்போட வாயைத் திறந்தேன். அவ்வளவுதான். வாயை எவனே கட்டினான். காலு கையிலே கயிறை மாட்டினான் எவனே! தாழ்வாரத்திலே உருட்டி விட்டானுங்க! காதை யாரும் மூடலே! உள்ளே என்ன நடக்குதுன்னு கவனிச்சு கேட்டேன். கொஞ்ச நேரம் ஆனந்தியம்மாளுடைய ஆவேசமான குரல் கேட்டுகிட்டேயிருந்தது! அப்புறம்...சத்தமே இல்லை!...எனக்கு மயக்கம் வந்துடும்போல இருந்தது!...கதவு திறக்கப்பட்டது! என் கட்டுகளும் அவிழ்க்கப்பட்டன! டாக்டரம்மா சிலை மாதிரி அசையாம நின்னுங்க! அவுங்க முகத்திலே...அய்யய்யோ...சாவுக்களை படிந்து இருந்ததை நான் பார்த்து நடுங்கிப்போனேன். காரில் ஏறச்சொன்னார் தேவர், ஏறிக்கொண்டோம். அவர் எங்களை வழியனுப்பி வைக்க கார் அருகில் வந்து நின்றார். "ஜாக்கிரதை! விஷயம் வெளியே தெரிந்தால் தலைபோய்விடும். ஆமாம். டேய்! உனக்குத்தான் சொல்லுகிறேன்" என்று என் தலையில் ஒரு குட்டு வைத்தார். கார் நகர ஆரம்பித்தது. எனக்கும் டிரைவருக்கும் நேராகவே டாக்டரம்மாவின் முகத்திலே தேவர் ஒரு முத்தமிட்டார்! பிணம்போல அம்மாள் இருந்தார்களே தவிர எந்தவிதமான எதிர்ப்பேச்சும் கிடையாது!"

"அதற்கப்புறம் அந்தத் தேவர்...வருவது போவது உண்டா?....."

"உண்டோ என்னமோ, என் கண்ணில் படவில்லை. ஆனால், அம்மா என் காலில் விழுந்து, விஷயத்தை வெளி

யில் சொல்லாதே என்று கேட்டுக்கொண்டார்கள். நான் இப்போது உன் காலிலே விழுந்து கேட்டுக்கொள்ளுகிறேன்; காதை சுத்தமாகக் கழுவிவிடு!"

டைகர் ஜெயித்துவிட்டான். டாக்டர் ஆனந்தியின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் ரகசியமொன்றையே அறிந்துகொண்டுவிட்டான். அந்த ரகசியத்தின் அடிப்படையிலேயே தன் ஆசைக் கோட்டையை எழுப்பிவிடத் தீர்மானித்துப் புறப்பட்டான்.

என்றும்போல் அன்றும் டைகரை ஆனந்தி வரவேற்றாள். எவ்வளவுதான் ஊரிலே ஊதாரியாகத் திரிந்தாலும் தன்னைப் பொறுத்தவரையில்—தன் அண்ணனின் பால்ய சிநேகிதன் என்ற உணர்ச்சியோடு—இவ்வளவு உதவிகள் செய்கிறானே என்ற எண்ணம் அவளுக்கு! என்ன தெரியும்; வெள்ளாடுகளை—புள்ளிமான்களைக் கண்ட மாத்திரத்தில் பாய்ந்து விழுந்து பசியாற்றிக்கொள்ளும் வேங்கை—வெறியை அடக்கிக்கொண்டு, பசுவைப் பதம் பார்க்க நேரம் பார்த்துக்கொண்டிருக்கிற சங்கதி?

அதனால், அவள் அவனை நம்பினாள். அவனிடத்திலே ஒரு பாசமும் வைத்தாள். அந்தப் பாசத்திற்கு எத்தகைய உறவு வர்ணமும் பூசவில்லையே தவிர களங்கமற்ற பாசந்தான் அது!

என்றைக்குமில்லாத மாதிரியில் அன்று டைகர் சோகமாகக் காணப்பட்டதை ஆனந்தி வியப்போடு நோக்கி, "ஏன் வாட்டம்?" என்று கேட்டாள்.

டைகரின் குரல் நடுங்கியது. விம்மி விம்மி அழுதான்.

"ஏன், எதற்காக இப்படி?...யாருக்காவது...ஏதாவது ஆகிவிட்டதா?" என்று துடித்துக் கேட்டாள் ஆனந்தி!

"யாருக்கும் எதுவும் ஆகவில்லே! ஆனந்தி, உன் முகத்தைப் பார்க்கவே எனக்குப் பயமாயிருக்கிறது..... அய்யோ உன் எதிரில் என்னால் நிற்கவே முடியவில்லே!"

"என்ன சொல்கிறீர்கள்? என் முகம் பயங்கரமாக இருக்கிறதா?"

"பறிக்காத செந்தாமரைப் புஷ்பம்போல் இருந்த உன் முகத்திலே—எப்படித்தான் இவ்வளவு களங்கக் கீறல்கள் விழுந்ததோ தெரியவில்லை...பால் நிலவு உன் முகம் என்று பாராட்டித் திரிவேனே; அந்த நிலவு இப்படியா தேய்ந்து விடுவது?"

"என்ன? என்ன பேசுகிறீர்கள்?"

"ஆனந்தி! இதை இத்தனை நாள் என்னிடம் ஏன் ஒளித்துவைத்தாய்? மறுநாளே சொல்லியிருந்தால், அந்த மடையனின் கழுத்தை அறுத்து பிணத்தை மிதக்க விட்டிருப்பேனே. பேயன்! பித்தன்!! பெண் இனத்தின் பெருமை உணராத அற்பன்!!!"

"நீங்கள் சொல்வது.....?"

"பாலகங்காதரத் தேவனைப் பற்றிப் பேசுகிறேன்—பாவையுந்தன் கற்பைப் பாழ்படுத்திய பாவியைப்பற்றிப் பேசுகிறேன்!"

இந்த வார்த்தைகள் காதிலே பட்டதும் ஆனந்தி மூர்ச்சையுற்றுக் கீழே சாய்ந்தாள். கற்பு பறிபோனதை விட—பறிபோன விஷயம் வெளியே தெரியும்போதுதான் அவமானத்தைத் தாங்கமுடியாமல் அல்லாடுகிறார்கள் சில பெண்கள் என்பதற்கு ஆனந்தி உதாரணமாகிவிட்டாள்! அலறினாள்; பிரக்ஞை வந்த பிறகு! அழுது புலம்பினாள்!

டைகர்—நேரத்தைச் சாதுர்யமாகப் பயன்படுத்திக் கொண்டான்.

"கவலைப்படாதே! இந்த சேதி இனி என்னைத்தவிர வேறு யாருக்கும் தெரியாது. பெண்ணொருத்தி தனியாக இருந்ததால் அல்லவா அந்தத் தேவனின் திமிராட்டத்திற்கு இடங்கொடுத்துவிட்டது! இனி நான்தான் உனக்கும் உன் கற்புக்கும் காவல்!" எனக் கண்ணீர் விட்டபடி—தேம்பித் தேம்பி அழுதபடி—ஆனந்தியின் கரங்களை எடுத்துத் தன் கன்னங்களிலே பொத்திக்கொண்டான். ஆனந்தியை இப்போது தாட்சண்யம் வந்து அடிமையாக்கிக் கொண்டது.

தனக்காகக் கவலை எடுத்துக்கொள்ளக்கூடிய ஒருவன் இருக்கிறானே என்று நினைத்துப் பெருமூச்சு விடத்தான் அவளால் முடிந்ததே தவிர அவனது தோள்களிலே தன் தலை சாய்க்கப்பட்டிருப்பதையும், அவளால் வேறுபாடாக உணரமுடியவில்லை.

பஞ்சினும், பட்டுத் துணியினும் மிருதுவான அவள் நெஞ்சில் டைகர் போன்றவர்களின் முரட்டுப் பாதங்கள் பதிந்திட அவள் விரும்பத்தானில்லை! என் செய்வது; முள்வேலி தேவைப்படுகிறதே; முல்லைக் கொல்லைக்கு!

அவ்விதமானுள் ஆனந்தி! முல்லைத்தோட்டம் அவள்! அதில் தேவர் போன்ற முரட்டு மாடுகள் நுழையக்கூடாதாம்—முள்வேலியாக இருக்கிறேன் என்றான் டைகர்! மானுக்கு புலி—காவலாயிற்று! மாற்ற இயலாத சூழ்நிலை—மனத்தைச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு மாற்றிக்கொண்டாள் அந்த மங்கை.

பருவத்தைக் கொத்திச் சாப்பிட்டு சித்ரவதைசெய்ய, பாலகங்காதரன் போன்ற கழுகுகள் இன்னும் எத்தனை பறக்குமோ; அவைகளின் பயங்கர நரகங்களிலேயிருந்து தப்ப--பாதுகாப்பாக ஒரு பகவதியின் பலிபீடத்தைத் தேர்ந்தெடுத்துக்கொண்டது நியாயமே என எண்ணியது ஆனந்தி யெனும் அந்த ஆடு!

வேப்பு மூலம் கிடைத்த கரும்பு இதுவெனக்கொண்டு டைகர் மகிழ்ந்தான்! தொழில் முறைக்கு ஊனம் வந்துவிடக் கூடாதே என்று சற்று ரகசியமாகவே அவனது தொடர்பை வைத்துக்கொண்டிருந்தாள் ஆனந்தி! பலாத்காரமாகக் கற்பழிக்கப்படுவது பாப விமோசனத்திற்கு உரியதுதான்—பிராயச்சித்தம் செய்திட ஏற்றதுதான் என ஆறுதல் கூறுவான் அவன் ஆனந்திக்கு! அவளும் மகிழ்வாள். இருவருமே வாழ்க்கை ஜோடிகள் ஆகிவிட்டால் என்ன என்று நினைப்பான், ஜாடையாகச் சொல்லுவாள். "காலத்தை எதிர்நோக்கியிருக்கிறேன்-உன்னைப்பற்றித்தெரிந்தவர்கள் இந்த உலகத்தில் மூன்றுபேர் இருக்கிறார்கள்; ஒருவன் தேவர்! மற்றொருவன் அவன் கார் டிரைவர்! மூன்றுவது

ஆள் வேம்பு! இந்த மூவரையும் ஒழித்துவிட்டால் ஆனந்தியின் களங்கம் பற்றிப் பேச ஆளே கிடையாது உலகில்! அதற்கப்புறம் திருமணம்" என்பான் டைகர்! ஆனந்திக்கு அந்த வாதம் பிடிக்காதுதான். ஆனாலும் பொறுத்துக் கொள்வாள். அவனையும் விட்டு விட்டு எப்படி வாழ்வது? உயிர்மேல் ஆசை உள்ளவர்கள் முருங்கைக் கொம்பானாலும் பிடித்துக்கொண்டு கரையேறத்தானே முயற்சிக்கிறார்கள்! அந்த ரகந்தான் ஆனந்தி!

அவளது மருத்துவ மனைக்குத்தான் சிந்தாமணி கொண்டுசெல்லப்பட்டாள். சிந்தாமணியின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக உணர்ந்தாள் ஆனந்தி. அவசரமாகவும் அவசியமாகவும் செய்யவேண்டிய சிகிச்சைகள் அனைத்தும் செய்து, பிழைத்துவிடுவாள் என்ற தைரியத்தை அவளது பெற்றோர்களுக்கு அளித்து—சிந்தாமணி இரண்டு நாட்கள் மருத்துவமனையில் தன் கண்காணிப்பில் ஓய்வு எடுத்துக்கொள்வது நல்லது என்று கூறினாள்.

சிவதேசரும், சிவகாமியும் ஆனந்தியிடம் தங்கள் குமாரியை எப்படியாவது பூரண சௌக்கியப்படுத்துமாறு மன்றாடிக் கேட்டுக்கொண்டு வீட்டுக்குத் திரும்பினர். மாப்பிள்ளை வீட்டார் குறித்த நேரத்தில் வந்துவிடுவார்கள்—அவர்களுக்கு! படுக்கையில் கிடத்தப்பட்டிருக்கும் சிந்தாமணியிடம் விடைபெற்றுக்கொள்ள விரும்பினர்.

அவளோ, சிறிதுநேரத்துக்கு முன்புதான் விழித்து... மீண்டும் கண்மூடி அயர்ந்திருக்கிறாள். அதனால் மகளிடம் எதுவும் பேசாமலே—மாலையிலே வருவதாக டாக்டரிடம் கூறிவிட்டு, வீட்டுக்குப் புறப்பட்டனர். அவர்கள் போன சிறிது நேரத்திற்கெல்லாம் டைகர் மருத்துவ மனைக்கு வேம்புடன் வந்துசேர்ந்தான். அவனிடம் ஆனந்தி, சிந்தாமணியின் விபத்து குறித்துச் சொன்னாள். டைகரும், வேம்புவும் சிந்தாமணி கோலப்புடன் கண்ணயர்ந்திருக்கும் கட்டில் பக்கம் போய்ப் பார்த்துவிட்டுத் திரும்பினர்கள். டைகரின் கண்களிலே ஒரு புது விதமான சுழற்சி! நெற்றியிலே நீண்ட ஆழமான பயங்கரம் நிறைந்த சுருக்கங்கள்!

"ஆனந்தி! கொஞ்சம் உன்னிடம் தனியாகப் பேச வேண்டும், இப்படி வாயேன்!" என்று அவளை அழைத்துக் கொண்டு ஒரு அறைப்பக்கம் சென்றான் டைகர்!

4

சிந்தாமணி கண்ட இன்பக் கனவுகளின் எழிலுக்குக் கொஞ்சமும் குறைந்ததல்ல அழகப்பனின் ஆசைக் கனவுகள்! விரிந்து பரந்து கிடக்கும் தன்னுடைய மாளிகையிலே சதா சர்வ காலமும் சதங்கையணியாத மயிலொன்று நட்டுவனர் பயிற்றுவிக்காத நாட்டியத்தை நடைமூலம் ஆடிக் காட்டும் அற்புதக் காட்சியைக் கண்டு களிக்கலாம் என எண்ணி மகிழ்ந்தான். காதல் எண்ணங்கள் யாத்திரீகர் களைப்போல வருவதும் தங்குவதும் பிறகு போய்விடுவதுமாக இருந்த அவனது இருதயச் சத்திரம், இனிமேல் இடித்துப் புதுப்பிக்கப்பட்டு எப்போதுமே காதல் நினைவுகள் காவல் புரியும் கோட்டையாக மாற்றியமைக்கப்பட்டு விடும். அவனது அம்மா தன் கண்களை மூடுவதற்குள் பிள்ளைக்கு ஒரு கல்யாணத்தைச் செய்து பார்த்துவிட வேண்டுமென்று ஆசைப்பட்டாள்.

அவளை, தன் கண்களுக்கு விருந்தளிக்கும் விதத்திலே வாழ்க்கைத்துணை தேவையென்று விரும்பி நின்றான். அவனது விருப்பத்தைப் பூர்த்திசெய்வது போலத்தான் வேதபுரமிருந்துவந்த அந்தப் படம் அமைந்தது. படத்தைக் கையிலே வைத்துக்கொண்டு அந்த விழி அசைந்தால் எப்படியிருக்கும்! இதழ்கள் திறந்தால் எழிற்காட்சி எப்படிக் கொட்டும், என்றெல்லாம் கற்பனை சாம்ராஜ்யத்தைப் படைத்து ரசித்துக்கொண்டிருந்தான். பெரிய வீட்டுப் பிள்ளை! ஓய்வைக் கழிப்பதே அவர்களுக்குப் பெரிய தொல்லை! அந்தத் தொல்லை தவிர்க்க ஒரு கிள்ளைவருகிறது வேதபுரமிருந்து! அவளை ஒருமுறை எப்படியாவது நேரிலே பார்த்துவிடவேண்டுமென்று துடித்துக்கொண்டிருந்தான். பெண்வீடு பார்ப்பதற்குத் தாயார் மட்டுமே

போவதாக இருக்கிறுள். அவளுக்குத் துணையாக அவனது நண்பன் நயினு செல்வதாக இருக்கிறுன்; நயினு என்பது நயினுமுகம்மது என்ற பெயரின் சுருக்கம். அழகப்பனும் நயினுவும் ஆருயிர்த் தோழர்கள்; ஒரே தெருவினர். ஒரே பள்ளிக்கூடத்தில் படித்தவர்கள். ஒரே மாதிரி இருவரும் பரீட்சையில் 'சுழி' வாங்குபவர்கள்! அழகப்பன் உலகத்தை அவனுடைய சுற்றளவுக்குமேல் பெரிதாக மதிப்பவன். நயினுவுக்கோ உலகம் ஒரு விளையாட்டு மைதானம். அழகப்பன் எதையுமே ஆழ்ந்து சிந்திப்பான். நயினுவோ எல்லாவற்றையும் அலட்சியப் படுத்திவிடுவான். வாழ்க்கை யென்பது மனிதன் திட்டமிட்டு அழைத்துக்கொள்ள வேண்டிய சிங்காரச் சோலை! இது அழகப்பனின் தத்துவம்.

சோலையானுலும் பாலையானுலும் சேர்ந்து போகாமல் மனிதன் கடக்கவேண்டிய பாதைதான் வாழ்க்கையென்பது நயினுவின் முடிவு!

இந்த இருவரின் முடிவுகளும் அடிக்கடி மோதிக் கொள்ளும். அப்போதெல்லாம் அழகப்பன் வேகமான கருத்துக்களுக்கு அடிமையாகிவிடுவான். நயினுவுக்கோ அந்த மோதல் நிகழ்ச்சி ஒரு நகைச்சுவை நாடகமாயிருக்கும். அந்த நாடகத்தில் தன்னைத் தலைமைப் பாத்திரமாக்கிக்கொண்டு அழகப்பனைச் சிரிக்கவைப்பதில் முழுமுயற்சி எடுத்துக்கொண்டு முடிவில் வெற்றிபெறுவான் நயினு முகம்மது!

வேதபுரத்துப் பயணம் பற்றி நயினுவிடம் பேச்செடுத்தான் அழகப்பன். எப்படியாவது தானும்போய் பெண்ணைப் பார்த்துவிட்டு வரவேண்டுமென அவனிடம் மெல்ல மெல்ல விஷயத்தை வெளியிட்டான்.

"படம் பார்த்தாயே; அது போதாதா?" என்று கேலி பேசினுன் நயினு.

"படம்; அசையாது! பேசாது! சிரிக்காது!" என்ருன் அழகப்பன்.

"ஓகோ! அசைவிலே அன்னமா, மயிலா என்று தெரிந்துகொள்ளவேண்டுமாக்கும்! பேச்சிலே கிளியா, குயிலா எனத் தெரியவேண்டும்—சிரிப்பிலே முல்லைச்சரமா, முத்தாரமா என்று பார்த்துவிடவேண்டும்—இல்லையா?"

"நயினாவின் கேலி அதிகமாயிற்று! அழகப்பன் வெட்கத்தால் தலை குனிந்தான்.

"என்னப்பா இதற்கெல்லாம் போய் முக்கியத்துவம் கொடுத்துக்கொண்டு!.....மொட்டைத் தலையில் வெயில் படாமல் இருக்க ஒரு குல்லாய் வேண்டுமே தவிர, அந்தக் குல்லாய் பட்டினால் செய்யப்பட்டு பளபளப்பான ஜரிகை நெய்யப்பட்டு...இருக்கவேண்டுமா என்ன? அதுமாதிரி... வாழ்க்கைக்கு ஒரு பெண்! அவ்வளவுதானே!"

"ஏய், நயினா! மொட்டையடித்துக்கொள்ளாமலே யிருந்தால் அந்தக் குல்லாய்கூட தேவையில்லையே!"

"மொட்டையடிப்பது மதச் சம்பிரதாயம்! அதுபோல கல்யாணம் வாழ்க்கைச் சம்பிரதாயம்!"

"அப்படியானால் குல்லாய் போடுவது...?"

"வாழ்க்கைச் சம்பிரதாயம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், குல்லாய் போட்டுத்தான் தீரவேண்டும்! சிலபேர் மொட்டையடிக்காமல் கிராப்புத் தலையுடனேயே குல்லாய் போட்டிருக்கிறார்களா இல்லையா; அதுபோலத்தான்! அழகப்பா இந்த இடத்தில் குல்லாய் என்பது பெண்ணைக் குறிக்கும்!"

"தலைக்குக் குல்லாய்போல அல்ல; குடும்பம் நடத்த வருகிற பெண்!"

"பிறகென்ன; கிரீடமா? அழகப்பா! எனக்குத் தெரியும், தலைக்கு தொப்பிபோல வருகிற எத்தனையோ பெண்கள் கடைசியில் காலுக்குச் செருப்புபோல, தேய்ந்து கஷ்டப்படுவதை நான் பார்த்திருக்கிறேன்!"

"சரி சரி! உன் ஆராய்ச்சியை வளர்த்தாதே! தயவு செய்து நிறுத்து!"

"ஆராய்ச்சியில்லேயப்பா — அனுபவ உண்மை! என்னமோ—உனக்கு உன் ஆசைப்படியே ஓவியம்போல ஒரு பெண் கிடைத்திருக்கிறது — அந்த ஓவியம் பேசுமா பேசாதா? சிரிக்குமா? சிரித்தால் பல் இருக்குமா — இருக்காதா? — நடக்குமா? நடக்கக் கால் உண்டா? தொண்டியா? — இவைகளையெல்லாம் நாங்கள் பார்த்துவிட்டு வருகிறோம். நீ கவலைப்படாமல் இரேன்!"

"நயினு உனக்கு எல்லாம் விளையாட்டுதான்! நீ பெண்ணைப் பார்க்கமுடியாது!"

"ஏன்—எங்களைப்போல 'கோஷா' முறை ஏதாவது உண்டா?"

"அதெல்லாமில்லை—என் மாமனார் பெரிய சனாதன இந்து! உன்னை உள்ளே அனுமதிப்பதுகூட சந்தேகந்தான்!"

"உண்மையாகவா; அல்லது நீ வரவேண்டுமென்பதற்காகப் புளுகுகிறாயா?"

"உண்மைதான் நயினு; உண்மைதான்!!"

"அப்படியானால், நான் கைலியில்லாமல், குல்லாயில்லாமல் போகிறேன்!"

"இந்துவென்று எண்ணிக்கொள்வாரா மாமனார்? பைத்தியக்காரா! தலை மொட்டையாக இருக்கிறதே; அது காண்பித்துக்கொடுத்துவிடாதா?"

"திருப்பதிக்குப் போனதாகச் சொல்லிவிடுகிறேன், என்ன அழகப்பா, எனக்கே நீ காது குத்துகிறாய்!"

"டேய்! காது வேறு குத்திக்கொள்ள வேண்டுமடா—இந்து என்றால்!"

"காது குத்துகிறவன்தான் இந்து என்று எனக்குத் தெரியும்! குத்திக்கொண்டால் போகிறது! மனிதனுக்கு மனிதன் ஆண்டவன் படைத்த அவயவங்களை சில மாறுதல் பண்ணிக்கொள்வதுதானேடா மதம்!"

"சரி! சரி! மத ஆராய்ச்சியிலே இறங்கிவிட்டாயா? உருப்பட்ட மாதிரிதான்!"

"எந்த ஆராய்ச்சியில் இறங்கினாலும் சரி; கடைசியில் வேதபுரத்துக்குப் போவது நானும் உன் அம்மாவுந்தான்!"

"அம்மாவுக்கு அரைப்பார்வை! பெண்ணைச் சரியாகக் கூடப் பார்த்துவர முடியாது!"

"ஓகோ—நீ போனால் சரியாகப் பார்த்துவிட்டு வந்து விடுவாயோ? அப்பனே அழகப்பா! இது 'அவாள்' வீட்டுப் பெண்ணல்ல; மாப்பிள்ளைக்கு நேராக பாட்டுப் பாடி, நடனமாடி, கற்ற வித்தைகளையெல்லாம் காட்டி கல்யாணத்துக்குச் சம்மதம் பெற! அம்மா பார்க்கிற அரைப்பார்வை கூட உன்னால் பார்க்கமுடியாது!"

"நயினா! ஓரே முடிவாகச் சொல்லுகிறேன்; நான் வந்துதான் தீரவேண்டும்!"

"உங்க மாமனார் வேறு கடிதம் எழுதியிருக்கிறார்; மாப்பிள்ளை வரவேண்டாம்—வந்தால் ஊரில் திருஷ்டி அதிகமானாலும் ஆகும் என்று! அதோட நீ அந்த வீட்டில் இந்த மாதம் அடிவைக்கக் கூடாதாம்! உங்க அம்மாதான் அடிவைக்கலாமாம்—அதுமாதிரி பஞ்சாங்கத்திலே போட்டிருக்காம்!"

"அந்தப் பஞ்சாங்கத்தைக் கிழித்து எறி! நெருப்புலே போடு!"

"அதில் புண்ணியமில்லே! நீ மந்திரியா வந்து பஞ்சாங்கமே வெளியிடக்கூடாதுன்னு தடைபோடு!"

"நயினா, நானும் புறப்படுகிறேன் வேதபுரத்துக்கு! அம்மாவிடம் நான் சொல்ல வெட்கமாயிருக்கிறது. நீ சொல்லிவிடு!"

அழகப்பனின் பிடிவாதத்தை மாற்ற இயலாதெனக் கண்டுகொண்ட நயினா பின்வாங்கினான். தாயாரின் அபிப்பிராயப்படி ஜோசியர் குறித்துக்கொடுத்த நாளில் வேதபுரம் புறப்படுவதற்குத் தீர்மானமாயிற்று. அழகப்பன்,

நயினு, தாயார் மூவரும் மோட்டாரில் புறப்பட்டனர்; வேத புரத்திற்குத் தந்தி கொடுத்துவிட்டு!

வெள்ளிக்கிழமை முற்பகல் வேதபுரம் சேர்ந்துவிட வேண்டுமென்ற முடிவில், பெங்களூரைவிட்டு இரவே புறப் பட்டுவிட்டனர். பெங்களூருக்கும் வேதபுரத்திற்கும் முன்னூறு மைல்களாவது இருக்கும். வயதான தாயார் காரில் இருப்பதால் மெதுவாகத்தான் காரை ஓட்ட இய லும்! வேடிக்கைக் கதைகள் பேசியவாறு அழகப்பனையும் அவன் தாயாரையும் உற்சாகப்படுத்திக்கொண்டிருந்தான் நயினு. பொழுது விடியப்போகிற நேரம். பெண்வீடு பார்க்க வருகிறவர்களை எண்ணி மகிழ்ந்துகொண்டிருந் தாளே சிந்தாமணி, அந்த நேரம்! அப்போதுதான் அழகப்பனின் கார் வேதபுரம்நோக்கி நூறுவது மைலில் மெதுவாக வந்துகொண்டிருக்கிறது.

தாயாரம்மாள் களைப்பின் மிகுதியால் காரில் சாய்ந்த வாறே சிறிது கண்ணயர்ந்தாள். டிரைவருக்கு அசதியாக இருக்குமென்று, அவனுக்கு ஓய்வு கொடுத்துவிட்டு அழகப்பனே கார் ஓட்ட ஆரம்பித்தான்.

"உன் அவசரத்தில் காரை வேகமாக விடாதே அழகு! அம்மாவேறு தூங்குகிறார்கள்" என்று கிண்டலாக எச் சரித்தான் நயினு. எத்தனையோ நாள் கார் ஓட்டியிருக் கிறான் அழகு! ஆனல் இப்போது ஏற்படும் தனி உற்சாகம் என்றுமே ஏற்பட்டதில்லை! அருகேயிருந்த நயினு அவனது மன உற்சாகத்தைப் புரிந்துகொண்டவன்போல—

"இன்னுங் கொஞ்சநாள் போனல்; பெங்களூரில் இந்தக் கார் என்ன பாடுபடும்? பக்கத்திலே நாலு உட் காராந்திருக்கமுடியும்?" என்று சிரித்தான்.

"ஏய்—அம்மா!" என்று சைகை செய்தான் அழகப் பன். "அம்மா தூங்குவது தெரியவில்லை?" என்று கேட்ட படி நயினு மீண்டும் ஆரம்பித்தான்.

"அழகு! நான் ஒரு கேள்வி கேட்கிறேன்; பதில் சொல்! ஒரு வெள்ளைக்காரனும் வெள்ளைக்காரியும் காரில்

போய்க்கொண்டிருந்தார்களாம். கணவன் காரை ஓட்டிக் கொண்டிருந்தான். பக்கத்திலே மனைவி! கார் போய்க் கொண்டிருக்கும்போதே அருகேயுள்ள மனைவிக்கு அவன் ஒரு முத்தம் கொடுத்தானும்—முத்தம் பெற்ற அவள் கேட்டாளாம்; "நீங்கள் முத்தம் தரும்போது உங்கள் கவனம் என் கன்னத்தில் இருந்ததா? அல்லது எதிரில் உள்ள சாலைமீது இருந்ததா?" என்று! நீயாயிருந்தால் அதற்கு என்ன பதில் சொல்லியிருப்பாய்? சொல்லு பார்க்கலாம்!"

"உன் கதையை அனுபவித்துப் பார்த்துவிட்டுப் பிறகு உன் கேள்விக்குப் பதில் சொல்கிறேன்!"

"பெங்களூரில் கார் மோதி எதிரே வந்த ஒரு ஆளுக்கு தலை காணுமல் போய்விட்டது என்று ஒரு சேதி பத்திரிகையில் வந்தால் — அன்றைக்கு நீ என் கேள்விக்குப் பதில் தேடியிருக்கிறாய் என்று அர்த்தம்! இல்லையா?"

"அப்படியானால் என் கவனம் சாலைமீது இருக்காது என்கிறாயா?"

அழகப்பன் இப்படிக் கேட்கும்போதே கார் ஒரு மரத்தின்மீது மோத இருந்து தப்பியது! நயினு சிரித்தபடி அழகுவைத் தட்டிக்கொடுத்தான்.

இன்னும் தொண்ணூறு மைல்கள் வேதபுரம் என்பதை ஒரு கைகாட்டி அறிவித்தது. கைகாட்டியைத் தாண்டி சிறிதுதூரம் சென்றதும் சாலை குறுகி இருமருங்கிலும் புதர் அடர்ந்து காணப்பட்டது. குறுகிய சாலையில் கார் பிரவேசித்தது. இதயத்தை வேதபுரத்திற்கும் காருக்குமாக அலையவிட்டுக்கொண்டிருந்த அழகப்பன் திடீரென காரை நிறுத்தினான். "என்ன என்ன?" என்றான் நயினு. தாயாரும் மாளும் விழித்துக்கொண்டாள். சாலையின் குறுக்கே ஒரு மனித உருவம் கிடந்தது.

"யாரோ அடிபட்டுச் செத்திருக்கிறான்" எனக்கூறியபடி அழகப்பன் காரைவிட்டு இறங்கினான். அவன் இறங்கியதுதான் தாமதம் பெருங்கூச்சலோடு ஏழெட்டுப்பேர் காரை வளைத்துக்கொண்டார்கள். சாலையின் குறுக்கே

கிடந்தவனும் பயங்கரச் சிரிப்போடு எழுந்துவிட்டான். அழகப்பனுக்கும் நயினுவுக்கும் இன்னது செய்வதென்றே புரியவில்லை. தாயாரம்மாள் அலறினாள். "அய்யோ! எங்களை விட்டுடுங்க!-நீங்க கேட்கிறதெல்லாம் தர்ரோம்!" என்று கெஞ்சியழுதாள். என்னையாவது கொண்ணுடுங்க! என் பிள்ளையை ஒண்ணும் பண்ணுதிங்க!" என்று தாய்ப் பாசத்தின் உயர்வை வெளியிட்டு ஒப்பாரிவைத்தாள்.

நயினுவின் முதுகில் ஒரு குத்து விழுந்தது. நயினுவும் அவர்களை எதிர்க்க ஆரம்பித்துவிட்டான். அழகப்பனுக்கும் வேறு வழியில்லை. கார் டிரைவரும் களத்தில் இறங்கினான். சாலையில் சிறியதோர் போர்க்களம் உருவாயிற்று. ஏழெட்டுப்பேரை மூவர் மட்டுமே எவ்வளவு நேரந்தான் எதிர்க்கமுடியும்? அதுவும் டைகரின் இரும்சோறு சாப்பிட்டு உடலைக் கொழுக்கவைத்துக்கொண்ட கூட்டம்! அழகப்பன் அவர்களைச் சமாளிக்கமுடியாமல் தவித்தான்.

திடீரென்று நயினுவுக்கு ஒரு யோசனை தோன்றியது. காரின் முன்பகுதியில் பாய்ந்தான். அங்கிருந்த ரிவால்வாரை எடுத்து, 'அழகப்பா! இந்தா! சுடு! சுடு!' என்று கத்தியவாறு அவனிடம் தூக்கி எறிந்தான். ரிவால்வார் அழகப்பனின் கைக்கு வந்ததும் டைகரின் ஆட்கள் பயந்தவாறு நயினு இருக்கும் பக்கம் ஓடிவந்தனர். "உம்! ஓடிவிடுங்கள்! சுட்டுவிடுவேன்!" என்று எச்சரித்தான் அழகப்பன்! முரடர்கள், "எங்களைச் சுட்டால் இவனைக்கழுத்தை நெறித்துக் கொன்றுவிடுவோம்!" என்று கத்தியவாறு நயினுவைச் சூழ்ந்துகொண்டனர். நயினு, துள்ளாடியபடியே அவர்களை எதிர்த்தான். "இனிப்பொறுக்கமுடியாது! சுடவேண்டியதுதான்!" என உரக்கச் சொல்லிக்கொண்டே ரிவால்வாரை முடுக்கினான் அழகப்பன்! இரண்டு வெடிச் சப்தம்! "அய்யோ! என்னைக்கொன்றுவிட்டாயே அழகப்பா!" என்று கதறியவாறு நயினு முகமது தடால் என்று கீழே சாய்ந்தான்! அழகப்பன் உடல் நடுங்கிற்று! அசைவற்றுப்போனான். தாயாரம்மாள் அடித்து மோதிக்

கொண்டு அழுதாள். முரடர்கள் பின்னங்கால் பிடரியில் இடிபட ஓட ஆரம்பித்தார்கள்.

அழகப்பன் ரிவால்வாரைக் கீழே போட்டுவிட்டு நயினு முகமதின் மீது சாய்ந்தான். தன் ஆருயிர்த் தோழனைத் தானே கொன்றுவிட்டோம் என்ற அதிர்ச்சி சாமான்ய மானதா? அந்த வேகத்தில் நண்பன் மீது அவன் விழுந்தான்.

"அடேடே! வலிக்குதப்பா! மாடுமாதிரி மேலே விழு கிறுயே!" என்று சிரித்துக்கொண்டே திடீர் என எழுந் தான் நயினு முகம்மது! அழுது வியப்போடு "நயினு! நீ சாகவில்லை?" என்று கேட்டான்.

"குறிபார்ப்பதில் உனக்கு யாருமே ஈடில்லை அழகப்பா! நல்லவேளை நீ பார்த்த குறிக்கு இது உண்மையான ரிவால் வாராக இல்லாமல் வீணாயாட்டுத் துப்பாக்கியாகப் போய் விட்டது!"

"உம்-உம்! புறப்படு!" என்று அனைவரையும் காரிலே உட்காரச்சொல்லி அவசரப்படுத்தினன். புது வாழ்வு பெற்றதுபோன்ற பூரிப்பில் எல்லோரும் கார் பயணத்தை மீண்டும் தொடங்கினர்!

சிந்தாமணியை மருத்துவ மனையிலே விட்டுவிட்டு வீடுவந்த சிவநேசர், சிவகாமி இருவரும் மாப்பின்னை வீட்டாரை வரவேற்கக் காத்திருந்தனர். குறிப்பிட்ட நேரத் திற்குச் சிறிது தாமதமாக—ஆனலும் ஜோசியர் சொன்ன நாழிகையில் சிறிதும் தவருமல் மாப்பின்னை கார் சிந்தா மணியின் வீட்டு வாசலில் வந்து நின்றது! சிவநேசரும் சிவகாமியும் அவர்களை எதிர்கொண்டழைத்து உப சரித்தனர்.

"மாப்பின்னை வரமாட்டார் என்றல்லவா நினைத்தேன்" என்றார் சிவநேசர்.

"அவருக்கு வர இஷ்டமில்லைதான். நான்தான் கட்டா யப்படுத்தி இழுத்துவந்தேன்" என்று தன்னைத்தானே

அறிமுகப்படுத்திக்கொண்டு நயினு முகம்மது பதில் கூறினன்.

"மாப்பிள்ளை இப்போது வீட்டுக்கு வர பொருத்தம் சரியில்லை! அடுத்த மாதந்தான் வரலாமென்று பஞ்சாங்கத் தில் போட்டிருக்கிறது! அதனுல்தான் அவர் வரவேண் டாம்... அப்படின்னு..... நினைச்சேன்!" என்று இழுத்தார் சிவநேசர். அவரது சனுதன உள்ளம் சடங்குகள், சாஸ் திரங்களுக்கு அடிமைப்பட்ட உள்ளம் கிரக பலனுக்கு விரோதமாக மாப்பிள்ளை வருகைதந்ததை ஏற்க மறுத்து விட்டது. அதை வெளியில் காட்டாமலும் அவரால் இருக்க முடியவில்லை.

"கிரகம் சரியில்லாவிட்டாலும், ஏதோ தோஷம் கழிச்சா சரியாப்போயிடும்னு சொன்னர் ஜோசியர்! அதனுல்தான் பையனை அழைச்சுகிட்டு வந்தோம்!"

"தோஷம் கழிப்பதாவது ஒண்ணுவது; அதெல்லாம் பித்தலாட்டம்! ஜோசியன் பிழைப்புக்காகப் புளுகுவது!"

"கிரகபலன் போட்டிருக்கிற அதே பஞ்சாங்கத்திலே தான் தோஷ நிவர்த்தியும் போட்டிருக்கிறதாக ஜோசியர் சொன்னரே!" என்ருன் நயினு!

"அட உமக்கென்னய்யா தெரியும்? நீர் வேறே மதம், நாங்க வேறே மதம்!" என்று கடுமையாகப் பேசி பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தார் சிவநேசர். அழகப்பனின் முகத்தை நயினு கிண்டலாகப் பார்த்துச் சிரித்தான். அழகு முகத்திலே அசடுவழிந்தது. நயினுவுக்கு இந்தமாதிரிதாக் குதல் எல்லாம் சாதாரணம்! பிறகு தாயாரம்மாள் வழியில் திருடர்களிடமிருந்து தப்பிய கதையைக் கூறினுள். "எல்லாம் கிரகபலனே மீறியதால் வந்த வினைதான்!" என்று சிவதேசர் இடித்துக்காட்டினர்.

இன்னும் ஒருதடவை இப்படி ஏதாவது சொல்லியிருப் பாரேயானுல் அழகப்பன், தாயாரை அழைத்துக்கொண்டு பெங்களூர் திரும்பியிருப்பான்; அவ்வளவு ஆத்திரம் ஏற்

பட்டுவிட்டது அவனுக்கு! "வீட்டுக்கு வந்தவர்களிடம் இப்படிப் பேசினால் தவருக எண்ணிக்கொள்ளமாட்டார் களா?" என்று சிவகாமி அறிவுறுத்திய பிறகுதான் சிவ நேசர் சிறிது அடங்கினர். தாயாரம்மாளின் பார்வை வீடு முழுதும் சுழன்றுகொண்டிருந்தது. அவள் கண்களுக்குச் சரியான ஒளியில்லாத காரணத்தால் மிகமிகக் கூர்ந்து எல்லா திசைகளிலும் பார்வையை ஓட்டினாள். அதே நிலை தான் அழகப்பனுக்கும்! சிவகாமி கடைசியாக மெதுவாகப் பேச்சையெடுத்து — சிந்தாமணிக்கு ஏற்பட்ட விபத்தைக் கூறினாள்.

தனக்கு ஏற்பட்டமாதிரி தன் மனைவிக்கும் ஒரேநாளில் ஆபத்து ஏற்பட்டிருக்கிறதே என எண்ணி வியப்படைந் தான் அழகப்பன். தாயாரம்மாள் சிந்தாமணியை மருத்துவ மனையில் சென்று பார்க்க விரும்பினாள்.

"வரும்போதும் வழியில் சகுனம் சரியில்லை; இங்கும் இப்படிச் சகுனம் சரியில்லாமல் இருக்கிறது!— அதனால் சிந்தாமணியை இன்றைக்குப் பார்ப்பது அவ்வளவு உசித மாகத் தெரியவில்லை. இன்னொரு நாளைக்கு..." என்று இழுத்தார் சிவநேசர்!

எல்லாம் தலைகீழ் மாற்றமாகிவிடவே தாயாரம்மாள் சிறிது அதிர்ச்சியடைந்தாள். சிவகாமி! அதைப் புரிந்து கொண்டு வேதனை கொண்டாள்.

"உடம்பு சுகமில்லாமல் இருக்கிற பெண்ணைப் பார்த் தால் என்ன — எனக்கும் பார்க்க ஆசையிருக்காதா?" என்று பிடிவாதமாகச் சொன்னாள் தயாரம்மாள்!

நயினாவும் 'ஆமாம்' போட்டான். அழகப்பனும் அதே கருத்தை ஜாடையாகத் தெரிவித்தான்.

எவ்லோருமே சாஸ்திரத்துக்கு விரோதமாகப் பேசுவ தாக நினைத்தார் சிவநேசர்!

"நீங்கள் எல்லாம் நாஸ்திகர்களா?" என்று தாயாரம் மாளைப்பார்த்துக் கேலி கலந்த கோபத்தில் கேட்டுவிட்டார்.

"சிவ சிவா" என்று வாயில் அடித்துக்கொண்டாள் தாயாரம்மாள்.

இறுதியில் சிவநேசர் அபிப்பிராயமே வென்றது. அன்றிரவு மாப்புள்ளை வீட்டார் ஊருக்குத் திரும்புவதென்றும் இன்னொரு நல்லநாள் பார்த்துப் பெண்வீடு பார்க்க வருவதென்றும் முடிவுசெய்யப்பட்டது! அழகப்பனும், நயினாவும் ஊர் சுற்றிப் பார்த்துவரப் புறப்பட்டார்கள்! அழகப்பனுக்கு ஒரு நல்ல யோசனை தோன்றியது. அதை நயினாவிடம் வெளியிட்டான்.

"சிந்தாமணியை நாம் பார்க்க இதுதான் தக்க சமயம்! ஆம்பத்திரியில் போய் தாராளமாகப் பார்த்துவிட்டு வரலாம், என்ன சொல்கிறாய்?" என்று கேட்டான். நயினா சம்மதிக்காமலிருக்க முடியுமா?

இருவரும், ஆனந்தியின் மருத்துவமனையை விசாரித்துக்கொண்டு போய்ச்சேர்ந்தனர். அங்கே டைகர் இருந்தான். ஆனந்தி இருந்தாள். சிந்தாமணியைப் பார்க்க வேண்டுமென்று அழகப்பன் கூறினான். ஆனந்தி முதலில் மறுத்தாள், பிறகு டைகர் சிபார்சு செய்தான்; "யாரோ அவளுக்குச் சொந்தக்காரர் போலிருக்கிறது, சரிதான் பார்த்துப்போக அனுமதிகொடு" என்று!

சொந்தக்காரர் என்ற முறையில் அழகப்பனும், நயினாவும் உள்ளே அனுமதிக்கப்பட்டனர். வேம்பு அவர்களை உள்ளே அழைத்துக்கொண்டு போய், ஒரு நர்சுவிடம் அறிமுகப்படுத்தி, "இவர்களைச் சிந்தாமணி இருக்குமிடம் அழைத்துப் போ" எனக் கூறிவிட்டுத் திரும்பினான். நர்சு அவர்களை அழைத்துக்கொண்டு போனாள்.

சிந்தாமணியிடம் தான் யார் என்று சொல்வதா இல்லையா என்ற பிரச்சினை அழகப்பனைக் கலக்கிற்று. அதோடு சிவநேசருக்குத் தெரியாமல் இப்படி வருவது சரியா? என்ற கேள்வியும் குடைந்தது! எப்போதுமே தவறு செய்ய ஆரம்பிக்கிறவனுக்கு அஸ்திவாரத்திலே ஏற்படுவதைவிட அதிக அச்சம் உச்சி போய்ச் சேரும்போதுதான் தோன்றுகிறது. அந்த நிலைக்கு ஆளானான் அழகப்பன். நர்சு அவர்

கனைச் சிந்தாமணி படுத்திருக்கும் கட்டிலண்டை அழைத்துப்போனுள்.

"உம்! இதுதான் சிந்தாமணி — அயர்ந்த தூக்கம்! எழுப்பாதீர்கள்!" என்றுள் நர்சு!

அழகப்பன் ஆவலோடு அப்பக்கம் நோக்கினன். தீப் பட்டவைபோல் ஆயின அவன் கண்கள்! "ஆ" என்று அலறினன். சிந்தாமணி திடுக்கிட்டு விழித்தாள். அவள் பக்கத்திலே ஒரு குழந்தை.

"ஸ்! சப்தம் போடாதீர்கள் — பிரசவக் கனைப்பு — தொல்லை கொடுக்காதீர்கள்" என்றுள் அதிகாரமாக நர்சு.

"அடப்பாவிகளே! நல்லவேளை — நான் தப்பினேன்! இதற்குத்தான் அந்த சிவநேசன் நாள் நட்சத்திரங்கள் மீது பாரத்தைப் போட்டு அவ்வளவு தடுத்தானு? அட மோசக்காரர்களே!" என்று ஆத்திரக் கூச்சலிட்டான் அழகப்பன். நயினு மூமம்மது அவன் வாயைப் பொத்தி மளமளவென்று வெளியே இழுத்துக்கொண்டு வந்தான்.

5

எரிமலைபோல் வரும் அழகப்பனையும் அவனைக்கட்டுப் படுத்தியவாறு பின்தொடரும் நயினுவையும் கண்ட ஆனந்தி, "ஏன்? என்ன நடந்தது?" என்று கேட்டாள்.

"இன்னும் என்ன நடக்கவேண்டும்? நடக்கவேண்டிய தெல்லாம் நடந்துவிட்டது!" என்று உரக்கக் கத்தினன் அழகப்பன். அவன் வாயைப் பொத்தியவாறு நயினு முகம் மது ஆனந்தியைப் பார்த்து, "ஏனம்மா, சிந்தாமணியின் பிரசவம் எப்போது ஆயிற்று?" என்று கேட்டான். "இன்று காலையிலேதான்" என்று பதில் சொல்லிவிட்டு ஆனந்தி, டைகரின் முகத்தைப் பார்த்தாள். அகத்திலே எழுந்த ஆனந்தக் களிப்பை வெளியிலே காட்டிக்கொள்ளாமல் டைகர், ஆனந்தியைக் கண்ஜாடை செய்து வேறுபக்கம்

அழைத்துக்கொண்டு போனான். அவமானப்படுகுழியில் தள்ளப்பட்டபோதிலும்—பயங்கரம் நிறைந்த எதிர்காலத் திலேயிருந்து நிரந்தரமாக மீட்கப்பட்டுவிட்டோம் என்ற ஆறுதல் ஒருபக்கம் தலைகாட்ட அழகப்பன் வெகு வேகமாக சிவநேசரின் வீட்டுக்குள்ளே நுழைந்தான்.

"என்ன மாப்பிள்ளை! இவ்வளவு வேகம்!" என்று சிரித்துக்கொண்டே கேட்டார் சிவநேசர். "ஓகோ! பல்லை வேறு இளிக்கிறீரா? பவிசு கெட்டவர்களே! எங்கள் குடும்ப கௌரவத்தையே குழியில் தள்ளி கோபுரம் கட்ட நினைத்த கொடுமதியாளர்களே! சிரிப்பு வேறு சிரிப்பு!" என்று கனல் கக்கினான் அழகப்பன். சிவநேசர் அதிர்ச்சி அடைந்தார். சிவகாமி மரமானாள். தாயாரம்மாள் விழித்தாள். நயினு முகம்மது அழகப்பனை சாந்தப்படுத்துவதில் முனைந்து நின்றனர். "நயினு! என்னப்பா — என்ன நடந்தது!" என்று தாயாரம்மாள் பரபரப்போடு விசாரித்தாள். "அம்மா! நாசம் நடக்க இருந்தது! மோசம் போக இருந் தோம்! நல்ல வேளை; வேஷம் கலைந்துவிட்டதம்மா—தப்பி விட்டோம்! தப்பிவிட்டோம்!" என்று தனல்மேல் நிற்ப வனைப்போல கூச்சலிட்டான் அழகப்பன். "புரியவில்லையா அம்மா உனக்கு! இந்தப் பேயர்கள் பெற்ற குலக்கொடியை இப்போது பார்க்கக்கூடாது என்று தடை போட்டார்களே, ஏன் தெரியுமா? நான் நட்சத்திரத்தின்மீது பாரத்தைப் போட்டார்கள்; அதன் மர்மம் புரியுமா? 'மாப்பிள்ளை வர வேண்டாம் பெண்வீடு பார்க்க என்று கடிதம் மூலம் வலி யுறுத்தியிருந்தார்களே; அதற்குக் காரணம் புரிந்துவிட்ட தம்மா!" என்று பேசிக்கொண்டேயிருந்தான் அவன். சிவ நேசருக்கோ தன் கண்முன்னல் நடைபெறும் சம்பவமும், காதிலே விழும் நெருப்பு மொழிகளும் உண்மைதானு?— என்ற ஐயமும் அதிர்ச்சியுப் பிறந்தது! அசைவற்றுப் போனர் அவர்.

"மாப்பிள்ளை என்ன சொல்லுகிறார்?" என்று சாவ தானமாகக் கேட்டார் நயினுவிடம்! நயினு மௌனமாக

நின்ருன். அழகப்பனே மறுபடியும் ஆத்திரக் குரலெழுப் பத் துவங்கினன்.

"மாப்பிள்ளே என்று என்னே அழைக்காதீர்! மானம் பெரிது என வாழ்கிறவர்கள் நாங்கள்! எங்களுக்கும் மானத்தைப்பற்றியே கவலேப்படாத உங்களுக்கும் சம்பந்தி உறவு ஏற்பட எந்தக் காலத்திலும் இயலாது!"

"தம்பீ! கொஞ்சம் வார்த்தையை அடக்கிப் பேசு! விஷயத்தைச் சொல்லாமல் வெடிக்கிருயே; ஏன்? மானம் அவமானத்தைப்பற்றி எனக்குப் பாடம் சொல்லித்தர உனக்கு வயது போதாது தம்பி! நிதானமாகப் பேசு! பதருதே! பைத்தியம் என்று முடிவுகட்டுவார்கள்; உன் போக்கைப் பார்த்து!"

சிவநேசர் அமைதியாகவும் ஆனல் கண்டிப்பாகவும் இந்த வார்த்தைகளேப் பிரயோகித்தார். தாயாரம்மாள், அழகப்பனின் ஆவேச ஆட்டத்தை நிறுத்தி "விஷயத்தைத் தான் சொல்லேண்டா" என்று கத்தினுள்.

"சொல்லக்கூடிய விஷயம் இல்லேயம்மா! ஆனல் சொல்லாமலும் இருக்கமுடியாது! இதோ நிற்கிருரே; இந்தப் பெரிய மனிதர்; இவர் நமக்கு அளிப்பதாக வாக் களித்த பெண் இருக்கிருளே; வைரச்சிலே! கூழாங்கல்! சிந்தாமணி! அவள் இன்று காலேயில்தான் ஒரு குழந்தைக் குத் தாயாகியிருக்கிருள் — இந்த உத்தமர் தாத்தாவாகி யிருக்கிருர்!" அழகப்பன் வாய்மூடவில்லே; சிவநேசர், "அய்யய்யோ கடவுளே!" என்று கூவிவிட்டார்!

"யார் இந்த அபாண்டத்தைக் கட்டிவிட்டது?" என்று சிவகாமி ஓப்பாரி வைக்கத்தொடங்கினுள்.

அழகப்பன் தாயாரிடம் நெருங்கி "அம்மா! இனி ஒருக்கணமும் இங்கிருக்கக்கூடாது! உடனே புறப்படு! இந்தக் குப்பை மேட்டில் பெண் கேட்க வந்தோம் என்று யாருக்காவது தெரிந்தால்கூட அவர்கள் இனிமேல் நம்மை மதிக்கமாட்டார்கள்! நம் சம்பந்தத்தை விரும்ப

மாட்டார்கள்! புறப்படம்மா; புறப்படு!" என்று அவசரப் படுத்தினன். சிவநேசர் வெறிகொண்டவர்போல் "என் பெண், தாயாகிவிட்டாளா? அகரமம்! அபாண்டம்! அய்யோ! அடுக்காது! அடுக்காது! யாரோ என் குடும்பத் தைக் கெடுக்க சூழ்ச்சி செய்துவிட்டார்கள்! பெரிய இடத் திலே உறவு ஏற்படப் போகிறது சிவநேசனுக்கு என்று உறுமிக்கொண்டிருந்தவர்கள் இப்படி ஒரு பயங்கரமான உபாயத்தைக் கையாண்டிருக்கிறார்கள்! நம்பாதீர்கள்! நம்பாதீர்கள்!! யாரோ கட்டிவிட்ட கதை இது!" என்று புலம்பியழுதார்!

"ஆகா! உணர்ச்சிகரமான நடிப்பு! நாடகத்திலே சினிமாவிலே 'அப்பா' வேடத்திற்கு அபாரமான பொருத் தம்!" என்று கூறி கலகலவெனச் சிரித்தான் அழகப்பன். "அய்யோ—ஊர் பேச்சைக் கேட்காதீர்கள்!" என்று சிவகாமி ஓடிவந்து தாயாரம்மாளின் காலைக் கெட்டி யாகப் பிடித்துக்கொண்டு கதறினள்.

"யார் பேச்சையும் கேட்கவில்லையம்மா நான்! நானும் நளினவும் நேரிலேயே பார்த்தோம்—லேடி டாக்டர் ஆனந்தி யின் ஆஸ்பத்திரியில் சிந்தாமணி—பக்கத்திலே குழந்தை யுடன் படுத்திருந்த காட்சியை நேரிலே பார்த்தோம்!"

"அது யார் குழந்தையோ என்னமோ?" சிவகாமி ஓலமிட்டாள்.

"பிரசவக் களைப்பால் சிந்தாமணி அயர்ந்திருக்கும் விஷயத்தையும் அங்கிருக்கும் நர்சு சொன்னாளம்மா! கண்ணால் கண்டது பொய்யல்ல! காதால் கேட்பதும் பொய்யல்ல! புறப்படம்மா உடனே இதைவிட்டு!"

"சிவகாமி! சிவகாமி! என்ன இது? என்னடி மோசம் இது! சிந்தாமணிக்குப் பிரசவமா? அய்யோ தெய்வமே!" என்று தலையிலே அடித்துக்கொண்டார் சிவநேசர். சிவ காமியோ தரையிலே விழுந்து புரண்டு அழுதாள்.

"தம்பீ! உங்களுக்கு இந்த வீட்டு உறவு வேண்டாம் என்றால் பிடிக்கவில்லையென்று சொல்லிவிட்டுப் போய்

விடுங்கள்! அதற்காக இப்படியெல்லாம் எரிமலைக் குழம்பை வாரி எங்கள்மீது இறைக்காதீர்கள்! நீங்கள் செல்வர் வீட்டுப்பிள்ளை! நாங்கள் ஏழைகள்! ஏணி வைத்தாலும் உங்களுக்கும் எங்களுக்கும் எட்டாது! உங்களைப் போன்றவர்களின் உறவு வேண்டுமென்ற எங்கள் பேராசைக்கு இதுவும்வேண்டும்; இன்னமும் வேண்டும்! சிந்தாமணி, கல்யாணம் ஆகவேண்டிய பெண்! கடைச் சரக்கல்ல அவள்! இதைப்போன்ற களங்கமும் பழியும், ஒரு கன்னிப் பெண்ணின் வாழ்க்கையைப் பாலைவனமாக்கி விடும் தம்பீ! தயவுசெய்து உங்கள் தவறான எண்ணத்தைமாற்றிக் கொள்ளுங்கள்! சிந்தாமணி தங்கம்! மாசுமருவற்ற மல்லிகைப்பூ என் மகள்! அவளுக்குப் பட்டம் சூட்டவா உம்மைப் பெங்களூரில் இருந்து வரவழைத்திருக்கிறோம்? வேண்டாம் —என் பெண் உங்களுக்கு வேண்டாம்! போய்விடுங்கள்! பொல்லாங்கு பேசாமல் போய்விடுங்கள்!!''

சிவநேசர் உள்ளம் உடைந்து பொங்கினர். குமுறியெழுந்த உணர்ச்சித் தீயைக் கொட்டினர். அழகப்பனே ஆத்திரத்தின் உச்சியிலிருந்து ஒரு படியும் இறங்கவில்லை. சூழ்ச்சி பலிக்கவில்லையென்றதும் சுற்றி வளைத்துப் பேசி தப்பித்துக்கொள்ள வழி தேடுகிறார்கள் என முடிவுகட்டினான். ''நீர் ஆயிரந்தான் சொன்னாலும் சரி; உம்மை நம்ப முடியாது! நான் நேராகவே பார்த்தேன்; உமது மகளையும் -உமது பேரக்குழந்தையையும் ஆஸ்பத்திரியில்! விஷயம் வெளிச்சமாகிவிடும் என்றுதானே, எங்களை ஆஸ்பத்திரிக்குச் செல்லக்கூடாது-அபசகுனம் என்று தடுத்தீர்! அம்மாவின் ஓளி மங்கிய விழிகளை எப்படியாவது ஏமாற்றி வழி தவறிய பெண்ணை என் தலையில் கட்டிவிடலாமென்ற நம்பிக்கையில்தானே 'மாப்பிள்ளை வரவேண்டாம்; அம்மா வந்தால் போதும்' என்று கடிதம் எழுதினீர்கள்! ஆரம்பத்திலேயே அகப்பட்டுக்கொண்டீர்கள்; அரிச்சந்திராமயான காண்டம்'' நடத்திச் சமாளிக்கிறீர்கள்—நாங்கள் உங்களிடம் ஏமாந்திருந்தால் நாள்தோறும் ''பாரதம்'' அல்லவா நடக்கும் எங்கள் வீட்டில்!'' என்று கேலியும்

கின்டலும் செய்தான்; இடையிடையே சீறியும் விழுந்தான் அழகப்பன். இவ்வளவு நேரம் மௌனமாக இருந்து இந்த அசம்பாவித நிகழ்ச்சியைக் கவனித்துக் கொண்டிருந்த நடிகை முகம்மது, சிவநேசரை அணுகி மெதுவாக "நான் ஒன்று கேட்கிறேன் கோபித்துக்கொள்ளக்கூடாது! நாங்கள் சந்தேகப்படுவது தவறு என்றால் நீங்கள் ஏன் உங்கள் மகள் தூய்மையான பெண் என்பதை நிரூபிக்கக்கூடாது? அதற்காக முயற்சி எடுத்துக் கொள்ளுங்களேன்!" என்று கூறினான். சிவநேசர் சிறிது யோசித்தார். அதற்குள் அழகப்பன் குறுக்கிட்டான். "அடே நடிகை! ஏ மூட்டான்! இனிமேல் என்னடா நிரூபிப்பது! இருவரும் நேரிலேயே பார்த்தோம் — இதற்கு சாட்சியேரு வேண்டும்? புறப்படடா!" என்று அதட்டினான்.

"நிரூபித்தால்தான் நீங்கள் எங்கே ஒப்புக்கொள்ளப் போகிறீர்கள்! எங்கள் பெண்ணை — நாங்கள் பெற்ற கண்ணை — குறைசொல்ல வேண்டுமென்பதற்காகவே இவ்வளவு முன்னேற்பாடுகளும் செய்திருக்கிறீர்கள்! பரவாயில்லை! சிந்தாமணி அதிர்ஷ்டக்காரிதான்! உங்களைப் போன்ற அவசரக்காரர்களிடமிருந்தும் — அக்ரமக்காரர்களிடமிருந்தும் — அவள் தப்பியதே பெரிய அதிர்ஷ்டம்தான்!" என்று சிவநேசர் கடுமையாகப் பதில் கூறினார். சிவகாமிக்குத் தாங்கமுடியவில்லை. பெற்ற வயிறல்லவா? பெண்ணைப்பற்றிப் பிறர் ஒன்று சொல்ல சம்மதிக்குமா! மாசற்றவள் தனது மகள் என்பதை எப்படியாவது நிரூபித்துவிட வேண்டும் என்று தவித்தாள். "வாருங்கள் எல்லோருமே மறுபடியும் ஆஸ்பத்திரிக்குப் போவோம்! தீர விசாரிப்போம். என் மகள் தூய்மையானவள் என்பதை உணர்த்துகிறேன்" என்று உறுதியோடு எழுந்து நின்று மற்றவர்களையும் அழைத்தான். "ஏன் லேடி டாக்டருக்கு ஏதாவது லஞ்சம் கொடுத்து ஏமாற்றலாம்—சிந்தாமணியை எப்படியாவது தலையில் கட்டிவிடலாம் என்ற ஏற்பாடா? வேண்டாம்! வேண்டாம்!" என்று கூறி தாயாரின் கையைப்

பிடித்து வெளியே அழைத்துக்கொண்டு புறப்பட்டான் அழகு! நயினைக்கும் எந்த முடிவும் தோன்றவில்லை. அவனும் பின்தொடர்ந்தான்.

"என் குடும்பத்தை அடியோடு கெடுத்துவிட்டுப் போகும் கொலைகாரர்களே! நீங்கள் உருப்படுவீர்களா? மண்ணுய்ப் போங்கள்!" என்று ஆவேசமாகக் கத்தி 'சாப' மிட்டார் சிவதேசர்!

"என் பெண் கெட்டவளா? அட தெய்வமே! இவர்கள் நல்லாயிருப்பார்களா?" என்று மாரடித்துக்கொண்டு கோவென அழுதாள் சிவகாமி!

கூச்சலுக்கும் குழப்பத்துக்குமிடையே அழகப்பன், தாயாரை காரில் உட்காரவைத்து, தானே காரை வேகமாக ஓட்டுவதற்கு அமர்ந்தான். சிவதேசர் சிவகாமி இருவரும் மாறி மாறிச் சபித்துக்கொண்டேயிருந்தார்கள்! அந்த சாபத்தை பொறுக்கமுடியாத தாயாரம்மாள். "அட, ஏன் இப்படித் திட்டுகிறீர்கள்; நீங்கள் நாசமாய்ப்போக! என் பிள்ளையை ஏமாறவைத்து, எங்கள் மதிப்பையே குலைத்த நீங்கள் புழுத்துத்தான் சாவீர்கள்!" என்று பதிலுக்கு 'சாபம்' கொடுத்தான். நல்லவேளை இருவரின் சாபங்களுக்கும் சக்தியில்லாமல் போய்விட்டது! அழகப்பன் காரை வேகமாக ஓட்ட ஆரம்பித்தான். கார் புறப்படுவதிலேயே அவன உள்ளத்தின் வேகம் புலப்பட்டது! வீட்டைவிட்டு 'விர்' எனப் பறந்த காரின் முன்னே ஒரு பெண் கூச்சலிட்டவாறே ஓடிவந்தாள்! "நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்!" என்று அவள் சப்தம்போட்டுக்கொண்டே ஓடிவந்தாள். காரை நிறுத்துவதற்குள் அவள் காரின் முன்னே வந்து விழுந்தாள். அவள்மீது காரின் முன் சக்கரம் ஏறியது! "ஆ!" என்ற அவளது கூச்சல் மட்டுமே கேட்டது! கார் நின்றது – அழகப்பன், நயினு, டிரைவர் முதலியோர் இறங்கி ஓடிவந்தனர். அந்தப்பெண் இரத்த வெள்ளத்திலே மிதந்துகொண்டிருந்தாள்.

6

அவளை உடனடியாகத் தூக்கி மடிமீது சாய்த்துக் கொண்டான் அழகப்பன்! அவள் தலையிலேயிருந்து குபு குபு வென்று இரத்தம் பெருக்கெடுத்தபடி யிருந்தது. "யாரது? லேடி டாக்டர் மாதிரியல்லவா இருக்கிறது!" என்று வியப்போடு கூறினன் நயினு முகம்மது! "ஆனந்தியம்மா! ஆனந்தியம்மா!"—என்று பதை பதைத்த குரல்களோடு ஊரார் அந்த இடத்தில் கூடிவிட்டனர்.

ஆனந்தி கண் விழிக்கவில்லை. பிரக்ஞை இல்லாமல் இருந்தாள். தலையிலே யிருந்து வழியும் இரத்தம் நிற்கவில்லை. அழகப்பன் அருகிலிருந்தவர்களைப் பார்த்து, "இந்த ஊரில் நல்ல ஆஸ்பத்திரி வேறு எங்கு இருக்கிறது?" என்று ஆவலோடு கேட்டான். "இங்கு ஏது ஆஸ்பத்திரி? ஒரே ஒரு ஆஸ்பத்திரிதான்—அவுங்களுக்கே தான் இப்படி வந்துவிட்டதே!" என்று அங்கலாய்த்தனர் சுற்றி யிருந்தோர்! "பக்கத்திலே ஐந்தாறு மைல் போனால் பாலையூர் இருக்கிறது. ஒரு சின்ன "டௌன்" மாதிரி! அங்கு இருக்கு நல்ல ஆஸ்பத்திரி!" என்று ஒருவன் யாதை காட்டினன். ஆனந்தியைக் காரிலே தூக்கிவைத்துக்கொண்டு அழகப்பன் முதலியோர் புறப்பட்டனர். தாயாரம்மாளின் மடியிலே ஆனந்தி சாய்ந்து கிடந்தாள். நயினு முகம்மது ஒரு துணியினால் ஆனந்தியின் தலையை அழுத்திப் பிடித்து இரத்தப் பெருக்கைக் குறைக்க முயன்றான். துணியையும் மீறி வெளிவந்த இரத்தம் காரின் உட்பகுதியையே சிவப்பாக்கிக் கொண்டிருந்தது. தாயாரம்மாள் மனம் படாதபாடு பட்டது. "என்னமோ அப்பா; இந்த மூதேவி வீட்டிலே சம்பந்தம் பேசியதிலேயிருந்து நமக்குச் சனியன் பிடித்தது!" என்று அங்கலாய்த்துக் கொண்டாள். பாலையூர் மருத்துவ மனையில் ஆனந்திக்கு அவசர அவசரமாகச் சிகிச்சை ஆரம்பமாயிற்று. இரத்தம் அதிகமாக வெளியேறிவிட்டதென்றும் இன்னும் சிறிது தாமதித்திருந்தால் உயிருக்கே ஆபத்து வந்திருக்கலாம்

என்றும் டாக்டர்கள் அபிப்பிராயம் தெரிவித்தார்கள். தாயாரம்மாளை மருத்துவ மனையில் விட்டுவிட்டு அழகப்பனும் நயினாவும் விபத்து குறித்து போலீசாருக்குத் தெரிவிக்கப் புறப்பட்டனர்.

ஆனந்திக்குச் சிகிச்சைகள் எல்லாம் முடிவுற்றன. தலையிலே நல்ல காயம். அதற்கு சிறு தையல் போட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆனால் மயக்கமுற்ற நிலையிலே இருந்தாள். எப்பொழுதாவது ஒருமுறை புரண்டு படுக்க உடலை வளைப்பாள். அப்போது அவளது உதடுகள் "நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்!" என்று உச்சரிக்கும்.

டாக்டர்கள், அடிபட்ட கிலியில் உளறுவதாக முடிவு கட்டினர். உளறுகிறாள் என்பது உண்மை; ஆனால் அடிபட்ட பீதியில்தான் அப்படி உளறுகிறாள் என்பது என்ன நிச்சயம்!

"நிறுத்துங்கள்!"

"நிறுத்துங்கள்!!"

அழகப்பனை அவனது அவசர முடிவுகளிலேயிருந்து விடுவிப்பதற்காகவும் அவள் அந்தக கூச்சலை எழுப்பியிருக்கலாம்.

சிந்தாமணி ஒரு குழந்தைக்குத் தாயில்லை என்பதும்— அவள் கன்னிப் பருவத்தினள் என்பதும் — ஆனந்தி அறியாததல்லவே!—

அவளது நல்ல இருதயம் முதன் முதலாகப் பிறருக்குக் கேடு விளைவிக்க முயன்று அந்த முயற்சியிலேயே துவண்டிருக்கிறது—அதன் விளைவுதான் கார் விபத்து!

சிந்தாமணி குளக்கரையிலே தடுமாறி விழுந்து மருத்துவ மனைக்குக் கொண்டுவரப்பட்டதும், டைகர் மூளையிலே மூர்க்கத்தனமான திட்டங்கள் முளைத்தெழுந்தன. அந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஆனந்தியைத்தான் அவன் தேர்ந்தெடுத்தான். பெண்வீடு பார்க்க வருகிறவர்களை வழியிலேயே தீர்த்துக்கட்ட ஆட்கள் அனுப்பப்பட்டிருக்

கிறார்கள். ஒருவேளை அவர்களிடமிருந்து மாப்பிள்ளை வீட்டார் விடுபட்டுவிட்டால் என்ன செய்வது என்ற சந்தேகத்தோடு டைகர் திரிந்துகொண்டிருந்த போதுதான் சிந்தாமணி மருத்துவ மனைக்கு வரநேர்ந்தது. மாப்பிள்ளை வீட்டார் பெண்ணைப் பார்க்க எப்படியும் வைத்திய சாலைக்கு வந்துதான் ஆகவேண்டும் எனக் கருதினான். அவன் அப்படி எண்ணியதிலே தவறில்லைதான். சிவ நேசர் சாஸ்திரம், சம்பிரதாயம், சகுனம் முதலிய தடைகள் பலவற்றை விதித்துங்கூட அழகப்பன் திருட்டுத்தனமாக சிந்தாமணியைப் பார்த்துவிடத்தானே விரும்பினான்! இந்த மனோ தத்துவத்தை உணர்ந்த டைகர், சிந்தாமணியை வெறுப்புக்குரியவளாக ஆக்க வெங்கொடுமைத் திட்டமொன்றை வெளியிட்டான் ஆனந்தியிடம்! அவளால் அதை நினைக்கக்கூட முடியவில்லை. "மன்னிக்க முடியாத பாதகம்!" என்று மறுத்துரைத்தாள். அழகப்பனுக்கும் தனக்கும் வெகுகாலமாக விரோதமென்றும், அவன் சிந்தாமணியை மணப்பதை எப்படியும் தடுத்தாக வேண்டுமென்றும் குதித்தான் டைகர்! 'அவள் வாழ்வு முன் நிறைந்த காடாகிவிடுமே!' என்று கண் கலங்கினாள் ஆனந்தி.

"அதைப்பற்றிய கவலை உன்னைவிட எனக்கு அதிகமாக உண்டு! சிந்தாமணி எனக்குச் சொந்தக்காரி — அவளுக்கு ஏற்ற மணமகனைப் பார்த்து திருமணம் செய்து வைக்கவேண்டியது என் பொறுப்பு!" டைகர் மிக அக்கறையோடு பேசினான். ஆனந்தியின் உடல் நடுங்கிற்று. பாலகங்காதரத் தேவரின் பள்ளியறையிலேகூட அப்படி நடுங்கவில்லை அவள்!

"என்ன; சொன்னபடி செய்யப் போகிறாயா; அல்லது என்னை மறந்துவிடப் போகிறாயா?" என்று உறுமினான் அவன். பதைப்பும்—பரபரப்பும்—அவளை ஆட்டி வைத்தன. ஒத்துக்கொண்டுதானே தீரவேண்டும்—ஆரம்பத்திலேயே தாட்சண்யத்திற்காக அவனிடம் தன்னை ஒப்புவித்தவளாயிற்றே அவள்' இன்னொரு பெண்ணுக்குப் பிறந்

திருக்கிற குழந்தையை சிந்தாமணியிடம் படுக்க வைப்பது என்பதுதான் திட்டம். ஒரு பெண்ணிடம் ஒரு குழந்தை படுத்திருப்பது-கேட்பதற்கு பயங்கரமாக இல்லையென்றும்-பிரசவ ஆஸ்பத்திரியில்-அதற்கு அர்த்தமே வேறுயிற்றே! அதுவும் தாலி கட்டப்படவேண்டிய தையல்! கன்னி கழியாத பருவப்பெண்! திருமணத்திற்கு நாள் பார்க்கவேண்டியதுதான் பாக்கி—என்ற அளவிலேயுள்ள நிலைமை! சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு சதிவேலையை வெற்றிகரமாக முடித்துவிட்டான் டைகர்!

அழகப்பன் மருத்துவ மனையிலிருந்து அக்கினிப் பிழம்பு போன்ற சொற்களை இறைத்துவிட்டுப் போனதும் ஆனந்தி நிலை தடுமாறிவிட்டாள். சிந்தாமணி படுத்திருந்த பக்கமாக வேகமாக நடந்தாள். அவள் படுக்கையில் அமர்ந்தவாறு பக்கத்திலிருந்த குழந்தையை வியப்போடு பார்த்துக் கலவரப்பட்டுக்கொண்டிருந்தாள். அவளால் அசையவோ — எழுந்திடவோ இயலாது.

"என்னம்மா இது, ஏது இந்தக் குழந்தை?" என்று ஆனந்தியிடம் கேட்டாள் சிந்தாமணி. ஆனந்தியின் கன்னங்களில் நீர் பொல பொலவென உதிர்ந்தது. ஓடிப்போய் குழந்தையைத் தூக்கிக்கொண்டு " சிந்தாமணி! சிந்தாமணி!" என்றுள். அதற்குள் அவள் தொண்டை அடைத்துக்கொண்டது.

"என்னம்மா — எனக்கு ஒன்றுமே புரியவில்லையே! பக்கத்திலே குழந்தை! கேட்டால் அழுகை! யாரோ இரண்டு பேர் வந்தார்கள்; அவர்கள் எங்க அப்பாவை ஏதோ பேசினார்கள்! என்ன விஷயம்?" என்று விசாரிக்கத் தொடங்கினள்.

"ஒன்றுமில்லை சிந்தாமணி! உடம்பை அலட்டிக் கொள்ளாதே! மயக்கத்தில் உனக்கு அப்படியிருக்கிறது!" என்று கூறிவிட்டு குழந்தையுடன் அதைவிட்டு அகன்றுள்

ஆனந்தி. ஆனால் அவள் கண்ணை விட்டு சிந்தாமணியின் களங்கமற்ற முகம் மறையவில்லை.

இளமையின் துடிப்பு நிறைந்த அவள் அங்கமும், தங்கம் நிகர் இதயத்தை எடுத்துக் காட்டும் இனிய முகமும் "வழுக்கி விழுந்தவள்" என்ற அடைமொழியால் அழுக்கேறி விடுமே என எண்ணியபோது ஆனந்தியால் வேதனை தாங்கமுடியவில்லை. "பாலகங்காதரத் தேவரின் பிடியிலே சிக்கி உருக்குலைந்தபிறகு எவ்வளவு பாடுபட்டேன் நான் — அது டைகருக்குத் தெரிந்துவிட்டது என அறிந்ததும் எப்படிப் பதைத்துப் போனேன் நான் — எனக்கே இப்படியிருந்தால், ஒரு குற்றமும் புரியாதவளைப் பற்றி ஊர் கேலி பேசினால் என்ன ஆவாள் அவள்! அய்யோ கொடுமை — மிகக் கொடுமை! நான் லேடி டாக்டர் வேலைக்கே லாயக்கில்லை! பெண்களை அவமானப் படு குழியிலிருந்து மீட்பதற்காக ஒரு சில லேடி டாக்டர்கள் பயன்படுவதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன்; அது உண்மையோ பொய்யோ தெரியாது — ஆனால் என்னைப் பொறுத்த வரையிலே குற்றமற்ற ஒரு பெண்ணை குப்பை மேட்டு நாயினுங் கீழாக ஆக்கிவிட்டேன்."

ஆனந்தி குமுறினாள், கதறினாள். தன் தவறுக்கு எப்படிக் கழுவாய் தேடிக்கொள்வது என்று பதறினாள். அந்தச் சமயம் வேம்பு வேறு வந்து சேர்ந்தான். அந்த உளறுவாயன், சிந்தாமணியை டைகர் திருமணம் செய்து கொள்ளவே இப்படியெல்லாம் திட்டம் போடுவதாக உளறிவைத்தான்.

ஆனந்திக்கு இந்தச் சேதி அடிவயிற்றில் நெருப்பைக் கொட்டியது. டைகருக்காகவே பெரும் பாதகம் செய்யத் துணிந்தாள். அந்தப் பாதகம் டைகரின் புதிய நோக்கத்திற்குப் பாதையாக அமைகிறது என்பதை அவளால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. தும்பைப்பூ போன்ற ஒருத்தியின் எதிர்காலத்தில் கரிபூசிவிட்டு தனக்கும் துரோகம் நினைப்பவன் வெற்றியடையக்கூடாது என்று உறுதி பூண்டாள். கலங்கிய அவளது உள்ளம் கண்டிப்பான

மூடிவெடுத்தது. டைகர் குறுக்கிட்டான். அவனைத் தடுக்க மூடியவில்லை. உண்மையை நிலைநாட்டும் வைர நெஞ் சத்தோடு அவன் புறப்பட்டான். "போ! போ! பெண்ணே! இந்த டைகரின் எண்ணத்தில் யாரும் மண்ணைப் போட மூடியாது!" என்று கர்ஜனை புரிந்து கலகலவெனச் சிரித் தான். சிந்தாமணி படுத்திருக்கும் பக்கம் திரும்பி உறுமி னான் அதற்குள் ஆனந்தி தெருவிலே ஓட ஆரம்பித் தாள். சிவநேசர் வீட்டிலே மாப்பிள்ளை வீட்டாரைச் சந் தித்து உண்மையைக் கூறி மன்னிப்புப் பெறவே அவள் அப்படி ஓடினாள்.

ஆனால் அவள் ஆசை பூர்த்தியாகவில்லை. விபத்துக்கு ஆளானாள்.

"நிறுத்துங்கள்!"

"நிறுத்துங்கள்!!"

இந்த வார்த்தைமட்டுமே புலம்பலாக வெளிவருகிறது. டாக்டர்களோ அதை உளறல் என்று கூறிவிட்டார்கள்.

போலீஸ் ஸ்டேஷன் வேலைகளை முடித்துக்கொண்டு அழகப்பனும் நயினா முகம்மதுவும் திரும்பி வந்தார்கள். ஆனந்திக்கு சுயநினைவு வரவில்லை.

"நிறுத்துங்கள்!" என்ற வார்த்தையை மட்டும் அடிக் கடி சொல்லிக்கொண்டே வருவதை அழகப்பன் கவனித் தான்.

மருத்துவ மனையில் தான் கண்ட கொடிய காட்சிக்கும் —இவளது புலம்பலுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமோ என்று நயினா முகம்மதுவிடம் கேட்டான். நயினா முகம்மது ஆழ்ந்து சிந்தித்தானே தவிர உடன் பதில் கூறவில்லை.

"என்னடா பெரிய புத்தர் மாதிரி சிந்திக்கிறாய்? பதில் சொல்லேண்டா!" என்று அதட்டினான், அழகு!

"புத்தர் மட்டுந்தான் சிந்தித்தாரா? எங்கள் நபிகள் நாயகம் சிந்திக்கவில்லையா?...உங்கள்...இந்து மதத்தில்"

"யாரும் சிந்திக்கவில்லே இதுவரையில்—டே, நயினு! மத ஆராய்ச்சிக்கு இதுவா நேரம்? எவ்வளவு நெருக்கடியிலே சிக்கிக்கொண்டிருக்கிறோம்...அதை மறந்துவிட்டு"

"என்னப்பா நெருக்கடி? 'எல்லாவற்றையும் மிகவும் சாதாரணமாக எடுத்துக்கொள்' என்று எத்தனே தடவை சொல்லியிருக்கிறேன்? நடப்பதெல்லாம் நல்லதுக்குத் தான்!"

"எது நல்லதுக்கு? பெண் பார்க்க வந்த இடத்தில் இவ்வளவு கோளாறும் நல்லதுக்கா?"

"ஆமாம்—பெண், தப்பானவள் என்று முதலிலேயே தெரிந்துவிட்டது எவ்வளவு நல்லதாய்ப் போச்சு! பல காரம் கசப்பா, இனிப்பா—என்று பார்வையிலேயே தெரிந்துவிட்டதேயப்பா! அதுவேற நாக்கைக் கெடுக்காமல் இருந்தது நப்ப நல்லகாலந்தானே!"

அழகு, நயினு முகம்மதின் பேச்சில் திருப்தி அடையாதவனுய் எழுந்து தாழ்வாரத்தில் உலாவத் தொடங்கினன். அப்போது டைகர் அவசர அவசரமாக மருத்துவ மனையில் நுழைத்தான். அவனைப் பார்த்த அழகப்பன், "வாங்க! வாங்க" என்று உபசரித்தான் சற்று பயத்துடன்! "மன்னிக்கவேண்டும்!" என்று கேட்டுக்கொண்டான். "சே! சே!! அதெல்லாம் ஒன்றுமில்லே. நான் அப்படியெல்லாம் ஒன்றும் நினைக்கமாட்டேன். தவறுதல் சகஜம்!" என்று இளித்தபடி ஆறுதல் கூறினன் டைகர்! பிறகு ஆனந்தியை போய்ப் பார்த்தான். அவள் மயக்கத்திலிருந்து இன்னும் விடுபடவில்லே.

"நிறுத்துங்கள்!"

"நிறுத்துங்கள்!!"

இந்த சொல்மட்டும் விட்டுவிட்டு ஒலித்தபடி இருந்தது. மீண்டும் டைகர் அழகப்பனுடன் பேசிக்கொண்டே தாழ்வாரத்திற்கு வந்தான்.

"ஆனந்திக்கும் உங்களுக்கும் என்ன உறவு?" என்று கேட்டான் அழகப்பன்,

"சகோதரி மாதிரி வைத்துக்கொள்ளுங்களேன் — தூரத்து உறவு! அவ்வளவுதான்!"

"எங்கே அவ்வளவு அவசரமாக ஓடிவந்தாள்?"

"எல்லாம் உங்களுக்காகத்தான்!"

"எனக்காகவா?"

"ஆமாம் உங்களுடைய சந்தேகத்தை மாற்ற; சிந்தாமணியைக் களங்கத்திலிருந்து விடுவிக்க!!"

"என்ன? என்ன? சிந்தாமணியைக் களங்கத்திலிருந்து விடுவிக்கவா?"

"ஆமாம், அவள் மிகவும் நல்லவள்!"

"யார்?"

"ஆனந்தி!"

"சிந்தாமணி?"

"அவளும் தங்கமானவள்தான்!"

இதைக்கேட்டு அழகப்பன் வியப்பில் மூழ்கிவிட்டான்.

7

"சிந்தாமணி, தங்கமானவளா? இன்று காலையில் தானே களங்கத்தின் அருகாமையில் அவளைக் கண்டேன். அவள் திடீரென்று தங்கமானவளாக சித்தரிக்கப்படுவது எப்படி? ஒருவேளை நீங்கள் எனக்குக் காட்டியது சிந்தாமணி அல்லவோ? அந்த நர்சுப்பெண் தவறுதலாக வேறொரு பெண்ணை எங்களுக்குக் காட்டிவிட்டாளோ?" என்று பதைப்போடு கேட்டான் அழகு!

"இல்லை! இல்லை! நீங்கள் பார்த்தது சிந்தாமணியேதான்! அதில் சந்தேகமேயில்லை — சிவநேசரின் செல்வக் குமரியேதான்! அவள் தங்கமானவளேதான்!" — டைகர் அழுத்தந்திருத்தமாகப் பேசினான்.

"என்னய்யா ஒரே குழப்பம்! நான் பார்த்தது சிந்தா மணியேதான்—பக்கத்திலேயிருந்தது அவள் குழந்தையே தான் — நீர் கூறும் தங்கத்திற்குப் பொருள் என்ன? விளக்கும்!"

"அவசரப்படவேண்டாம். கண்ணுல் கண்டதும் பொய், காதால் கேட்டதும் பொய், தீர விசாரிப்பதே மெய்-என்ற பழமொழியை நினைவுபடுத்திக்கொள்ள வேண்டிய நேரம் இது! சிந்தாமணியின் அருகிலே யிருந்தது அவள் குழந்தையல்ல!"

"என்ன? என்ன? என்ன சொல்கிறீர்?" என்று துள்ளிக்குதித்தான் அழகப்பன்.

"உண்மையைத்தான் சொல்லுகிறேன். சிவநேசரின் குடும்பத்திற்கு ஆகாத பகைவர்கள் ஆனந்திக்குப் பணத் தாசை காட்டி, இப்படி ஒரு பஞ்சமா பாதகத்தைச் செய்து விட்டார்கள்! அந்தக் கொலைக்கஞ்சாக் கொடியவர்களின் ஆசைவார்த்தையிலே மயங்கி ஆனந்தியும் சிந்தாமணி யைச் சேறு என மெய்ப்பிப்பதற்கு முற்பட்டுவிட்டாள். பகைவர்களுக்கு வெற்றி கிடைத்தது. ஆனல், அந்த வெற்றிக்குப் பிறகுதான் போராட்டம் ஆரம்பமாயிற்று. ஆனந்தியின் மனப்போராட்டமே அது! அந்தப் போரை வலுப்பெறச் செய்தேன் நான்! 'மருத்துவர் உலகிற்கே மாசுண்டாக்கிவிட்டாய்!" எனக் குற்றஞ்சாட்டினேன். இறுதியில் உண்மை வென்றது. திடீரென ஒருக்கணல் தீ போலச் சூழ்ந்த தீய நினைவு ஆனந்தியின் உள்ளத்திலே அணைந்தது—தர்மத்தைக் காப்பாற்ற தங்கனை நாடி ஓடி வந்தாள்! இப்போது அவளுக்குப் பதிலாக நான் பேசு கிறேன். சிந்தாமணி தங்கமானவள்!"

"நம்பாதே அழகப்பா, நம்பாதே! இந்த நாடகத்தை நம்பாதே!" என்று கூச்சலிட்டவாறு நயினு முகம்மது டைகரின் முன்னேவந்து பயங்கரத் தோற்றம் காட்டினன்.

"என்னப்பா கதை அளக்கிறுய்-சிந்தாமணி சேறல்ல; செந்தாமரை என்று நிரூபிப்பதற்கு வந்திருக்கிறுயா?

முடிந்துபோன அத்தியாயம்! மூடப்பட்டுவிட்ட புதைகுழி! மீண்டும் தோண்டி அழுகிப்போன சவத்தை வெளியே எடுக்காதே!''

— என்று டைகரின் முகத்தருகே தன் முகத்தைக் கொண்டுபோனவாறு முரட்டுத் தொனியிலே முழக்கினான் நயினு!

''இல்லே; என் பேச்சை நம்புங்கள்! பகைவர்கள் செய்த பாதகம்தான் அது! சிந்தாமணியின் குழந்தையல்ல அது! வேறொரு குழந்தை — உங்களை ஏமாற்றுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட குழந்தை! என்னை நம்புங்கள்!'' என்று கெஞ்சினான் டைகர்!

''முடியாது! இனியும் ஏதாவது உளறினால் உன் உயிர் உனக்கில்லே! உண்மையைச் சொல்லிவிடு! உடனே உண்மையைச் சொல்லிவிடு!'' என்றவாறு நயினு முகம்மது டைகரின் கழுத்தை நெறிக்க ஆரம்பித்தான். டைகர் திக்குமுக்காடித் தத்தளித்தான். நயினுவின் கரங்கள் அவன் கழுத்தில் மேலும் மேலும் அழுந்த ஆரம்பித்தன.

''சொல்லடா சொல்! சிவநேசரும் சிவகாமியும் உனக்கு லஞ்சம் கொடுத்து அனுப்பியது உண்மைதானே! சொல்—உண்மையைக் கக்கு!'' என உறுமினான்.

''விட்டுவிடுங்கள் உண்மையைச் சொல்லிவிடுகிறேன்!'' என்று உயிர் போவதுபோலக் கத்தினான் டைகர். நயினுவின் கைகள் விலகின. டைகர் மூச்சு வாங்கிக்கொண்டே நின்றான்.

''உம்! சொல்லு!'' என்று உறுமினான் நயினு!

''இதோ—இதோ'' என்று பயந்து நடுங்கினான் டைகர்.

''உன்னுடைய நடிப்பெல்லாம் இங்கு செல்லாது — மரியாதையாக உண்மை வரவேண்டும்'' என்று முஷ்டியை உயர்த்திக் காட்டினான், நயினு.

"தான் சொன்னதெல்லாம் பொய்தான். என்னை விட்டுவிடுங்கள் ஓடிவிடுகிறேன்."

"பொய்தானு? பிறகேனப்பா சிந்தாமணி தங்கமானவள் என்று பிரசங்கம் ஆரம்பித்தாய். என்னிடம்?" என்று சீறினான் அழகன்.

"தங்கமானவள் என்றுதானே சொன்னேன்—தணலில் பட்டபிறகுதானே தங்கத்திற்கு ஒளி பிறக்கிறது! அதைப் போலத்தான் தவறுதல் என்னும் தணலிலே இந்தத் தங்கம் விழுந்தாள். அதிலே பிறந்த ஒளிதான் அந்தக் குழந்தை—என்று சொல்ல வந்தேன்!"

"அட அட அடா! என் புதுமைப் புலவனே! என்ன கற்பனை! என்ன கற்பனை! எல்லாம் லஞ்சம் படுத்துகிற பாடப்பா பாடு!" என சிரித்தான் ஆத்திரமாக நயினு!

"லஞ்சமல்ல நண்பர்களே; நெஞ்சம்! என் இளகிய நெஞ்சம்! ஒரு குடும்பம் வீணாக எங்களால் கெட்டுவிடக் கூடாதே யென்று எண்ணிய இளகிய நெஞ்சம்! அதன் விளைவுதான் உங்களிடம் அகப்பட்டுக்கொண்டு விழிக்கிறேன் நான்!"

"சரி; விவரத்தைச் சொல்லு!"

"என்ன சொல்வது! அட இறைவா? கச்சி ஏகாம்பா? உன் தலையிலே பாரத்தைப் போட்டுவிட்டுத்தான் சொல்ல வேண்டும்"

"பாரத்தைப் போடுறுயா? 'பவுண்டு' கணக்கிலா? 'டன்' கணக்கிலா? பார்த்துப் போடப்பா — பாராங்கல் உடைந்துவிடப்போகிறது! என்று ஆத்திரத்தோடு கேலியும் பேசினான் அழகப்பன்.

"இப்படியெல்லாம் பயல்கள் பாரத்தைப் போடுவார்கள் என்று பயந்துதானே எங்கள் ஆண்டவன் கல்லாகவும் இல்லை; சிலையாகவும் இல்லை; கண்ணுக்குத் தெரியாமலே இருக்கிறார்!" என்று கடுகடுப்போடு கூறினான் நயினு.

"சரி! சரி! விஷயத்தைச் சொல்லட்டும்" என்று அழகப்பன் டைகர் முகத்தை உற்று நோக்கினான்.

டைகர் பேசினான்:

"ஒரு குடும்பம், ஒரு பெண்ணின் வாழ்வு இவையெல்லாம் கெடுவதற்கு நானும் என் சகோதரி ஆனந்தியும் காரணமாக இருக்கவேண்டுமென்றுதான் நீங்கள் விரும்புகிறீர்களா?"

"எங்களுக்கு உண்மை தெரியவேண்டும்!"

"அடப்பாவி சிவதேசா! அப்போதே மாப்பிள்ளை வீட்டார் வந்தாலும் வருவார்கள் என்று எங்களுக்கு ஜாடை காட்டியிருந்தால் இவ்வளவு தூரத்திற்கு வந்திருக்காதே! 'நான் பார்த்துக்கொள்கிறேன்' என்று ஜம்பமாக பேசிவிட்டு, இப்போது எங்களை ஆபத்தில் மாட்டிவிட்டாயே! முன்பே இவர்கள் வரப்போகிற சேதி தெரிந்திருந்தால், முன் எச்சரிக்கையாக குழந்தையையாவது மறைத்திருப்போமே!" என்று அங்கலாய்த்துக் கொண்டான் டைகர்!

"பார்த்தாயா, பயல் கக்குகிறான் விஷயத்தை!" என்றான் நயினா.

"விஷயமல்ல! விஷத்தைக் கக்குகிறேன். ஒரு குடும்பத்தின் எதிர்காலத்தை அழித்துப்போடும் ஆலகாலவிஷத்தைக் கக்குகிறேன்!" என்று தணிந்த குரலிலே டைகர் பேசினான்.

"உம்...பிறகு? தொடரட்டும் சேதி!" என்றான் நயினா!

"இன்னும் என்ன இருக்கிறது சேதி! ஆஸ்பத்திரிக்கு நீங்கள் இருவரும் வந்தபோது மாப்பிள்ளை வீட்டார் என்று எங்களுக்குத் தெரியாது! நீங்கள் வரப்போகிற சேதிகூட எங்களுக்குத் தெரிய நியாயமில்லை! சிந்தாமணியைப் பற்றிய சந்தேகமும் எங்களுக்கு எழுந்திட வழியில்லை! அவள் திருமணமானவள் என்றே எண்ணிக்கொண்டிருந்தோம். நீங்கள் ஆஸ்பத்திரியிலிருந்து ஆக்ரோஷ புருஷர்களாய் வெளியேறிய பிறகுதான் விசாரித்தோம்! விஷயம் தெரிந்தது! அய்யோ, நம்மால் ஒருத்தியின் வாழ்க்கை

கெட்டுவிடுமே—என்று ஆனந்தி துடித்தாள்! 'நடந்தது நடந்துவிட்டது; இனி என்னசெய்ய இயலும்!" என்று ஆறுதல் கூறினேன், அவள் கேட்கவில்லை! "சிந்தாமணி இளமையின் விஷமத்தால் எப்படியோ தவறியிருக்கலாம்; அதற்காக அவளது எதிர்காலம் முழுவதும் இருட்டறையாக மாறிவிடுவதா? என்னைப்போல அவளும் ஒரு பெண் தானே! அவளை எப்படியும் காப்பாற்றுவேன்! அவளைக் கற்புக்கரசியென்று நிலைநாட்டுவேன்" எனச் சபதம் செய்தாள்! சிந்தாமணியின் குழந்தையை மறைப்பதற்கு ஏற்பாடு செய்தாள்! உங்களிடம் ஓடிவந்தாள்! ஆண்டவன் உங்கள் பக்கம் இருந்துவிட்டான். உங்கள் குடும்பத்து குலதெய்வங்கள் உங்கள் குடும்ப கௌரவத்தைக் காப்பாற்றிவிட்டன. சிந்தாமணியெனும் ஒரு பெண்ணின் வருங்காலத்திற்காக ;உங்கள் குலப்பெருமை அழியக் கூடாது என்று தெய்வம் தீர்ப்பு எழுதிவிட்டது! அதனால் எங்கள் திட்டம் நிறைவேறவில்லை. ஆனந்தியை விபத்திலே சிக்கவைத்த ஆண்டவன், என்னையும் உங்களிடம் சிக்கவைத்து, உண்மையைக்கக்கவைத்துவிட்டார்!" என்று பெருமூச்சோடு முடித்தான் டைகர்! அழகப்பன், நயினு இருவரையும் நன்முகமாற்றிவிட்டோம் என்ற மகிழ்ச்சி அவன் உள்ளத்திலே கரை புரண்டோடியது. அதை வெளிக்காட்டிக்கொள்ளாமலே, வேதனையைக் கொட்டுபவனைப்போல காட்சியளித்தான் அந்தக் கயவன்.

எங்கே ஆனந்தி விழித்துக்கொண்டு உண்மையை வெளியிட்டுவிடுவாளோ என்ற அச்சத்தில் அவன் முன்னேற்பாடாகத் தீட்டிய சூழ்ச்சித் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறியது!

இன்னொரு திட்டம்; எப்படியாவது அவர்களை பெங்களூருக்குப் பயணப்படுத்தி விடவேண்டுமென்பது! அதற்காக ஆரம்பித்தான் பேச்சை!

"நண்பர்களே! எங்கள் முயற்சியில் தோற்றுவிட்டோம். தெய்வம் ஜெயித்துவிட்டது! பரவாயில்லை; சகோதரி ஆனந்தியை நான் கவனித்துக்கொள்கிறேன்.

நீங்கள் காத்திருக்கத் தேவையில்லை! ஊருக்குப் புறப்படலாம்!" என்று பீடிகை போட்டான்.

அப்போது, அழகப்பனின் டிரைவர் அவசர அவசரமாக அங்கு ஓடிவந்து, "ஆனந்திகண் விழிச்சாச்சு! தாயாரம்மான் உங்களையெல்லாம் கூப்பிடுகிறார்கள்!" என்று கூவினான். மூவரும் உள்ளே சென்றார்கள் வேகமாக!

ஆனந்தி புது ஒளி நிறைந்த கண்களை விழித்தவாறு படுத்திருந்தாள். அவளருகே டாக்டர்களும் தாயாரம்மாளும் நின்றிருந்தார்கள்.

டைகர் ஓடிப்போய், "ஆனந்தி! ஆனந்தி!!" என்று அன்புவழியக் கூப்பிட்டான். அப்படி நடிக்கவேண்டிய கட்டம் அவனுக்கு, அது! ஆனந்தி அவனைப் பார்த்தாள். அந்தப் பார்வையின் அர்த்தத்தை டைகர்மட்டுமே புரிந்து கொள்ள முடியும். அவனைச் சுட்டு சாம்பலாக்கிய பார்வை அது! சுருண்டுபோன புழுப்போல ஆகிவிட்டான், அந்த அக்ரமக்காரன். அவன் பக்கமிருந்த பார்வையை அழகப்பன் மீதும் நயினுமீதும் திருப்பினாள் ஆனந்தி!

அவள் கண்கள் குளமாகிவிட்டன. அந்தக் கலக்கத்தின் பொருளை உணர்ந்துகொண்டவர்கள்போல நயினுவும் அழகும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள்.

அவளோ, சிந்தாமணி உண்மையில் நிரபராதி என்பதை நிரூபிக்க வந்திருக்கிறாள். இவர்களோ, அவள் இரக்கசுபாவமுடையவள்; அதனால் ஒரு பெண்ணின் வாழ்வைக் கெடுக்க மனமின்றி 'சிந்தாமணி நிரபராதி' என்று பொய் கூறுவதற்கு வந்திருக்கிறாள் என்று எண்ணிக் கொண்டிருப்பவர்கள்! அவள் எதற்கு வந்தபோதிலும்சரி; மிக மிக நல்ல உள்ளம் படைத்தவள் என்ற தீர்ப்பை அழகுவும், நயினுவும் தங்களுக்குத் தாங்களே வெளியிடாமல் மனத்திற்குள் எழுதிவைத்துக்கொண்டார்கள்.

"'ஹார்லிக்ஸ்' கொடுங்கள்!" என்று டாக்டர்கள் சிபார்சு செய்தனர். அவசர அவசரமாக டைகர் 'ஹார்லிக்ஸ்' தயாரித்து, அதை ஆனந்தியின் உதட்டருகே

கொண்டுபோனான். அதை அவள் மறுத்துவிட்டாள். அனைவரும் நினைத்தார்கள், அவளுக்கு 'ஹார்லிக்ஸ்' தேவையில்லையென்று ஆனால் அவளுக்கு இப்போது அந்த டைகரின் உபசாரம் தேவையில்லை! ஏன்; டைகரே தேவையில்லை! அவளை 'டைகரா'க மாற்றியிருக்கிறாள் இப்போது!

பாதகன் டைகரைப் பழிவாங்கும் புலிக்குணம் பெற்றுவிட்டது, அந்தப் புள்ளிமான்!

"ஓய்வாக இருக்கட்டும்—ஒன்றும் பேசாதீர்கள்" எனக் கூறி டாக்டர்கள் அகன்றார்கள். இவர்களும் அங்குள்ள நாற்காலிகளில் அமர்ந்தார்கள்.

"அம்மாடி! கண்ணு!" என்று அருகே சென்று செல்லமாகக் கொஞ்சினாள் தாயாரம்மாள்.

"உம்" என்று மாத்திரமே ஆனந்தியால் கேட்க முடிந்தது! "கொஞ்சம் 'ஹார்லிக்ஸ்' சாப்பிடுடா அம்மா! ரொம்ப களைப்பாயிருக்கும்!"—இது தாயாரம்மாள்!

ஆனந்தி கண்களைத் திருப்பி தாயாரம்மாளை ஏற இறங்கப் பார்த்தாள். மீண்டும் அவள் கண்கள் கலங்கின. தாயாரம்மாள் 'ஹார்லிக்ஸை' எடுத்துக் கொடுத்தாள். அதை ஆனந்தி முழுவதுமே குடித்தாள். டைகருக்கு அங்கு இருப்புக் கொள்ளவில்லை. அழகப்பனுக்கோ எண்ண அலைகள் இதயத்தில் குமுறி எழுந்தன!

"எவ்வளவு நல்லவள்—யாரோ ஒரு தவறு செய்த பெண்ணைக் காப்பாற்றுவதற்காக அவளுக்கு எவ்வளவு ஆத்திரம் ஏற்பட்டிருக்கிறது! தன் நிலைமறந்து, எதிரே வருவது என்ன என்கிற உணர்ச்சியுமற்று, ஒரு பெண்ணுக்கு வாழ்வளிக்க விரும்பிய இவளது இருதயத்திற்கு ஈடு இணைதான் ஏது! அழகு மட்டுமல்ல; அன்பின் உரு! ஆகா, இவளது கண்களிலேதான் எத்துணை அபூர்வமான கவர்ச்சி! 'குஞ்சி அழகும், கொவ்வை இதழ் அழகும், கோமளக் கன்ன அழகும் அழகல்ல; இவைகள் அனைத்தையும்விட மேலான என் நெஞ்சத்து அழகே அழகு' என்று சொல்லாமற் சொல்வதுபோல அவளது அற்புத விழிகள்

அசைந்துகொண்டிருக்கின்றனவே! பிறர் கெடுவதையே விரும்புகிற இந்த வையகம் ஆனந்தி போன்ற ரோஜா மலர்களையும் அரளிப்பூ கூட்டத்தினிடையே தூவியிருக்கிறது என்பதை நான் ஆதார பூர்வமாக உணர முடிகிறது! இந்த நல்ல பெண்மணிகளன்றோ நாட்டையும் வீட்டையும் வாழ்விக்கவந்த உத்தமிகள்! எனக்கு வர இருந்தவள் சிந்தாமணி! அல்ல; அல்ல! புழுதி மண்ணிலே அறுந்து சிந்திவிட்ட மணி! சிதறிவிட்ட மணி! அவளுக்குப் பெயர் தான் சிந்தாமணி! இவளோ ஆனந்தி! பெயரிலே கொஞ்சம் நவநாகரிக பாணி மினுக்கிடுகிறது! உத்தியோகமும் அப்படித்தான்! ஆனல் உள்ளமோ தங்கம்! தங்கம் என்று கூடச் சொல்ல இயலாது—அந்த உபமானத்திற்கும் இந்த டைகர் புதிய வியாக்கியானம் கொடுத்து விட்டான். இது தணல் படாத தங்கம்! கரம் படாத முல்லை! களங்கம் படராத வெள்ளி நிலவு! இந்த மாதரசி எனக்கு வாழ்க்கைத் துணையாளல்?.....”

கேள்விக்குறியல்ல; ஆவலைக் காட்டும் அறிகுறி எழுந்தது அழகப்பனின் இருதயத்தில்! நினைவு காட்டாறு தானே! எங்கு வேண்டுமானலும், எப்படி வேண்டுமானலும் பிரயாணம் செய்யுமல்லவா? அந்தப் பிரயாணத்திற்கும் ஒரு முற்றுப்புள்ளி உண்டே! காட்டாறு காட்டிலேயே பரந்து விரிந்து மறைந்து ஓழிந்துவிடும்! அல்லது கழனிக் கிடையே செல்லும் குட்டி வாய்க்கால்போல சிறுத்துக் கடலிலே கலக்கும் இரண்டாவது நிலையைப்பெற்றது அழகப்பனின் நினைவு நதி!

அவனை ஆனந்தி, நோய்ப் படுக்கையிலிருந்தே கவர்ந்துவிட்டாள். அவளது அன்பு இதயத்தை எப்படியும் தன் இதயத்தோடு பதித்துவிடவேண்டுமென்று தீர்மானம் செய்துகொண்டான்.

மனமகள் தேடும் படலத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு ஆனந்தியைத் தன் துணைவியாகக்கொள்ள வேண்டியதுதான் தன் வாழ்வின் அடுத்த அத்தியாயம் என்று முடிவு செய்தான்.

அம்மாவையும் நயினை முகம்மதுவையும் ஊருக்கு அனுப்பிவிட்டு, தான் பாலையூர் மருத்துவமனையில் ஆனந்திக்கு உதவியாக இருந்து, அந்தப் பணிபுரியும் படலத்திலேயே குறிக்கோளை வெளியிட்டு விடலாமென்று திட்டம் வகுத்தான்.

"பாலையூர் மருத்துவ மனையில் ஆனந்தியோடு பழகும் வாய்ப்பு கிடைக்கும். அப்போது அவள் என்னை உணர்வாள்! நான் அவளை உணர்வேன்! எண்ணம் ஈடேறும்! வண்ணம் தீட்டப்படும் என் வாழ்வுக்கு" எனக் கற்பனை செய்தான். எப்படியும் நயினுவையும் அம்மாவையும் ஊருக்கு அனுப்பவேண்டும்!

இதைப்போலவே நயினுவும் எண்ணிக்கொண்டு உட்கார்ந்திருந்தான். அவன் ஆனந்தியை மனத்தில்வைத்து பூஜிக்க ஆரம்பித்துவிட்டான். சுருக்கமாகவே சொல்லிவிடலாமே; நயினு ஆனந்தியைக் காதலிக்கிறான். அவன் நினைக்கிறான்; எப்படியாவது அழகப்பனையும் தாயாரம்மாளையும் பெங்களூர் அனுப்பிவிட்டு, பாலையூரில் தானிருந்து பணி புரியலாமென்று! இவை எதுவுமே புரியாமல் டைகர் எதிர்காலத்தைப்பற்றிய சிந்தனையில் ஆழ்ந்திருந்தான்!

8

அழகப்பன் முதலியோர் பெங்களூர் புறப்பட்டுவிட்டால், தனக்கு பெரிய சுமை இறங்கியதுபோல என்று கருதி பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தான் டைகர்! இவ்வளவு அக்கறை எடுத்துக்கொண்டு ஆனந்திக்கு இவர்கள் உபசாரம் செய்துதொலைக்கிறார்களே ஏன்; சீக்கிரம் போய்த் தொலையமாட்டார்களா என்றும் முணுமுணுத்துக் கொண்டிருந்தான். அவன் மனம் குளிரும் வண்ணம் தாயாரம்மாள் பேச ஆரம்பித்தாள். பெங்களூர் பயணத்தைப் பற்றியதாகவே அவள் பேச்சு இருந்தது. இப்படி ஒரு சந்தர்ப்பத்தை அழகு, நயினு, டைகர் மூவருமே எதிர்

பார்த்து இருந்தார்கள். அதைப் பயன்படுத்திக்கொண்டு அழகு, தனது பேச்சிலே சாதுர்யத்தைக் குழைக்க ஆரம்பித்தான்.

"அம்மா மனசு சரியில்லை—இங்கே இருந்தால் இன்னும் குழம்பிக்கொண்டேயிருப்பார்கள். பாவம்; இந்த நயினுவைவேறு அவன் வேலைகளையெல்லாம் கெடுத்து அழைத்துக்கொண்டு வந்தோம். எப்படியும் நீங்கள் இரண்டுபேரும் பெங்களூர் போய்ச் சேருவதையே நான் விரும்புகிறேன்" என்றான் அழகப்பன்.

பரபரப்புடன் நயினு, "அப்படியெல்லாம் எனக்கொன்றும் வேலை கெடவில்லையப்பா! இன்னும் பத்து நாளைக்கு வேண்டுமானாலும் இங்கேயே இருக்கிறேன்" என்று பதில் கூறினான்.

"அதற்கில்லை நயினு! அம்மா எப்படியும் ஊருக்குப் போகவேண்டும்... அவர்களுக்கு நம் இருவரில் யாராவது ஒருவர் துணை போகவேண்டும். நான் இரண்டு நான் இங்குத் தங்கி, ஆனந்தியின் உடல் பூரண சுகமானவுடன் புறப்பட்டு வரலாமென்று நினைக்கிறேன்"—அழகு சமாளித்தான்.

"பார்த்தீங்களா அம்மா—உங்கள் மகன் பேசுவதை! விடக்கூடாதம்மா இங்கே! அது பெரிய ஆபத்தாகமுடியும்! அழகப்பனின் மனம் நிம்மதியில்லாமல் இருப்பது எனக்குத் தெரியும். நம்மை அனுப்பிவிட்டு, எங்காவது போகத் திட்டம் போட்டிருக்கிறதாகத் தெரிகிறது" என்று நயினு முகம்மது தாயாரம்மாளிடம் தூபம் போட்டான். அவன் பாலையூரில் தங்கி ஆனந்தியின் அன்பைப் பெறலாமென்று திட்டம் போட்டிருக்கிறான். அந்தத் திட்டம் அழகப்பனின் யோசனையால் சிதைந்து விடுமோ என்ற பயம் நயினுவைப் பற்றிக்கொண்டது. அதற்காக என்னென்ன சொல்லி அழகப்பனை பெங்களூருக்கு அனுப்பமுடியுமோ அவைகளையெல்லாம் சொல்வதென்று முடிவுக்கு வந்தான். தாயாரம்மாளைத் தனியாக அழைத்துப்போய், அழகப்பன் ஏமாற்றத்தால் ஏங்கியிருப்

பதாகவும் — அவமானத்தால் அவன் குன்றிப்போய்க் காணப்படுவதாகவும் — அவனையே தனியே விட்டுப் போவது ஏதாவது பயங்கர வினவுக்கு அஸ்திவாரம் அமைக்குமென்றும் எச்சரிக்கை செய்தான்! தாயாரம்மாளும் நயினு கூறுவதுதான் சரியென்ற தீர்மானத்துக்கு வந்து அழகப்பனைத் தன்கூட பெங்களூருக்குப் புறப்பட வேண்டுமென்று பிடிவாதம் செய்தாள். அழகப்பனுக்கு தாயின் வார்த்தையைத் தட்டமுடியாமற் போய்விட்டது. அவனது ஆசைக் கனவுகள் அருமைத் தோழனுல் அழிக்கப்படுகிறதேயென்று தனக்குத்தானே நொந்துகொண்டான். அவனுக்குத் தெரியாது; நயினுவின் உள்ளம் ஆனந்தியின் பாற் சென்றிருக்கிறது என்ற உண்மை! அதுபோலவே நயினுவுக்கும் அழகப்பனின் ஆனந்தி மோகம் தெரிந்திட நியாயமில்லை! வெளியிடவும் ஒருவருக்கொருவர் வெட்கம். விஷயம் சிறிது முற்றிய பிறகு வெளியிடலாமே என்ற எண்ணம்.

அழகப்பனும் தாயாரம்மாளும் பயணத்திற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கத் தொடங்கினர். நயினு இருப்பதை கூட டைகருக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. ஒருவேளை ஆனந்தி, உண்மையை நயினுவிடம் கூட சொல்லிவிடலாமே என்ற அச்சம்! அதனல் அவன் சற்று அழுத்தந் திருத்தமாகவே, "யாரும் எங்கள் ஆனந்திக்குத் துணை வேண்டியதில்லை. நீங்கள் உங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டு போங்கள்!" என்று கூறினன்! நயினு அதற்குப் பதில் சொல்லவில்லை, விழிகளை அகலமாகத் திறந்தபடி டைகரைப் பார்த்துக்கொண்டே நின்றனன். டைகர், தன்னை யறியாமல் தலைகுனிந்துகொண்டு ஊமைபோல அதை விட்டு அகன்றனன்.

தாயாரம்மாள் ஆனந்தியிடம் வந்து, "கண்ணு! நான் ஊருக்குப் போய்விட்டு வர்ரேம்மா!" என்று சொல்லிக் கொண்டாள்.

ஆனந்தி பேசமுடியாமல் விழிகளாலே அதற்குச் சம்மதம் தெரிவித்தாள்.

அழகப்பனும் அவளருகே வந்து "நான்கூட போய் வருகிறேன்" என்றான். ஆனந்தி ஏதோ பேசமுயன்றாள் போகவேண்டாமென்று சொல்வதற்கு எண்ணுகிறாள் என்று கற்பனை செய்துகொண்டான் அழகு! அவனை ஆனந்தி, இமைக்காமல் அப்படியே பார்த்தாள். "நீங்க ளுமா?" என்பது போல ஒரு மூனகல் ஒலி மட்டும் கிளம் பிற்று அவளிடமிருந்து!

உடனே நயினு "அவர்கள் தான் போகிறார்கள் – நான் இங்கேதான் நாலைந்து நாளைக்கு இருக்கிறேன்!" என்று கூறினான். நயினுவின் பக்கமும் ஆனந்தியின் விழிகள் சுழன்றன. அவள் இதழோரத்தில் புன்னகை ஒன்று மின்னி மறைந்தது. அதற்கு ஏதேதோ புதிய அர்த்தங்களைக் கற்பித்துக் கொண்டார்கள் அழகும், நயினுவும்!

"ஆனந்தி, என்னிடம் பிரேமை கொண்டுவிட்டாள்; அதனால்தான், அவள் நயினுவிடம் அன்பு காட்டுகிறாள். ராஜாராணி கதைகளிலே வரும் ராஜகுமாரிகள் ராஜ குமாரர்களைக் காதலிப்பார்கள்; அந்த ராஜகுமாரர்களது பாங்கர்கள் மீதும் அன்பு செலுத்துவார்கள். அதைப் போன்ற அன்பு, ஆனந்திக்கு நயினுமீது பிறந்திருக்கிறது. இதிலிருந்து அவள் என்னைக் காதலிக்கிறாள் என்பது நிச்சயமாகிவிட்டது!"

இப்படிக் கருதிக் களிப்படைந்தான் அழகு. அந்த ஒரு புன்னகை அவன் உள்ளத்திலே அவ்வளவு கற்பனை களை எழுப்பியது. வானத்திலே சஞ்சரிக்கும் மேகங்கள் காற்றின் மோதுதலால் ஒன்றுசேரும்போதும் பிரியும் போதும் ஆகா! இது யானை போலிருக்கிறது; இது பூனை போலிருக்கிறது என்று கற்பனை செய்வதில்லையா? அது போலவே ஆனந்தியின் இதழ் அசைவுக்கு அழகப்பன் புதுப்புது அர்த்தங்களை தனக்குள்ளாகவே படைப்பித்துக் கொண்டான். நயினு முகம்மது அந்தப் புன்னகையிலே போதை தலைக்கேறியவனாய் நின்றான். இறுதியில் அழகப் பன் பிரியமுடியாமல் அந்த இடத்தைவிட்டுப் பிரிந்து தாயாரம்மாளுடன் காரில் ஏறி உட்கார்ந்தான். நயினு

முகம்மது அவர்களை வழியனுப்பிவிட்டு டைகருடன் மருத்துவமனைக்குத் திரும்பினன். ஆனந்தி படுத்திருக்கும் கட்டிலுக்குச் சிறிது தூரத்தில் ஒரு நாற்காலியைத் தூக்கிப் போட்டுக்கொண்டு நயினு உட்கார்ந்து கொண்டான். அவனை எப்படியாவது துரத்திவிடவேண்டும் என்று துடியாய்த் துடித்தான் டைகர். தான் மட்டுமே ஆனந்திக்கு வேண்டியவன் என்றும், நயினு ஆனந்திக்குத் தெரியாதவனென்றும்—அதனல் அவன் இங்கிருக்கத் தேவையில்லையென்றும்—டாக்டர்களிடம் சொல்லி அவனைத் துரத்திவிடலாமா என்று யோசித்தான். அப்படிச் சொல்லும் போது ஒருவேளை, ஆனந்தியே தனக்கு எதிர்ப்பாக இருந்துவிட்டால் என்ன செய்வது என்ற அச்சமும் பிறந்தது! செய்வதறியாது விழித்தான் டைகர்! பிறகு நயினுவிடம்...‘நீங்கள்தான் இங்கிருக்கிறீர்களே; ஆனந்தியைப் பார்த்துக்கொள்ளுங்கள்! நான் காலையில் வருகிறேன்” என்று கூறிவிட்டுப் பாலையூர் மருத்துவ மனையிலிருந்து வேகமாகப் புறப்பட்டான்! பயங்கரமான திட்டமொன்றுக்கான அடித்தளம் அவன் நெஞ்சப் படுகுழியில் அமைவதை அவனது முகம் எடுத்துக் காட்டிற்று!

மாலைச் சூரியன் மேற்றிசையிலிருந்து பொன்னிறக் கதிர்களை மருத்துவமனைப் பலகணி வழியாக ஆனந்தியின் மீது கொட்டினன். அந்த மஞ்சள் நிற வெயிலிலே ஆனந்தியின் மந்தகாச முகம் ஒளிசிந்திக்கொண்டிருந்தது. ஆனந்தி, லேசாகக் கண்களைத் திறந்து சுற்றுமுற்றும் பார்த்தான். உடனே நயினு அவளருகே ஓடி, “என்ன வேண்டும்?” என்று கேட்டான். ஆனந்திக்குப் பேச இயலவில்லை. இதழ்களை அசைத்தாள். நயினு பூகமாக “ஹார்லிக்ஸா?” என்று வினவினன். அவளது சுந்தர விழிகள் ஆமோதிப்பதுபோல் அசைந்தன. அவசர அவசரமாக ‘ஹார்லிக்ஸ்’ தயாரிக்கத் தொடங்கினன். தயாரிக்கும் போதே இன்ப நினைவுகள்! ‘ஹார்லிக்ஸ்’ நாம்தானே அவளுக்குத் தரவேண்டும்—ஆகா—எவ்வளவு அருமையான வாய்ப்பு! ‘ஹார்லிக்ஸ்’ குவளையை அவள் இதழ் அருகே நீட்டும்போது; என் விழிகளும் சந்திக்குமல்லவா?

இதுவரை சந்தித்தது போலில்லாமல் அந்த சந்திப்பில் ஒரு நெருக்கம் இருக்குமல்லவா? நினைக்கவே இனித்தது நெஞ்சம். 'ஹார்லிக்ஸை' எடுத்துக்கொண்டு எழுந்தான் நயினு!... அந்தோ, அவனது எண்ணக் கோட்டை தவிடுபொடியாகிவிட்டது..... நர்ஸ் வேகமாக வந்து கொண்டே, "என்ன ஹார்லிக்ஸா?" எனக்கேட்டபடி அவன் கையிலேயிருந்த குவளையை வாங்கி ஆனந்தியிடம் திருப்பினாள். நர்ஸ் குறுக்கீடு நயினுவை மரம்போலச் செய்துவிட்டது. வெப்பத்தையும் வேதனையையும் வெளியில் காட்டிக்கொள்ளாமல் அவன் பழையபடி உட்கார்ந்து கொண்டான். ஆனந்திக்கு வேண்டிய வசதிகளைச் செய்துவிட்டு, நர்ஸ் அதைவிட்டு அகன்றாள், இனி அடுத்த சந்தர்ப்பம் எப்போது கிடைக்குமென்று எதிர்பார்த்தபடி நயினு உட்கார்ந்திருந்தான்.

* * *

சிந்தாமணி மாசற்ற மாணிக்கம், களங்கமற்ற நிலவு என்றெல்லாம் சீராட்டிப் பாராட்டி வளர்த்த சிவநேசரும், சிவகாமியும் எரிமலையின் தீக்குழம்பால் தாக்குண்டது போலத் துடித்துத் தேம்பி அழுதனர். தெய்வமே துணையென்று இருப்பவள் சிவகாமி. அவனன்றி ஓரணுவும் அசையாது என்று அழுத்தமாக நம்பிக்கிடப்பவர் சிவநேசர்! அவனையுமறியாமல் இந்த அக்கிரம அசைவு எப்படி ஏற்பட்டது என்று அவருக்கே புரியவில்லை! பூமி அசைவுகளையும்—பூகம்ப அதிர்ச்சிகளையும்—பூவோடும் பிஞ்சோடும் குடும்பங்கள் புயல்காற்றில் சிக்கி மடிவதையும், கடற்கொந்தளிப்பில் நாடு நகரங்கள் நாசமாவதையும் அமைதியோடு பார்த்துக்கொண்டிருக்கிற "ஆண்டவன்" சிவநேசர் குடும்பத்திலே ஏற்பட்ட சிறு கொந்தளிப்பு கண்டா அதிர்ச்சி அடைந்துவிடப் போகிறான்! கற்பைவிற்று, உடலை விலைகூறி, உல்லாசிகளுடன் தேகத்தை உராசிக் காசு பெறும் "உத்தமி"களை உலவவிட்டு வேடிக்கை பார்க்கும் "ஆண்டவன்" சிந்தாமணியின்மீது ஏற்பட்ட களங்கத்தைத் துடைப்பதற்கு ஓடோடியும் வரவேண்டுமா

என்ன? பாவம்; பைத்தியக்கார சிவநேசர்; இந்தச் சிக்கலுக்கு சிவனார் வழி காட்டுவார் என்று பரிபூரணமாக நம்பினர்!

நல்லவேளை, சிந்தாமணிச் சோதிக்க சிவனார் வராமல் இருந்தாரே என்று சந்தோஷப்பட்டிருக்கவேண்டும் சிவநேசர்! மாருக வருத்தமுற்றார்: இன்னும் ஆண்டவன் அருள்பாலிக்கவில்லையே என்று' சிவகாமியோ, கணவனின் காலில் விழுந்து கதறி அழுது, "வாருங்கள் ஆஸ்பத்திரிக்குப் போய் சிந்தாமணியைப் பார்த்து வரலாம். விவரமெல்லாம் புரியும்!" என்று கூறினாள்.

"நான் கடவுளைத்தான் நம்பியிருக்கிறேன். அவர்தான் என் கஷ்டத்தைப் போக்கவேண்டும்! தெய்வமே! மானமாக வாழ்ந்தவன் இந்த சிவநேசன்—எனக்கு இப்படி ஓர் அபவாதம் வரலாமா? நான் யாருக்கு என்ன தீமை செய்தேன்?" என்று ஓவென அலற ஆரம்பித்தார் சிவநேசர். சிவகாமி, அவரைப் பிடிவாதமாக அழைத்துக்கொண்டு, மருத்துவ மனைக்குப் புறப்பட்டாள்! "சிந்தாமணியைப் பார்த்தால் எல்லாம் புரிந்துவிடும், கவலைப் படாமல் வாருங்கள்! இந்த மாப்பிள்ளை போனால் வேறுமாப்பிள்ளை!" என்று கணவனுக்கு ஆறுதல் கூறினாள்.

"மாப்பிள்ளை போனால் பரவாயில்லை சிவகாமி! மானமல்லவா போய்விட்டது!" என்று கதறினார் அவர்.

"ஏன் போகிறது மானம்? எவனோ ஒருத்தன் உளறினான் என்பதற்காகத் தங்கம் பித்தளையாகிவிடுமா?" என்று சிவகாமி ஆத்திரத்தோடு போசினாள். இருவரும் ஆனந்தியின் மருத்துவ மனைக்குள் நுழைந்தார்கள். வாயிற்புறத்தில் யாருமில்லை. ஆனந்தி, விபத்துக்காளாகிப் பாலையூர் சென்றுவிட்டதால் மருத்துவமனை வெறிச்சென்று காணப்பட்டது. வழக்கமாக வரவேற்கும் வேம்புவைக்கூட காணவில்லை. நர்ஸ் ஒருத்திமட்டும் சாய்வு நாற்காலியில் சாய்ந்தவாறு தூங்கிக்கொண்டிருந்தாள். சிவகாமி, சிந்தாமணி படுத்திருந்த கட்டிலண்டை வேகமாகப் போனாள். அங்கே

சிந்தாமணி காணப்படவில்லை. தூங்கிக்கொண்டிருந்த நர்ஸை எழுப்பி, "எங்கே சிந்தாமணி?" என்றுகேட்டாள்!

"அய்யோ எனக்குத் தெரியாதே! நான் ரொம்ப நாழி கையாகத் தூங்குகிறேன்" என்றாள் அந்தக் கடமை புரியும் காரிகை!

மருத்துவமனை முழுவதும் தேடியாகிவிட்டது. சிந்தாமணி காணப்படவில்லை! மற்ற நோயாளிகளும் தங்களுக்குத் தெரியாது என்று கூறினர்களே தவிர, விவரம் அறிந்தவர்களாக யாருமில்லை. சிவகாமி "சிந்தாமணி! சிந்தாமணி!!" என்று பெருங்கூச்சலிட்டுக் கத்தினாள்! வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டு மருத்துவ மனையிலே உருண்டாள்! சிவநேசர் அமைதியாக அப்படியே உட்கார்ந்திருந்தார். நீண்ட நேரம் அவர் பேசவே இல்லை! பிறகு மெதுவாகச் சிரித்தார்! "என்ன இது?" என்றாள் அதிர்ச்சியோடு சிவகாமி! அவர் கலகலவெனச் சிரித்தார்!

9

அந்தச் சிரிப்பு அமைதி நிரம்பிய உள்ளத்திலேயிருந்து எழுந்ததல்ல; கொந்தளிக்கும் கடலிலே எழும்பும் பேரலைகளை ஒத்திருந்தது. "சிந்தாமணி! சிந்தாமணி!!" என்று கூவினர். உரக்கச் சிரித்தார்! "மகளே! மகளே!" எனக் கதறினர். "அடி மானங்கெட்டவளே!"— என்று சீறினர். "நெறிகெட்ட பெண்ணே! நேர்மையற்ற பேதாய்! நீலி! காளி!"—என்றெல்லாம் உளறினர். சிவநேசருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்று முடிவு கட்ட இதைவிட வேறென்ன காரணங்கள் வேண்டும்? சிவகாமி எதிரே விழுந்து தடுத்துங்கூட அவளைத் தள்ளிவிட்டு சிவநேசர் தெருவுக்கு ஓட ஆரம்பித்தார்.

ஊர் மக்கள் கூடினர். சிவநேசர் அவர்களையெல்லாம் வெறிகொண்ட வார்த்தைகளால் தாக்கத் துவங்கினர். அவரை வலுக்கட்டாயமாக அங்கிருந்து இழுத்துச்சென்று

வீட்டிலேபோட்டுப் பூட்டிவைத்தார்கள் ஊர் மக்கள். சிவகாமியின் மனம் மரத்துப்போய்விட்டது. அசைவற்றுப் போனாள். இனி என்ன இருக்கிறது நடப்பதற்கு! எல்லாம் நடந்துவிட்டது என்ற குமுறல் அவள் நெஞ்சிலே மேலோங்கியெழுந்தது. அறையிலே அடைக்கப்பட்ட சிவநேசர் கூச்சல் போட்டவாறு கதவைத்தட்டி ரகளை செய்துகொண்டிருந்தார். சிந்தாமணியைப் பற்றி ஊரிலே பலவாறு பேச்சு ஆரம்பமாயிற்று! அவளது தோழிகள் அவளுக்காக வாதாடித் தோற்றுர்கள்.

"பார்ப்பதற்கு பரமசாதுமாதிரி இருந்தாளே; அவளா இப்படிப் பரத்தைவாழ்வு நடத்தியிருக்கிறுள்!" என்று அதிசயப்பட்டனர் பலர்.

"சாதுக்களோத்தானய்யா இந்தக் காலத்தில் நம்பக் கூடாது! அதற்குச் சரியான உதாரணம் இந்தச் சிந்தாமணி!" இப்படி நிச்சயப்படுத்தினர் பலர்!

"பாவம்; சிவநேசர் கொஞ்சம் மானஸ்தன்! அவன் பொண்டாட்டி சிவகாமிக்குத் தெரியாமல் எதுவும் நடந்திருக்காது. சிந்தாமணி கெட்டதற்கே அவள்தான் காரணமாயிருந்திருப்பாள்!" இப்படி அபாண்டம் சுமத்தினர் சில அவசரக்காரர்கள்!

"பெற்ற குழந்தையைத் தூக்கிக்கொண்டு எங்குதான் ஓடியிருப்பாள்! பலே கைகாரியம்மா அவள்! பிரசவம் ஆன உடம்பு! பச்சை உடம்பு! அதோடு ஓடியிருக்கிறுளே ஓடுகாலி!" என்று மூக்கில் விரல் வைத்தவாறும், முகவாய்க் கட்டையில் கைவைத்தவாறும் பெண்கள் மகாநாடு அதிசயத்தில் ஆழ்ந்தது!

"என்னதான் சொல்லுங்கள், எங்கள் சிந்தாமணி—அப்பழுக்கற்ற தங்கம்! அவளைப்பற்றி அணுவளவு சந்தேகப்பட்டுப் பேசினுலும் அவர்கள் நாக்கு அழுகிவிடும்!" என்று சாபங்கொடுத்தாள் ஆண்டாள்!

"நாக்கு என்ன நாரத்தம்பழமா! அழுகிப்போக! போடி போக்கிரி, உன் வேலையைப் பார்த்துக்கொண்டு!" என்று அவளை அடக்கினுள் ஊர்ப் பெரியமனுஷி ஒருத்தி!

"விஷயம் வெளிச்சமாகித்தானே மாப்பிள்ளை வீட்டார் மனமுடைந்துத் திரும்பியிருக்கிறார்கள்" என்று தங்களுடைய அரைகுறைச் சந்தேகங்களையும் போக்கிக்கொண்டார்கள் திடீர் முடிவுக்காரர்கள் சிலர்!

எப்படியோ சிந்தாமணிக்குக் களங்கம் கற்பிக்கப்பட்டு அது ஊர் முழுவதும் பரவிவிட்டது. சிவநேசர் வீட்டை மிக அலட்சியத்தோடு பார்க்க முற்பட்டார்கள் அவரது சொந்தக்காரர்கள். ஒருவனுக்குக் கஷ்டம் வந்துவிட்டால் முதலில் சந்தோஷப்படுவதும் சங்கடப்படுவதுபோல் காட்டிக்கொண்டு மேலும் தொல்லைகளை உண்டாக்குவதும் சொந்தக்காரராகத்தானே இருப்பார்கள்!

வேதபுரத்திலேயிருப்பவர்கள் மட்டுமென்ன; விதிவிலக்கா? "சிவநேசன் சரியானபடி சிக்கிக்கொண்டான். பெங்களூர் சம்பந்தமாமே பெங்களூர் சம்பந்தம்! பெரிய இடத்து சம்பந்தம்! எல்லாம் தவிடுபொடியாகிவிட்டது!" என்று தங்களுக்குத் தாங்களே பூரிப்படைந்தார்கள், அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைகளாயுள்ள உறவினர்கள்! சிந்தாமணியின் தோழிகளோ சிந்தை கலங்கி நின்றனர். தங்கள் ஆருயிர்த் தோழிக்கு இப்படி ஒரு அவமானம் வந்துற்றதேயென்று ஏங்கித் தவித்தனர்: அவர்களாலும் இந்தப் புதிரைப் புரிந்துகொள்ள இயலவில்லை. ஊரார் பேசப் பேச அவர்களிலேயே பிளவு ஏற்பட்டது.

"ஒருவேளை நமக்கும் தெரியாத உண்மையாக இருக்குமோ?" என்ற சந்தேகம் துளிர்விடத் தொடங்கியது, தோழிகள் சிலருக்கு! எந்த மணமும் இல்லாத இடத்திலே "எலுமிச்சம்பழ வாடை வீசுகிறது" என்று மந்திரவாதி நாலுமுறை நம்புவதுபோல் சொல்வானேயானால் நமக்குக் கூட அந்த வாடை வீசுவதுபோல் தோன்றலாம். பொய்யைப் பத்துமுறை வற்புறுத்திச் சொன்னால் மெய்யாகத் தோற்றமெடுக்கும் என்பார்கள். அப்படிச் சொல்லித்தானே "கடவுள்" என்ற சொல்லை வாழ்க்கை அகராதியிலே பெரிய எழுத்துக்களில் அச்சடித்து வைத்திருக்கிறார்கள்! உலக மக்களை ஏமாற்றும் பொய்மைகளே உண்மை

களாக உருவெறிக்க முடியும் என்கிறபோது சிந்தாமணி யைப்பற்றிய செய்திகள் தீப்போலப் பரவி அப்படித் தானிருக்கமுடியுமென்று தீர்மானமாக ஆக்கப்படுவது பெரிய காரியமா என்ன? புனிதமானவர்களையும் புக ழடைந்தவர்களையும் பற்றி பொல்லாங்கு பேசும் பொறு மைக்காரர்கள் சூழ்ந்திருக்கிற இந்த உலகத்தில் சிந்தாமணி யைப்போன்ற செந்தாமரைகளை, 'எரிச்சல் எருமைகள்' மிதிக்காமல் விடுவார்களா?

பெண்கள் வட்டாரத்தில் ஒரு பகுதி சிந்தாமணியைப் பற்றிய கேலிக் கண்களைப் பொழிந்தவண்ணமிருந்தது. அவர்களில் சிலர் 'கற்பு' எனும் மூன்றெழுத்துக்கு அர்த் தம் தெரியாதவர்கள்; தன்னிடத்தில் மண்டிக்கிடக்கும் குற்றங்குறைகளைத் திரும்பிப்பாராமல் பிறரிடம் இல்லாத குற்றங்களை சிருஷ்டித்துக்கொண்டு சிரித்து மகிழ்வது தானே இந்த விசித்திர பூமியில் வினையாட்டாக இருக் கிறது! இந்த வேதனையான வினையாட்டுக்குப் பரிதாபத் திற்குரிய பாவை சிந்தாமணி பலியானாள்.

சிவநேசரை வீட்டிலே அடைத்துவிட்டு, சிவகாமிக்கு ஆறுதல் கூறிவிட்டு ஊராரும் தெருவாகும் தங்கள் கடமை களைக் கவனிக்கப் புறப்பட்டார்கள். சிவகாமி என்ன செய் வதென்று தோன்றுமல் உட்கார்ந்திருந்தாள். கணவனி டம் யோசனைகள் கேட்கவோ வழியில்லை. அவர் கரடி போல் கத்திக்கொண்டு கிடக்கிறார். சிந்தாமணி போன மார்க்கமோ தெரியவில்லை. தெருவிலேயுள்ளவர்களோ தெளிவான யோசனை எதுவும் தெரிவிக்கவில்லை. "ஆகட் டும், நாளைக்குப் பார்க்கலாம்" என்று கூறிப் பொறுப்பைக் கழித்துக்கொண்டு போய்விட்டார்கள். சிந்தாமணியைப் பற்றி ஊரே சந்தேகப்பட்டுப் பேசுகிறது. அவளோடு சேர்ந்திருந்த தோழிகளும் குழப்பத்தில் மூழ்கிவிட்டார்கள். சிவகாமி தனித்து விடப்பட்டிருக்கிறாள். அவளால் எதைத் தீர்மானிக்க முடியும்? தாயொருத்திக்குத்தான் தன் செல்வி யைப்பற்றிய ஐயம் எழவேயில்லை! அவள் தூய ஜோதி யென்று சிவகாமி மட்டுமே குழப்பமின்றி உணர்ந்திருந்

தாள். மகளைப் பார்த்து விவரமெதுவும் அறிய முடியாத படி போய்விட்டதே-அவள் எங்கு போயிருப்பாள்—ஒரு வேளை சேதி கேள்விப்பட்டு வேதனை தாங்காமல் எங்காவது ஓடிப் போய்... அய்யோ! அதை கற்பனை செய்யவே முடியவில்லை!

மணி ஒன்பது அடித்தது—இருள் சூழ்ந்த வேதபுரத்தில் கண் கட்டப்பட்ட நிலையிலே தத்தளித்துக்கொண்டிருந்தாள் சிவகாமி. வாயிற்புறத்தில் யாரோ வரும் சத்தம் கேட்டது. "சிந்தாமணி!" என்று அலறியடித்துக் கொண்டு ஓடினாள் சிவகாமி! அவள் அலறியதைக்கேட்ட சிவநேசர் அறைக்குள்ளிருந்தபடியே "சிந்தாமணியா? அந்தச் சீரழிந்தவளா?" என்று கூச்சலிட்டு உளர ஆரம்பித்தார். தெருவுக்கு ஓடிய சிவகாமி திகைத்து நின்றாள். எதிரே டைகர் நின்றுகொண்டிருந்தான்.

"என்ன வீடு ஒரே ரகளைப்படுகிறது! என்ன அத்தை சமாசாரம்! மாமா எங்கே?" என்று கேட்டான் டைகர்!

"மாமா! இதோ இருக்கிறேன் மானங்கெட்ட மாமன் இதோ இருக்கிறேன். கதவைத் திறவீர்! கதவைத் திறவீர்! இல்லாவிட்டால் இந்த ஊரையே அழித்துவிடுவேன்! நான்தான் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள்! மானேந்தி மழுவேந்தி! தலையிலே கங்கையேந்தி! பக்கத்திலே பார்வதியேந்தி! நான்தான் பரமசிவன்! அடே ராகூசா! உடனே கதவைத் திறக்கிறாயா? என் காளை வாகனத்தைவிட்டு உன்னை முட்டச் சொல்லட்டுமா? அடி பார்வதி! ஹே; சிவகாமி! கதவைத் திற! இல்லாவிட்டால் தான் தேவாரப் பதிகம்பாடி திருமறைக் காட்டில் கதவு திறந்ததுபோல் திறந்திடுவேன்" என்று கடல்மடை திறந்தாற்போல பேச ஆரம்பித்தார் சிவநேசர். பித்து அதிகமாகிறது என்பதை உணர்ந்த சிவகாமி, தலையில் ஓங்கி ஓங்கி அறைந்து கொண்டு அழத் தொடங்கினாள். "என்ன அத்தை இது! கொஞ்சங்கூட புத்தி கிடையாது உங்களுக்கு! இப்போது என்ன வந்துவிட்டது? ஏன் இப்படித் தாண்டவமாடுகிறீர்கள்?" என்றான் டைகர்.

"இன்னும் என்னப்பா வரவேண்டும்? குடும்பத்து மானமே போனபிறகு மிச்சம் என்ன இருக்கிறது! என் உயிர்தான் இருக்கிறது! அதையும் அந்தப் பாழும் கடவுள் பறித்துக்கொண்டு போகமாட்டேன் என்கிறானே!"

சிவகாமி மாலை மாலையாகக் கண்ணீர் வடித்தாள்.

"கவலைப்படாதே சிவகாமி! இதோ நமது எமனை அனுப்புகிறேன் அவனோடு தேவலோகம் வந்து சேருவாயாக! ஓடி வா! ஓடி வா!" என்று கத்தினார் சிவநேசர்!

"இதைவிடக் கொடுமை வேறு என்னப்பா வேண்டும்; அதுவும் இந்த வயதில் எனக்கு!"

சிவகாமி ஒப்பாரி மீண்டும் ஆரம்பமாயிற்று.

"பயப்படாதீர்கள் அத்தை! மாமாவுக்கு உடம்பு குணமாக நான் ஜவாப்தாரி! சிந்தாமணியைக் கண்டு பிடிப்பதும் என் பொறுப்பு!"

"டைகர் எங்கள் விதியை யாராலும் மாற்ற முடியாது. நீ உன் வேலையைப் பார்த்துக்கொண்டு போ!" என்று அழுகை ஆத்திரத்தோடு சிவகாமி கூறினாள்.

"அதுதான் சரி! அதுதான் சரி! விதியை மாற்ற ஈசனாலும் முடியாது! சிந்தாமணி! உன் விதியை என்னால் மாற்ற முடிந்ததா? நீ கேடுகெட்டவளாக மாறவேண்டுமென்று விதி இருந்திருக்கிறது! நீ கல்யாணத்துக்குள் கர்ப்பமாக வேண்டுமென்று விதி இருந்திருக்கிறது! விதியே விதியே விதியே!...என் தலைவிதியே! என் தலை விதியே! காமீ சத்யபாமா! கதவைத் திறவாய்! திறவாய்!!" சிவநேசரின் கூச்சல் அதிகமாயிற்று. டைகர் சிவகாமியிடம் மிகப் பணிவோடும், குழைவோடும் பேச்சைத் தொடர்ந்தான்.

"அத்தே! என்னைப்பற்றி நீங்களும் மாமாவும் போட்டிருக்கிற கணக்கு தவறு! நான் நல்லவனுக்கு நல்லவன்! கெட்டவனுக்குக் கெட்டவன்! நீங்கள் என்னை அலட்சியப்படுத்தினாலும் நான் உங்களுக்கு வந்த

கஷ்டத்தைப் பார்த்துக்கொண்டிருக்க மாட்டேன். சத்திய மாகச் சொல்லுகிறேன்; சிந்தாமணியைக் கொண்டுவந்து உங்கள் கையில் ஒப்புவிக்கவேண்டியது என் பொறுப்பு! என் கடமை! நீங்கள் சொன்னலும் சொல்லாவிட்டாலும் அது என் வேலை!''

''சிந்தாமணி திரும்பி வருவதும் ஒன்றுதான் அவள் வராமல் அங்கேயே சாவதும் ஒன்றுதான்! அவளைப்பற்றி உளர் முடிவுகட்டிவிட்டது! அவமானச் சின்னம் என்று அபிப்பிராயம் தெரிவித்து விட்டது! என் கண்மணி திரும்பி வந்து காலமெல்லாம் கண்ணீருங் கம்பலையுமாக கன்னி கழியாத சுமையாக இருப்பதைவிட அவள் செத்து விடுவது மேல்!''

இதைச் சொல்லியபடி தலையைச் சுவரில் சாய்த்தவாறு கண்ணீர் உகுத்தான் சிவகாமி.

''சிந்தாமணிக்குக் களங்கம்! அதற்காகத்தானே பயப் படுகிறீர்கள் அத்தை! யாரும் அவளை இனிமேல் கல் யாணம் செய்துகொள்ள மாட்டார்களே என்றுதானே கவலைப்படுகிறீர்கள்! இதைவிட ஆயிரம் அபாண்டங்களை பதினாயிரம் பழிகளை அவள்மேல் சுமத்தினலும் சரி; நான் தயாராயிருக்கிறேன் அவளைக் கல்யாணம் செய்துகொள்ள என்ன சொல்கிறீர்கள்?'' என்றான் டைகர் — நல்லவன் போல நடித்து, உத்தமன்போல பணிந்து நின்று!

சிவகாமி அவனை உற்றுநோக்கினாள்! ஆத்திரம் அவள் கண்களில் தோன்றியது! உதடுகள் துடித்தன அவளுக்கு!

''ஏ! ராமகிருஷ்ணு! எல்லாம் உன் சூழ்ச்சிதானு? சிந்தாமணியைக் கல்யாணம் செய்துகொள்வதற்காக நீ செய்த ஏற்பாடுகள்தானு இவையெல்லாம்?'' என்று சினம் பொங்கி வழியச் சீறினாள் சிவகாமி!

''என்ன அத்தை! உங்களுக்கும்மாமா மாதிரி ஏதாவது பிடித்துவிட்டதா என்ன? உண்மையிலே சொல்லுங்கள் — சிந்தாமணி களங்கமற்றவள் என்று நீங்கள் நம்புகிறீர் களா இல்லையா?'' டைகர் கேட்டான் இப்படி!

"என் மகள் கண்ணகிதேவியடா—கண்ணகிதேவி!" என்று கத்தினாள் சிவகாமி.

"அப்படியானால், அந்தக் கண்ணகி தேவி, உயிரோடு திரும்பிவந்து, உங்களை அம்மா என்று அழைப்பதை ஏன் மறுக்கிறீர்கள்?"

"யார் மறுத்தது? என் மாணிக்கம், ஒரு முறை முக தரிசனம் காட்டினாலும் போதுமே!"

தாய்மை உணர்ச்சி அலை உடைத்து எழுந்தது சிவ காமிக்கு! அவள் தான் முதலில் சொன்னாள்; 'ஊரார் பழிக்கு ஆளான சிந்தாமணி திரும்பி வருவதைவிட சாவது மேல்' என்று! இப்போது அவள்தான் பேசுகிறாள், முகதரி சனம் கிடைத்தாலும் போதுமென்று!

முன்னது, மான உணர்வுக்குக் கட்டுப்பட்ட மனித உணர்ச்சி! பின்னர்ப் பீறிட்டு எழுந்தது அதனினும் மேம் பட்ட தாய்மை உணர்ச்சி! தாய்மை உணர்ச்சியைத் தனக் குச் சாதகமாக ஆக்கிக்கொள்ளத் திட்டமிட்டான், டைகர் ராமகிருஷ்ணன்!

"சிந்தாமணி எங்கும் போய்விடவில்லை! என்னால் அவளை இங்குக் கொண்டுவர முடியும்! ஆனால் ஒரு நிபந் தனை—அவளை எனக்குத் திருமணம் செய்துவைப்பதாக உறுதி கூறவேண்டும்!"

"திருமணமே கிடையாது! சிந்தாமணிக்குத் திரு மணமே கிடையாது! அவள் ஒரு மணிமேகலை! துறவி! சந்நியாசினி! புத்த பிக்ஷுணி! அவளுக்குத் திருமணம் கிடையாது! இது என்னுடைய தீர்மானம்! அவள் ஒரு பிரம்மச்சாரிணி! இல்லை இல்லை; கன்னி கழியாமல் பிள்ளை பெற்றவள்! அவள்தான் அசல் குந்திதேவி! ஏ பாண்டு மகாராஜனே! அவளைக் கல்யாணம் செய்துதர முடியாது! ஓடி விடு! ஓடி விடு!!" என்று முழக்கமிட்டார் முற்றிக் கொண்டேயிருக்கும் பித்த முதிர்ச்சியால் சிவநேசர்!

"என்ன அத்தை சொல்கிறீர்கள்! சிந்தாமணி திரும்பி வரவேண்டுமல்லவா?"

"ஆமாம்! நிச்சயமாக!"

"அப்படியானால் திருமணம்?"

"திருமணம்?" சிவகாமி பெருமூச்சு விட்டாள்!

"அத்தே! முடிவாகச் சொல்லுங்கள்! நீங்கள் உறுதி கொடுத்தால் நாலுபேரறிய நாகரிகமான முறையில் திருமணம் நடக்கும். இல்லாவிட்டால் எங்களுக்குத் திருமணமான சேதியைக் கேள்விப்படுவீர்கள்!"

"என்னப்பா பயமுறுத்துகிறாய்! சிந்தாமணியை நீ ஒளித்துவைத்திருக்கிறாயா? இது என்ன காட்டுராஜா காலம் என்று நினைத்துக்கொண்டாய்! போலீஸ் இலாகா இருப்பதை மறந்துவிடாதே!"

"இருக்கலாம், போலீஸ் இலாகா வந்தால் உங்கள் மகளின் பிணத்தைத்தான் கொண்டுவரும்! ஞாபகம் இருக்கட்டும்!" அதைக்கேட்ட சிவகாமி திடுக்கிட்டாள்.

"இப்போது நீ என்னதான் சொல்லுகிறாய் என்று கெஞ்சுந்தோரணையில் கேட்டாள்.

"என்ன சொல்கிறேன்! சிந்தாமணியை அழைத்து வருகிறேன். அவளை எனக்குத் திருமணம் செய்துவைக்க சம்மதிக்க வேண்டுமென்கிறேன்."

"சரி ஆகட்டும்! அவளை அழைத்துக்கொண்டு வா!" என்றாள் சிவகாமி!

"இப்படிச் சொன்னால் போதாது அத்தை! உங்கள் குலதெய்வத்துக்கு நேராகச் சத்தியம் செய்துகொடுக்க வேண்டும்."

"சத்தியமா?"

"பிறகென்ன; ஏமாற்றிவிடலாம் பயலை யென்று எண்ணுகிறீர்களா? அதெல்லாம் முடியாது! குலதெய்வத்துக்கு நேராக ஆணையிட்டு சம்மதம் தரவேண்டும்."

சிவகாமி யோசித்தாள்! அவள் தாயுள்ளத்திலே போரும், புயலும் மூண்டன!

சிந்தாமணியை இழந்துவிட அவள் துணியமுடியுமா? அதே நேரத்தில் டைகர் ராமகிருஷ்ணனை அவளுக்குத் துணைவனாக ஆக்கிடத்தான் சம்மதிக்க முடியுமா? இப் போது சிவகாமிக்கு இருந்த ஆசையெல்லாம், சிந்தா மணியை ஒருமுறை சந்தித்து அவள்மீது சுமத்தப்பட்ட பழியைப்பற்றிய விவரம் அறியவேண்டுமென்பதுதான்! தன் அன்பு மகளைச் சூழ்ந்திருக்கும் அவதூறு இருளை எப்படியாவது அகற்றிவிடவேண்டும் எனத் துடித்தான் அவள். சிந்தாமணி திரும்பிவந்தால் அந்தப் பழியை ஊரார் மனத்திலேயிருந்து அகற்றிவிடலாம் என்று நம்பி னாள் அவள்! இந்த நிகழ்ச்சிகளுக்கெல்லாம் டைகர்தான் காரணமாயிருப்பானே என்ற சந்தேகமும் எழுந்தது அவ ளுக்கு! டைகருக்கு அவளைத் தருவதாக வாக்களித்து விட்டால், அவன் அவள்மீது-தானே வீண்பழியைச் சுமத் தியதாக ஊர் மக்களிடம் ஒப்புக்கொண்டு தன் மகளைப் புனிதவதியாக மாற்றிவிடுவான். அவள்மீது படிந்த மாசு விலகிவிடும்! வீண் அபவாதம் அழிந்துவிடும் என எண்ணினாள் டைகரோடு சிந்தாமணி வாழ்க்கை நடத்துவதைச் சகித்துக்கொள்ளலாம்; ஆனால், அவள் களங்கமுற்றவள் என்ற பெயரை எப்படிச் சகித்துக்கொள்வது? அந்தப் பெயர் மறையவேண்டுமானால், டைகருக்கு அவளைத் திரு மணம் செய்துகொடுப்பதுதான் சரி. என்ற முடிவுக்கு வந்தாள் சிவகாமி! தாயுள்ளம் அப்படித்தான் தீர்மானிக்க முடியும்!

குலதெய்வத்தின் முன்னே சத்தியம் செய்துகொடுக்க சிவகாமி தயாரானாள். சிவநேசரோ கதவைத்தட்டி உடைத் துக்கொண்டு உரக்கக் கூவிக்கொண்டிருந்தார்.

வீடு அல்லோல கல்லோலப் படுவதும், ஊரார் நகைத் துப் பரிகசிப்பதும் — சிந்தாமணி திரும்பிவந்தால் சரியாகி விடும் என்று அவள் பூரணமாக நம்பிவிட்டாள். அதோடு,

டைகர் தன் வீட்டு மாப்பிள்ளையாகிவிட்டால், ஊர்வாய் அச்சத்தால் அடைபடும் என்றும் கருதினுள்.

மகள் 'மாசற்றவள்' என்று நிரூபிக்கப்பட்டு விட்டால் போதும் சிவகாமிக்கு!

அதனுல் பழிபாவம் பாரங்களையெல்லாம் தெய்வத்தின் மீது போட்டுவிட்டு, டைகரின் நிபந்தனைக்குக் கட்டுப் பட்டாள்.

டைகர், குலதெய்வத்திற்குக் குத்துவிளக்கு ஏற்றிவைத் தான். குங்குமப்பொட்டு வைத்தான். "உம்! உறுதி கொடுக்கலாம் அத்தை!" என்ருன்.

சிவகாமியும் குலதெய்வத்திற்கு நேராக நின்று "எங்கள் குலதெய்வத்தின்மேல் ஆணை! சத்தியமாக, உனக்குச் சிந்தாமணியைக் கல்யாணம் செய்துகொடுக்கி றேன்!" என்று உறுதிமொழி தந்தாள்.

அதைக்கேட்ட டைகர், "சபாஷ்! அத்தை சபாஷ்! இனிமேல் சிந்தாமணி வருவான்! உங்கள் துன்பமெல்லாம் தொலையும்!" என்று மகிழ்ச்சியோடு கூறிக்கொண்டே வீட்டைவிட்டு வெளியேறினுன்.

10

சிவகாமியிடம் பெற்ற சத்தியத்தையெண்ணிப் பூரிப் படைந்தவாறு டைகர், நேராக ஆனந்தியின் மருத்துவ இல்லத்தை நோக்கி நடந்தான். சிவகாமி சத்தியத்திற்குப் பயந்தவள் என்பதும் அதுவும் குலதெய்வத்திற்கு மாருக எதுவும் செய்யத் துணியமாட்டாள் என்பதும் டைகரின் நம்பிக்கைக்கு அதிக வலுவூட்டின. மருத்துவ மனையின் மேல்மாடிக்குச் செல்லும் படிக்கட்டில் 'தட தட' வென பூட்ஸ் ஓசையைக் கிளப்பியவாறு கால்களை வேகமாகப் பதியவைத்தான். அப்போது "என்ன சார்?" என்ற கேலி கலந்த சிரிப்போடு வேம்பு கீழிருந்துக் கூப்பிட்டான்.

"காரியம் அனேகமாகப் பாதிபழுத்துவிட்டது வேம்பு! ஆள் பத்திரம்தானே!" என்று ஆவலோடு வினவினன் டைகர்! "ஓ! அதெல்லாம் பூட்டியபடியே கிடக்கிறது பொருள் உள்ளே! போகலாம்! போய் இஷ்டத்தைப் பூர்த்திசெய்து கொள்ளலாம்!" என்று வேம்பு பரிகாசம் செய்தான்.

"இல்லை வேம்பு! இப்போதே நான் அவளை அவள் வீட்டுக்குக் கொண்டுபோய் விடப்போகிறேன். இனி எனக்கும் அவளுக்கும் நிச்சயமாகத் திருமணம் நடந்தே தீரும். அதில் அணுவளவும் சந்தேகமில்லை!" இந்தச் சேதியை உற்சாகத்தோடு உரைத்தவாறு படிகளில் ஓடினன் டைகர்! டைகரின் மகிழ்ச்சியையும் துடிப்பையும் கண்ட வேம்பு, "சரி; என் காரியம் ஆகிவிட்டது! நான் பாலையூர் ஆஸ்பத்திரிக்குப் போய் அம்மாவுக்கு ஆகவேண்டியதைச் செய்துவருகிறேன்" என்று தலையைச்சொரிந்தான் வேம்பு. டைகர் அவனுக்கு விடைகொடுத்து, ஒரு பத்து ரூபாய் நோட்டையும் அவன் கையிலே அழுத்தி, பாலையூர் ஆஸ்பத்திரியில் நமது முகம்மது என்று ஒருவன் இருக்கிறான்; அவன் நடவடிக்கைகளையும் கவனித்துவா" என்று அனுப்பினன். நோட்டைக் கண்களில் ஒத்திக்கொண்டு பற்களைக் காட்டியவாறு வேம்பு அதைவிட்டு அகன்றான். மாடிக் கதவைத் திறந்துகொண்டு டைகர் பிரவேசித்தான். அங்கேயுள்ள ஒரு பெரிய அறையும் பூட்டப்பட்டிருந்தது. அதன் கதவையும் திறந்தான். உள்ளே இருள் சூழ்ந்திருந்தது. மின்சார விளக்கைப் பொருத்தினன். அந்த ஒளியிலே சிந்தாமணி கீழே உருண்டு கிடப்பது தெரிந்தது. அவள் கை கால்கள் கட்டப்பட்டிருந்தன. அதிர்ச்சியால் தாக்குண்டவன்போல, "ஆகா! இது என்ன கோரம்! சிந்தாமணி! உன்னை யார் இப்படியெல்லாம் கொடுமைப்படுத்தியது?" என்று கேட்டவாறே அவளைக் கட்டுகளில் இருந்து விடுவித்தான். சோர்வுற்ற நிலையிலே சிந்தாமணி எழுந்து நின்றாள். மீண்டும் டைகர், "சொல் சிந்தாமணி! உன்னைக் கஷ்டத்திற்குள்ளாக்கியது யார்? காரணம் என்ன?"

என்று ஆவலோடும் ஆத்திரத்தோடும் கேட்பதுபோல நடித்தான், மிகத்திறமையாக!

"தெரியாததுபோல ஏன் கேட்கிறாய்? எல்லாம் உன் ஏற்பாடுகள்தான் என்பது எனக்கு நன்றாகப் புரிகிறது!"

"வீண் கற்பனை! சிந்தாமணி—கனவிலும் இப்படி ஒரு கஷ்டத்தை உனக்குக் கொடுக்கமாட்டேன்! என்னை நம்பு அந்த வேம்பு இருக்கிறானே....."

"அவன்தான் மாடியிலேயுள்ள நோயாளி விடுதியில் தங்கவேண்டும் என்று என்னை அழைத்து வந்தான்! அவன்தான் என்னை அறையிலே போட்டுப் பூட்டி "டைகர் வரும் வரையில் காத்திரு" என்றும் கூறிவிட்டுப் போனான். இப்போது புரிகிறதா...?

சிந்தாமணியின் கண்களில் கனல் கிளம்பிற்று. அவள் முகம் ஆத்திரத்தால் சிவப்பேறிக்கொண்டேயிருந்தது.

"அந்த வேம்பு முட்டாள்தனமாக உளறிவிட்டானே; மடையன்" என்று தனக்குத்தானே முனகிக்கொண்டு டைகர் அந்த அறையில் அங்குமிங்கும் உலவினான். எப்படியும் தான் குற்றமற்றவன் என்று சிந்தாமணியை நம்ப வைத்து அவளைக் காப்பாற்றுவதற்காகவே தான் அங்கு வந்ததாக்ச் சொல்லி, அதன்மூலம் அவளை மகிழவைக்கவும் வேண்டும் என்று திட்டமிட்டு வந்திருந்தான். அவன் எதிர்பார்த்ததற்கு மாறுக, சிந்தாமணியின் பதில் இருந்தது.

"நான் சொல்வதை நீ நம்பித்தான் தீரவேண்டும் சிந்தாமணி! உன்னையும் என்னையும் பிரிப்பதற்காக லேடி டாக்டர் ஆனந்தி செய்த வேலையிது! அவளுக்கு என்மீது அடங்காத மோகம். எனக்கோ உன்மீது! இதை அவள் புரிந்துகொண்டுவிட்டாள். உன்னையும் என்னையும் பிரிக்க சமயம் பார்த்திருந்தாள். காலையில் குளக்கரையில் காதல் வேடிக்கையிலே நான் உன்மீது கல் எறிய, நீ என்மீது கடைவிழியோட்டித் திரும்ப — தெய்வச்செயலாக நீ கீழே விழ — இந்த ஆஸ்பத்திரிக்கு வர — ஆனந்திக்கு உன்னையும்

என்னையும் பிரிக்கும் வேலை சுலபமாகிவிட்டது. உன்னை யார் கண்ணிலும் படாமல் மறைத்து ஏதோ ஒரு பயங்கரமான திட்டத்திற்கு ஏற்பாடு செய்திருக்கிறாள். அதற்குள் தெய்வம் அவளுக்குக் கூலி கொடுத்துவிட்டது. கார் விபத்தில் சிக்கிப் பாலையூர் ஆஸ்பத்திரியில் படுத்திருக்கிறாள், உயிருக்குப் போராடிக்கொண்டு!

"உன்னைக் காணவில்லையென்று உன் பெற்றோர் ஊரெல்லாம் தேடி கடைசியில் என்னிடம் ஓடிவந்தார்கள். நானு வேம்புப் பயலைக் கூப்பிட்டு மிரட்டி, கொன்றுவிடுவதாகப் பயமுறுத்தியதும் — அவன் உண்மையைக் கக்கி விட்டான். அதன்பிறகுதான் ஓடிவந்தேன் — உன்னைக் கண்டேன்! விடுவித்தேன்! வேம்பு சொன்னதாகச் சொன்னையே; "டைகர் வருவார் காத்திரு!" என்பதாக! அதற்கு என்ன அர்த்தம் புரிகிறதா? உன்னை யாராலும் காப்பாற்ற முடியாது. உன் ஆசைக் காதலன் டைகர் வந்தாலும் முடியாது! என்ற திமிரான பேச்சாகும் அது! நீ அவன் பேச்சை கேட்டுக்கொண்டு என்னை சந்தேகப் படுகிறாய்"

இப்படி ஒரு புளுகு மூட்டையை அவிழ்த்துவிட்டு டைகர் நாடகமாடித் தீர்த்தான். சிந்தாமணிக்கு அவனது பேச்சை நம்பவும் முடியவில்லை; நம்பாமலிருக்கவும் முடியவில்லை. குழப்பத்திற்கு ஆளாகித் தவித்தாள்.

"எது எப்படியிருந்தாலும் சரி; என்னை வீட்டுக்குக் கொண்டுபோய் விட்டால் போதும்!" என்று தெரிவித்தாள்.

"இதோ — காத்திருக்கிறேன். உன்னை வீட்டுக்கு அழைத்துப் போகத்தானே ஓடோடியும் வந்தேன். என் சொத்து நீ! உன்னை பாதுகாக்காமல் வேறு நான் யாரைப் பாதுகாக்கப் போகிறேன்!"

"டைகர்! வீண்பேச்சு தேவையில்லை. வீட்டுக்குப் போகலாம்!"

"போகலாம் சிந்தாமணி -- ஆனால் ஒரு வேண்டு கோள்! எப்படியும் நாம் இருவரும் கல்யாணம் செய்து கொண்டு சதிபதிகளாய் வாழப்போகிறோம் என்பது நிச்சய மாகிவிட்டது. அதனால்....."

"அதனால்....."

வார்த்தைகளை முடிக்க இயலாமல் தத்தளித்தவாறு அவளிடம் நெருங்கினன் டைகர்.

அவனது எண்ணத்தைச் சிந்தாமணி புரிந்துகொண் டாள். அவள் உடலும் உள்ளமும் நடுங்கின. என்ன நடக்கப்போகிறதோ என்ற பயம் அவளது மென்மையான இருதயத்தை உருக்கிற்று. வளமாகக் குலுங்கி நிற்கும் திராட்சைக் கொத்தை ஒரு அகன்ற இரும்புக் கரம் ஒரு சேரச் சேர்த்துப் பிழிவது போலிருந்தது அவளது இருத யத்தில் ஏற்பட்ட வேதனை. குளக்கரையிலே விழுந்ததினால் ஏற்பட்ட வலியை, அவள் நெஞ்சில் அப்போது எழுந்த வலி மிஞ்சிற்று. எதையும் இழந்துவிடலாம் ஒரு பெண் — ஆனால் மானத்தை இழந்துவிடவும் துணிய முடியுமா? சூர்ப்பனகை மூக்கிழந்தாள், மூலையிழந்தாள் என்றாலும் கற்பு நிலை யிழக்கவில்லையென்பதனால்தானே இராவண னின் தங்கையென்ற பெருமையைப் பெற முடிகிறது! எதிரே இலக்குமணன் நிற்பது போலவே டைகரை அவள் கற்பனை செய்தாள். அவன் முரட்டுக் கரங்களிலே சிக்கிக் கசங்கும் முல்லை மலராகத் தான் ஆகிவிடக்கூடாதேயென்ற கவலை அவளுக்கு மயக்கத்தை அதிகமாக்கிற்று. தன்னையே நிதானப்படுத்திக்கொண்டாள். எங்கேயோ ஒரு நீதி மன்றத்தில் ஒரு வக்கீல் வாதாடினராம்: கற்பழித்த வழக்கு ஒன்றில்!

குற்றவாளியின் சார்பில் வாதாடிய அவர், இறுதியாகத் தன் பேச்சை முடிக்கும்போது — "இந்தப் பெண் இவனால் கற்பழிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது — இவளுக்கு இஷ்டமில்லாமலே அந்தக் காரியம் நடந்ததாகவும் விளக் கப்படுகிறது. ஒரு பெண் இறுதிவரையில் மறுத்துவிட்

டால் அதையும் மீறி ஒரு ஆண் வெற்றியடைய முடியும் என்பது சாதாரண விஷயமல்ல! பலாத்காரம் நடைபெற்ற இடத்தில் இவளைக் கட்டிப் போடவுமில்லை! மயக்கமுறவும் செய்யவில்லை. அப்படியிருந்தும் இவள் கற்பிழந்தாள் என்பது ஆச்சரியமே! இதோ இந்தத் தையல் ஊசியை நான் ஆட்டிக்கொண்டே யிருக்கிறேன்; நீங்கள் இதிலே ஒரு நூலைக் கோர்த்துவிடுங்கள் பார்க்கலாம்!" என்று கூறி ஒரு ஊசியை எடுத்து மெதுவாக அசைத்துக் கொண்டே யிருந்தாராம், அதில் யாரும் நூலைக் கோர்த்திட முடிய வில்லையாம்!

"இதைப்போலத்தான் பெண்ணின் மனம் பிடிவாத மாக மறுப்புக் காட்டியிருந்தால், இந்த ஆண் வெற்றிபெற முடியாது. சிறிதளவாவது அவளும் உணர்ச்சி வசப்பட்டு விட்டதாலேயே இவன் வெற்றி யடைந்திருக்கிறான். அதனால் இருவருமே குற்றவாளிகள்தான்!" என்று குறிப் பிட்டாராம் அந்த வக்கீல்!

அதை எங்கேயோ யார்மூலமோ கேள்விப்பட்டாளோ; அல்லது படித்திருக்கிறாளோ—அது நினைவில்லை! ஆனால் அந்தக் கட்டத்தில் அந்த வழக்கு, வக்கீலின் விளக்கமும் ஞாபகத்திற்கு வந்தன. ஆடிக்கொண்டிருக்கும் ஊசியாக மாறினாள். அலைமோதிக்கொண்டிருந்த டைகர் அவளது கைகளைப் பிடித்துக்கொண்டு, "கண்ணே! கண்ணே!!" என்று கெஞ்சினான். அவன் கைகளைத் தட்டிவிட்டு அப்பாற் போய் நின்றுகொண்டாள்.

"டைகர்! இதுதான் நீ என்னைக் காப்பாற்ற வந்த அழகோ! மரியாதையாக இதைவிட்டுப் போய்விடு!" என்று கத்தினாள். அவனுக்கு நப்பிக்கை குறைந்துவிட்டது. அவளை மடக்கிவிடலாமென்ற எண்ணம் மூளியாகி விட்டது. ஆனாலும் ஒரு சபலம்; திருமணம் என்னமோ நிச்சயமாக நடந்துவிடுமென்று! அதற்குள் இப்படி ஒரு குழப்பம் விளைவித்துக் காரியத்தைக் கெடுத்துக்கொள்ளக் கூடாதென்று முடிவுசெய்துகொண்டான். அதனால் அதற்கு மேல் அவளிடம் நெருங்கவில்லை.

"சரி; சிந்தாமணி! கல்யாணத்திற்கு முன்பு இப்படியெல்லாம் நடந்துகொள்ளக்கூடாதென்று கருதுகிறாய் போலும்! அந்தக் கர்நாடக வழக்கம் உன்னைவிட்டுப் போகவில்லை. பரவாயில்லை. உன்னை உன் இஷ்டப்படியே வீட்டில் கொண்டுபோய் விடுகிறேன் வா" என்று பேச்சின் மூறையையே மாற்றினான் டைகர்.

சிந்தாமணிக்கு உள்ளூரப் பயந்தான்! வீட்டுக்கு அழைத்துப்போவதாக எங்காவது அழைத்துப்போய் விடுவானே என்று அவள் பயப்படுகிறாள் என்பதையும் அவன் புரிந்துகொண்டான்.

"எங்கேயாவது தந்திரமாக உன்னைக் கொண்டுபோய் விடுவேனே என்று கலங்காதே! நான் உன்னைத் தொடப் போவதில்லை. இந்த மருத்துவ மனையின் வாசல் வரையிலே வந்து நான் உன்னை வழியனுப்பி வைக்கிறேன். அதற்குப் பிறகு நீயே உன் வீட்டிற்குப் போகலாம்" என அவன் கூறினான்.

அது நல்ல யோசனைதான் என்று சிந்தாமணி கருதினாலும் வீடு வரையிலே நடந்து போகக்கூடிய அளவுக்கு உடல்நிலை இடந்தராதேயென்று யோசித்தாள். அதனால் வீட்டுக்குச் செல்ல ஒரு வண்டி வேண்டுமென்று கேட்டாள். "இதோ கொண்டுவருகிறேன்" எனக் கீழே இறங்கிப் போய் ஒரு இரட்டைமாட்டு வண்டியைக் கொண்டுவந்து நிறுத்தினான். சிந்தாமணி மாடிப்படிகளில் இறங்குவதற்கே கஷ்டப்பட்டு இறங்கி வந்தாள். அந்தச் சாக்கிலாவது அவளுக்கு உதவிபுரிவதுபோல அவள் மேனியைத் தொடுவதற்கு அவன் துடித்தான். அவளோ கைப்பிடிச் சுவரின் துணையோடு மொதுவாக இறங்கிக் கீழே வந்தாள். உயரக் கூண்டு வேய்ந்த இரட்டை மாட்டு வண்டி. அதிலே ஒரே தாவாகத் தாவித்தான் ஏறமுடியும். சிந்தாமணி சிறிது திகைத்தாள். டைகர் உதவிபுரியத் தயாராக நின்றுகொண்டிருந்தான். அவன் வண்டிக்காரனைப் பார்த்து, "ஏய், இதைக் கொண்டுபோய், அவுங்க வீட்டிலே விட்டுவிடு! இந்தா வண்டிச் சத்தம்" என்று எட்டணா பணத்தையும்

நீட்டினான். வண்டிக்காரன் வாங்கிக்கொண்டு, "உம்! புறப்படுங்கம்மா!" என்று துரிதப்படுத்தினான். சிந்தாமணி வண்டியில் ஏறவேண்டுமே! நல்ல உடம்புக்காரர்களுக்கே "ஹை ஜம்ப்" வித்தை தெரிந்திருக்க வேண்டும். அந்த வண்டியில் ஏற — அவளோ உடலும் உள்ளமும் நலிந்து, உற்சாகமின்றியிருக்கிறாள் — அதனால் சங்கடப்பட்டாள். பிறகு சமாளித்துக்கொண்டு அந்த வண்டியிலே குதிக்கும் தோரணையில் ஏறினாள். வெற்றி கிட்டவில்லை அவளுக்கு! டைகருக்குத்தான் வெற்றி கிட்டியது! வண்டியின் தட்டிலே சிந்தாமணியின் இடுப்பு வரையில் போய்விட்டது. கால்கள் கீழே தொங்கிக்கொண்டிருந்தன. கால்களை எடுத்துப் பூரணமாக அவளால் வண்டியில் அமரமுடியவில்லை. கீழே குதிக்கவும் பயம்! நேரத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டான் டைகர்.

ஓடிப்போய் அவளை அப்படியே அள்ளி அணைத்து வண்டியின்மீது அமர்த்தினான். சிந்தாமணிக்கு தன்னை தூக்கித் தீக்குண்டத்திலே வீசி எறிந்ததுபோல இருந்தது. அந்தத் தீயினும் கொடுமையான வார்த்தைகள் எங்கிருந்தோ வந்து அவள் காதுகளைத் தாக்கின. "அடி வேசி! அடி விபசாரி!" என்ற சொற்கள்தான் அவைகள்! சிந்தாமணி காதுகளைப் பொத்தியவாறு, திரும்பிப் பார்த்தாள். சிவநேசர் ஆவேசமாக வண்டியை நோக்கி ஓடி வந்தார். "அப்பா!" என்று வீறிட்டு அலறி வண்டிக் குள்ளேயிருந்து கீழே விழுந்தாள் சிந்தாமணி!

11

மற்றுமொரு வாய்ப்பு கிடைத்தது அந்த மாம்பழ மேனியாளைத் தொடுவதற்கு என மகிழ்ந்த டைகர், கீழே விழுந்து கிடப்பவளை அவசர அவசரமாகத் தூக்குவதற்கு முனைந்தான். சிந்தாமணி, அவன் பிடியினிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளத் திமிறியவாறே "அப்பா" எனக் கூவியழுதவாறு சிவநேசருக்கு முன்னே ஓடுவதற்கு முயன்றாள். "அவரிடம் போகாதே — அவர் வெறியிடித்துப்

போயிருக்கிறார்'' என்று சப்தமிட்டபடி டைகர், அவளை இறுக அணைத்துக்கொண்டானே தவிர, பிடியைச் சிறிதும் தளர்த்தவில்லை.

சிவநேசர், பாய்ந்துவரும் வேங்கைபோல அவர்களிடம் ஓடிவந்தார். ''குலத்தைக் கெடுத்தவளே! கோணல் வழி போனவளே! ஆகாகா.....என் அபூர்வ சிந்தாமணி .....அபிதான சிந்தாமணி..... அய்யோ! அய்யோ!! என்னையும் என் மனைவியையும் கொலை செய்த கொலைகாரி! குடிகேடி! சிந்தாமணி—சீரழிந்தமணி! பேயாகப் பிறக்க வேண்டியவளே! பெண்ணுகப் பிறந்த பூதமே!'' என்று வசைமாரி பொழிந்தார் சிவநேசர். சிந்தாமணி, ''அப்பா'' எனக் கதறினளே தவிர வேறெதுவும் பேசமுடியவில்லை!

''சும்மா இரு சிந்தாமணி! உன் அப்பாவுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது; அவரிடம் பேச்சுக்கொடுக்காதே!'' என்று அவள் வாயைப் பொத்தினன் டைகர். சிந்தாமணிக்கு ஆத்திரம் எல்லைமீறிவிட்டது. அதனால் ஒரு புதிய தெம்பு உதயமாயிற்று அவளுக்கு! ஓங்கி ஒரு அடி கொடுத்தாள் அவன் கன்னத்தில்; அவள் அணிந்திருந்த வளையல்கள் நொறுங்கி அவன் கன்னத்திலே இரத்தக் கோடுகள் விழுந்தன. ''அடி! அடி!! நன்றுக அடி! அடி! அடி கள்ளி! ஆத்துக்காரரை ஏனடி அடிக்கிறாய்?'' என்று கேட்ட சிவநேசர்,

''என்ன குற்றம் செய்தானவன்?
கன்னத்தில் ஏன் அடிக்கின்றாய்?
பெண்ணே நீயும் சொன்னால்போச்சு!.....
பின்னே எந்தன் கோபம் பொங்கும்!''

என்று பாடவும் ஆரம்பித்தார். சிந்தாமணிக்கு டைகர் கூறியது உண்மைதான் என்பது தெளிவாகிவிட்டது!

''காதல்—காதல்—காதல்—காதல்!
கள்ளக் காதல்!
உள்ளக் காதல்;
உண்மைக் காதல்!
ஒருதலைக் காதல்!
உருப்படாக் காதல்!''

என்று பிதற்றியபடி நடனமாடத் தொடங்கினார் நடு வீதியில். கலகலவென பயங்கரத் தொனியில் நகைத்தார். திடீரென அழுதார். ஆத்திரமாகக் கத்தினர்.

"மண்ணுய்ப் போக—மண்ணுய்ப் போக!
மாப்பிள்ளை பெண்ணும்
தோப்பிலே தென்னங் கண்ணும்.....
மண்ணுய்ப் போக!"

என்றபடி தெரு மணலை வாரி டைகரின் முகத்திலும் சிந்தாமணியின் முகத்திலும் இறைத்தார். சிந்தாமணியை விட்டுவிட்டு டைகர், தன் கண்களைத் துடைத்துக்கொண்ட படியால் அவள் ஓடிவந்து சிவநேசரின் காலைப் பிடித்துக் கொண்டு, "அப்பா! அப்பா! இதென்னப்பா கோலம்?" எனப் புலம்பி அழுதாள்.

"கோலமா? இதுதான் அலங்கோலம்! அவசரக் கோலம்! அள்ளித் தெளித்த அவசரக் கோலம்! பொங் கலுக்குப் போடுகின்ற புதுக்கோலம்! தண்டகாரண்யம் வந்திருக்கும் இந்தத் தசரதனின் தவக்கோலம்! சைவத் திருக்கோலம்! அடியே! காரைக்கால் அம்மையே! நீ உடனே உடலைப் பேயுருவாக்கி, தலைகீழாக நடந்து கைலாசத்திற்கு ஓடிவா! நான்தான் சிவபெருமான்— நெற்றிக்கண்ணன்! இயற்பகை நாயனரின் மனைவியைப் பரிசோதிக்கப் புறப்பட்டிருக்கிறேன். சிறுத்தொண்டரின் பிள்ளையைக் கறி சமைத்துச் சாப்பிடப் புறப்பட்டிருக் கிறேன். தாருகாவனத்து ரிஷி பத்தினிகளையெல்லாம் சோதனை செய்ய எழுந்தருளியிருக்கிறேன். இதோ என் னுடைய கருட வாகனம்—இதிலே ஏறி கற்புக்கரசிகளைப் பரீட்சை செய்து பார்க்கப் பறக்கப்போகிறேன்" என உளறியவாறு சிவநேசர், வண்டியிலே ஏறி உட்கார்ந்து கொண்டார். அப்போது அங்கே சிவகாமி பரபரப்போடு ஓடிவந்துகொண்டிருந்தாள். தாயாரை மகள் காணவும் மகளைத் தாயார் காணவும்—இருவரும் ஒருவரையொருவர்

தழுவிக்கொண்டு விம்மி விம்மி அழுவும்–சிவநேசர் அதைக் கண்டு உரத்த குரலெடுத்துச் சிரிக்கவும்–அந்த இடமே ஒரு சோகக் காட்சியின் களமாக அமைந்துவிட்டது.

தாயும் மகளும் சந்தித்த நிலையில் எதுவுமே பேசத் தோன்றவில்லை அவர்களுக்கு! "என்னம்மா செய்கிறது அப்பாவுக்கு? காலையில் எல்லாம் நன்றாக இருந்தாரே!" என்று வருந்தி மிகுதியோடு கேட்டாள் சிந்தாமணி. "எல்லாம் உன்னால் வந்த வினைதானடா கன்னு! வெள்ளிக்கிழமை பொழுது விடிந்தாலும் விடிந்தது–நம்ப குடும்பத்துக்கு விநாசகாலமும் வந்து முடிந்தது!" என்று தேம்பி அழத் தொடங்கினாள் சிவகாமி.

அந்தச் சோகக் கட்டத்தில் டைகர் குறுக்கிட்டான். "அத்தே! நடித்தெருவிலா உங்கள் ராமாயணமெல்லாம் நடத்தவேண்டும்?" என்று சற்றுக் கண்டிப்பாகவும் கடுமையாகவும் கேட்டான். அவனுக்குப் பதில் சொல்வதற்குப் பாய்ந்தோடிக் குதித்து வந்தார் சிவநேசர்.

"ராமாயணத்தை நடுத்தெருவில் நடத்தாமல் வேறு எங்கேயடா நடத்துவது? ராமாயணத்திலேயே மூக்கால் வாசிக் கதை காட்டிலே நடந்ததுதானேடா! நாட்டிலே நடந்தது நானில் ஒன்று! ராமனும் சீதையும் காட்டிலே இருந்தது பதினாறு வருஷம்–பிறகு வால்மீகியும் சீதையும் காட்டிலே இருந்தது பல வருஷம்— இதற்கிடையே அசோகவனம்— அனுமார் தாண்டிய கடல்— அவனும் சுக்ரீவனும் மறைந்து திரிந்த காடு— பாலகாண்டத்திலே விசுவாமித்திரனோடு அலைந்ததும், தாடகையைக் கொன்றதும், அகல்யாவைக் காலால் மிதித்து வாயால் வாழ்த்தியதும் கானகத்தில்தானே! அதனால் ராமாயணம் என்பது ஒரு காட்டுக் கதை! காட்டிலே உள்ள பிராணிகள் சிலவற்றைக் கதாநாயகனாகவும் கதாநாயகியாகவும் வைத்து எழுதப்பட்ட கதை! ஆகவே ராமாயணத்தை நடுத்தெருவில் நடத்தலாம்! ஏ, சிவகாமி! நீ நடத்து ராமாயணத்தை!

இதோ இவள்தான் காணுமற்போன சீதை! ஹே ராவணு! நீ ஏன் சீதையைத் தூக்கிக்கொண்டு வந்தாய்?.....சொல்! சொல்!''

இப்படி வாய்க்கு வந்தவாறு பேசிக்கொண்டும், பிதற்றிக்கொண்டும்— நின்ற சிவநேசரைப் பார்த்து, சிவகாமி, சற்று மிரட்டலுடன் ''இப்ப சும்மா இருக்கப்போகிறீர்களா இல்லையா?'' என்று கேட்டுக்கொண்டே அவரது கைகளைப் பற்றிக்கொண்டாள். டைகரும் உதவிக்கு ஓடிவந்து, அவரது கைகளைக் கட்டிவிட்டான், ஒரு துணியால்! பின்னர் வண்டிக்காரனின் துணையோடு அவரது காலையும் கட்டி, வண்டியிலே கிடத்தினன். சிவகாமியையும் சிந்தாமணியையும் வண்டியிலே ஏறிக்கொள்ளச் செய்து, அவர்களை வீட்டுக்குப் போகுமாறும், தான் காலையிலே வந்து எல்லா விஷயங்களையும் கவனிப்பதாகவும் சொல்லி விடைகொடுத்தான். சிவநேசர் வண்டிக்குள்ளே அங்குமிங்கும் புரண்டு வண்டியையே கவிழச் செய்துவிடுவார் போலிருந்தது. சிந்தாமணியும் அவள் தாயாரும் ஒருவர் முகத்தை ஒருவர் வேதனையோடு பார்த்தவாறு, தங்கள் துன்பத்திற்கு ஆறுதல் அளிக்க யாருமில்லையே என்ற ஏக்கம் பிரதிபலிக்க வண்டியில் உட்கார்ந்திருந்தார்கள். எப்போது வீடு போய்ச் சேருவோம் என்ற கவலையோடு! வண்டி அவர்களது இருதய நிலையைப் படம் பிடித்துக் காட்டுவதுபோல செப்பனிடப்படாத அந்த ஊர்ச்சாலையிலே ஆடி அசைந்து, குண்டு குழிகளில் ஏறி இறங்கி, வீடு நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

பாலையூர் மருத்துவ விடுதியில் ஆனந்திக்கு தன் கையால் ஏதாவது அளிக்கக்கூடிய சந்தர்ப்பம் எப்போது கிடைக்கும் என்ற ஆவலோடு துடித்துக் கிடந்த நயினு முகம்மதுக்கு அப்படியொரு வாய்ப்பு நள்ளிரவில் கிடைத்தது. விடுதியின் சட்டப்படி வெளித்தாவாரத்திலே மட்டுமே நயினு முகம்மது தங்கிட முடிந்தது. ஆனந்தியின் அருகாமையிலேயிருக்கும் சூழ்நிலை அமையாமற்போய்விட்டது. ஆனாலும் அவன் தூங்கவில்லை. ஒரு நாற்காலியில் உட்

கார்ந்துகொண்டு, தாழ்வாரத்தில் இருந்தபடியே அவளைக் கவனித்துக்கொண்டிருந்தான். "அவள் அசையமாட்டாளா? ஒருக்கணம் விழிக்கமாட்டாளா?"—தனக்குத்தானே கேட்டுக்கொண்டான். தன்னைத் தவிர மருத்துவ யனையில் யாருமே விழித்திருக்கவில்லை யென்பதையும் உணர்ந்தான். அவனுக்கு ஒரு ஆசை; சிறிது நேரம் ஆனந்தியின் முகத்தை அப்படியே இமைகொட்டாமல் பார்த்துக்கொண்டிருக்க வேண்டுமென்று!

பெண்களை அவர்கள் விழித்துக்கொண்டிருக்கும்போது ஓரேயடியாகப் பார்த்துக்கொண்டிருக்க இயலுமா? இயன்றாலும் அதிலே ரசனையிருக்காது! ஒரு ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் இமை கொட்டாமல் பார்த்துக்கொண்டேயிருந்தால்—அந்த நீடித்த நோக்கிலே 'ரசம்' இருக்காது; விரசம்தான் வெளிப்படும். அவன் நோக்க, அவள் நிலம் நோக்குவாள். அவன் நோக்காத போழ்து அவள் அவனை நோக்குவாள். இப்படி மாறி மாறி ஒருவர் மீது ஒருவர் விழியை வீசும்போது திடீரென இரு விழிகளும் திருடர்கள்போல் சிக்கிக்கொள்ளும். நாணம் இருவரையும் அடிமைகொள்ளும். பெண்மை கலந்த நாணத்திலே ஒரு பெருஞ் சிறப்பு—பேரழகு காணப்படும். அதை ஆடவன் சுவைப்பான். அதே சுவையை தூங்குகின்ற காதலியின் முகத்தை இடையருது பார்த்துக்கொண்டிருக்கிற காதலன் பெறுவான். இந்நிலை காதலிக்கும் உண்டு.

அந்த ஆசை உந்தித் தள்ள, நயினு முகம்மது மெதுவாக எழுந்து தாழ்வாரத்தைக் கடந்து, உள்ளே செல்ல முயன்றான். அவளை நிதானமாகப் பார்த்து ரசிக்க அவன் உள்ளத்திலே அப்படியொரு ஆவல் தீ மூண்டெழுந்தது. அடிமேல் அடிவைத்து நடந்தான். திருட்டுத்தனமாக இப்படி நடக்கும்போதுதான் பாழுங் காலில் "சொடக்கு" முறியும்! "படக்—படக்" என்று கால் விரல்களிலே ஓலி கிளம்பும்! அதைவிட ஆபத்து தொண்டையிலே ஏதோ ஒன்று அடைப்பதுபோல உணர்ச்சி ஏற்படும்! கனைத்துக் கொள்ளத் தோன்றும்! இத்தனை இடைஞ்சல்களும் நயினு

வைத் தாக்காமல் இல்லை. நாற்காலியில் உட்கார்ந்து கால் கைகளில் நன்றாக 'நெட்டி' முறித்துக்கொண்டு, கனைத்து முடித்துக்கொண்டு, ஒரு குவளை குளிர்ந்த பானத்தையும் சாப்பிட்டுவிட்டு, அந்தக் குளிரிலும் வியர்வையால் நனைந் திருந்த உடம்பைத் துடைத்தபடி ஆனந்தி இருக்கும் கட்டிலின் பக்கம் மெதுவாக வந்துகொண்டிருந்தான். அதுவரையில் சும்மா இருந்த கடிகாரம் அப்போதுதான் மணியடிக்க ஆரம்பிக்கவேண்டும்! அதுவும் ஒன்று— இரண்டா? பனிரெண்டு மணிகள்! நயினு பயந்து கொண்டு திரும்பிவந்து பழைய இடத்தில் உட்கார்ந்து விட்டான். பனிரெண்டு மணிகளை முழக்கிவிட்டு, கடிகாரம் —நயினுவின் இருதய ஓலியோடு போட்டி போட்டுக் கொண்டு சுவரில் தொங்கிக்கொண்டிருந்தது. அவனே அன்புக்கும் அச்சத்திற்கும் இடையிலே தொங்கிக்கொண்டு தத்தளித்தான். பின்னர் அன்பு வென்றது. அச்சம் சற்று விலகி நின்றது. மீண்டும் புறப்பட்டான் ஆனந்தியைப் பார்ப்பதற்கு! கொஞ்சம் கால்களை வேகமாக வைத்து, அவள் படுத்திருந்த கட்டிலண்டை வந்துசேர்ந்தான். மங்கிய பச்சை விளக்கு ஓளியிலே அவளது முகத்தைப் பார்த்தபடி லயித்துப்போய் நின்றான் நயினு முகம்மது. அமைதியான தூக்கம்!

அந்த அழகை ஓவியர்களும் கற்பனை செய்யமுடியாது என்றே அவன் முடிவுகட்டினான். மூடியிருக்கும் கண்கள்— ஆனாலும் அந்த முகத்திலே எவ்வளவு மோகனம்! சிற்பி வடிக்கின்ற வெண்பளிங்குச் சிலைகளிலே கருவிழிகளுக்கு வர்ணம் தீட்டுவதில்லை. ஆனாலும் அதன் அழகு அணுவும் குறைவதில்லை. அதுபோலவே கருவிழி மூடியிருக்கும் ஆனந்தியின் கண்களிலே அழகைக் கண்டான் நயினு! அந்தக் கண் இமைகளை அவன் சாதாரணமாகக் கற்பனை செய்யவில்லை. காப்பிய நூலொன்றின் மேலட்டையாகவே வர்ணித்தான். மகரந்தப் பொடியை உள்ளே மூடி வைத் திருக்கும் மலரின் இதழ்களோடு ஒப்பிட்டான். அந்த இமைபோல, அவளுக்குத் தானே பாதுகாப்பாக இருந்

தால்.....நயினுவின் இருதயம் படபடத்தது! அந்த ஓலி ஒருவேளை அவள் காதில் விழுந்து விழித்துக்கொள் வாளோ என்ற பயத்தில் தன் மார்பை அழுக்கிக்கொண் டான். அவள் முகத்தைவிட்டு அவன் விழிகளை எடுக்க மன்ம் வரவில்லை. அப்படியே அசைவற்று மயக்கமுற்ற நிலையிலே நின்றுகொண்டிருந்தான். அந்த மயக்கத்தில், பலகணியின் பக்கம் ஒரு கரிய உருவம் நின்றுகொண்டிருப் பதை அவன் கவனிக்கவேயில்லை. அந்த உருவத்தின் கையிலே ஒரு கைத்துப்பாக்கி இருந்தது. பலகணித் திரை யிலே அந்த உருவமும், அது பிடித்திருந்த துப்பாக்கியும் நிழல் வடிவத்திலே விழுந்தன. ஆனந்தியின் நித்திரை அழகில் நேத்திரத்தைப் பதித்திருந்த நயினுவுக்குப் பலகணிப் பக்கம் கண் திருப்ப நினைவேது? உருவம் கைத் துப்பாக்கியைச் சரிபார்த்துக் கொண்டதானது பலகணி நிழலிலே நன்முகத் தெரிந்தது.

12

யாரோ வரும் காலடி ஓசை கேட்கவே நயினுமுகம்மது அவசர அவசரமாக ஆனந்தியின் படுக்கையைவிட்டு அகன்று, பழையபடி தாழ்வாரப் பக்கம் வந்துவிட்டான். அவன் உடலெங்கும் வியர்த்துக்கொட்டி உடைகள் எல்லாம் நனைந்துவிட்டன. ஒரு பெண்ணைப்பற்றி, தானே ஒரு முடிவு செய்துகொண்டு, அந்த முடிவுக்கு அவள் ஒத்து வருவாளா என்று எதிர்பார்ப்பதும், அதற்கான ஆரம்ப வேலைகளில் ஈடுபடுவதும் – ஆண்மைமிக்க ஆட வர்களைக்கூட எவ்வளவு கோழைகளாக்கிவிடுகிறது என்று தனக்குத்தானே கூறிக்கொண்டான். தாழ்வாரத்திலிருந்த படியே, ஆனந்தியிருக்கும் அறைப்பக்கம் வருவது யார் என்று கவனித்தான். மற்றொரு வாயிலின் கதவைத் திறந்துகொண்டு நர்ஸ் ஒருத்தி, கையிலே மருந்து சீசா வுடன் உள்ளே நுழைந்தாள். வந்தவள், ஆனந்தி நன்முகத் தூங்குவதைப் பார்த்து, ஈனசுரத்தில் இரண்டு முறை கூப்பிட்டுப் பார்த்தாள். ஆனந்தி விழிக்கவில்லை.

உடனே நயினு கதவோரத்தில் நின்றபடி, "என்னம்மா வேண்டும்?" என்று கேட்டான்.

"ஒன்றுமில்லை, மருந்து கொண்டுவந்தேன். நல்ல தூக்கம். தொந்தரவு பண்ணக்கூடாது. தயவுசெய்து விழித்தவுடன் என்னைக் கூப்பிடுங்கள். நான் வந்து மருந்தைத் தருகிறேன். இதோ...இந்த மேசையில் இருக்கட்டும் மருந்து!" என்று கூறிக்கொண்டே நர்ஸ், மருந்து சீசாவை மேசைமீது வைத்துவிட்டு அதைவிட்டு அகன்றாள். நயினு முகம்மது தாழ்வாரத்தில் அமர்ந்து சிந்தனையில் ஆழ்ந்தான். அவன் மனக்கண் முன்னே எழில் மயமான இன்ப எதிர்காலம் காட்சியாயிற்று. கண்களை அப்படியே இலேசாக மூடிக்கொண்டு அந்தக் கற்பனைக் காட்சியை அனுபவிக்கத் தொடங்கினான்.

அவன் தோள்பட்டையிலே இரண்டு இறக்கைகள் முளைக்கின்றன. வானத்திலே பறக்க ஆரம்பிக்கிறான். நட்சத்திரத் தோட்டம் — அந்த விண்மலர்ப் பூங்காவுக்கிடையே ஒரு தும்பிபோல நீந்திச் செல்கிறான். நட்சத்திரப் பூக்கள் தங்களது செழிப்பான தலையைத் தாழ்த்தி அவனை அழைக்கின்றன. அவனை எதையோ ஒன்றை நாடிப் பறக்கிறான். பளபளப்பான பட்டுப்பூச்சியொன்று வனப்பு மிக்க சிறகு பறப்பி அந்த நந்தவனத்தில் நடனமாடுகிறது. அதன் முகத்திலே ஆனந்தியின் முகம் பதிக்கப்பட்டிருக்கிறது. அவன் அவளோடு சென்று உல்லாச நடனம் புரிகிறான். இருவரும் நட்சத்திர சோலையைப் பிரிந்து இன்னும் மேலே பறக்கிறார்கள். வானத்தின் நீலக் கூரையைப் பிய்த்துக்கொண்டு அதற்கு மேலே பறந்துவிடுகிறார்கள். கிழிபட்ட வானக் கூரையிலிருந்து நட்சத்திரங்கள் பொல பொலவென்று உதிர்கின்றன. புயல் காற்றில் "லஸ்தர் விளக்கு" ஆடுவதுபோல சந்திரன் அங்குமிங்கும் ஆடிக்கொண்டிருக்கிறான். வான்முகட்டையும் தாண்டிப் பறக்கும் இன்பலோகக் காதலர்களின் இறக்கைகள் திடீரென்று கழன்றுவிடுகின்றன. பறக்கும் சக்தியற்ற அவர்கள் தடார் என்று பூமியின்மீது வந்து விழுகிறார்கள்.

அதிர்ச்சியோடு கண்விழித்துப் பார்த்தால்—எல்லாம் கனவு என்று திரைப்படங்களில் காட்டுகிறார்களே; அது போன்ற கனவல்ல நயினு கண்டது!

ஆனந்தியும் தானும் வாழ்வில் ஒன்றுபட்டுவிட்டால் குடும்பம் எப்படி நடத்துவது?—எந்த ஊரில் நடத்துவது?—குடும்ப வாழ்வு எவ்வளவு பொருத்தமுடையதாக இருக்கும்?—ஒருவேளை, டாக்டர் வேலைகூடத் தனக்குத் தேவையில்லையென்று ஒரு சாதாரண குடும்பப் பெண்ணாகவே இருப்பதற்கு ஆனந்தி திட்டம் போட்டுவிடுவாளா?—இது போன்ற கேள்விகளுக்குப் பதிலைத் தேடிக்கொண்டுதான் முகக் கண்களை மூடிக்கொண்டு, அகக் கண்களை அகலத் திறந்து வைத்துக்கொண்டிருந்தான் நயினு முகம்மது!

அவன் தாழ்வாரத்தில் காதல் தவமிருக்கும் அந்தச் சமயத்தில்தான் பலகணிப் பக்கம் நின்றுகொண்டிருந்த கரிய உருவத்தின் கரம், பலகணித் திரையை விலக்கிக் கொண்டு ஆனந்தி படுத்திருக்கும் அறையின் உள்ளே நீட்டப்பட்டது. ஆனந்திக்காக நர்ஸ் மருந்து வைத்து விட்டுப்போன மேசையின் பக்கம் அந்தக் கரம் எதையோ தேடிற்று. இறுதியில் எட்டாத தூரத்தில் இருந்த மருந்து சீசாமீது பட்டது. மருந்து சீசாவைத் தனக்கு அருகாமையிலே நகர்த்திக்கொண்டது. மேசையின் மற்றொரு பகுதிக்கு மருந்து சீசா கொண்டுவரப்பட்டதும்; மேசையிலே சீசாவை வைத்துவிட்டு, கரம் பலகணிப் பக்கம் திரும்பச் சென்றது. மீண்டும் அந்தக் கரம் ஒரு சிறிய சிமிழுடன் சீசாவின் பக்கம் நீட்டப்பட்டது. அந்தச் சிமிழில் விஷம் என்று சிறிய எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்தது. மருந்து சீசாவினுள்ளே சிமிழ் சாய்க்கப்பட்டு, அதிலிருந்து ஒரு தூள் மருந்தில் கலக்கப்பட்டது. மருந்து இப்போது விஷமாகிவிட்டது. கரிய உருவம் சற்றுநேரம் அங்கு நின்றுவிட்டு, பிறகு ஓசைப்படாமல் அதைவிட்டு அகன்றது. விஷம் கொட்டப்பட்டதும், சீசாவுக்குள்ளே மருந்து கொப்பளித்துக் கிளம்பி, மீண்டும் அடங்கிவிட்டது. சிறிது நாழிகைக்குப் பிறகு ஆனந்தி

புரண்டு படுத்தாள். புரளும்போது அவள் முனகிய ஒலி, தாழ்வாரத்திலிருந்த நயினுவைத் துடித்தெழச் செய்தது. உள்ளே வேகமாக ஓடிவந்தான். "என்ன வேண்டும்?" என்று பதைப்போடு கேட்டான். ஆனந்தி நயினுவைச் சிறிதுநேரம் கண்கொட்டாமல் பார்த்தாள். அந்தப் பார்வையிலே வியப்பும், விசுவாச உணர்ச்சியும், குளிர்ச்சியும் நிறைந்திருந்ததை அவன் தெளிவாகப் புரிந்துகொண்டான். அவன் உள்ளத்துப் பூரிப்புக்கு அணைபோட முடியாமல் தவித்தான்.

"நர்ஸ் மருந்து கொண்டுவந்தாள். தூங்கியதால் எழுப்பாமல் போய்விட்டான். எழுந்ததும் சாப்பிடச் சொன்னாள், தரட்டுமா?" என்று கேட்டான். அப்படிக் கேட்கும்போது அவன் தொண்டை அவனுக்குக் கட்டுப் படாமல் அடைத்துக்கொள்வானேன்? நாக்கிலே நடுக்கம் காணப்படுவானேன்? விசித்திரமான உணர்ச்சி! மிக விசித்திரமான உணர்ச்சி! அவனை ஆட்டிப் படைத்தது அந்த உணர்ச்சி!

ஆனந்தி எழுந்ததும் தன்னைக் கூப்பிடச் சொல்லியிருந்தாள் நர்ஸ்! அவளை, அவனைக் கூப்பிட்டால் ஆனந்திக்குத் தன் கையால் மருந்து கொடுக்கும் வாய்ப்பை இழந்துவிட நேரிடுமே எனப் பயந்தான். ஆனந்தியும் மருந்தைச் சாப்பிடுவதற்குச் சம்மதித்துத் தலையை ஆட்டினாள். நயினுவின் மகிழ்ச்சி இரட்டிப்பு ஆயிற்று. அவனுக்கு என்ன தெரியும்; மருந்திலே விஷம் கலக்கப்பட்டிருக்கும் சேதி!

"இந்தா; இந்த விஷத்தைச் சாப்பிடு" என்று சொல்வது போல அந்த மருந்தைச் சாப்பிடச் சொல்லப் போகிறான். அதற்காகத்தான் பாவம்; அவன் அவ்வளவு நேரமாகக் காத்துக்கிடந்திருக்கிறான்.

மேசையிலே இருந்து மருந்து சீசா, நயினுவின் இருதயத்திலே பெரியதோர் சூறாவளியை எழுப்பி, அவன் ஆசை மாளிகையைத் தூள் தூளாக உடைத்தெறிந்து

அவனைத்தியிலிட்டப் புழுவாகத் துடிக்கச்செய்யத் தயாராய் இருப்பதுபோல தோற்றமளித்தது.

நயினு, மருந்து சீசாவைக் கையிலே எடுத்துக்கொண்டு ஆனந்தியின் அருகே வந்தான். அருந்தியதும் அரை நொடியில் உயிரைப் போக்கவல்ல நஞ்சு அதிலே நன்றாகக் கரைந்திருந்தது.

"உம்! தரட்டுமா?" என்று அன்பொழுகக் கேட்டான் அவன்.

அவளும், "அய்யோ! என்னால் உங்களுக்கு வீண் சிரமம்" என்ற வார்த்தைகளை விழி மூலம் பேசியவாறு, மீண்டும் ஒருமுறை தலையசைத்தாள்.

அவளது மின்னும் செவ்விதழ்களின் பக்கம் சீசாவைக் கொண்டுபோனான் நயினு.

ஆனால், அவள் படுத்திருந்த நிலை, மருந்தைக் குடிப்பதற்கு இடமில்லை. அதனால், அவன் மெதுவாக ஒரு கையால் அவள் தலையைச் சிறிது மேலே தூக்கியவாறு மருந்தை வாயருகே கொண்டுபோனான்.

அவளும், மருந்தைப் பருக சீசாவை உதட்டில் பதித்துக்கொண்டாள். சீசாவைச் சாய்த்து, மருந்தை வாயில் ஊற்றிட முனைந்தான் நயினு. திடுக்கென சீசாவை அப்புறத் தள்ளிவிட்டு, தலையை அப்படியும் இப்படியும் திருப்பி "விஷம்! விஷம்!!" என்று கத்தினாள் ஆனந்தி.

என்ன? "விஷமா?" என்றபடி சீசாவை முகர்ந்து பார்த்தான் நயினு. அவனுக்கு எதுவும் தெரியவில்லை. அவள் டாக்டர்! அதனால் அதைக் கண்டுபிடித்துவிட்டாள். நயினுவின் கைகால்கள் வீணை நரம்புகள் போல் அதிர்ந்தன.

"விஷம்! விஷம்!!"

நயினு வேறெதுவும் பேசமுடியாமல் தினறினான்.

"ஏன் நடுக்கம்?.....விஷயம் புரிந்துவிட்டதே என்று? என்னைக் கொல்வதால் யாருக்கு என்ன பலன்? ஏன் இந்த வேலை செய்ய வேண்டும்?...இப்போதே கூப்பிடச் சொல்லு

கிறேன் போலீசை! எங்கும் ஓடாதே!" என்றவாறு ஆனந்தி, நயினுவின் கையை இறுகப்பிடித்துக்கொண் டாள். அவளுக்கு விபத்தினுல் ஏற்பட்ட பலஹீனம்கூட எங்கேயோ மறைந்துவிட்டது ஆனந்தி தன் கையைப் பிடிக்கவேண்டுமென்று நயினு ஆவல் கொண்டிருந்தது என்னவோ உண்மை; ஆனல் இது போன்ற ஒரு பயங்கரச் சூழலில் அவள் கை அவன்மீது படுவது, அக்கினிக்கட்டை படுவதுபோலவேயிருந்தது.

நயினு, நின்றபடியே அவள் கால்பக்கம் தலையைச் சாய்த்துக்கொண்டு, தேம்பி அழ ஆரம்பித்துவிட்டான். என்ன பதில் கூறுவது என்றே அவனுக்குப் புலப்பட வில்லை. எதைச்சொல்லி அவனை நம்பவைக்கமுடியும்?

"என்னை நம்பவேண்டும்! நான்.....நான்...நான்..." என்று அழத்தொடங்கினன்.

"என்னை அப்படி நினைக்கிறுயா ஆனந்தி? விஷமிட்டுக் கொல்லுகிற அளவுக்கு உனக்கும் எனக்கும் என்ன பகை? யோசனைசெய்து பார் ஆனந்தி!" என்று கதறினன்.

"நமக்குள்ளே பகையுமில்லை; உறவுமில்லை!...யாரோ அனுப்பியிருக்கிறுர்கள் உம்மை, எனக்கு எமனுக!" என்று பதட்டத்தோடு அழுத்தந்திருத்தமாகக் கூறினன் ஆனந்தி.

"அய்யோ! அப்படியெல்லாம் சொல்லாதே! உன்னைப் பற்றிக் கேள்விப்பட்டது முதல் — உன் உதாரகுணத்தை அறிந்தது முதல்நல்ல உள்ளத்திற்குத் தலைவணங்கும்என் மனத்திலே நீ அழியாத ஓவியமாகிவிட்டாய்! ஒருநான்! சில மணி நேரங்கள்! அதற்குள் நான் உன் அழகுக்கும், அன்புக்கும் அடிமையாகிவிட்டதாகவே நினைத்துக்கொண் டேன், வாய்ச் சொற்கள் இல்லை. விழிகளும் மொழிகள் பரிமாறவில்லை—மௌன நிலையிலிருந்த-உன் மோகன ரூபம் என்னை மயக்கிப்போட்டுவிட்டது! இந்த ஒருதலைக் காதல் பலிக்குமோ, பலிக்காதோ என்று துடித்துக்கிடந்தேன். ஒருமுறை உனக்கு பழரசம், அல்லது பால்-'ஹார்லிக்ஸ்', அல்லது மருந்து—ஏதாவதொன்றைத் தந்து உபசரிக்கிற

அந்த மகிழ்ச்சிகரமான வேளை வராதா என்று எதிர்பார்த்துக்கிடந்தேன். அந்த நல்ல வேளை வந்தது — அது இப்படி நச்சு வேளையாக அமையுமென்று நான் கனவு கூடக் காணவில்லை ஆனந்தி!" என்று மனம் திறந்து பேசினான் நயினை.

"இவன் யார்? எங்கிருந்து வந்தவன்? இவன் ஏன் இவ்வளவு அக்கறையாக காலை முதல் மருத்துவ மனையில் தங்கித் தன்னைக் கவனிக்கவேண்டும்? எப்போது சந்தர்ப்பம் கிடைக்கும்; சதியை நிறைவேற்றலாம் என்றுதான் காத்திருந்தான் போலும்! இப்போது அழுகிறான். என்னைக் காதலித்ததாகவேறு கதைக்கிறான்! இவனை எப்படி நம்புவது? ஓரே குழப்பமாயிருக்கிறதே! முன்கூட்டியே சதித்திட்டம் வகுத்திருந்தால்கூட-காலையில் இப்படி ஓருவிபத்து ஏற்படும்; ஆஸ்பத்திரிக்கு வருவேன்-அங்கே விஷங்கலக்கலாம் என்று இவன் எப்படி யூகித்து முடிவு செய்திருக்க முடியும்? ஒருவேளை இப்படி ஓரு நிலைமை ஏற்பட்ட பிறகு யாராவது இந்த நிலைமையைப் பயன்படுத்தி, கார் விபத்தின்மீது சாக்குப்போட்டு என்னைத் தீர்த்துவிடக் கருதியிருக்கலாமோ? அப்படியானால் ஆஸ்பத்திரியில் உள்ளவர்கள் யாராவது இதற்கு உடைந்தையாக இருக்கவேண்டும்."

இவ்வாறு பலப்பல எண்ணி ஆனந்தி குழப்பமடைந்தாள்.

நயினுவோ ஆனந்தியின் மனத்திலே தன்னைப்பற்றியுள்ள தவருன எண்ணத்தை மாற்றிவிடவேண்டுமென்று தத்தளித்தான்.

"நான் ஓரு குற்றமும் அறியாதவன் ஆனந்தி! பெண் பார்க்க என் நண்பனுடன் வந்தேன். வந்த இடத்தில் என் நண்பன் மனமுடைந்துபோனான். நீ குறுக்கிட்டாய்! விபத்து நம் இருவரையும் சந்திக்கவைத்தது. எங்கேயோ ஓரு மூலையில் பதுங்கிக்கிடந்த நினைவுகளைத் தட்டி எழுப்பி என்னை இங்கேயே தங்கிவிடுமாறு கட்டிப்போட்டது உன்

சௌந்தர்யம்! வெளிப்படையாகவும், துணிச்சலாகவும் உன் அபிப்பிராயத்தின் விளிம்பைக்கூடத் தெரிந்துகொள்ளாமலும் நான் இப்படிப் பேசுவதற்காக மன்னித்துவிடு! என் காதல் தெய்வத்துக்கு நான் விஷம் கொடுத்துக் கொல்ல நினைப்பேனா?"

இதைச் சொல்லியவாறு முகத்திலே அறைந்து கொண்டு அலறினான் நயினா.

ஆனந்திக்குக் கலக்கமும் குழப்பமும் போட்டிபோட்டு எழுந்தது சற்றுநேரம் அசைவற்று இருந்தாள். அவள் விழிகள் எதிரேயுள்ள சுவரின்மீது பதிந்திருந்தன. நயினாவும் அவளையே பார்த்தவாறு நின்றான். அவன் கண்களிலே நீர் பெருக்கெடுத்தவாறு இருந்தது. "ஆனந்தி" என்று கூப்பிட்டான். அதில் பாசம், பரிவு, பயம், பக்தி அனைத்தும் அடங்கியிருந்தது.

ஆனந்தி திருப்பினாள். மருந்துச் சீசா இருந்த மேசையை உற்றுப்பார்த்தாள். ஏதோ ஒரு பொருள்! ஆம்; அந்தச் சிறிய விஷச் சிமிழ்! அதுதான் இருந்தது!

"அதை எடுங்கள்!" என்றாள் ஆனந்தி. அவள் குரலிலே நயம் இருந்தது இப்போது! நயினா ஓடிப்போய் அந்தச் சிமிழை எடுத்து ஆனந்தியிடம் கொடுத்தான். அதை அவள் நன்றாகக் கவனித்தாள். அது அவளது ஆஸ்பத்திரியிலே இருந்த சிமிழ்.

அந்த அடையாளத்தைக் கண்டுபிடித்துவிட்டாள்!

"அது எப்படி இங்கு வந்திருக்கும்?" — இந்தக் கேள்விக்கு அவளால் உடனே பதில் கண்டுபிடிக்க முடியவில்லை.

"டைகர் இங்கு வந்தாரா?" என்று நயினாவிடம் கேட்டாள்.

"பகலில் வந்ததுதான் — இரவில் வரவில்லை!" என்றான் அவன்.

"நான் உங்கள்மீது தவறாக சந்தேகப்பட்டுவிட்டேன், என்னை மன்னித்துவிடுங்கள்" என்றாள். அவள் கண்களில்

நீர் கலங்கிற்று. நயினு மகிழ்ச்சியை வெளியிட இயலாது, அழுதவாறு அவள் கைகளைத் தன் முகத்தில் ஒத்திக் கொண்டான். இதை அவன், அவனையறியாமலே செய்தான். கையை விடுவித்துக்கொண்ட ஆனந்தி விஷச் சிமிழை மீண்டும் ஒருமுறை பார்த்துக்கொண்டாள். மருந்தை அப்படியே கீழே கொட்டிவிடுமாறு நயினுவிடம் கூறினுள். நயினு மருந்தைக் கீழே கொட்டினுன். ஆனந்தியின் உயிரைக் குடிக்க இருந்த விஷம் தரையில் ஓடிற்று.

நயினு, ஆனந்தியிடம் திரும்பி, "ஆனந்தி! இப்போது நம்பிக்கை வந்துவிட்டதா, விஷம் கலந்தது நானல்ல வென்று!"

"நீங்கள் விஷம் கலக்கவில்லை! அமுதமல்லவா கலந்து விட்டீர்கள்!" என்றுள் அவள், புன்னகையோடு! அப்போது திடீரென்று "டொமீல்! டொமீல்!!" என்று துப்பாக்கி வேட்டுச் சத்தம் கிளம்பிற்று. மருத்துவமனை முழுதும் 'குய்யோ!' என்று பேரொலி எழுந்தது!

13

நயினு முகம்மது வெளியே ஓடினுன். மருத்துவமனையின் விளக்குகள் அனைத்தும் போடப்பட்டுவிட்டன. பெரிய வாயிற்புறத்தை நோக்கி அனைவரும் ஓடினர்கள். அங்கே இரண்டுபேர் கட்டிக்கொண்டு தரையில் புரண்டார்கள். ஒருவன் ஆஸ்பத்திரி காவற்காரன். இன்னொருவன் டைகர். காவற்காரனின் தோள்பட்டையிலேயிருந்து இரத்தம் 'குபுகுபு'வென்று பெருகிக் கொண்டிருந்தது. அந்த வேதனையிலும் அவன் டைகரை விடாமல் பிடித்துக் கொண்டு, "ஓடிவாங்க! ஓடிவாங்க!" — என்று கதறினுன்.

டைகரின் கையிலேயுள்ள துப்பாக்கி, மறுபடியும் வாய் திறக்காதவாறு மிக எச்சரிக்கையாக அவன் கையை காவற்காரன் அமுக்கிக்கொண்டான். அருகே ஓடிவருகிறவர்கள் மீது சுட்டு அவர்களை விரட்டிவிட்டுத் தானும் தப்பித்துவிட

எவ்வளவோ திமிறினான் டைகர். காவற்காரன் விடவில்லை. அதற்குள் நயினா முகம்மது டைகரின் மீது பாய்ந்து. அவன் கையிலிருந்த துப்பாக்கியைப் பிடுங்கிக்கொண்டான். டைகரைச் சுற்றி மருத்துவமனை சிப்பந்திகள் வளைத்துக் கொண்டார்கள். காவற்காரனுக்கு இப்போதுதான் வலியும் வேதனையும் தோன்ற ஆரம்பித்தது. அவன் தோள்பட்டையிலிருந்து வழிந்த குருதி உடல் முழுவதையும் நனைத்தது. முதலுதவிக்காக அவனை அவசர அவசரமாகப் படுக்கைக்குக் கொண்டுபோனார்கள்.

காவல் பார்த்துக்கொண்டிருக்கும்போது சிறிது கண்ணயர்ந்து விட்டதாகவும், அப்போது யாரோ ஒருவன் சுவரேறிக் குதித்து வெளியே போக முயற்சிப்பதாகத் தெரிந்து அருகே ஓடியதாகவும், சிறிதும் எதிர்பாராவிதமாக அவன் துப்பாக்கியால் தன்னை சுட்டதாகவும், அதையும் பொருட்படுத்தாமல் ஓடிப்போய் அவனைப் பிடித்துக் கொண்டதாகவும் காவற்காரன் விளக்கமுரைத்தான். போலீசாருக்குத் தகவல் அறிவிக்கப்பட்டு, சில நிமிடங்களுக்கெல்லாம் வந்துசேர்ந்தார்கள். இன்ஸ்பெக்டர் எவ்வளவுதான் கேட்டபோதிலும் பதில் சொல்லாமல் பிடிவாதமாக மௌனம் சாதித்தான் டைகர். அவன் கைதுசெய்யப்பட்டு போலீஸ் வண்டியில் ஏற்றப்பட்டான். நயினா முகம்மது வாயிலாக விவரமறிந்த ஆனந்தி வியப்பில் ஆழ்ந்தாள். பயங்கரப் பூகம்பத்திலே சிக்கிக்கொண்டவளைப் போல நடுங்கினாள். இரு பெரும் ஆபத்துகளிலேயிருந்து அவள் தப்பித்துக்கொண்ட போதிலும் சொல்ல முடியாத ஒரு பீதி அவள் உள்ளத்தைக் கலக்கியது. நடந்து செல்லும்போது காலடியில் மிதிபட்டுச் சாகக்கூடிய எறும்பினுங் கேவலமாகத் தன்னைக் கருதிக்கொண்டு மிருகத்தனமான வேலையில் ஈடுபட்டிருக்கிறானே டைகர் — என்று நினைக்கவே அவளுக்கு அச்சமாக இருந்தது.

"டைகர் யார்?"

"அவன் ஏன் இங்கு வந்தான்?"

"இந்தப் பயங்கர நிகழ்ச்சிக்குக் காரணம் என்ன?"

கேள்விகள் நமினு முகம்மதின் நெஞ்சத்தைக் குடைந்தன. அவன் ஆனந்தியிடம் டைகரைப் பற்றிக்கேட்டான்.

"டைகர், சகோதரன் என்பது உண்மைதானே?"

"அப்படிச் சொன்ஞனு அந்தச் சண்டாளன்?"

"ஆமாம்!"

"சகோதரனல்ல!— உங்களோ ஏமாற்ற எண்ணியிருக்கிருன் படுபாவி! அவன் வேதபுரத்திலே உலவும் பெரிய மனுஷன்! "பெரிய மனுஷன்" என்பது இந்த இடத்திலே அவனது சின்னப் புத்தியைக் குறிக்கும்!"

"அப்படியானுல் அவன் என்னிடம் கூறியதெல்லாம் பொய்தானு?"

"என்ன கூறினுன்?"

"முதலில் சிந்தாமணியைக் களங்கமற்றவள் என்று சொன்னுன். பிறகு, அவன் செய்த மாபெரும் தவறை மறைப்பதற்காகவே நீ இவ்வளவு கஷ்டப்பட்டாய் என்று கதைத்தான்!"

"அவன் சொன்ன இரண்டு கருத்துக்களில் நீங்கள் எதை நம்பினீர்கள்!"

"இரண்டாவது கருத்தைத்தான்!"

"அய்யோ! சிந்தாமணி சீரழிந்தவள் என்பதையா?"

"ஆமாம்!"

"தவறு! மிகத் தவறு! சிந்தாமணி செந்தாமரை மொட்டு! அவனைச் சேற்றிலே எறியாதீர்கள்!"

"ஆனந்தி! உன்னுடைய இந்தப் பெரிய உள்ளம்தான் என்னைக் கவர்ந்துவிட்டது! மயில் தோகை விரித்தாற் போன்ற உன் மனத்திலே என்னைப்பற்றிய நினைவுகள் நீலப் பிறைகளாக அமையாதாவென்று நான் ஏங்குவதில் தவ றென்ன இருக்கமுடியும்!"

"எனக்கொன்றும் நீங்கள் நினைப்பது போல புனித மான உள்ளம் இல்லை! சுருக்கமாகச் சொல்லப்போனுல்

நான் ஒரு புழுதிமேடு! இந்தப் புழுதிக்காற்று, "புண்ணியவதி" ஒருத்தியின் புனிதமான வாழ்க்கையை அசுத்தப்படுத்தக் காரணமாயிருந்துவிட்டதேயென்று நினைக்கும் போது நெஞ்சு படபடக்கிறது!"

"மறுபடியும் உன் தியாக உள்ளத்தைதான் திறந்து காட்டுகிறாய், சிந்தாமணிக்கு ஒளியேற்றும் முயற்சியைப் பாராட்டுகிறேன். ஆனால், உண்மை அந்த வெளிச்சத்திலே துல்யமாகத் தெரிய ஆரம்பித்துவிடும். எவ்வளவுதான் நீ சிரமப்பட்டாலும், சிந்தாமணி பூமியிலே சிந்திய பால் தான் என்பதை மாற்றிடமுடியாது!"

நயினுவின் இந்த வார்த்தைகளைக் கேட்டதும் ஆனந்தியின் கண்களிலேயிருந்து நீர் தாரை தாரையாக வழிய ஆரம்பித்தது.

"நான் சொல்வதை நம்புங்கள். அந்தப் பாதகன் டைகரின் பேச்சைக் கேட்டு, பிரசவ ஆஸ்பத்திரியில் இருந்த வேறொருத்தியின் குழந்தையை சிந்தாமணியின் அருகே படுக்கவைத்து அவளைக் குற்றம் சுமத்திய துரோகியாகிவிட்டேன் நான்! சிந்தாமணி, அவனுக்கு மாமன் மகள்! தூரத்து உறவு! பெங்களூர் மாப்பிள்ளைக்கு சிந்தாமணியைக் கொடுக்கப்போகிற சேதி கேள்விப்பட்டதும் தனக்கு உதவாதது அழிந்துபோகட்டும் என்று நினைத்து அவள்மீது வேசிப் பட்டம் சூட்ட இப்படியொரு சூழ்ச்சியை ஏற்பாடு செய்தான்.

"நான் முதலில் தடுத்தேன். சிந்தாமணியின் நன்மைக்காகவும் அவள் பெற்றோர்களின் நன்மைக்காகவுமே அதைச் செய்வதாக என்னிடம் புளுகினான். ஏமாந்தேன். சிந்தாமணியை அவன் அபகரிக்கவே அப்படிச் சதி நடத்துகிறான் என்பது எனக்குப் புரியாது. நீங்களும் உங்கள் நண்பரும் மருத்துவ மனைக்கு வந்து, சிந்தாமணியை வாய்க்கு வந்தவாறு வசை பாடிவிட்டுப் போனதுமுதல் என் மனம் ஒரு நிலையில் இல்லை. மனச்சாட்சி, என்னைப் பார்த்துக் காரி உமிழ்ந்தது. "நீயும் ஒரு பெண்ணா?"

என்ற கேள்வி, நான் திரும்பிய பக்கமெல்லாம் எதிரொலித்தது. ஓடிவந்தேன் உண்மையைச் சொல்ல!...அதற்குள் இப்படியெல்லாம் ஆகிவிட்டது..” ஆனந்தி, விம்மியழுது கொண்டே சொல்லி முடித்தாள். நயினுவுக்கு ஒரே புதிராக இருந்தது.

“அப்படியானுல் சிந்தாமணி அப்படிக்கற்றவளா?” என்று இருதயத்தை அழுத்திக்கொண்டே பெருமூச்சுடன் கேட்டான்.

“நிச்சயமாக! நீங்களே கொஞ்சம் சிந்தனை செய்து பாருங்களேன்—பத்து மாதக் கர்ப்பவதிக்குத் திருமணம் செய்ய எந்தப் பெற்றோர்தான் இவ்வளவு தைரியமாக முன்வருவார்கள்? நிறை கர்ப்பிணியைப் பெண்பார்க்க வருமாறு எந்த மூட்டாள் தகப்பனுவது மாப்பிள்ளை வீட்டாருக்குக் கடிதம் எழுதுவான்?”

“நாங்களேதானே புறப்பட்டு வந்தோம்!”

“முன் அறிவிப்பு இல்லாமலா?”

“தந்தி கொடுத்துவிட்டுத்தான்!”

“உம்.....! அது போதாதா.....தந்தி வந்தவுடன் பெண்ணை வெளியூருக்கல்லவா அனுப்பியிருப்பார்கள்—உள்ளூரில் வைத்திருப்பார்களா; தவறு அவர்கள்பால் இருந்தால்?”

“அதனுல்தான் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டார்கள் என்று நாங்கள் சந்தேகப்பட்டோம்!”

“சந்தர்ப்பம்—சூழ்நிலை இரண்டும் சிந்தாமணியின் சோக சரித்திரத்தில் ‘குடிலர்’களாக உருவெடுத்துவிட்டன. உங்களிடம் பச்சையாகச் சொல்ல வேண்டியிருக்கிறதே என்பதற்காக வெட்கப்படுகிறேன். வேதனைப்படுகிறேன். உண்மையிலேயே ஒரு பெண்ணுடைய எதிர்காலத்தில் உங்களுக்கும் உங்கள் தோழருக்கும் அக்கரை இருக்குமேயானுல் என்ன செய்திருக்கவேண்டும்? சிவநேசரும், சிவகாமியும் அவ்வளவுதூரம் அலறியபோது சிறிதா

வது சிந்தித்திருக்கவேண்டும். உங்கள் அம்மாளையாவது, அல்லது வேறொரு பெண்ணையாவது விட்டு சிந்தாமணியை சோதித்துப் பார்த்து, உண்மையில் அவள் பிள்ளை பெற்றவளா?—என்பதை ஆராய்ந்திருக்கவேண்டும்! அவளது உடலமைப்பு மூலம் உண்மை விளக்கப்பட்டிருக்கும். இவை எதுவுமின்றி, ஒரு பரிதாபத்திற்குரிய பாவையைப் பாலுவனமாக்குவது நியாயமா? நீங்களே சொல்லுங்கள்! இப்போதும் ஒன்றும் முழுகிவிடவில்லை. சிந்தாமணியின் வாழ்வை எழிலாக்குவது உங்கள் கையில் இருக்கிறது. உங்கள் தோழனின் மனதை உடனடியாக மாற்றுங்கள். உடைந்துபோன வீணையாக சிந்தாமணியை ஆக்காமல் பாதுகாத்திடப் பாதை வகுத்திடுங்கள்!'.

நயினை முகம்மதுவுக்கு ஆனந்தியின் பேச்சு, நம்பிக்கையூட்டிற்று. அவசர முடிவினால் ஒரு குடும்பப் பெண்ணின் வாழ்வை விஷமாக்கிவிட்டதாகக் கருதினான்; கண்ணீர் வடித்தான்.

"சரி ஆனந்தி! சிந்தாமணி அழகப்பனின் மனைவிதான்! அதற்கு நான் பொறுப்பு! என் அவசர முடிவுக்கு நான் செய்துகொள்ளும் பிராயச்சித்தமே, அழகப்பன்—சிந்தாமணி திருமணந்தான்!..."

"அப்பாடா...என் மனத்திலேயிருந்த பாரம் குறைந்தது! சத்தியமாகச் சொல்லுங்கள்—அழகப்பர் சிந்தாமணி திருமணத்தை..."

"நடத்தியே தீருவேன்!.....ஆனந்தி! அதை முடிந்த விஷயமாகவே கருது! இன்னும் முடியாமலிருக்கிற நம் விஷயத்தைப்பற்றி நாளைக்குப் பேசுவோம்—கனைப்பா யிருக்கும் தூங்கு!"

"நம் விஷயமா?...இதற்கு முடிவே கிடையாது!',

"என்ன சொல்லுகிறாய் ஆனந்தி?"

"உங்களை நான் புரிந்துகொண்டேன், உங்கள்மீது எனக்கு அனுதாபந்தான் பிறக்கிறது!"

"ஏன்?"

"நீங்கள் மிகவும் நல்லவர்!"

"பிறகு?"

"அழகானவர்—அன்பு வடிவானவர்—பண்பு நிறைந்தவர்.....இப்படியெல்லாம் வர்ணித்துக்கொண்டேயிருக்கலாம் உங்களை!"

"உன் பீடிகை புரியவில்லை ஆனந்தி!"

"உங்களை நான் ஏமாற்ற விரும்பவில்லை!"

"ஏமாற்றமாட்டாயல்லவா? அதுபோதும் எனக்கு!"

"என்னை நீங்கள்.....!"

"ஏன் தயக்கம்! உன்னை நான்.....காதலிக்கிறேன். உலகத்திலே உன்னைத் தவிர வேறு எதுவும் எனக்கு உயர்வாகத் தெரியவில்லை!"

"குப்பைமேடு நான்! கூளம் என் வாழ்வு! என்னைக் காதலிக்காதீர்கள்! என்மீது அன்பு செலுத்தாதீர்கள்! நான் தங்களுக்குத் தகுதியானவள் அல்ல! தங்கள் அழகிற்கும் குணத்திற்கும் எத்தனையோ பேர் தவங்கிடந்து ஓடி வருவார்கள்!"

"ஆனந்தி! நேரடியாக "முடியாது" என்று கூறுவதற்குப் பதிலாக இப்படிச் சுற்றிவளைத்துப் பேசுகிறாயா? என்னை உயர்த்தியும் உன்னைத் தாழ்த்திக்கொண்டும் பேசுவது...அறிவும் ஆற்றலுமிக்க சொற்பொழிவாளன் ஒருவனின் அவையடக்கம்போலவே எனக்குத் தோன்றுகிறது!"

"இல்லை...எனக்கு அப்படியெல்லாம் பேசுகிற திறமை கிடையாது! என் நிலைமையைக் குறிப்பால் உணர்த்தினேன்; அவ்வளவுதான். தாங்கள் கௌரவமான குடும்பத்து வாலிபர்...நானோ.....!"

"என்ன சொல்லுகிறாய் ஆனந்தி!"

ஆனந்தி பேசவில்லை; அழுதாள். நயினு முகம்மது தன்னையறியாமல் அவளது கன்னத்தைத் துடைத்துக் கொண்டே, "அழாதே!" என்று ஆறுதல் கூறினான். ஆறுதல் கூறுவதற்கு ஒருவர் அருகே இருக்கும்போது

பாசமும் பற்றும் அதிகமாகப் பெருக்கெடுத்து சோகம் உச்சக் கட்டத்தை அடையுமல்லவா? ஆனந்தியும் அப் படித்தான் ஆனுள்! விம்மி விம்மிக் கதறினுள். நான் விஷம்! தீண்டத்தகாதவள்!" என்று முனகினுள்!

"இருந்தால் என்ன? நான் முஸ்லீம்! சாதி வித்தி யாசம் எனக்குக் கிடையாது!" என்ருன் நயினு.

"சாதியோ மதமோ என்னைத் தீண்டத்தகாதவளாக ஆக்கவில்லே. நானே என்னை இந்த உலகத்தின் கழிவுப் பொருளாக ஆக்கிக்கொண்டேன். தயவுசெய்து என் கண்ணீரை உங்கள் மிருதுவான விரல்களால் தொடா தீர்கள்

கண்ணீரல்ல அது! இருதயத்துப் புண்ணிலே வடியும் சீழ்!

களங்கமுற்றவள் சிந்தாமணியல்ல; நான் சீரழிந்த மணி; என்னேடு உத்தமராகிய நீங்கள் பேசுவதே பாவம்!"

ஆனந்தியின் துக்கம் கட்டுமீறிக் கிளம்பியது. அவளது கண்டிப்புக்கும் அடங்காமல் தொண்டை அடைத்துக் கொண்டது.

நயினு முகம்மதுவின் முகத்திலே ஆவலின் ரேகைகள் ஒன்றன்பின் ஒன்ருக விழுந்துகொண்டேயிருந்தன.

"நீங்கள் தூய்மையானவர்! என்னைத் தொடா தீர்கள்!" என்று அவன் கையை எடுத்துவிட்டாள். அவளது மென்மை மிகுந்த கரம் அவன் கையிலே எழுப்பிய ஸ்பரிச உணர்ச்சியை "அமரயாழ்" என்கிருர்களே: அது கூட எழுப்பாதுதான்! கையிலே மீட்டப்பட்ட நரம்பு, நெஞ்சிலே நாதம் எழுப்பியது! அசைவற்றுவிட்டான் நயினு. அவன் இதழ்கள் ஈனசுரத்தில்,

"ஆனந்தி!" என்று அசைந்தன.

"ஆனந்தி யார் தெரியுமா? அவள் கற்பிழந்தவள்! டைகரின் வைப்பாட்டி!"

ஆவேசம் வந்தவள்போல இதைச் சொல்லிவிட்டு அவள் அப்படியே கண்களை மூடிச் சாய்ந்தாள்.

பழுக்கக் காய்ச்சிய தகட்டின்மீது சம்மட்டியடி விழுவது போல ஆனந்தியின் சொற்கள் அவன் இருதயத்தைத் தாக்கின.

14

அவன் சிறிதும் எதிர்பார்க்காத கணை பாய்ந்துவிட்டது. அவன் தன்னைத்தானே சமாளித்துக்கொள்ளவே நிரம்ப நேரம் பிடித்தது. ஆனந்தியின் சொற்களிலே காணப்பட்ட அந்தத் தரக்குறைவு அவள் முகத்திலே காணப்படவில்லை. அதையும் அவனுல் உணர முடிந்தது. வாழ்க்கையிலே மிக வெறுப்புற்று, சாவதற்குப் பயந்து கொண்டிருந்த ஒருத்தி தன் அந்தரங்க வாழ்வின் அந்தகாரத்தை ஆத்திரமாக வெளியிடும்போது சூடான வார்த்தைகள் பொறி பறக்கக் கிளம்புவதிலே வியப்பில்லையென்றும் தனக்குத்தானே சமாதானம் சொல்லிக்கொண்டான். அவள்மீது அலட்சியம் பிறப்பதற்குப் பதில் அனுதாபமே பிறந்தது. அவளுக்கு என்ன சூழ்நிலையோ — ஏன் இப்படிக் கெட்டுவிட நேர்ந்ததோ — என்றெல்லாம் கேள்விகளைப் போட்டு விடை காணமுடியாமல் தத்தளித்தான். இதயத்தில் எழும் இளம் பருவ நமைச்சலுக்கு அவள் கண்டுபிடித்த மருந்தல்ல டைகர்—என்பதை மட்டும் இப்போது நயினு தெளிவாகப் புரிந்துகொண்டான். இந்த வார்த்தைகளுக்குப் பிறகும் தனது முயற்சியைத் தொடருவதா கூடாதா என்ற ஐயம் சிறிது நேரமே அவனிடம் நிலைத்திருந்தது. பின்னர் ஒரு முடிவுக்கு வந்துவிட்டான். தன் ஆசை நிறைவேறவேண்டும் என்ற நோக்கத்திலே சிறிது மாற்றம் ஏற்பட்டது. திருத்தமென்றும் கூறலாம் அதை! அவள் வாழ்வு வளம்பெற வேண்டும் — அதற்குத் தான் துணையாக இருக்கவேண்டும் என்ற பொதுநோக்கையும் தன் தீர்மானத்தோடு இணைத்துக்கொண்டான்.

இப்போது அவள் குழம்பிப்போய் இருக்கிறாள்; மேலும் அவளைத் தொந்தரவு செய்யவேண்டாமென்ற எண்ணத்துடன் அவளை அப்படியே தூங்க விட்டுவிட்டு நயினா தாழ்வாரத்திலுள்ள தனது இருப்பிடத்திற்கு வந்து விட்டான். காலை மலரட்டும்; ஆனந்தியின் வாழ்விலும் ஒரு மறுமலர்ச்சி காண திட்டம் தயாரிப்போம் என்ற பெரு நினைப்போடு – கட்டுக் குலைந்து வரும் இருளைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்துவிட்டான்.

* * *

டைகரால் அனுப்பிவைக்கப்பட்ட சிவதேசர், சிவகாமி, சிந்தாமணி மூவரும் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். சிவதேசரை மிகவும் சிரமப்பட்டு வீட்டில் அடைத்து வைத்தார்கள். காலை முதல் ஏற்பட்ட தொல்லைகளையெண்ணிக் கண்கலங்கி நின்றாள் சிந்தாமணி. அவள் கலங்கிய உள்ளத்தை இன்னும் சிறிது உடைப்பதுபோல், பெங்களூர் மாப்பிள்ளை வீட்டார் சிந்தாமணியைப் பற்றித் தவறாகக் கருதியதையும், கோபித்துக்கொண்டு போன நிகழ்ச்சிகளையும், ஆனந்தி காரில் அடிபட்டு பாலையூர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டதையும் சிவகாமி ஒன்றுவிடாமல் கூறி புலம்பியழத் தொடங்கினாள். தன் கற்புக்கு மாசு கற்பிக்கப்பட்ட பயங்கர சம்பவத்தை சிந்தாமணியால் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை. எப்படி இயலும்? வசீகரம் நிறைந்ததும், வனப்பு செறிந்ததுமான வாழ்க்கை வானத்தில் பறப்பதற்குச் சிறகடிக்கும் சித்திரப் புள் அவள்! அவளது இறக்கைகளை வெட்டி வீழ்த்தி இழிவுப் படுகுழியில் தள்ளுவதென்றால் அவளால் அந்த வேதனையை ஏற்றுக்கொள்ள எவ்வாறு சாத்தியமாகும்! தனக்கு ஏன் இப்படி ஒரு கஷ்டம் வரவேண்டும்? விடை காணமுடியவில்லை அவளால்! பூர்வ ஜென்ம பூஜாபலன் என்பார்கள் புத்தியைத் தீட்ட மறுப்பவர்கள். சிந்தாமணி அந்த வேதாந்தக் கருத்துக்களால் சாந்தியடைய மாட்டாமல் தவித்தாள்; அம்மாவின் மார்பில் சாய்ந்து அழுதாள். "ஏனம்மா! எனக்கு இப்படி ஒரு சங்கடம் வந்தது? நான் யாருக்கு என்ன துரோகம்

செய்தேனம்மா! என் வாழ்நாள் எல்லாம் வீணாளாகி விட்டதே தாயே! சிந்தாமணியைக் கொலை செய்திருக்க லாமே—அய்யோ! இனிமேல் என் சவத்திற்குக்கூட யாரும் மரியாதை காட்டமாட்டார்களே" என்று கதறினாள். மகளின் கண்ணீர் ஊற்றைத் தடுக்க மாதானினால் இயல வில்லை. அவளும் சேர்ந்து அழுதாள், மாப்பிள்ளை வீட் டாரிடம் தன்னை மாசு படிந்தவள் என்று காட்டி, அதனால் லாபம் பெற்றவர்கள் யாராயிருக்கமுடியும் என்று சிந்தித் தாள், டைகரேதான்! அவன்தான் இந்தச் சதி நடத்தி யிருக்க வேண்டும் என்று முடிவான அபிப்பிராயங் கொண்டாள்.

"இந்தக் கொடுமை நிறைந்த பழிச் சொல்லிலே யிருந்து எப்படி மீளுவது அம்மா?"

"எனக்குத் தெரியவில்லை என் கண்ணே!—என்ன சமாதானம் சொன்னாலும் மாப்பிள்ளை வீட்டார் உன்னை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை!"

"ஏற்றுக்கொள்ள வேண்டாம்; கவலையில்லை. ஆனால் அவர்கள் என்னைப்பற்றிக் கொண்டிருக்கும் தவறான கருத் தையாவது மாற்றிக்கொள்ளச் செய்யவேண்டும் அம்மா!"

"சிந்தாமணி! என்னைச் சித்திரவதை செய்யாதே—நம்ப குடும்பத்திலே இப்படியெல்லாம் நாசகாலம் நுழையு மென்று நான் நினைக்கவேயில்லை!"

"என்னை நான் தூய்மையானவள் என்று நிலைநாட்டிக் கொள்ளவேண்டும். எனக்குக் கல்யாணம் வேண்டாம்— கல்லெடுப்பும் வேண்டாம்! என் தந்தையும், உலகமும் என்னை மாசற்றவள் என்று கூறினால் போதும்—அந்த நல்ல வார்த்தையைக் கேட்டுவிட்டு உடனே சாவதானாலும் கவலை யில்லை. நான் குற்றமற்றவள் என்று நிரூபிக்கப்படும் வரை யில் சாகமாட்டேன்! சாகமாட்டேன்!"

சிந்தாமணி வெறிகொண்டவள்போலக் கத்தினாள். அவளைச் சாந்தப்படுத்தி உட்காரவைக்க சிவகாமி உட்

எவ்வளவோ முயன்றும் நடக்கவில்லை. அப்போதே பாலையூர் மருத்துவ மனைக்குப் போய், அந்த ஆனந்தியைப் பார்க்கவேண்டுமென்றும், அவளிடம் தன்னைக் கொடுமைப் படுத்தியதற்குக் காரணம் கேட்கவேண்டுமென்றும் ஆவேசமாகக் கூறிக் கிளம்பினாள். சிவகாமி என்ன சமாதானங் கூறியும் அவள் நிற்கவில்லை. 'இப்போதே பாலையூர் போக வேண்டும். அங்கு விவரமறிந்து உடனே பெங்களூர் போக வேண்டும்' இது அவளது ஆத்திரமான முடிவு. இந்த இருட்டில் எங்கும் போகக்கூடாது எனத் தடுத்தாள் தாய்.

"இருட்டு! என் வாழ்க்கையைவிடவா பயங்கர மானது?—வெளிச்சத்தில் இந்த ஊரார் முகத்தில் எப்படி விழிப்பேன்? என் அருமைத் தோழிகள் முகத்தை எப்படி ஏறெடுத்துப் பார்ப்பேன்? என்னை மூடியிருக்கும் களங்கப் பனியை விலக்கிய பிறகே வேதபுரத்துக்குத் திரும்புவேன். அம்மா! நீ அப்பாவை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்! நான் வருகிறேன்"

என உரைத்துக் கிளம்பினாள். அவளை வழிமறித்துக் கொண்டு சிவகாமி, "கண்ணே! களங்கம் உன்னை ஒன்றும் செய்யாது! எனக்கு நீ பத்தரைமாற்றுத் தங்கம். மாசற்ற மாணிக்கம். ஊரும் உலகமும் அந்த அவசரக்கார மாப்பிள்ளை வீட்டுக்காரர்களும் என்ன சொன்னால் நமக் கென்ன? நீ எனக்கு மகள் என்பதைக்கூடவா மறுத்து விடு வார்கள்! கல்யாணந்தானே ஆகாமற் போகும்! போனால் போகட்டும்!" என்று தேம்பித் தேம்பி அழுதாள்.

"கல்யாணத்தைப்பற்றிக் கவலைப்படவில்லையம்மா நான்! மணிமேகலையைப் படித்திருக்கிறேன். அவளுக் கிருந்த உள்ளத்தை என்னாலும் படைத்துக்கொள்ள முடியும். ஆனால், என்மீது வீசப்பட்ட அவச்சொல்லை—அவமானச் சொல்லை — அறவே அகற்றியாகவேண்டும். அதுவரையில் எனக்குத் தூக்கமில்லை. வேறு காரியங்களில் ஊக்கமில்லை. என்னைத் தடுக்காதீர்கள்! தணலாயிருக் கிறது நெஞ்சு! அதில் தண்ணீர் கொட்டப்படவேண்டும்.

வருகிறேன்.....வெற்றி பெற்ருல் திரும்புகிறேன். இல்லையேல் எனக்கு நடத்தவேண்டிய இறுதிக்காரியங்களை நீங்களும் அப்பாவும் இருந்து நடத்திவிடுங்கள்!" ஒரு மகள் இப்படிப் பேசும்போது தாய்மையின் பாசம் பெருக்கெடுக்கும் பெற்ற வயிறு எப்படிப் பற்றி எரிந்திருக்கும்! சிவகாமி அழவுமில்லை, பேசவுமில்லை; சிலையானுள். சிந்தாமணியைத் தடுக்கவும் விரும்பவில்லை. சிந்தாமணி தாயின் காலில் விழுந்து வணங்கிவிட்டு, வீட்டைவிட்டு வெளியே ஓடினுள். வைகறையை நோக்கித் திரும்புவதற்குத் தனது முதலடியை எடுத்து வைத்துவிட்ட இரவில் அவள் ஓடிக் கொண்டேயிருந்தாள்.

ஆனந்தியைப் பாலையூரில் சந்திக்கவேண்டும். தன்னை அவமானச் சின்னமாக்க அவள் ஏன் இடமளித்தாள் என்பதைக் கேட்கவேண்டும். சரியான பதில்கிடைக்காவிட்டால் பழிக்குப்பழி தீர்த்துக்கொள்ளவேண்டும். இப்படி வஞ்சங் கொண்டு புயல்காற்றுபோலத் தெருவிலே ஓடினுள். வேதபுரத்திலிருந்து பாலையூருக்கு ஓடுவதென்ருல் அவ்வளவு சுலபமான விஷயமா? இந்தப் பீதி அவளுக்கு எழவுமில்லை, எழ நியாயமுமில்லை.

ஓடி ஓடி இறுதியில் பாலையூருக்குள் நுழைந்து விட்டாள் சிந்தாமணி. அவ்வளவு விரைவில் ஓட்டப் பந்தயக்காரர்கள் கூட வேதபுரமிருந்து பாலையூருக்கு வந்திருக்க முடியாது. பந்தயக்காரர்கள் நோக்கம் பரிசு பெறவேண்டுமென்பது — இவள் நோக்கம் பழி துடைத்துக் கொள்ளவேண்டும் என்பதல்லவா? பாலையூர் தெருக்களிலே மருத்துவ மனையைத் தேடித் திரிந்தாள். அவள் எதிரில் போலீஸ் வண்டி வந்துகொண்டிருந்தது. அந்த வண்டியிலேதான் மருத்துவ மனையில் கைதுசெய்யப்பட்ட டைகர் இருந்தான். தன் வாழ்வுக்கு விஷம் தூவ வந்த நச்சரவு தன் எதிரேதான் போய்க்கொண்டிருக்கிறது என்பது சிந்தாமணிக்குத் தெரியாது. ஆனல் போலீஸ் வண்டியிலிருந்த டைகர், ஓரு பெண் வேகமாக வருவதையும், அவள் சிந்தாமணி ஜாடையாக இருப்பதையும் கவனித்து

விட்டான். ஒரு விளக்குக் கம்பத்தின் பக்கம் அவள் போன போது டைகருக்குச் சந்தேகம் பலமாகிவிட்டது. தொண்ணூறு சதவிகிதம் அவள் சிந்தாமணியாய்த்தானிருக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டான். விஷயமனைத்தும் கேள்விப்பட்டு, மனமொடிந்து எங்கேயோ கிளம்பி விட்டாள்போலும் என எண்ணினான். எப்படியாவது அவளை இப்போது பிடித்துவிட வேண்டும் என் செய்வது என்று ஏங்கினான். பெண் விஷயமென்றால் பேராபத்தும் சிறு துரும்பாகத் தெரியுமென்பது பொய்யாகுமா? போலீஸ் வண்டி போய்க்கொண்டிருக்கும் போதே அதிலிருந்து குதித்துவிட்டான். போலீசார் துரத்தினர்; எங்கேயோ ஓடி மறைந்துவிட்டான்.

15

போலீசாரால் அவன் மறைந்த திசையைக் கண்டு பிடிக்க முடியவில்லை. அவன் போன பக்கத்தை விட்டுவிட்டு வேறு பகுதிகளில் தேட முனைந்தார்கள். அவனை ஒரு சந்திலே நுழைந்து, ஒரு சாக்கடை வாய்க்காலின் உள்ளே புகுந்து வேறு வீதிக்கு வந்துவிட்டான். ஓடிக்கொண்டிருக்கிற பெண்ணை சந்திப்பதற்கும், எதிரே மடக்குவதற்கும் அதுதான் சரியான வழியென்று அவன் தீர்மானித்தான். அவன் எதிர்பார்த்ததுபோலவே அவளும் அவன் எதிரே வந்துவிட்டாள், "சிந்தாமணி! நில்!!' என்ற குரல் கேட்டு அவன் திடுக்கிட்டாள்.

தன்னை இந்த நிலைமைக்குக் கொண்டுவந்த பாதகனின் குரல்தான் அது என்பதை உடனே புரிந்துகொண்டாள். ஆவேசம் அவளை ஆட்டிப்படைத்தது. ஆயினும் அப்படியே நின்றாள். 'வரட்டும் அவன் அருகே!' என்ற வீராப்பு அவள் உள்ளத்திலே பொங்கி வழிந்தது. 'என்ன பாடு படுத்துகிறேன் அவனை' என்பது போல அவளது விழிகள் சுழன்றன. டைகர், மெதுவாக அவளருகே நடந்து வந்தான்.

"வாடா வஞ்சகனே! வா! எங்கே வந்தாய்? என் வாழ்வை ஏனடா இப்படிச் சீரழிய வைத்தாய்?" என்று குமுறினாள் அவள். "அதெல்லாம் பேச இப்போது நேர மில்லை. ஆபத்து காத்திருக்கிறது. வா...வா...என்னோடு!" என்று அவளைக் கரந்தொட்டுப் பர பர வென்று இழுத்துக் கொண்டே ஓடினான் அவன். அந்த வேகத்தில் அவன் பின்னே சிறிது ஓடிய சிந்தாமணி, ஆத்திரமனத்தையும் சேர்த்து அவன் கன்னத்திலே "பளார்!" என்று ஒரு அறை கொடுத்து, "காரணம் சொல். என்னைக் களங்கம் சூழ்ந்தவள் என்று ஏன் கற்பனை செய்து காட்டினாய்? நீ தானே படுபாவி; அந்த அக்கிரமச் செயலுக்கு மூல கர்த்தா!" என்று அலறினாள். டைகர் அவளைப் பிடித் திருந்த பிடியை விட்டு, தன் கன்னத்தை அழுத்திக்கொண் டான். அதுதான் சமயமென சிந்தாமணி ஓட ஆரம்பித் தாள் டைகர் விடவில்லை, தொடர்ந்தான். ஆனால் அவனால் அவ்வளவு வேகம் ஓட முடியவில்லை. கன்னம், எண்ணெயிலிட்ட அப்பளம்போல் வீங்க ஆரம்பித்தது. வலியைச் சமாளித்துக்கொண்டே ஓடினான். அவன்கையில் அகப்படுவது சிலந்தி வலையில் சிக்குவது போலாகுமெனக் கருதிய சிந்தாமணி, திசை தெரியாமல் ஓடிக்கொண்டே யிருந்தாள். எதிரே விளக்குகள் தெரிந்தன. பின்னே திரும்பிப் பார்த்தாள். தூரத்தில் டைகர் வருவது தெரிந் தது. விளக்குகள் தெரிந்த பக்கம் மிக வேகமாக ஓடினாள். அதுதான் பாலையூர் ரயில்வே ஸ்டேஷன். இரயில் நிலைய த்தில் வண்டி புறப்படத்தயாராக இருந்தது. மூன்றாவது மணி அடிக்கப்பட்டது. இரவின் அமைதியைக் கிழித்துக் கொண்டு புகைவண்டியின் ஓலி எழுந்தது. சிந்தாமணி நிலையத்தில் விசாரித்தாள்; எந்த ஊர் போகிற இரயில் என்று! பெங்களூர் போகிற வண்டியெனப் பதில் கிடைத்தது. அவள் மனத்திலே கண நேரத்தில் பல நினை வுகள் மின்னலென எழுந்தன. "பெங்களூர் மாப்பிள்ளை வீட்டுக்கே போய், அவர்களிடம்தான் நிரபராதியென நிரூ பித்தால் என்ன? ஆம் அதுவே சரி!" இந்தத் தீர்மானத் தோடு சிந்தாமணி, புகைவண்டியிடம் ஓடினாள். வண்டியில்

ஒரே கூட்டம். திடீரென எந்தப் பெட்டியிலும் ஏற இயலவில்லை. மிகவும் சங்கடப்பட்டு, கடைசியில் பெண்களுக்கென உள்ள தனிப்பெட்டியில் ஏறிக்கொண்டாள். அதில் மட்டுப்தான் சிறிது கும்பல் குறைவாக இருந்தது. வண்டி புறப்பட்டது. சிந்தாமணி வண்டியிலிருந்தவாறே டைகர் வருகிறானு என்று எட்டிப் பார்த்தாள். கண்ணுக்கெட்டிய தூரம் அவளுக்குத் தெரியவில்லை. ஆனல் அவளையுமறியாமல், வண்டி நகரும்போது கடைசிப் பெட்டியில் அவன் ஓடி வந்து தொத்திக்கொண்டான். சிந்தாமணி, பெங்களூருக்குத்தான் போகிறாள்; அங்குப் போய் தன்னைத் தூய்மையானவள் என்று விளக்குவதற்குத்தான் கிளம்பியிருக்கிறாள்; ஆகவே நடுவழியில் அவளை எதுவும் கலகம் செய்யாமல்—பெங்களூர் போனதும் மடக்கிவிட வேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டான்.

சிந்தாமணி ஏறிய பெட்டியிலேயிருந்து பெண்மணிகள் அனைவருமே அயர்ந்த தூக்கத்தில் ஆழ்ந்திருந்தனர். ஒருத்தி மட்டுமே அரைத் தூக்கமாயிருந்தாள். அவளது விழிகள்கூடப் பாதிதான் மூடியிருந்தன. பார்வைக்குப் பெரிய வீட்டுப் பெண்போல இருந்தாலும், முகத்திலே ஆண்மையின் சாயல் அளவுக்குமீறிக் காணப்பட்டது

கழுத்திலே இரட்டை வடம் சங்கிலி போட்டிருந்தாள். காதில் வைரத்தோடு—முழங்கை மட்டும் வளையல்கள்!... பணக்காரியின் தோற்றம். முகத்திலே மட்டும் பெண்மையின் பொலிவில்லை. உதடுகள் தடிப்பேறியிருந்தன அவளுக்கு. கண்கள் சற்று சிவந்திருந்தன. நல்ல சிவப்புச்சேலை கட்டியிருந்தாள். அலங்காரமான காலணி அணிந்திருந்தாள். ரவிக்கையின் கைகள் தோள்பட்டையோடு நின்றுவிட்டன. சரியான தூக்கமின்றி அவள் உழன்று கொண்டிருந்தாள்.

பலகணி வழியே அடிக்கடி பார்ப்பதும், பிறகு தான் உட்கார்ந்திருக்கும் பலகையின் கீழே கவனிப்பதும்—சற்று நேரம் கண்களை மூடிக்கொள்வதுமாக சங்கடப்பட்டுக் கொண்டிருந்தாள். சிந்தாமணி, அவளுக்குப் பக்கத்திலே

கார்ந்துகொண்டாள். பணக்காரி சிந்தாமணியை உற்று நோக்கினாள். அந்தப் பார்வை சிந்தாமணிக்கு அச்சத்தையும், வெறுப்பையும் உண்டாக்கியது. அவள் தூங்குவது போலக் கண்ணை மூடிக்கொண்டிருக்கும்போது, சிந்தாமணி, அவளை நன்றாகக் கவனித்து இன்னும் சிறிது பீதி கொண்டாள். மணமறியாத நீலக் கனகாம்பரப் பூவைத் தலையிலே வைத்துக்கொண்டு, மிளகாய்ப் பழத்தின் எரிச்சலை வெளியிடும் ஏதோ ஒருவகை வாசனைப் பொருளையும் மேனியில் பூசிக்கொண்டு, அடக்க ஒடுக்கமின்றி அமர்ந்திருக்கும் அந்த 'மாது சிரோன்மணி' சிந்தாமணிக்கு ஒரு புதிராகவே தோன்றினாள். இரயில் எங்காவது ஒரு ஸ்டேஷனில் நிற்கும். உடனே அந்தப் 'புதிர் மனுஷி' எழுந்து கதவுப் பக்கம் நின்றுகொள்வாள். வெளியே தலையை நீட்டி யாரையோ எதிர்பார்ப்பதுபோல ஆவலை முகத்தில் தேக்குவாள். பிறகு, வண்டி நகர ஆரம்பித்ததும் தன் இடத்தில் வந்து அமர்ந்துகொள்வாள். விடை காண முடியாத சிக்கலாக உணர்ந்தாள் சிந்தாமணி. அவளை! சிறிது நேர சிந்தனைக்குப் பிறகு சிந்தாமணி பக்கத்திலேயுள்ள அந்தப் படாடோபக்காரியை மறந்துவிட்டாள். இதைவிடப் பெரிய சிக்கலிலேயிருந்து அவள் விடுபட வேண்டுமே! அதை நினைத்தால் அவள் நெஞ்சில் சீமை எண்ணெய்யில் தீப்பற்றுவதுபோலப் பற்றும்! "விபச்சாரி!" இந்தக் கர்ணகடூரமான வார்த்தைக்கு இலக்காகி விட்டவள் அவள்! குற்றம் புரியாத எத்தனையோ நிரபராதிகள் தண்டிக்கப்படுகிறார்கள். ஆயுள் தண்டனை—தூக்குமேடை—நாடுகடத்தல், இப்படியெல்லாம் தீர்ப்பு வழங்கப்படுகிறது அவர்கட்கு! அந்தத் தண்டனைகளையெல்லாம்விட, விபச்சாரப் பட்டத்தை சுமக்கச் சொல்லி, ஒரு தூய உள்ளத்தில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவது மிகக் கொடுமை! மிகக் கொடுமை!! அந்தக் கொடுமைக்கு முடிவு காணத்தான், தானே தன் வழக்கிற்கு வழக்கறிஞராகவும்—சாட்சியாகவும் செல்கிறாள்—பெங்களூர் நோக்கி!

ஒரு ஸ்டேஷனில் வண்டி நின்றது. வழக்கம்போல அந்தக் 'கனகாம்பரம்' கதவண்டை நின்று கவனித்தாள்.

சிந்தாமணியும், என்ன ஸ்டேஷன் என்று பார்ப்பதற்காக வெளியே தலையை நீட்டினாள். ஸ்டேஷன் பெயர்ப்பலகை தூரத்தில் இருந்ததால் சரியாகத் தெரியவில்லை. ஸ்டேஷன் பக்கம் வட்டமிட்ட அவளது கண்கள் திடீரென எதையோ பார்த்து அகலத் திறந்தன. அவள் பெட்டியோரமாக ஒரு வயதான அம்மையும் ஒரு வாலிபனும் நின்றுகொண்டிருந்தார்கள். வயதானவனை இன்னொருவன் கைபிடித்து அழைத்து, அருகேயுள்ள முதல் வகுப்பு வண்டியில் ஏற்றிக்கொண்டிருந்தான். அப்போது அந்தப் பக்கம் வந்த ஒரு பெரிய தனவந்தர், "என்ன அழகப்பன்? ஏது இவ்வளவு தூரம்?" என்று கேட்டார். சிந்தாமணியின் மனம் எப்படி அலைமோதியிருக்கும்!

ஆம்; அவன் அழகப்பனேதான்! தன்னைத் திருமணம் செய்துகொள்ள விரும்பிவந்து, தனக்கு வேசி பட்டம் கட்டிவிட்டுத் திரும்புகிற அழகப்பனேதான்! அவள் அந்த உரையாடலை உன்னிப்பாகக் கவனித்தாள்.

"அம்மாவும் நானும் ஒரு ஊருக்குப் போய்விட்டு பெங்களூர் திரும்பினேம். வழியிலே கார் பழுதாகிவிட்டது. அதனால் காரை சீர் செய்து எடுத்துவரும்படி டிரைவரை இங்கு விட்டுவிட்டு நானும் அம்மாவும் பெங்களூர் போகிறோம்."

தனவந்தர், "நானும் பெங்களூர்தான் வருகிறேன்" என்று கூறவே, அழகப்பனும் அவரும் வண்டியில் ஏறிக் கொண்டார்கள். டிரைவர் அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டான்.

"காரை ஜாக்ரதையாக எடுத்துவா!" என்று அழகப்பன் கூறுவதற்கும் இரயில் அதைவிட்டு நகருவதற்கும் சரியாக இருந்தது. சிந்தாமணிக்கு வண்டியில் இருப்புக் கொள்ளவில்லை. இவ்வளவு நேரம், பக்கத்திலேயிருந்த வளின் அட்டகாசத்தையும், அவள் பூசியிருந்த "வாசனை" யின் நெடியையும் சகித்துக்கொண்டுதான் உட்கார்ந்திருந் தாள். இப்போதோ அவள் நெஞ்சம் படபடத்தது. உலகம் நிலைமாறிச் சுழல்வதுபோல் தெரிந்தது. புகை

வண்டி ஆகாயத்தை நோக்கிப் போவதுபோலவும், தண்ட வாளத்தை விட்டிறங்கி பாலத்தில் மோதிச் சுக்குநூறுகி விட்டதுபோலவும்—நினைவுகள் தாக்கின. காய்ச்சல் அடிப் பதுபோல உடம்பு சூடேறிவிட்டது. கைகால்கள் கட்டுப் படுத்த முடியாமல் நடுங்கின.

தன்னை "அவமானப் படுகுழி" யெனத் தீர்மானித்த வனைத் தேடி, தான் நிரபராதியென வாதிடப் போகிறாள். அவளை வழியிலே வந்தது மட்டுமல்ல; பக்கத்து வண்டி யிலேயே வந்துகொண்டிருக்கிறான். அடுத்த ஸ்டேஷனில் இறங்கி, அழகப்பனையும் அவள் தாயாரையும் சந்தித்தால் என்ன? கேள்வி அவளைத் துளைத்தது.

"சேச்சே! இரயிலில் போய்ப் பேசுகிற பேச்சா இது? அதுவுமில்லாமல் அவர் கூட ஒரு தனவந்தரும் இருக்கிறார். கூடாது; கூடாது! பெங்களூரில் போய்ப் பார்த்துக்கொள் வோம்—இரயிலை விட்டு அவர்கள் இறங்கியதும் அவர்கள் பின்னாலேயே தொடர்ந்து செல்வோம்!" இப்படி ஒரு முடிவு செய்துகொண்டு தனக்குத்தானே திருப்தியடைந்து கொண்டாள் எப்படியும் தான் களங்கமில்லாதவள் என்று ஆதாரம் தந்து, அழகப்பனைத் தன் துணைவனாக ஏற்றுக்கொண்டுவிட முடியும் என்று அந்த பரிதாபத்திற் குரிய பாவை நம்பினாள். பாவம்; கள்ளங்கபடமற்ற இளம் நெஞ்சம்! உலகத்து மோசடிகளைத் தொட்டுப் பார்க்கவும் விரும்பாத சிட்டுக்குருவி! அவளுக்கு இப்படியொரு வேதனை—வெள்ளிக்கிழமை பொழுது விடிந்தாலும் விடிந் தது; அவளுக்கு விநாசகாலமாக முடிந்தது! காலை முதல் அவள் பட்ட கஷ்டங்கள், அப்பப்ப! இனிமேலாவது; சனிக்கிழமை வருவதற்குள்ளாவது அவளுக்கு ஏதாவது விமோசனம் பிறக்குமா?

பக்கத்துப் பெட்டியிலே கணவனாக வந்திருக்க வேண்டிய கட்டழகன்!

கடைசிப் பெட்டியிலே அவளைக் கசங்கிய மலராக ஆக்கத் துடிக்கும் காதகன்! அவனுக்கோ போலீஸ் பயம்!

இவளுக்கோ, அவன் வந்துவிடுவானே என்ற அச்சம்!

இரயில் போய்க்கொண்டே யிருந்தது; பல்வேறு நினைவுகொண்ட பிரயாணிகளைச் சுமந்துகொண்டு!

அடுத்து ஒரு ஸ்டேஷன், இரயில் நின்றது. சிந்தாமணிக்கு அருகேயிருந்தவள் எழுந்து கதவண்டை வந்தாள். நாலைந்து போலீஸ்காரர்கள் திடுதிடுவென அந்தப் பெட்டியில் வந்து ஏறினர்கள். பெண்கள் வண்டியில் அவர்கள் திடீரென ஏறவேண்டிய காரணம் என்ன? வண்டி சோதனை செய்யப்பட்டது, சிந்தாமணி உட்கார்ந்திருத்த பலகையின் கீழேயிருந்து ஒரு சதுர மரக்கட்டைப் பெட்டியைப் போலீசார் எடுத்தனர். பரிசோதனை நடந்தது.

அந்தப் பெட்டி நிறைய அபின் அடைக்கப்பட்டிருந்தது. "யாருடைய பெட்டி இது?" போலீசார் கேட்டனர். வழியில் உள்ள பல ஸ்டேஷன்களில் நிறையப் பெண்கள் இறங்கிவிட்டனர். இப்போது மிச்சமிருப்பவர்கள் சிந்தாமணி, அந்தப் பணக்காரி, மற்றும் சில பெண்கள்— அவ்வளவுதான்!

பணக்காரி ஜாடையாக சிந்தாமணியைக் காட்டினாள். போலீசார் சிந்தாமணியை மிரட்டிக் கேட்டனர். அவள், தனக்குத் தெரியாது என்றாள். 'அபின்' என்றால் என்ன? அதைக் கடத்திக்கொண்டு போய்க் கள்ளச் சந்தையில் விற்பதும், வெளிநாட்டுக்கு அனுப்புவதும் எப்படி என்கிற விஷயங்கள் எல்லாம் அந்தக் குற்றமற்ற கோதைக்கு எங்ஙனம் தெரியும்?

இரயிலில் இருந்தவர்களில், சிந்தாமணியின் தோற்றமே சந்தேகத்திற்குரிய தோற்றமாகப் போலீசாருக்குத் தெரிந்தது. அதோடு, அந்தப் 'படாடோபக்காரி'யின் குறிப்பு வேறு சேர்ந்தது!

"உன்னைக் கைது செய்திருக்கிறோம்!" என்று சிந்தாமணியைப் பார்த்து போலீசார் சொன்னார்கள். சிந்தாமணிக்கு அவள் காதுகளையே நம்ப முடியவில்லை.

16

இதற்குள் விஷயம் இரயில் முழுவதும் பரவிவிட்டது. "யாரோ ஒருத்தி அபின் கடத்திச் செல்லும்போது போலீசாரிடம் சிக்கிக்கொண்டாள்" என்று அழகப்பன் காதிலும் செய்தி விழுந்தது. கடைசிப் பெட்டியிலிருந்த டைகரும் கேள்விப்பட்டானேயொழிய, சிந்தாமணிதான் சிக்கிக் கொண்டாள் என்பது அவனுக்குத் தெரியாது.

இரயில் பெங்களூரில் வந்து நின்றது. புருக்கூடு திறக்கப்பட்டதுபோல மக்கள் இரயில் பெட்டியிலிருந்து இறங்கிக்கொண்டிருந்தார்கள். போலீசார் புடைசூழ சிந்தாமணியும் இறங்கினாள். அவள்மீது பழியைப் போட்டுத் தப்பித்துக்கொண்ட அந்தப் பகட்டுக்காரி மிக நல்லவள்போல முகத்தில் நடிப்பைத் தேக்கியவாறு இரயிலைவிட்டு வெளிவந்தாள். டைகரும் பரபரப்போடு சிந்தாமணியைக் காண ஓடிவந்துகொண்டிருந்தான். அதற்குள் போலீசாரையும் சிந்தாமணியையும் மக்கள் சூழ்ந்துகொண்டு வேடிக்கை பார்க்கத் துவங்கினர். போலீசார் தலையைக் கண்ட டைகர், மிரட்சியோடு கூட்டத்திற்குள் நுழைந்தான். "இதோ அவள்தான்! அவளைத் தான் போலீசார் பிடித்திருக்கிறார்கள்!" என்று கூட்டத்தினர் சுட்டிக்காட்டியவண்ணம் அங்குமிங்கும் அலைந்தனர். கைது செய்யப்பட்டவளைப் பார்ப்போமேயென்று கூட்டத்திற்குள்ளே தலையை நீட்டினான் டைகர்! ஒருக் கணம் தலை சுற்றியது அவனுக்கு! தன் எதிரே பார்க்கும் காட்சி என்ன—என்று தன்னைத்தானே உரக்கக் கேட்டுக் கொண்டான். தன்னிடமிருந்து தப்புவதற்காகவே அவள் போலீசாரிடம் சிக்கிக்கொண்டாளா? இப்படியொரு கேள்வி அவனை ஆட்கொண்டது. அவளுக்கல்லவா தெரியும் அவள் படும் வேதனை! வெள்ளிக்கிழமை பொழுது விடிந்தது—விபச்சாரிப் பட்டம் கிடைத்தது! விநாசகாலம் சம்பவித்தது! இப்போது, போலீசார் கையிலே சிக்கும் நிலை பிறந்தது! இவைகளைவிட ஒரு பெண்ணின் வாழ்

விலே கொடுமைகள் விளையவேண்டுமா? இவை போதாதா; அவளை உயிரோடு வைத்து அணு அணுவாகக் கொன்று குவிக்க!

"தப்பிவிட்டாளே என்னிடமிருந்து!"—டைகர் பெரு மூச்சுவிட்டான். பூனை வாய்க் கிளி பூட்டிய கூண்டுக்குள் அடைபட்டால் பூனைக்கு ஏக்கந்தானே பிறக்கும்! இரு புறமும் தொல்லைக்கொண்ட கிள்ளையானுள் சிந்தாமணி. அவளை விடுவிக்க மார்க்கமே கிடையாதா? டைகர் யோசித்தான். தானே போலீசாரை ஏமாற்றி ஓடிவந்தவன். இப்போது வலியப்போய் சிக்கிக்கொண்டால்—அதைவிட அறிவீனம் எதுவுமில்லையென்று குழம்பினான். சரி, நடப்பது நடக்கட்டும் என்ற தீர்மானத்தோடு சற்று தொலைவில் நின்று கவனிக்க ஆரம்பித்தான்.

அழகப்பனும் அவன் தாயாரும் முதல் வகுப்பு வண்டியிலிருந்து இறங்கி, கூட்டம் நிற்கும் பக்கமாக வெளியே போக முயன்றார்கள். "அவள்தான் அபின் கொண்டு வந்து அகப்பட்டுக்கொண்டவள்!" என மக்கள் சுட்டிக் காட்டி அறிவித்துக்கொண்டிருப்பதைக் கண்ட அழகப்பனுக்குத் தானும் அவளைப் பார்க்கவேண்டுமென்ற ஆவல் ஏற்பட்டது தாயாரை மெதுவாக அழைத்தவாறு கூட்டத்தில் எட்டி எட்டி அவளைப் பார்க்க முயற்சி செய்தான். முடியவில்லை. போலீசார் அவளை அழைத்துக் கொண்டு முன்னே போக பின்னே—தாயாருடன் அழகப்பன் போய்க்கொண்டிருந்தான். அழகப்பன் செல்வதை டைகர் பார்த்துவிட்டான். எங்கே அழகப்பனும் சிந்தாமணியும் சந்தித்துவிடுவார்களோ என்ற பயம் அவனைப் பிடித்துக்கொண்டது. தன்னைத் தேடித்திரியும் போலீசாரிடம் ஏற்படுகிற அச்சத்தைவிட அதிகமான அச்சம் அவனைச் சூழ்ந்தது. அழகப்பனையே கூர்ந்து கவனித்தவாறு பின்னாலேயே நடந்தான்.

புகைவண்டி நிலையத்தின் முன்புறத்தில் "போலீஸ் வேன்" நின்றுகொண்டிருந்தது. சிந்தாமணியைப் போலீசார் அதில் கொண்டுபோய் ஏற்றினார்கள். ஏறும்போது

அவனை யாரும் பார்த்துவிடமுடியும். இப்போது அழகப்பன் அவனை நிச்சயமாகப் பார்த்துவிடப்போகிறான். அவள் உடனே தன் கதையைச்சொல்லி அழப்போகிறாள். அழகப்பனும் நம்பிவிடப்போகிறான். பிறகு தன் திட்டமெல்லாம் விழலுக்கிறைத்த நீராகப்போய்விடும். இவ்வாறு எண்ணமிட்டவனுடைகர் துடித்துக்கொண்டிருந்தான். போலீஸ் வண்டியின் படிகளில் அவள் ஏறி வண்டிக்குள் நுழையும் போது, அழகப்பன் அவனைக் காண விரும்பி அருகே அவசரமாக வந்தான். அவன் வருவது அவளுக்கும் தெரியாது. அவனுக்கும் அவள்தான் சிந்தாமணி என்றும் தெரியாது. வண்டியில் நுழையும்போது முகத்தைத் திருப்பி, மக்களைப் பார்த்திருப்பாளேயானால் அவனை அழகு. உடனே அடையாளம் கண்டிருப்பான். அவள் எதற்காக மக்கள் பக்கம் முகத்தைத் திருப்பப்போகிறாள்! பொதுஜனக் கோரிக்கைக்காகப் போராட்டம் நடத்தி அடக்குமுறைக்கு ஆளாகிச் சிறை செல்லும் 'சமூக சேவகியா அவள்? இல்லை! சமுதாயத்தின் 'கழிசடை' யாகி விட்டவள். கன்னி கழியாப் பருவத்திலே கருவுற்று, அபின் கடத்தும் தொழில் நடத்தி ஜீவிக்கும் மனிதப்புழு என சமூகத்தால் வர்ணிக்கப்படும் நிலையிலே உள்ளவள். அவள் ஏன் மக்களைத் திரும்பிப் பார்க்கப்போகிறாள்! திரும்பவில்லை. அதனால் அழகப்பனும் அவனைப் புரிந்துகொள்ளவில்லை. பேதையின் பின்னழகை மட்டுமே கண்டான்.

"கொஞ்ச வயசுக்காரிதான் அம்மா!" என்றான்.

"பலே கைகாரி போலிருக்கு!" என்றாள் தாய்!

அந்தத் தாய்க்கு மருமகளாக வந்திருக்கவேண்டிய மாணிக்கப் பதக்கம், சீந்துவாரற்றுச் சீரழிந்து போய் விட்டது. "போலீஸ் வேன்' புறப்பட்டது, புழுதியில் வீசப்பட்ட அந்தப் புனிதவதியை ஏற்றிக்கொண்டு!

அழகப்பனும், தாயாரம்மாளும் வாடகைக்கார் ஒன்றில் ஏறி வீடு நோக்கிப் புறப்பட்டனர் அழகப்பனின் விலாசத்தைத் தெரிந்துவைத்துக்கொள்ள விரும்பிய டைகர், இன்னொரு வாடகைக் காரில் பின்தொடர்ந்தான். அழகப்ப

னுடைய வீடு எது என்பதை விவரமாகத் தெரிந்து கொண்டு காரிலேயே திரும்பினான்.

சிந்தாமணி போலீஸ்காரர்களிடமிருந்து விடுபட்டு, "லாக் அப்"பிலே அடைக்கப்பட்டாள். கரப்பான் பூச்சி களும், வெளவால் புழுக்கைகளும் நிறைந்த அந்த இருட் டறையிலே வாழ்வின் ஒளி தேடிக் கிளம்பிய வைர நிலவு வீழ்ந்து கிடந்தது. "மங்களகர"மான வெள்ளிக்கிழமை, தன் கடையைக் கட்டிக்கொண்டு சனிக்கிழமைக்கு வழி விட்டது.

* * *

பலகணி வழியே உதய சூரியனின் பொற் கரங்கள் நீட்டப்பட்டு, பாலையூர் மருத்துவ மனையிலே ஆனந்தி துயி லுதறி யெழுந்தாள். நயினு முகம்மது, அருகே வந்து, "ஹார்லிக்ஸ் போடட்டுமா?" என்றான். தலைதான் எனும் விதத்தில் அவளும் தலையசைத்தாள். இரவு பேசிய பேச்சுக்கள் அவர்கள் இருவரையும் நாணத்தில் ஆழ்த்தி யிருந்தன. அந்தப் பேச்சின் தொடர்ச்சியாக அவர்கள் பார்வையிலே வித விதமான மாற்றங்கள் பிரகாசித்தன. அன்று பகல் முழுவதும் மௌனமாகவே இரண்டு இதயங் களும் எண்ணங்களை மூழ்கிக்கொண்டிருந்தன. பேசுவ தால் காணுகிற முடிவைவிட, மௌனத்தாலும், விழியசை வாலும் சிறந்த முடிவைக் காணமுடியுமென்பது காதல் இலக்கணம். காதலுக்கு இலக்கம் தெரிவிக்கும் உள்ளம் பெற்றிருப்பவர்கள்கூட, நாணத்தாலோ — அச்சத்தாலோ, அந்த எண்ணத்தை வார்த்தை வடிவில் வெளியிடத் தயங் குவார்கள். "நான் உன்னைக் காதலிக்கிறேன்" என்று திடுமென ஒரு பெண்ணிடம் சென்று பேசிவிட்டால், இவ்ட முள்ளவளாயிருந்தால்கூட, "எட்டி நில்" என்று கூறு வாளே தவிர, "கட்டிக்கொள்வாய் கண்ணாளா!" என்று கிட்ட வரமாட்டாள்! அதனால்தான் காதல் மாளிகையின் முதல் நுழைவுவாயில் என்று கண்கள் சிறப்பிக்கப்படு கின்றன. கண்கள் மாத்திரம் இல்லாவிட்டால், காதலர்கள்

இருதயமென்னும் சுவரேறிக் குதித்தல்லவா காதல் மாளிகைக்குள் நுழையவேண்டும். வாழ்க, அந்தக் கண்கள்— இப்படி விழிகளுக்கு வாழ்த்துக் கூறியவாறு பகல் ஓழிந்தது. இரவு வந்தது. நயினமுகம்மது ஆனந்திக்கு வேண்டிய உபசரணைகளைச் செய்து விட்டு அருகே அமர்ந்தான்.

"நீங்கள் தூங்கவில்லையா?" என்று வாய் திறந்தாள் ஆனந்தி.

"அவசரமில்லை" யென்றான் அவன்.

சிறிது நேரம் மௌனம். "வீணுக அவன் மனத்தைக் கலக்கிவிட்டு வேடிக்கை பார்க்கிறேரும்" எனத் தனக்குள் வேதனைப்பட்டாள் ஆனந்தி.

டைகரைப்பற்றிய உண்மைமையச் சொல்லாமல், தாளெரு கற்புகெடாத பெண்மணியென்று கூறியிருந்தால் நயினவின் பரிபூரண அன்பைப் பெற்றிருக்க முடியுமே! இதுபோல ஒருக் கணம் நினைத்தாள்.

"! சே!! அப்படி இருவரும் ஒன்றுகி, ஒருநாள் உண்மை அம்பலமாகிவிட்டால்...அவர் உள்ளம் எப்படிச் சிதறிவிடும்?" உண்மையைக் கூறியதற்காகத் தன்னைத் தானே பாராட்டிக்கொண்டான்.

"என்னைத் தயவுசெய்து வெறுத்துவிடுங்கள்!" என்றுள் கண்களில் நீர் கலங்கியவாறு!

"முடியாது ஆனந்தி! நான் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்துவிட்டேன். உன் வாழ்க்கைக்கு இனிமேல் நான்தான் துணைவன்!"

"அப்படியானால்...?"

"நீயோ நானோ மதம் மாறிட வேண்டியதுதான்!"

"மதம் ஏன் மாறவேண்டும்—மனம் மாறுமலிருந்தால் போதும்!" என்று கூறியபடி அவன் கைகளை இறுகப்பிடித்துக்கொண்டு கலகலவெனக் கண்ணீர் உகுத்தாள் ஆனந்தி. அந்தக் கண்ணீர் இருதயத்திலிருந்து புறப்பட்ட புண்ணீர் அல்ல! பரவசத் திருவிழாவில் தெளிக்கப்படும் பன்னீர்!—இருவர் கரங்களும் ஒன்றையொன்று பின்னிக்

கொண்டன; இருதயங்கள் இணைந்து ஒன்றுகி விட்டன என்பதன் அடையாளமாக!

* * *

ஒரு வாரத்திற்கு மேலாகிறது; ஆனந்தியின் உடல் நிலைபற்றி நயினாவிடமிருந்து எந்த பதிலும் வரவில்லையே யென்று ஏங்கிக்கொண்டிருந்தான் அழகப்பன்.

சிந்தாமணியால் ஏற்பட்ட அவமானகரமான ஏமாற் றத்தைப் போக்கிடும் ஆற்றல் ஆனந்தி ஒருத்தியிடமே இருப்பதாக நினைத்து, அந்தநினைவால் மகிழ்ந்திருப்பவன் அழகப்பன். அம்மாவுக்கு நிரம்பப் படித்த பெண் என்றால் பிடிக்காது. அதுவும் லேடிடாக்டர் என்றால் அறவே ஒத்துக்கொள்ளமாட்டார்கள். ஆனால் ஆனந்தியின் விஷயத்தில் அம்மாவையும் சமாதானப்படுத்திவிடலாம் என்ற நம்பிக்கை அழகப்பனுக்கு உதயமாகிற்று. அது ஆசையின் விகாவு. வேதபுரமிருந்து திரும்பியது முதல் ஆனந்தியின் பெயரையே உச்சரித்தபடி உழன்றுகொண் டிருந்தான். "இன்றைக்காவது நயினாவிடமிருந்து ஏதா வது தபால் வராதா?" என்று எதிர்பார்த்தவாறு உட் கார்ந்திருந்த அழகுவின் முன்பு டைகர் வந்து நின்றான். அவனைப் பார்த்த அழகு திடுக்கிட்டான். மிகமிகச் சோகத் தோற்றமுடன் நின்ற டைகர், அழகப்பனைக் கண்டதும் "ஆனந்தி!" என்று வாய்விட்டு அலறிவிட்டான்.

"ஆனந்திக்கு என்ன? என்ன நடந்தது?" என நடுங்கியவாறு எழுந்தான் அழகு!

"நேற்று மூன்தினம் ஆனந்தி இறந்துவிட்டாள்!" என்று கூறிவிட்டு டைகர் தொடர்ந்து அழத் தொடங்கி னான். அழகப்பனுக்கு நிற்க இயலவில்லை. அவன் மனக் கோட்டைகள் இடிந்து தூள் தூளாகிவிட்டன. ஆசைக் கனவுகள் அரும்பிலேயே கலைந்துவிட்டன.

இருண்டுபோன குகையின் வாசலில் தள்ளப்பட்டது போல் ஆகிவிட்டான்.

"கைத்தடியில்லாத குருடன் கல்லும் முள்ளும் நிறைந்த காட்டில் விடப்பட்டதுபோல் ஆகிவிட்டதே என் நிலைமை" என மனதுக்குள் சொல்லி கண்ணீர் வடித்தான்.

"நீண்டநேர மௌனம். தாயாரம்மாள் வந்தாள். தடுமாறியவாறு! செய்தி கேட்டு அவளும் சுருண்டுபோனாள்.

"நயினு முகம்மது என்ன ஆனான்?" என்று அழுகையை அடக்கியவாறு அழுகு கேட்டான்.

"அய்யோ! அதையேன் கேட்கவேண்டும் — மூன்று நாளாகிறது — வீட்டிலேயிருந்த நகைநட்டுக்களை மூட்டை கட்டிக்கொண்டு, உங்கள் நண்பன் எங்கேயோ கம்பி நீட்டி விட்டான்..." எனச் சொல்லி மேலும் அழுதான், டைகர்!

இந்த வார்த்தைகளை அழகப்பனால் நம்பமுடியவில்லை தான் — ஆனாலும், அந்த டைகர் அழுதுகொண்டே சொல்கிறானே நம்பாமல் என் செய்வது?

தன் நண்பன் இவ்வளவு பெரிய கயவனா? ஓரேகுழப்பம் அவனுக்கு! — டைகர், அழகப்பனை வெகு விரைவில் தன் பக்கம் திருப்பிக்கொண்டான். தாயாரம்மாளும் டைகர் பக்கம் சேர்ந்துகொண்டு, நயினுவுக்கு அர்ச்சனைகள் செய்தாள்.

இறுதியில் டைகரிடம், அழகப்பன் ஒரு ஆயிரரூபாய்க்கு நோட்டுக்கத்தையைக் கொடுத்து ஆறுதல் கூறினான்.

"ஆயிரம் ரூபாய், ஆனந்தியின் உயிருக்குச் சமமாகுமா?" என ஒப்பாரிவைக்கத் தொடங்கினான் டைகர். அவனைச் சமாதானம் செய்து அழகப்பனும், அவன் தாயாரும் வழியனுப்பிவைத்தார்கள்.

டைகர், மூக்கைச் சிந்தியவாறே அந்த பங்களாவை விட்டு வெளியேறினான். அவன் வெளியிற்சென்று காள் மணி நேரத்திற்கெல்லாம் தபால்காரன் ஒரு கவரை அழகப்பனிடம் கொடுத்தான். கவரின் மேலேயுள்ள விலாசம் நயினு முகம்மதுவின் கையெழுத்துபோல இருந்தது.

நயினுவின் எழுத்துக்களைக் கண்டதும், அழகு அந்த அஞ்சலை அவசர அவசரமாகப் பிரித்துப் படித்தான்.

17

அன்புள்ள அழகு! வணக்கம். ஆனந்தி முழுசுகம் அடைந்து வேதபுரத்திற்கு வந்துவிட்டாள். நான் இரண்டொரு நாட்களில் வந்து சேருகிறேன். பேசவேண்டியவை நிறைய உண்டு!

அன்பு நண்பன்,

நயினு.

அழகப்பனுக்கு வாய் குழறிற்று. "அம்மா! ஏமாந்து விட்டோம்" என்று கத்தினான். உடனே போலீசுக்குப் 'போன்' செய்து டைகரின் அடையாளங்களைக் கூறினான், அவர்களும் தேடுவதற்கான முயற்சியில் உடனே ஈடுபடுவதாகப் பதில் கூறினர். அழகப்பனுக்கு வேதபுரம் போய் ஒருமுறை ஆனந்தியைப் பார்த்துவிட்டு வரவேண்டும் போலிருந்தது. அம்மாவிடம் எப்படிச் சொல்வது? நயினுவோ, இரண்டொரு நாட்களில் வருவதாக வேறு எழுதிவிட்டான். இருந்தபோதிலும் ஆனந்தியைப்போய்ப் பார்த்தால்தான் அவன் ஆவல் அடங்கும்போலிருந்தது. தனக்கு ஒரே குழப்பமாக இருப்பதாகவும், வேதபுரம் போய் விவரமறிந்து வருவதாகவும் தாயாரம்மாளிடம் கூறிவிட்டு, அன்றிரவே வேதபுரத்திற்குக் கிளம்பினான் அழகப்பன். மறுநாள் காலை 8 மணிக்கெல்லாம் வேதபுரம் போய்ச்சேர்ந்தான். ஆனந்தியும், நயினுமுகம்மதும் காபி சாப்பிட்டுக்கொண்டிருந்தவர்கள், யாரோ வரும் ஓலி கேட்டுத் திரும்பிப் பார்க்கவே அழகப்பன் நின்றான். ஆனந்தி தலைகுனிந்தவாறு எழுந்து நின்று "வாருங்கள்" என்று உபசரித்தாள். நயினுவோ, அழகப்பனைத் தழுவிக் கொண்டு, "என்னப்பா! திடீரென்று விஜயம்செய்து விட்டாய்?" என்று ஆவல் ததும்பக்கேட்டான். நயினுவின்

கேள்வி அழகப்பனின் கவனத்தைக் கவரவில்லை. அவன், ஆனந்தியைப் பார்த்து. "உடம்பு எப்படியிருக்கிறது? பூரண குணந்தானே?" என்று கேட்டான். அவளும், தலையசைத்துப் புன்னகை சிந்தியவாறு "சுகந்தான்" என்று இதழ் திறந்தாள். "காபி சாப்பிடு" என்று அழகப்பனை அருகே உட்காரவைத்துக்கொண்டான் நயினை. ஆனந்தியும் அவர்கள் எதிரே உட்கார்ந்துகொண்டாள்.

"ஊரில் அம்மா சௌக்யந்தானே!" என்று அவள் கேட்டாள்.

அந்தக் கேள்வி அழகப்பனை என்ன பாடுபடுத்திற்று தெரியுமா? மாமியாரைப்பற்றி ஒரு மருமகன் இப்படி விசாரிக்கும்போது மணவாளனுக்கு மகிழ்ச்சி பொங்கத்தானே செய்யும்!

"ரொம்பவும் இளைப்பாயிருக்கிறதே!" என்றான், ஆனந்தியைப் பார்த்தவாறு!

"நீங்கள்கூடத்தான் சற்று இளைத்துக் காணப்படுகிறீர்கள்!" என்றாள் பதிலுக்கு அவள்! தன் உடல் நிலையில் எவ்வளவு அக்கறை காட்டுகிறாள்? இப்போதே இப்படியென்றால்...எதிர் காலத்தில்? — இனிப்பு நிறைந்த கேள்வி எழுந்தது அவன் இருதயத்தில்!

"நான் கொஞ்சம் பருத்திருக்கிறேன் அல்லவா?" என்று கேட்டபடி ஆனந்தியைப் புன்முறுவலோடு நோக்கினான் நயினை.

ஆனந்தி இறந்துவிட்டதாகவும், நயினை நகையோடு ஓடிவிட்டதாகவும் கூறி, டைகர் தன்னிடம் ஆயிரம் ரூபாய் ஏமாற்றி வாங்கிக்கொண்டு போனதை அழகப்பன் விவரமாகச் சொன்னான். உடனே நயினை, "அடப்பாவி! ஆனந்தி இறந்துவிட்டாள் என்பதை நீ நம்பியதற்காகக் கூட நான் ஆச்சரியப்படவில்லை. நான் நகைகளைத் திருடிக்கொண்டு ஓடிவிட்டேன் என்பதை எப்படியப்பா நம்பினாய்? இவ்வளவு காலம் பழகியும், நண்பனைப்பற்றி நீ போட்டிருக்கிற கணக்கு இவ்வளவுதானா?" என்று வருத்தத்

தோடு குறிப்பிட்டான் நயினு. அதற்கு ஆயிரம் சமாதானங்கள் சொன்னுன் அழகு!

சிந்தாமணியைப்பற்றி எப்படியாவது பேச்சை எடுத்து, அழகப்பனுக்கு உண்மையை உணர்த்திவிட வேண்டுமென்று விரும்பினுள் ஆனந்தி. அதற்காக, அவள் நயினுவுக்கு ஜாடை காட்டினுள். நயினு அந்த ஜாடையைப் புரிந்துகொள்ள முடியவில்லை. தன்னைத்தான் அதைவிட்டு எழுந்துபோகச் சொல்லுகிருளாக்கும் என்று கருதி, மெதுவாக எழுந்து அழகப்பனிடம், "சரி—பேசிக் கொண்டிருங்கள், இதோ வந்துவிடுகிறேன், கடைத்தெரு வரையில் போய்விட்டு!" எனக்கிளம்பினுன். தான், சிந்தாமணியைப்பற்றி அவனிடம் விளக்குவதைவிட அவளே விளக்குவது நல்லது என்றும் அவன் நினைத்தான். அதனுல் தான் சற்று ஓதுங்கியிருப்பதுகூட நல்லது என்று எண்ணங்கொண்டு, புறப்பட்டான். அழகப்பனும் தன் நண்பனுக்கு எப்படி நன்றி தெரிவிப்பது என்று தனக்குத் தானே மகிழ்ந்துகொண்டான். ஆனந்தி அழகப்பனிடம் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தபோதிலும் சிந்தாமணி பற்றிய பேச்சுக்கு வருவதற்கு வழிபார்த்துக் கொண்டிருந்தாள்.

"என்ன; திருமண விஷயமெல்லாம் எந்தமட்டில் வைத்திருக்கிறீர்கள்?" — ஆனந்தியின் இந்தக் கேள்விக்கு அழகப்பன், உடனடியாகப் பதில் சொல்லாவிட்டாலும், தான் அவளிடம் கேட்க இருந்த விஷயத்தை அவளே துணிச்சலாகக் கேட்டுவிட்டாளேயென்று ஆச்சரியமும் ஆனந்தமும் கொண்டான்.

"திருமணம் என்ன; நினைப்பதுபோல அவ்வளவு சாதாரணமாக முடிந்துவிடுகிற நிகழ்ச்சியா?"

பதிலேக் கேள்வி உருவிலே கொடுத்தான்.

"திருமணம் நடத்துகிற முறையைச் சொல்லுகிறீர்கள்; நீங்கள்! நான் கேட்பது அதுவல்ல! மணமகள் பற்றி....." என இழுத்தாள் அவள்!

"நானும் அதைப்பற்றித்தான் குறிப்பிடுகிறேன். எதிர்பாராதவிதமாக மலையில் மோதிக்கொண்டு கதிகலங்கிப்போயிருக்கிறோம்; நானும் என் தாயாரும், என் நண்பனும்! அடுத்து எடுக்கிற முயற்சியாவது ஆரம்பத்திலேயே மூளியாகாமல் இருக்கவேண்டுமல்லவா?"

"கண்ணால் கண்டதும் பொய்—காதால் கேட்டதும் பொய்—தீர விசாரிப்பதே மெய்—என்கிற பழமொழி இருக்கிறதே; அதை முழுக்க முழுக்க நம்புகிறவள் நான்! நீங்கள்...?"

"சுற்றி வளைத்துப் பேசினால் எப்படிப் புரியும்? சுருக்கமாகவும் கொஞ்சம் பச்சையாகவும் சொல்லிவிட்டால் இருவருக்குமே குழப்பமிருக்காது என்று கருதுகிறேன்."

"எனக்குக் குழப்பமேயில்லை நிச்சயமாக! உங்களுக்குத்தான்..."

"உண்மை—எனக்குக் குழப்பமேதான்! இப்போதல்ல—குழப்பம் போன வெள்ளிக்கிழமையே ஏற்பட்டுவிட்டது! உன் பதில் எப்படியிருக்குமோ என்றுதான் சந்தேகப்பட்டுக்கொண்டு இருக்கிறேன்."

"என் பதில் உங்களுக்குச் சாதகமாகவே இருக்கும். உங்கள் வாழ்வில் இன்பம் வழங்குவதாகவே இருக்கும்!"

"உங்கள் வாழ்வு என்று பிரித்துப் பேசுவானேன்? 'நம் வாழ்வில்' என்று கூறலாமே!"

ஆனந்தியின் முகம் திடீரென மாறிவிட்டது. அதை அழகப்பனிடம் காட்டிக்கொள்ளாமல் "சரி; டிபனுக்கு நேரமாகிறது. பல் துலக்குங்களேன்!" என்றபடி அதை விட்டு எழுந்தாள். டிபன் சீக்கிரம் வாங்கி வரும்படி வேம்புவை விரட்டினாள். வேம்புவும் போய்விட்டபடியால் தானும் அவளும் தனிமையிலே இருப்பதை உணர்ந்து தன் எண்ணத்தை எப்படியாவது முழுவதும் வெளிப்படுத்திவிட வேண்டுமென்று துடித்தான் அழகு. "பற்பொடி இருக்கிறதா?" என்று கேட்டபடி ஆனந்தியின் அறைக்குள்ளே எட்டிப் பார்த்தான். அவள், "இதோ,

கொண்டுவருகிறேன்" என்று அவசரமாக வெளியே வந்தாள். அழகுக்குப் பேசமுடியாமல் நாக்குக் குழறத் தொடங்கிற்று. கட்டுப்படுத்தமுடியாத ஒரு நடுக்கம் நரம்புகளை உலுக்கிக்கொண்டிருந்தது. பற்பொடி டப்பாவைக் கொண்டுவந்து அவன் கையில் கொடுத்தாள். அதை வாங்கும்போது அவள் கரத்தின் மென்மையான ஸ்பரிச உணர்ச்சியால் கிறுகிறுத்துப் போனான் அழகப்பன். பல் துலக்கியதும் சோப்பு கேட்டான். அதையும் அவளே எடுத்துவந்து கொடுத்தாள். அவன் தோளிலே ஒரு துண்டு இருந்தபோதிலும் முகம் துடைப்பதற்கு ஒரு துண்டு கேட்டான். அதை அவள் கொடுக்கும்போது, அழகப்பனின் விரல்கள் அவளது விரல்களைச் சற்று பல மாகவே அழுத்தின. "டிபன் இப்பொழுது சாப்பிடுகிறீர்களா? அல்லது அவரும் வந்துவிடட்டுமா?" என்று வினவினாள்.

"ஏன்; நாம் இருவருமே இப்போது சாப்பிடலாமே!" என்று தழுதழுத்த குரலில் கூறினான். ஆனந்தி வெளிக் காட்டிக்கொள்ள முடியாத உணர்ச்சியால் திண்டாடினாள். சிந்தாமணியைப்பற்றிப் பேச்செடுத்து, தன் குற்றத்திற்குக் கழுவாய் தேடிக்கொள்ளலாம் என நம்பியவளுக்கு அழகப்பனின் போக்கு அதிர்ச்சியைத் தந்தது! வேம்பு, டிபனை வாங்கிக்கொண்டு வந்துசேர்ந்தான். அவனைவிட்டே பரிமாறச் சொன்னாள். அவளும் அருகே வந்து உட்கார்ந்து சாப்பிடுவாள் என்று எதிர்பார்த்தான். நடக்கவில்லை. வேம்பு டிபனையும், காப்பியையும் அழகுவின் எதிரே வைத்துவிட்டு, ஆஸ்பத்திரி வேலையைக் கவனிக்கப் போய்விட்டான். நல்லெண்ணெய் பிடிக்காது அவனுக்கு!

ஆனாலும்: "கொஞ்சம் நல்லெண்ணெய் இருக்குமா?" என்றான். ஆனந்தி வேறு வழியின்றி எண்ணெய் கொண்டுவந்து ஊற்றினாள். "போதும்! போதும்!!" என்று சொல்லிக்கொண்டே, அவள் கையைப் பிடித்து நிறுத்திவிட்டான் அழகப்பன். ஆனந்தியின் கையிலிருந்த எண்ணெய் ஜாடி, அப்படியே மேசைமீது கவிழ்ந்துவிட்டது. அவளால் அங்கு நிற்கமுடியவில்லை. 'மளமள'

வென்று அறைப்பக்கம் போய்விட்டாள். அழகப்பன், தானே, சிந்திய எண்ணெயை ஜாடியில் வழித்து நிரப்பி, மேசையையெல்லாம் துடைக்க ஆரம்பித்தான். அந்த வேலைகளை முடித்துவிந்து டிபனைச் சாப்பிட முயன்றான்; முடியவில்லை. தொண்டை அடைத்துக்கொண்டது.

எழுந்து ஆனந்தியிருந்த அறைக்குள்ளே சென்றான். அவள், தலையில் கை வைத்தவாறு ஒரு சோபாவில் சாய்ந்து உட்கார்ந்திருந்தாள். மெதுவான குரலில் "ஆனந்தி!" என்றான்.

"தயவுசெய்து வெளியே போய் உட்காருங்கள்!" என்று கெஞ்சுகின்ற தொனியில் கேட்டுக்கொண்டாள். அவனுக்கு என்ன செய்வது; என்ன பேசுவது என்றே புரியவில்லை! 'தான் நடந்துகொண்டது சரியா? தவறா?' —என்ற மனப்போராட்டம் வேறு எழுந்தது. தவறு என்றால்; அந்தத் தவறுக்கு அவளையும் இணங்கவைத்து, இருவரும் குற்றவாளிகளாகிவிட வேண்டும்— இல்லையேல் அவளுக்கு நேராக என்றென்றும் குற்றம்புரிந்தவன் என்ற பட்டத்தோடு தலைகுனிந்து நிற்கவேண்டி நேரிடும்— இப்படி எண்ணினான் அவன்! தான் அவசரப்பட்டுவிட்டதையும் தெளிவாக உணர்ந்தான்.

அவள் கருத்தையும் தெரிந்துகொள்வதுதான் நல்லது என்ற முடிவுக்கு வந்து, 'ஆனந்தி! நான் நினைப்பது தவறு என்று கூறுகிறாயா?" என்றான்.

"நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"— நடுக்கத்தோடு மறுமொழி பிறந்தது.

"நான் நினைப்பதைத்தான் நீ புரிந்துகொண்டிருப்பாயே!"

"பெண்களை, ஆண்கள் எவ்வளவு சாதாரணமாகக் கணக்குப் போட்டுவிடுகிறார்கள்!"

"தவறுதான் ஆனந்தி! உன் உள்ளத்தை அறியாமல் என் மனம்போல் நடந்துகொண்டேன். மன்னித்துவிடு! ஆனால் ஒன்று! புயலால் தாக்குண்டவனைப்போல

ஆனேன் அன்று! நீதான் அமைதி வழங்கினாய் எனக்கு! இன்று மீண்டும் புயல்–பூகம்பம்—எரிமலை—எல்லாமே எழுந்துவிட்டன என் வாழ்வில்!"

"உங்களுக்காக நான் மிகவும் வேதனைப்படுகிறேன். உங்கள் வாழ்வில் சூறாவளி வீசுவதற்குக் காரணகர்த்தாக்களில் நானும் ஒருத்தியாக இருந்தேன். அந்தச் சூறாவளியை அடக்குவதற்கும் நானே முன்னிற்கிறேன் இப்போது! ஆனால் தாங்கள் நினைப்பதுபோன்ற முறையில் அல்ல!"

"பின் எந்த முறையில் ஆனந்தி?"

"சிந்தாமணியைக் களங்கமுடையவள் என்று உங்களை என்னும்படி செய்தது அந்தப் பாவி டைகரும், நானுந்தான்!"

அழகப்பன், அவள் பேச்சைத் தொடரவிடவில்லை. சிந்தாமணியை நல்லவளாக்கித் தன் தலையில் கட்டுவதற்காகவே அவள் மீண்டும் தந்திரம் செய்கிறாள் என்று அவன் கணக்குப் போட்டுக்கொண்டான்.

"சிந்தாமணியின் பேச்சையே என்னிடம் எடுக்க வேண்டாம்—நான் உன்னைப்பற்றித் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அதற்கு மட்டும் பதில் சொன்னால் போதும்!" என்றான்.

அவள் பதில் பேசவில்லை. மௌனமாக நின்றாள். அவனும் அறையைவிட்டுப் போகாமல் அவளருகே நின்று கொண்டிருந்தான். மீண்டும் அவனை உணர்ச்சிக் கும்பரம்போல் சுழலவிட்டது.

"ஆனந்தி, பதில் சொல்!.....ஏன் மௌனம் சாதிக்கிறாய்? மௌனம் சம்மதத்திற்கு அடையாளம் அல்லவா?" எனக் கேட்டவாறு அவள் தோளைத் தழுவினான். அவன் அவளைத் தழுவுவதற்கும் நயினா முகம்மது உள்ளே வருவதற்கும் சரியாக இருந்தது.

ஆனந்தி சடேரென அவனிடமிருந்து விடுபட்டு வெளியேறி தோட்டத்துப் பக்கம் சென்றாள். நயினா

எதுவும் பேசவில்லை. இப்படியொரு காட்சியைக் காணாத வனைப்போலவே நடந்துகொண்டான். "என்ன அழகு, டிபன் சாப்பிட்டாச்சா?" என்று வழக்கமான முகபாவத் தோடு கேட்டான். அழகுவின் முகத்தில் அசடு வழிந்தது, ஆனலும் சமாளித்துக்கொண்டு "சாப்பிட்டுவிட்டேன்" என்றுன். அவன் தேகமெங்கும் வியர்த்துக்கொட்டியது.

நமினு, "ஆனந்தி! ஆனந்தி!" என்று கூப்பிட்டான். அவளும் தோட்டத்துப் பக்கமிருந்து "ஏன்" என்று கேட்டபடி உள்ளே வந்தாள். "பத்திரிகை பார்த்தாயா? ...வேதபுரத்துச் சேதிகள் இரண்டு வெளியாகியிருக்கின் றன" என்று அவள் கையிலே பத்திரிகையைக் கொடுத் தான்.

"என்னப்பா வேதபுரத்துச் சேதி?" என்றுன் அழகு; சமாளிப்பதற்காக!

"அதுதான்; டைகர் உன்னை ஏமாற்றிய சேதி ஒன்று!"

"இன்னென்று?..."

"சிந்தாமணி அபின் கடத்திச் செல்லும்போது போலீ சாரால் பிடிக்கப்பட்டு, மூன்று மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறுளாம்!

இதைக் கேட்டு அழகு அதிர்ச்சியடையவில்லை, அதிகமாக!

ஆனந்தி, "ஆ!" என்று ஏங்கினுள். அப்போது வேம்பு வேகமாக ஓடிவந்து, "அம்மா! அம்மா! கேட்டிங் களா சேதி! சிந்தாமணியோட அப்பா, சிவநேசர், ஆற்றிலே விழுந்து தற்கொலை செய்துகொண்டாராம்!" என்றுன்.

கூடத்தில் மௌனம் நிலவியது. அழகு, நமினு, ஆனந்தி மூவரும் ஒருவர் முகத்தை யொருவர் பார்க்க விரும்பாமல் அசைவற்று நின்றுவிட்டார்கள்.

18

"நாள், நட்சத்திரம், சாமி, கோயில், ஜெபம், தபம் இப்படியெல்லாம் நம்பி நம்பிக் கடைசியில் கெட்டுப் போனேன். நான் நம்பிய நாளோ—நட்சத்திரமோ—கோயிலோ—தெய்வமோ எதுவுமே என்னையும் என் குடும்பத்தையும் கௌரவமாக வாழவிடவில்லை. என் மகள் எப்படி விபச்சாரியானாள்? எப்படிக் கள்ள அபின் கடத்தும் கைகாரியானாள்? கேள்விகளுக்குப் பதில் கிடைக்கவில்லை. தெய்வமும் ஊமையாகிவிட்டது. நான் உயிரோடிருந்தால் இந்தக் கேள்விகளைக் கேட்டுக்கொண்டே மனத்தை அலட்டிக்கொண்டிருப்பேன். இந்தக் கேள்விகளிலிருந்து என் உள்ளத்தையும், தெய்வத்தையும் விடுவிப்பதற்காகப் பிணமாகிவிடுகிறேன். அமைதி பெறுகிறேன். சிவகாமி மஞ்சள், குங்குமம் இழந்துவிடுவாள். அவளுக்குக் கட்டிய மாங்கல்யத்தை நானே பலாத்காரமாக அறுத்துவிடுகிற குற்றச்சாட்டுக்கு ஆளாகிறேன். பரவாயில்லை .....என் கொதிப்பு அடங்க இதைத் தவிர வேறு வழியில்லை. பைத்தியக்காரன் ஏதோ கிறுக்கி வைத்திருக்கிறான் என்று நினைக்காதீர்கள்! பைத்தியம் தெளிந்துவிட்டது எனக்கு. அதன்பிறகே இந்த நல்ல முடிவைத் தேர்ந்தெடுத்தேன். சிந்தாமணி, மாசற்றவள் என்று எப்போதாவது உண்மையிலேயே நிரூபிக்கப்பட்டால், அவள் அழகான கரங்களால் என் சமாதிக்கு மலர் தூவட்டும். இது ஓரு வெறுங் கனவு என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

அவளாவது அப்பழுக்கற்றவள் என்று நிரூபிக்கப்பட வாவது! பாவி, பாதகி, என் குடும்பத்தைக் கெடுத்த குடிகேடி! அவளுக்கு என் மரணச் செய்தியைக்கூடச் சொல்லாதீர்கள்!...அவள் நல்லவள் என்று தீர்மானமாகத் தெரிந்தால் வேண்டுமானால் சொல்லுங்கள்!...சீ! என்ன குழப்பம் எனக்கு; அமைதி காணப்போகிற நேரத்திலே!"

பிணமாக மிதந்துகொண்டிருந்த சிவநேசரின் இடுப்பிலே நனைந்துபோன கடிதத்தில் மேற்கண்ட வாசகங்கள்

இருந்தன. பஞ்சாயத்தார் கூடி தற்கொலைதான் என்று முடிவு செய்யமட்டுமே அந்தக் கடிதம் பயன்பட்டது. ஊரார் அனைவருங்கூடி சிவநேசரின் அமைதி நிறைந்த உடலைப் புதைத்துவிட்டுத் திரும்பினர்கள். அவர்களுக்கே ஆச்சரியமாக இருந்தது; நன்றாக வாழ்ந்துகொண்டிருந்த குடும்பத்தில் இப்படித் திடீரென்று பயங்கரமான மாறுதல் எப்படி ஏற்பட்டது என்று! புயல்கூட அடிப்பதற்கு முன்பு தெரிந்துவிடுகிறது. வெள்ளம் வருவதற்குமுன் கண்டு பிடித்துவிடலாம். சிவநேசர் குடும்பத்தைச் சீரழித்த நிகழ்ச்சிகளுக்கு எந்தவித முன்னறிவிப்பும் கிடையாது.

ஊரிலே பலர் பலவிதமாகப் பேசிக்கொள்ள ஆரம்பித்தனர் சிவநேசரின் குடும்பத்தைப்பற்றி! அழகப்பனின் மனத்திலும் குழப்பம் தலைதூக்கத் துவங்கியது. குழந்தை பெற்ற சிந்தாமணி பெங்களூர் எப்படிச் சென்றாள்? அபின் எப்படிக் கடத்த முடிந்தது? இவ்வளவுக்கும் உடல் நிலை எப்படி இடங்கொடுக்கும்? கேள்விகள் மாறி மாறி எழுந்து அவன் இதயத்தை நிரப்பிக்கொண்டேயிருந்தன. அதோடு, ஆனந்தியிடம் அவன் நடந்துகொண்டதும், அதை ஆனந்தி வரவேற்ற முறையையும் அவனைப் பாயத்திலும் சங்கடத்திலும் ஆழ்த்திவிட்டது. சிந்தாமணியைப் பற்றி அவனிடம் விளக்கமுரைக்கவேண்டுமென்று எண்ணியிருந்த நயினா முகம்மது அந்தப் பேச்சையே எடுக்காமலிருந்துவிட்டான். காலையில் அவன் கண்ட காட்சியை நினைத்து நினைத்து பெருமூச்சு விட்டுக்கொண்டான். தன் நண்பன் அழகப்பனுக்கு இப்படியொரு எண்ணம் இருக்கிறதென்று முன்பே தெரிந்திருந்தால் ஆரம்பத்திலேயே ஆனந்தியைவிட்டு வெகுதூரம் விலகிப்போயிருப்பான்.

இதிலே, அவன் செய்த பெரிய தவறு, ஆனந்திமீது அவனுக்குள்ள அன்பையும் காதலையும் அழகப்பனிடம் முன்பே சொல்லாததுதான்! சொல்லியிருந்தால் அழகப்பன் ஆனந்தியை நினைக்காமலே இருந்திருக்கக்கூடும்! இந்தப் பிரச்சினைக்கு முடிவு காணுவது எங்ஙனம் என்ற சிக்கலிலே அகப்பட்டுத் தவித்தான் நயினா முகம்மது!

ஆனந்தி, தன்னைப்பற்றி நயினு முகம்மது தவருகக் கருதிவிட்டானே என்று தவித்துக்கொண்டிருந்தான்; அவனைத் தனியாகச் சந்தித்து விளக்கம் உரைக்கவும் வசதியில்லாமல் போய்விட்டது. நண்பர்கள் இருவரும் மனத்திலே ஆயிரம் எண்ணங்களை உருவாக்கிக்கொண்டு அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்தாலும் கூட ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாமல் உரையாடிக்கொண்டும் உறங்கிக் கொண்டுமிருந்தார்கள். அதனல் நயினுவைத் தனித்து சந்தித்துப் பேச ஆனந்திக்கு வாய்ப்பே கிடைக்வில்லை. சிந்தாமணியைப்பற்றி எழுந்த கேள்விகளுக்கு அழகப்பன் நயினுவிடம் விடை கேட்டிருப்பான் வேறு நாட்களாயிருந்தால்! ஆனல் அழகப்பனுக்கு இப்போது ஒரு பெண்ணைப் பற்றித் தன் நண்பனிடம் பேசவே கூச்சமாயிருந்தது. ஆனந்தியைத் தான் தழுவியதையும், அவள் அதைவிட்டு ஓடியதையும் நயினு பார்த்துவிட்டான் என்பது அவனுக்கு நன்ருக விளங்கும். அதனல் தனக்கும் ஆனந்திக்கும் காதல் உருவாகியிருப்பதாகக்கூட நயினு கருதலாம். அந்தக் கருத்தையே நாமும் வலியுறுத்தி விட்டால் என்ன என்ற எண்ணமும் அவனுக்கு எழுந்தது.

இறுதியில் அழகப்பன் நயினுவிடம் தனக்கும் ஆனந்திக்கும் காதல் தொடர்பு ஏற்பட்டிருப்பதாகவே வர்ணித்து ஒரு கற்பனைக் கதையைக் கூறிவைத்தான். நயினு அந்தச் செய்தியைக்கேட்டு பொருமை கொள்ளவில்லையென்ருலும் மிகுந்த வருத்தமுற்ருன். அந்த வருத்தமும், ஆனந்தி தன்னைவிட்டுப் போய்விட்டாளே என்பதால் ஏற்பட்ட தல்ல! ஆள்மயக்கும் ஆனந்தியின் வலையிலே அழகப்பனும் விழுந்துவிட்டானே யென்பதால் ஏற்பட்டதுதான்! இதை அவனிடம் எவ்வண்ணம்! விரிப்பது? வெளியிட்டால் அழகப்பன் தன்னைப்பற்றித் தவருகக் கருதக்கூடும்!

அவன் காதலை முறிப்பதற்காக, தான் தீட்டும் சதித் திட்டம் அதுவெனத் தீர்மானித்தாலும் ஆச்சரியப்படுவதற் கில்லை. சரி; எப்படித்தான் மாறுதல்கள் மலர்கின்றன என்று கவனிப்போம் என்று பொறுமையை வரவழைத்துக்

கொண்டான் நயினு! ஆகாயத்திலே திரிந்திடும் மேக மந்தைகள் ஆடாக, மாடாக, மானுக, மயிலாக, மந்தி போல, மனிதன்போல — மாறிக்கொண்டேயிருப்பதைப் பொறுமையோடு கவனிக்கும் கவிஞரின் இன்ப உள்ளத் தோடு அல்ல; விபத்துக்கு உள்ளான ஆகாய விமானத் திலேயிருந்து பாரசூட் குடை வழியாக பூமியை நோக்கி வரும் பிராணி, 'காட்டிலே இறங்குவோமா — கடலிலே இறங்குவோமா — கரடியின் அருகே விழுவோமா' என் றெல்லாம் விணுடிக்கு விணுடி ஆவலோடு கவனிப்பானே; பாரசூட் இறங்கும் வழியிலுள்ள மாறுதல்களை — அதைப் போன்ற அச்சம் நிறை ஆவல் சூழ்ந்த உள்ளத்தோடு நயினு முகம்மது கவனிக்கத் தொடங்கினான்.

*　　*　　*

கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்ட சிந்தாமணியை விடுவிக்கக்கோரி ஒரு தனவந்தர் அப்பீல் செய்துகொண்டி ருப்பதாகச் சிந்தாமணிக்குச் செய்தி வந்தது சிறைச்சாலை யில்! சிந்தாமணிக்கு அந்தத் தனவந்தர் யாராக இருக்கும் மென்ற சந்தேகம் பிறந்தது. ஒருவேளை அழகப்பனு யிருக்குமோ என்று யோசனை செய்தாள். அந்த யோசனை அவளுக்குப் பூரிப்பை அளித்ததாயினும் இனிமேல் அவன் முகத்தில் எப்படி விழிப்பது என்ற அச்சத்தையும் ஊட்டியது. அப்பீல் உத்தரவு கிடைத்ததோடு, சிந்தாமணி ஜாமீனில் வெளியேறவும் அனுமதி கிடைத்துவிட்டதாக அவளுக்கு தகவல் எட்டியது. "யாரோ ஒரு தேவராம்; பெரிய தனவந்தராம்; அவர்தான் வக்கீல் வைத்து வாதாடி ஐநூறு அறுநூறு; ரொக்க ஜாமீன் கட்டி சிந்தா மணியை ஜாமீனில் எடுக்கிறாராம்"—என்றெல்லாம் ஜெயில் வார்டர்கள் காற்று வாக்கில் செய்திகளைப் பரப்பினார்கள். கூண்டுக் கிளியாக அடைபட்டிருந்த அவளுக்கு இந்தச் செய்திகள் புதுமையாக இருந்தனவேயொழிய புளகாங்கித மூட்டுவனவாக இல்லை. "யார் தேவர்? ஒரு வேளை பாலகங் காதரத் தேவரோ? அவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்; பார்த்தது இல்லை! அவருக்கு நம் குடும்பத்தின்மீது ஏது

அவ்வளவு அக்கறை! ஒருவேளை உபகாரம் செய்யும் சுபாவம் படைத்த உத்தமரோ அவர்!''

இப்படியெல்லாம் அவளாகவே எண்ணி ஏங்கிக் கொண்டிருந்தாள். அவள் குழப்பத்தை நீடிக்கவிடாதபடி ஜாமீனில் விடுதலையாகும் உத்தரவும் வந்துசேர்ந்தது. ஒன்றும் புரியாமல் திகைத்தவாறு சிந்தாமணி சிறைக் கோட்டையைவிட்டு வெளியே வந்தாள். சிறை வாசலில் குள்ள உருவமும், பெரிய சரீரமும் படைத்த கரும்புக் கோட்டுக்காரர் ஒருவர் நின்றுகொண்டிருந்தார். அவர் பக்கத்திலே மற்றொரு வாட்டசாட்டமான மனிதர் இளந் தாடியுடனும், தலைப்பாகையுடனும், பட்டுச்சொக்காய், சராயுடனும் நின்றுகொண்டு சிந்தாமணியை வரவேற்றார். சிந்தாமணி அந்த மனிதரைப்பார்த்து, ''நீங்கள்.....?'' என்று வெட்கத்தோடும் வழிந்தோடும் வேதனைப் பெரு வெள்ளத்தோடும் கேட்டான்.

''நான்தான் பாலகங்காதரத்தேவர்!...உங்களூருக்குப் பக்கத்து ஊர்! இவர்தான் நமது வக்கீல்.....பெங்களூர் பெரியசாமின்னு மிகப்பெரிய வக்கீல்!...'' என்று வக்கீலையும் அறிமுகப்படுத்திஞர் தேவர். வக்கீல் சிந்தாமணிக்கு வணக்கம் தெரிவித்தார். அவளும் கண்ணீர் பெருக்கிய படி வணங்கி நின்ருள். பிறகு மூவரும் வக்கீலின் காரில் ஏறி அவரது வீட்டிற்குப் புறப்பட்டார்கள். வக்கீல் சிந்தாமணியின் வேதனையைப் பார்த்து மனமுருகிப்போனர். ''இவ்வளவு நல்ல பெண்மணியின்மீது அநியாயமாகக் குற்றம் சுமத்திவிட்டார்களே'—என்று அங்கலாய்த்துக் கொண்டார். சிந்தாமணி, பாலகங்காதரத் தேவருக்கு மிகுந்த நன்றி தெரிவித்துக்கொண்டு.

''நீங்கள் எனக்காக இவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டது ஆச்சரியமாயிருக்கிறது!'' என்ருள். உடனே வக்கீல்,

''என்னம்மா செய்வது; உன் அப்பாவேறு தற்கொலை செய்துகொண்டார்...'' என்று வக்கீல் கூறியதுதான்

தாமதம்; சிந்தாமணிக்கு உலகமே சுற்றியது போலிருந்தது. தேவரின் முகம் மாறிவிட்டது. வக்கீலைப் பார்த்து, "என்ன சார்: சொல்லவேண்டாமென்றேன்; சொல்லிவிட்டீர்களே?" என்று கடிந்துகொண்டார்.

வக்கீல் மிரளமிரள விழித்து, "மன்னிக்கவும் மிஸ்டர் தேவர்! வாய்தவறி உண்மையைச் சொல்லிவிட்டேன்! பரவாயில்லை – என்றைக்கிருந்தாலும் ஒருநாள் தெரியத் தானே போகிறது!" என்று மழுப்பினர். சிந்தாமணி தேவரின் காலைப் பிடித்துக்கொண்டு,

"என்னை எப்படியாவது உடனே வேதபுரத்துக்கு அனுப்பிவையுங்கள். என் அம்மாவையாவது உடனே நான் பார்க்கவேண்டும்!" என்று கதற ஆரம்பித்தாள். தேவர் அவளுக்கு எவ்வளவோ சமாதானம் சொல்லிப் பார்த்தார். "ஒருவழியாக வழக்கில் வெற்றி பெற்று விடுதலை அடைந்தபிறகு தாயாரைப் போய்ப் பார்க்கலாம்; அம்மாவுக்கும் அப்போது சற்று ஆறுதலாக இருக்கும்" என்று கூறினர். சிந்தாமணி கேட்டால்தானே! வக்கீலும் அவள்பக்கம் பேசி, "அடுத்த வாரந்தானே கோர்ட்டுக்கு வரவேண்டியிருக்கிறது; அதற்குள் அவள் போய்விட்டு வரட்டுமே" யென்று வாதாடினர். அதில் வெற்றியும் கண்டார். தேவரையும் தன்னோடு கூப்பிட்டாள் சிந்தாமணி. அதற்குத் தேவர், தனக்கு பெங்களூரில் மிக முக்கியமான வேலை ஒன்று இருப்பதாகவும், அதை முடித்துக் கொண்டு நாளை இரவு ஊருக்குப் புறப்பட இருப்பதாகவும், நாளை மறுநாள் வேதபுரத்தில் வந்து சிந்தாமணியை சந்தித்து, இருவருமே புறப்பட்டு பெங்களூருக்கு வந்து விட்டால், வழக்கு விஷயங்களைக் கவனிக்கலாமென்றும் கூறி, அன்று பகல் வண்டியிலேயே சிந்தாமணியை வேதபுரம் அனுப்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். சிந்தாமணியும் தேவருக்காக வேதபுரத்தில் காத்திருப்பதாகவும், நாளை மறுநாள் அவர் வரும்போது அவரோடு பெங்களூர் வரத் தயாராய் இருப்பதாகவும் கூறினாள். பின்னர், வேதபுரம் புறப்பட்டாள்; தாலி இழந்த தன் தாயைச் சந்திப்

பதற்காக! இரவு ஒரு மணி சுமாருக்குப் பாலையூரில் இறங்கி அங்கிருந்து வேதபுரத்திற்கு ஓட்டமும் நடையுமாகப் புறப்பட்டாள் பாலையூரின் இருளமைந்த தெருக்கள், டைகர் அவளைத் துரத்தி விரட்டியதை ஞாபகப்படுத்தி— பயங்கர உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டன. "தந்தையின் முகதரிசனங் காணமுடியாத பாவியாகிவிட்டேன் — தாயின் மஞ்சளிழந்த முகத்தை எப்படிப் பார்ப்பேன்?"—என்று புலம்பியபடி வேதபுரம் நோக்கி ஓடிக்கொண்டேயிருந்தாள்; தரையிலே ஒரு நிலவு போல!

வேதபுரம் வந்துசேர்ந்தாள்! வேதபுரம் அவளுக்கு வேதனைபுரமாகத்தான் தோன்றியது! விடிந்தால் யார் முகத்திலும் படமுடியாது. அவள் ஒதுக்கப்பட்டவள்; ஒழுக்கம் கெட்டவள்! சீரற்றவள்; சிறை சென்றவள்! இப்படியெல்லாம் அர்ச்சனைகள் நடத்த அந்தகாரத்திலே மூழ்கி அமைதி பெற்றிருக்கும் அந்தக் கிராமம் தயாராக இருந்தது.

சிந்தாமணி, தன் வீடுநோக்கி ஓடினாள். அங்கே அவள் அப்பா இல்லை! அதை அவளால் நினைக்கவும்— அந்த நினைப்பைச் சுமக்கவும் இயலாதுபோயிற்று! தாய் எப்படி ஓடிவந்து அணைத்துக்கொண்டு அலறப் போகிறாளோ? அய்யோ கொடுமை! கொடுமை!! சிந்தாமணி செந்தேள்கள் ஆயிரம் கொட்டினாற்போன்ற துடிதுடிப்புடன் வீட்டு வாயிலை அடைந்தாள். அவளையறியாமல் "அம்மா" என்று கத்தினாள், கதவிலே சென்று மோதிக் கொண்டாள்; "அப்பா" என்று அலறியவாறு! கதவு தாளிடப்படாமல் இருந்து, திறந்துகொண்டது. "அம்மா! அம்மா!!" என்று கூச்சலிட்டாள். அம்மா இல்லை! தலையிலேயாரோ உதைத்ததுபோலிருந்தது. அண்ணாந்து பார்த்தாள்; இரண்டு கால்கள் தொங்கிக்கொண்டிருந்தன! வீறிட்டுக் கதறினாள். சிவகாமி, நிம்மதியாக ஊஞ்சலாடிக்கொண்டிருந்தாள்; சிந்தாமணியை ஏறெடுத்துப் பார்க்காமல்!

19

சிவகாமிக்கு சாவைத்தவிர வேறு என்னதான் வழி யிருக்கிறது? மகளும் போய்விட்டாள். மானமும் போய் விட்டது. இறுதியில் "மாங்கல்ய"மும் போய்விட்டது. ஒருமுழக் கயிற்றைத் தவிர அவளுக்கு அமைதி அளிக்கக் கூடிய சாதனம் வேறு எதுவுமேயில்லையென்றுகினிட்டது. தாயும் தந்தையும் தங்களின் வாழ்க்கைப் பயணத்தை முடித்துக்கொண்டு பிணமாகிவிட்டார்கள், சிந்தாமணியை நடைப்பிணமாக ஆக்கிவிட்டு! தாயின் காலைக் கட்டிக் கொண்டு சிந்தாமணி கதறினாள். "இனி எனக்கு யாரம்மா நாதி?" என்று புலம்பினாள்.

"அம்மா! என்னைப் பெற்று வளர்த்து சீராட்டிப் பாராட்டி, 'செப்புச் சிலையே! செந்தமிழே!'-என்றெல்லாம் தாலாட்டுப்பாடி, 'தரையில் படலாமோ என் தங்கத்தின் பாதம்' என்று இடுப்பில் சுமந்து இடையருத் துயர்களை யேற்று, என் வளர்ச்சி, வளம், நலம் இவைகளிலேயே நாட்டங்கொண்டு இறுதியில் இப்படி நலிந்துபோனையே; ஏனம்மா? நாம் யாருக்கு என்ன தீங்கம்மா செய்தோம்? நமக்கு ஏன் தாயே இப்படியெல்லாம் கொடுமைகள்? அய்யோ! உன் வயிற்றில் நான் ஒரு ஆணாகப் பிறந் திருக்கக்கூடாதா? ஆணாகப் பிறந்திருந்து, கற்பு நெறி தவறி நடந்திருந்தால்கூட இந்த உலகம் மன்னித்திருக் குமே! இப்படியெல்லாம் பழி சுமத்திப் பழிப்புக் காட்டி யிருக்காதே; பெண்ணாக நான் பிறந்ததால்தானே இல்லாத பழியைச் சுமத்திப் பொல்லாத வார்த்தைகளால் நம் குடும் பத்தையே அடியோடு பொசுக்கித் தள்ளிவிட்டது! அம்மா! இனிமேல் யாரையம்மா நான் அம்மா என்று ஆசைநிரம்பக் கூப்பிடுவேன்? யாரம்மா இருக்கிறார்கள்? 'வயதான காலத்தில் மகள் வீட்டில் போய், நீட்டிய காலை மடக்காமல் நிம்மதியாக உட்கார்ந்துகொண்டு சாப்பிடுவேன்!' என்று எல்லோரிடமும் அடிக்கடி கூறுவாயே; மகள் வீடே இல்லை யென்று ஆகிவிட்டதே உனக்கு! மயான வீட்டுக்குப் புறப்

பட்டுவிட்டாயே! நீதான் என்ன செய்வாய்? மகனே விபச்சாரியென்று கூறும்போது அதைக் கேட்டுக்கொண்டு தாய் உள்ளம் எப்படித்தான் கொதிக்காமல் அமைதியாக இருக்க முடியும்! விபச்சாரி மட்டுமா? சிறைப்பறவையும் ஆகி விட்டாள்! அதுவும் கேவலமான தொழிலில் ஈடுபட்ட தாகக் குற்றம் சாட்டப்பட்டு! உன்னுல் எப்படித்தான் உயிர் வைத்துக்கொண்டிருக்க முடியும்! இவ்வளவுக்கும் யாரம்மா காரணம்? யார் காரணம்? அந்த அக்கிரமக் காரன் டைகர்! அந்த அநியாயக்காரி ஆனந்தி!..... அவள்தான் என்னையும் என் குடும்பத்தையும் இழிவுப் படு குழியிலே தள்ளியவள். அவளைப் பழிதீர்த்துக்கொண் டால்தான் என் மனம் அமைதியடையும்!

"குடும்பத்தைக் கெடுத்த கொலைகாரி! ஒரு பெண் ணின் வாழ்வைப் பலியாக்குகிறோம் அக்கிரமமாக என்று எள்ளளவும் எண்ணிப் பார்க்காத பெண்ணுருவப் பேய்! அவளைப் பழிவாங்குவதே எனக்கு முதல் வேலை! அவளை அழித்துவிட்டுத்தான் மறுவேலை! அவள் உயி ரோடு இருக்கக்கூடாது! இருந்தால் இன்னும் எத்தனை பெண்களின் எதிர்காலத்திற்கு "எமனு"க வருவாளோ; யார் கண்டது? இதோ, இப்போதே போகிறேன். அந்த ஆனந்தியைப் பழிவாங்கிவிட்டுத் திரும்புகிறேன்! சிந்தா மணி! நீ கொலைகாரியாகவும் மாறு! இனியென்ன மிச்ச மிருக்கிறது, பட்டம்? விபச்சாரி! மோசடிக்காரி!! அடுத்தது கொலைகாரி!!!

"அம்மா, உன்னைப்போல தற்கொலை செய்துகொண்டு சாகமாட்டேன் நான்! நான் சாவதற்குள் ஒரு நல்ல காரி யத்தைச் செய்துவிட்டுச் சாகிறேன். நான் செய்யப்போகும் காரியத்திற்குச் சாவுதான் எனக்குப் பரிசாகக் கிடைக்கும்! உன்னைப்போல உலகத்துக்குத் தெரியாமல் ஒளிந்து கொண்டு சாகவேண்டியதில்லை நான்! பகிரங்கமாகத் தக்கப் பாதுகாப்புடன் மணியோசை முழங்கத் தூக்கு மேடையில் என் உயிரை வாங்குவார்கள்! புராணீகர்கள் கூறுவது உண்மையாயிருந்து, நீங்கள் இருவரும் தேவ

லோகத்தில் இருப்பீர்களேயானால் அங்கே வந்து, ஆனந்தியைக் கொன்றுவிட்ட ஆனந்தமான செய்தியை உங்களுக்குச் சொல்லுவேன்! இப்போது தானம்மா தேவலோகம் என்று உண்மையிலேயே ஒன்று இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்குமென்று எனக்குத் தோன்றுகிறது! இதோ; நான் என் வேலையை முடித்துவிட்டு வருகிறேன். ஆனந்தி! உன்னைப் பழிக்குப்பழி வாங்குகிறேன்! என் குடும்பத்தைக் குலைத்துவிட்டு நீ கோலாகலமாக வாழ முடியாது! நீயும் எங்களோடு வரவேண்டியவள்தான்!"

ஆவேசங்கொண்டு தன்னையறியாமல் கத்தினாள் சிந்தாமணி. தாயின் பாதங்களைக் கண்களில் ஒத்திக்கொண்டான், வெறிபிடித்தவள்போல வீட்டை வீட்டு வெளியேறி ஆனந்தி மருத்துவ மனையிருக்கும் தெரு நோக்கி ஓடினாள். அவன் கையிலே ஆனந்தி அகப்பட்டால், அவளைக் கிழித்துக் கொன்றுபோட்டுவிட்டுத்தான் அடுத்த அடி வைப்பான்; அவ்வளவு பழியுணர்ச்சி பெருக்கெடுக்கத் துவங்கியது அவன் உள்ளத்தில்!

எப்படி யெப்படி மாறுதல்கள் மலர்கின்றன பார்ப்போம் என்று கவனித்துக்கொண்டிருந்த நயினா, தன் அறையில் தூக்கமின்றித் தவித்துக்கொண்டிருந்தான். ஆனந்திக்கும் அழகப்பனுக்குப் கூட ஒருவேளை தொடர்பு ஏற்பட்டிருக்குமோ என மயங்கியது ஒரு சமயம் அவன் உள்ளம்! சேச்சே... இருக்காது என்று தேற்றிக்கொண்டது ஒரு சமயம்! ஆனந்தி, தன் பழைய கதையை அவனிடம் சொன்னதால்தான் அவனுக்கு அவள்மீது அவ்வளவு ஐயம் எழ ஏதுவாகிவிட்டது. வீண் சந்தேகத்தால் குழம்பிக்கொண்டிருப்பானேன்; ஒரு சோதனை நடத்தி அவளைப் பற்றிப் புரிந்துகொள்ளலாமே யென்று முடிவு கட்டினான் நயினா. அழகப்பன்மீதும் அவள் வலைவீசுகிறாள் என்றால், இரவு எப்படியும் அவன் அறைக்கு வந்தே தீருவாள். அப்படி அவள் அழகப்பன் அறைக்கு வரும்போது அங்கேதானிருந்து அவளைக் கையும் களவுமாகப் பிடித்துவிட்டால்...?

இப்படியொரு கேள்வியைப் போட்டுக்கொண்டு, தன் சோதனையைச் செயல்படுத்த முனைந்து எழுந்தான். தன் அறையிலிருந்து அகன்று அழகப்பன் அறைக்குப்போனான். அழகப்பனும் தூக்கமின்றிப் படுக்கையில் புரண்டுகொண்டிருந்தான். நயினு அங்குப் பிரவேசித்து, "இங்குக்கொசுக்கடி அதிகமாயிருக்கும். நான் படுத்திருக்கும் அறையில் நல்ல கொசுவலையிருக்கிறது; அங்கு போய்ப் படுத்துக் கொள்ளலாமே" என்று கூறினன். அழகப்பன் முதலில் வேண்டாமென்றுதான் கூறினன். ஆனாலும் அவனுக்கும் ஒரு ஆசை; ஆனந்திக்கும் நயினுவுக்கும் தொடர்பு இருக்கிறதா என்று கண்டுபிடித்துவிடவேண்டுமென்று! ஒரு வேளை நயினுவின் அறைக்கு அவள் வர நேர்ந்தால் அவளிடம் தானே மனம் விட்டுப்பேசி நிலைமையைச் சீர் செய்துவிடலாமென்றும் எண்ணியிருந்தான். நயினு வலியுறுத்தியதன்பேரில், அழகப்பன் நயினுவின் அறையில் போய்க் கொசுவலைக்குள் படுத்துக்கொண்டான். நயினுவும் அழகுவின் அறையில் படுத்தவாறு தூக்கமின்றித் தவித்துத் கொண்டிருந்தான். சிறிதுநேரத்திற்கெல்லாம் யாரோ வரும் காலடி ஓசை கேட்டது. எழுந்து வந்து உற்றுக் கவனித்தான். மறைந்து மறைந்து ஒரு பெண் வருவது தெரிந்தது. சத்தம் காட்டாமல் அறைக்குள்ளே போய்க் காத்திருந்தான். யாரும் வரவில்லை. மெதுவாக எழுந்து வந்து பார்த்தான். யாரையும் காணவில்லை. மறுபடியும் அறைக்குள்ளே சென்று கவனித்துக்கொண்டிருந்தான். மீண்டும் யாரோ நடந்துவரும் ஓசை, அந்த நள்ளிரவின் அமைதியைக் கிழித்துக்கொண்டு வந்தது. நயினு, ஓனிந்த வாறு ஓலி வரும் திக்கில் நாட்டம் செலுத்தினன். ஆனந்திதான் அது! அவள், அழகு படுத்திருக்கும் அறைக்குள்ளே போய்க்கொண்டிருந்தாள். அவள், அந்த அறையில் நயினுதான் படுத்திருப்பான் என்று கருதி அங்குப் போகிறாள். நயினுவுக்கு அவள் மீதிருந்த சந்தேகம் பெரும்பகுதி நீங்கிவிட்டது. உண்மையிலேயே அவளுக்கு அழகப்பன் மீது கண்ணிருக்குமானால் தான் இருக்கும் அறைக்கல்லவா வந்திருக்கவேண்டும்-அவளோதான் வழக்கமாக உறங்கும்

அறைக்கல்லவா போகிறுள்!- நயினு தனக்குத்தானே வெட்கத்தால் தலைகுனிந்துகொண்டான். ஆனலும் அடக்க இயலாத ஆவலொன்று அவன் இருதயத்தில் பீறிட்டுப் புறப்பட்டது. அழகப்பன் அறையில் என்ன நடக்கிறது என்று அறியவேண்டி, அதை நோக்கி மொதுவாக நகர்ந்தான்.

கொசுவலைக்குள்ளே 'குறு குறு' வென்று விழித்துக் கொண்டிருந்த அழகப்பனின்மீது ஒரு மெல்லிய பூங்கரம் பட்டது. அழகப்பன் அந்த ஸ்பரிச இன்பத்திலே மெய் மறந்து அசையாது படுத்திருந்தான். அதே சமயம் நயினு மூகமதுவும் அறைக்கு வெளியே கதவுப்புறம் வந்து ஓளிந்துகொண்டு, காதைத் தீட்டி வைத்துக்கொண்டு அமர்ந்திருந்தான்.

"தூக்கமா?" என்றுள், அழகப்பன் கன்னத்தை வருடியபடியே ஆனந்தி!

உரத்த குரலில் பேசினுல் குரல் புரிந்துவிடுமென்று எண்ணினியோ என்னவோ, அழகப்பன் ஈன சுரத்தில்.

"இல்லே" என்றுன்.

"அவர் எங்கே?"

"அவன் அந்த அறையில் படுத்திருக்கிறுன்."

இந்த உரையாடல் ஓளிந்திருக்கும் நயினுவின் உள்ளத்தை ஓரு உலுக்கு உலுக்கியது!

"என்மீது உங்களுக்கு ஏதாவது சந்தேகமா?"

"ஏன்?"

"அவர் என்னிடம் நடந்துகொன்கிற முறை.....அவ்வளவு சரியாக இல்லே"

"பரவாயில்லே!"

அழகப்பனுக்கு இப்போது நாக்கு பேச எழவில்லே. உடல் பதறியது. வெகு விரைவில் தான் யார் என்பதைத் தன் செய்கைமூலம் வெளிப்படுத்திவிட்டான்.

"யார் நீங்களா?" என்று துள்ளியெழுந்தாள் ஆனந்தி! அவள் கரத்தை அழகப்பன் விடாமல் பற்றிக் கொண்டான்.

"விடுங்கள் தயவு செய்து; என்னை!" என ஆத்திர மாகப் பேசினாள் அவள். அந்தக் கனல் தெறிக்கும் வார்த்தைகள் நயினுவுக்குக் களிப்பூட்டின.

"ஆனந்தி! உன்னால்தான் என் வாழ்வு மறுமலர்ச்சி பெறவேண்டும்— நான் மிகவும் நொந்துபோயிருக்கிறவன், என்னைக் காப்பாற்று!" எனக் கெஞ்சுங் குரலில் கேட்டான் அழகு.

வெளியிலிருந்தவாறு இந்தச் சொற்களைக் கேட்ட நயினுவுக்குக் கண் கலங்கியது. தன் நண்பனின் நிலைமை கண்டு சோகபிம்பமானான் நயினு.

அப்போது அறைக்கு எதிர்ப்புறமாக சிறு ஒலியெழவே திரும்பிப் பார்த்தான். யாரும் அவன் கண்ணில் பட வில்லை. ஆனால், ஆனந்தி அங்கு வருவதற்கு முன்பே வந்துவிட்ட சிந்தாமணி, நயினு முதலியவர்களின் பார்வை யில் விழாமல் வேறு பக்கம் போய்ப் பதுங்கிக்கொண்டாள்.

ஒலி வந்த பக்கம் எதுவுமில்லையெனக் கண்டு, மீண்டும் அறையின் பக்கம் கருத்தைச் செலுத்தினான் நயினு

ஆனந்தி அழகப்பனிடம் கையை விடுமாறு மன்றாடிக் கொண்டிருந்தாள். அவளை, "என்னை உயிரோடு கொன்றுவிடாதே!" என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டேயிருந்தாள்.

20

அழகப்பனின் பிடியிலிருந்து விடுபட முடியாமல் சங்கடப்பட்ட ஆனந்தி அவனை மிகவும் இரக்கத்தோடு பார்த்து, "என்னைக் காப்பாற்றுங்கள்" என்று ஈனசுரத் தில் கேட்டாள். அந்த வார்த்தையின் பொருளைத் தவறுகப் புரிந்துகொண்ட அழகு, "மலை மலையாகக் குவிந்து கிடக் கிறது திரவியம். அலை அலையாக எழுகிறது அன்பு. காப்பாற்றுமல் இருப்பதற்கா கண்ணே; உன்னை என் கண்வழியே அழைத்துவந்து உள்ளத்தில் குடியேற்ற விரும்புகிறேன்" என்றான் தழுதழுத்த குரலில்!

"என்னை உங்கள் தங்கைபோலப் பாவிக்கவேண்டும்."

"நீயாக அப்படியொரு கற்பனை செய்துகொண்டு என்னைக் கல்லிலும் முள்ளிலும் தள்ளாதே! கனி பறிக்கக் கால் கடுக்க ஓடிவந்தவன் நான். காய்தான் நான் என்று சாய்ந்து விழாதே! மலர் தேடி மயங்கிய மனம்—முன் னென்று கூறி மூடங்கிவிடச் செய்யாதே!"

"என்னை நீங்கள் மறந்துவிடத்தான் வேண்டும்."

"நீ டாக்டர்—நான் நோயாளி!"

"நான் டாக்டர்தான்—உங்கள் நோய்க்கு மருந்து சொல்லமுடியுமே தவிர டாக்டரே மருந்தாக மாறிவிட முடியுமா?"

"மருந்து சொல்லமுடியாது உன்னால்!"

"ஏன் முடியாது? சிந்தாமணியிருக்கிறாள்; உங்கள் சிந்தைப் பிணி அகற்றவல்ல சிறந்த மருந்தாக!"

"சாகிறவன் சஞ்சீவி கேட்டால், விஷத்தை சிபாரிசு பண்ணுகிறாய் நீ!"

"இல்லை; சிந்தாமணி விஷமல்ல! அவளை விஷமாக மாற்றிவிட்டோம் நானும் டைகரும் சேர்ந்து! நான் சொல்வதைத் தயவுசெய்து கேளுங்கள். டைகரின் சூழ்ச்சிக்கு அடிபணிந்த காரணத்தினால்தான் அபாக்யவதி சிந்தாமணியை அழுக்கேறிய சிந்தாமணியென்று உங்களை நம்பவைத்தோம். உண்மையிலேயே அவள் மாசற்றவள். இன்னொருத்தியின் குழந்தையை அவள் பக்கத்திலே படுக்க வைத்துப் பிரசவமாகிவிட்டது என்று ஏமாற்றினோம். பிறகு எனக்கே மனச்சாட்சி கேட்கவில்லை. ஓடிவந்தேன். உங்கள் காலிலேயே சிக்கினேன். இப்போது உங்கள் கரத் திலும் சிக்கியிருக்கிறேன். என்னை விட்டுவிடுங்கள்!"

"எல்லாம் பொய், நீ தப்பித்துக்கொள்வதற்காக சிந்தாமணியை நல்லவள் என்று கதை கட்டுகிறாய்! ஆனந்தி—என் நிலைமைகண்டு உனக்கு இரக்கமே பிறக்க வில்லையா? என்னை; உனக்கு ஏன் பிடிக்கவில்லை? அவ சரப்பட்டு உன்னிடம் தவருக நடந்துகொண்டதாகக்கருதி என்மீது நம்பிக்கை குறைந்துவிட்டதா உனக்கு? தயவு செய்! தீக் காட்டால் அழிந்துவிட்ட என் இதயச் சோலை

மில் பூக்காடாய் மணக்க வருவாய் — புது நிலவாய் ஒளி சிந்தி வருவாய் — பொன் வண்டாய்ப் பறக்க வருவாய் பொதிகைத் தென்றலாய் — பூங்குயில் இசையாய் உலவு வாய் என்றெல்லாம் கனவு கண்டேன். அவ்வளவுப் கரைந்துவிட்டது நினைவுகள்தானு? சொல் ஆனந்தி! சொல் !!''

''என்னிடம் நீங்கள் கேட்கும் பொருள்; கேட்டவுடன் தந்துவிடுவது அல்லவே.....இருதயத்தையல்லவா கேட் கிறீர்கள் !''

''ஏன் தர இயலாதா ?''

''அது முன்பே பண்டமாற்று ஆகிவிட்டது !''

''அப்படியானுல் ?

''ஆமாம்! உங்கள் தோழர் என் இருதயத்தை எடுத் துக்கொண்டு அவர் இருதயத்தை என்னிடம் கொடுத்து விட்டார் !''

''ஆ ! நயினு முகம்மது எனக்குத் துரோகம் செய்து விட்டானு ?'' என்று பெருமூச்சோடு கேள்வி கேட்டவாறு அவளைப் பிடித்திருந்த கைகளை விட்டுவிட்டுத் திரும்பினன் அழகு.

''துரோகம் செய்யவில்லை அழகு! உன் நண்பன் எப் போதுமே துரோகம் செய்து பழக்கப்பட்டவனல்ல''

இந்த வார்த்தைகளோடு நயினு உள்ளே வந்தான். அழகப்பனுல் ஆத்திரத்தைத் தாங்கிக்கொள்ள முடிய வில்லை. ஓங்கி 'பளார்' என்று நயினு முகம்மதுவின் கன் னத்தில் ஒரு அடி கொடுத்தான், நயினுவின் கன்னம் அப் படியே கன்னிப்போய்விட்டது. வாயிலே இதழோரத்தில் இலேசாக இரத்தம் வழிய ஆரம்பித்தது. நயினு அடியை வாங்கிக்கொண்டு அமைதியாகவே நின்ருன். அழகு, வெறி பிடித்தவன்போல ஆகிவிட்டான்.

நயினுமீது மீண்டும் புலிபோலப் பாய்ந்து தாக்கிடத் துவங்கினன். நயினு, அழகு தரும் அடி உதைகளைப் பொறுத்துக்கொண்டான். கன்னத்தில் மறுபடியும் ஒரு குத்து!.....வயிற்றிலே சரியான அடி. தலையிலும் காயம்

நயினு எதிர்த்தே அடிக்கவில்லை. அப்படியே சோர்வுற்றுக் கீழே விழுந்தான். அழகு அவனே வெறி உணர்ச்சியோடு பார்த்துக்கொண்டு நின்றான். கீழே சாய்ந்த நயினு மெதுவாக எழுந்தான். அவன் தலையிலும் வாயிலும் இரத்தம் வழிந்துகொண்டிருந்தது. ஒரு அலட்சியச் சிரிப்புடன் நயினு மூகம்மது அந்த அறையை விட்டு வெளியேறினான். ஆனந்தி மயக்கமுற்றுக் கட்டிலில் சாய்ந்தாள். அழகு அசைவற்று நின்றுகொண்டிருந்தான். அவன் வெறி தீர்ந்தபாடில்லை. கைகால்கள் நடுங்கிக்கொண்டிருந்தன. தான் செய்தது சரியா — தவறு என்று யோசிப்பதற்குக்கூட முடியாமல் அவனது நினைவு துயிலில் ஆழ்ந்துவிட்டது. சிறிது நேரத்திற்குப் பிறகு அவனும் அந்த அறையைவிட்டு வெளியேறித் தன் அறைக்குப் போய்விட்டான்.

இந்த நிகழ்ச்சிகளின் குழப்பமான ஒலி மட்டுமே அங்கு ஒளிந்திருந்த சிந்தாமணியின் காதில் விழுந்ததே தவிர, யார் யார் பேசிக்கொண்டார்கள் என்பதோ, என்ன நடந்தது என்பதோ தெரியாது. அறைக்குள்ளே ஒரு பெண் இருக்கிறாள்; அவள்தான் ஆனந்தி என்பதை மட்டும் அவள் புரிந்துகொண்டாள்; முதலிலேயே அவளோடு தொடர்ந்துவந்த காரணத்தால்! குழப்பங்கள் முடிந்து கொஞ்சநேரத்திற்கெல்லாம் ஒரே அமைதி நிலவிற்று. சிந்தாமணி, தான் ஒளிந்திருந்த இடத்தை சுற்றுமுற்றும் பார்த்தாள். ஒரு அம்மியும் அம்மிக்கல்லும் இருந்ததைக் கண்டாள். அவள் கண்களிலே தீப்பொறி கிளம்பியது.

தந்தையின் சாவு — தாயின் பிணம் — தனக்கு விபச்சாரிப் பட்டம் — குற்றவாளிக்கூண்டு — சிறைச்சாலை — இத்தனையும் ஒன்றன்பின் ஒன்றாக அவள் மனத்திரையிலே படம்போல் தொடர்ந்து வந்துகொண்டிருந்தன. "பழிக்குப் பழி!" உலர்ந்துபோன உதடுகள் ஆக்ரோஷத்தோடு இந்தச் சொற்களை உச்சரித்துச் சூடேறின. அம்மிக் குழவியை இருகைகளாலும் தூக்கிக்கொண்டான். தலைக்கு மேலே குழவியைப் பிடித்துக்கொண்டு பயங்கரமாக —

ஆனந்தியிருக்கும் அறையை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

அம்மிக் குழவியை ஆனந்தியின் தலையில் போட்டு அவளைக் கொன்றுவிடுவது என்ற முடிவு! அயலார் குழவியைத் தன்னருகே படுக்கவைத்துத் தன்னை வேசியாக்கிய வளின் தலையிலே—இந்தக் கருங்கல் குழவியைப் போடுகிறேன் என்று மனத்திற்குள் 'சபதம்' செய்துகொண்டாள் போலும்.

ஆனந்தியோ, தன் காதலனின் நிலைமை கண்டு மூர்ச்சித்து விழுந்திருக்கிறாள்; படுக்கையிலே! மரணத்தை எதிர் பார்க்கும் அச்சம் ஒரு சிறிதுமில்லாமல் அவளைச் சாவு உலகிற்கு அனுப்பிவிட சிந்தாமணி வந்துவிட்டாள். கொலை செய்யப் போகிறோம் என்ற பயம் சிறிதும் தலை காட்டவில்லை சிந்தாமணிக்கு! எல்லாவற்றிற்கும் துணிந்து விட்ட ஒரு அசட்டுத் தைரியம் அவள் முகத்திலே பிரகாசித்துக்கொண்டிருந்தது. மங்கலான வெளிச்சத்திலே அவளது முகம் மிகப் பயங்கரமாகத் தோற்றமளித்தது. குறி பார்த்துக் குழவிக் கல்லை அவள் தலைமீது போடுவதற்குத் தயாராகிவிட்டாள் அந்த இளஞ்சிட்டு! அவளைத் தடுப்பதற்கு அங்கு யாருமே இல்லை. மனச்சாட்சியொன்றுதான் குறுக்கிட்டிருக்க வேண்டும். மாறாக அதுதான் அவளைக் கொலைச்செயலுக்குத் தூண்டிவிட்டுத் தூபம் போட்டது. அழகப்பனே, தன் அறையில் ஸ்தம்பித்து உட்கார்ந்திருந்தான். இன்னும் அவன் நினைவுகள் புரண்டு படுக்கக்கூட இயலாமல் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தன. நயினு முகம்மது, தள்ளாடியபடியே மாடியைக் கடந்து கீழே வந்து, முகத்தையும் காயம்பட்ட இடங்களையும் கழுவிக் கொண்டான். அங்குள்ள சில மருந்துகளை அவனே காயங்களில் தடவிக்கொண்டான். பிறகு அங்குள்ள ஒரு நாற்காலியில் அமர்ந்து தீவிரமாக சிந்திக்க ஆரம்பித்தான். ஆனந்திக்கும் தனக்கும் ஏற்பட்ட ஒருவார தொடர்பு, நீண்ட நாளைய தன் ஆருயிர்த்தோழனிடத்திலே எவ்வளவு பெரிய பகையைத் தோற்றுவித்து விட்டது என்று எண்ணினான். அடி வாங்கியபோது வலி மிகுந்த சமயங்கூட வராது

கண்ணீர், இப்போது வெள்ளமாக வெளிப்பட்டுக் கன்னங்களைக் கழுவியது.

ஆனந்தியிடமிருந்த எந்தெந்த குணநலன்கள் தன்னை வசீகரித்ததோ அதே குணநலன்களுக்குத்தான் தன் நண்பனும் அடிமைப்பட்டுவிட்டான் என்று முடிவு செய்தான். தனக்கு ஏற்பட்ட காதல் அவனுக்கும் ஏற்பட்டதை யார் தடுக்கமுடியும்? அவனும் தன்னைப்போல உள்ளங் கொண்டவன் தானே!

அய்யோ! அவன் ஆசைக்குத் தடையாக ஆனந்திக்கும் அவனுக்கும் குறுக்கே தான் வந்து நின்றுவிட்டோமே என்று நொந்துகொண்டான்.

அவனது காதல் உள்ளத்திலே கடுமையான தியாகம் உதயமாயிற்று. ஆனந்தியின் மீதுள்ள அன்பையே தியாகம் செய்யத் துணிந்துவிட்டான் நயினு முகம்மது. அவளையும் அழகப்பனையும் ஒன்றுசேர்த்துவிடுவது என்று உறுதிகொண்டான். பள்ளிப் பருவத்திலே நயினுவும் அழகுவும் சேர்ந்தே திரிவார்கள். அப்போதெல்லாம் ஒரே பண்டத்தின்மீது நயினுவும் அழகும் பிரியம் வைப்பார்கள்.

அந்தப் பொருள் ஜோடியாக இருக்காது. அதனால் அழகப்பன் — தான் விரும்பிய பண்டத்தை நயினுவிடம் கொடுத்து அவனைத் திருப்தி அடையச் செய்வான். அழகப்பனால் அது முடிந்தது; காரணம் அது ஒரு பண்டம்!

நயினு இழப்பது வாழ்க்கையையே அல்லவா? இது மிகப்பெரும் தியாகம் அல்லவா? "எதுவாயினும் சரி; காதலுக்குத் தியாகம் செய்தே தீருகிறேன் — அழகப்பன் ஆனந்தியைத் தம்பதிகளாக்குகிறேன்" என்று உறுதி செய்துகொண்டு மாடிப் பக்கம் போக எழுந்தான் நாற்காலியை விட்டு! எழுந்தவன் கீழே விழுந்துவிட்டான்.

அடிபட்ட இடங்களில் அவ்வளவு வலி அவனுக்கு! மெதுவாக எழுந்து, நகர்ந்து நகர்ந்து மாடிப்படிகளைக் கடக்க ஆரம்பித்தான். அழகப்பன் இருந்த அறைக்குள் நுழைந்தான். அவனைக் கண்டதும் அழகப்பனுக்கும்

ஒன்றும் புரியவில்லை. கோவெனக் கதறி நயினை முகம்மதைத் தழுவிக்கொண்டான் அழகு!

"அழகப்பா! என் ஆருயிர்த் தோழா! என்னை மன்னித்துவிடு! நான்தான் தவறு செய்துவிட்டேன். ஆரம்பத்திலேயே ஒரு ஜாடை காட்டியிருந்தாயானால் நான் இவ்வளவுதூரம் நடந்துகொண்டிருக்கமாட்டேன். இப்போதும் ஒன்றும் குடிமுழுகிவிடவில்லை. ஆனந்தியை நான் தியாகம் செய்துவிடுகிறேன். அவளை நீயே ஏற்றுக்கொள். அவளை இந்த முடிவுக்குச் சம்மதிக்கச் செய்வது என் பொறுப்பு!" என்றான் கண்களில் நீர் கலங்கியபடி நயினை.

"வேண்டாம் நயினை! என்னைக் கொல்லாதே, இந்த வார்த்தைகளால்! அன்பனே!...அளைத்து மகிழ்ந்து ஆடியோடிக்கிடந்த நமது தூய்மையான நட்பிலே இப்படியொரு தொய்வு விழும் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை. நான்தான் தவறிழைத்தவன் — நான்தான் துரோகி — நான்தான் பாதகன்!"

அழகப்பன் நயினைவின் காலைக் கட்டிக்கொண்டு புலம்பினான்.

21

"நயினை! என்னை மன்னித்துவிடு. உள்ளம் எனக்கு மட்டும் இருப்பதாகவும், உலகில் உள்ள பொருள்களுக்கு உரிமைகொண்டாடும் பாத்தியதை எனக்கேயகபோகமாக எழுதிவைக்கப்பட்டிருப்பதாகவும் எண்ணி, என்னை நானே ஏமாற்றிக்கொண்டுவிட்டேன். லாபிபம் செறிந்த உன் இருதயத்தில் இனப்பு மிகுந்த பருவப்பெண்ணுருக்கு நீ காதல்வீடு கட்டிக்கொடுப்பதால் எனக்கு ஏன் பொறுமை ஏற்படவேண்டும்? என்னையும் மீறி — என் நட்பையும் மீறி —அப்படியொரு தீயசக்தி என் நெஞ்சிலே திரிந்தது மன்னிக்கமுடியாத பெருங்குற்றமல்லவா? எனதருமை நண்பனே! இன்ப துன்பங்களில் இணைபிரியாதிருந்த ஆருயிர்த் தோழனே!...என்னை மன்னித்துவிடடா!..... மண்ணாலும் பொன்னாலும் பிரிக்கமுடியாத நமது தூயநட்பு

ஒரு பெண்ணுல் பிரிக்கப்பட்டுவிட்டது என்ற பழி—பாவம்; அந்த அனுப் சகோதரி ஆனந்திக்கு ஏற்படவேண்டாம்! என் இரத்தத்தில் எங்கேயோ ஒளிந்துகொண்டிருந்த வெறியுணர்ச்சி சூடேறிக் கிளம்பி சூருவளியை உண்டாக்கி விட்டு இப்போது மறைந்துவிட்டது! இனி அந்த வெறி தலைகாட்டாது! என்னை மன்னித்துவிடு!"

இப்படி அழத் தொடங்கினுன் அழகப்பன். நயினுவும் கண்களிலேயிருந்து வழியும் நீர்வீழ்ச்சியைத் தடுத்திட முடியாமல், நண்பனைக் கட்டித் தழுவியவாறு, "இப்படியெல்லாம் பேசாதே அழகு!.....ஏதோ நடந்தது நடந்து விட்டது. இவைகளையெல்லாம் உருவற்ற கனவாகமதித்து நடக்கவேண்டியவைகளைக் கவனிப்போம். மன்னிப்பு கேட்கிருயே என்னிடம்—உன்னை மன்னிக்க நான் யார்?... நீயென்ன அவ்வளவு பெரிய குற்றம் செய்துவிட்டாய்? நீ செய்ததை உள்ளபடியே பெருங்குற்றமாக நீ நினைப்பாயானுல், அதற்கு ஒரே ஒரு 'பிராயச்சித்தம்' தான் இருக்கிறது. அதை நிறைவேற்ற முடியுமானுல் நான் மிகவும் மகிழ்ச்சி அடைவேன்."

"என்ன நயினு?.....சொல்லு! கட்டாயம் அந்தப் "பிராயச்சித்தத்"தை நிறைவேற்றுகிறேன்."

"அருமை நண்பனே!...சிந்தாமணியை நீ திருமணம் செய்துகொள்ளவேண்டும்."

"என்ன!"

"அவள் மிகவும் நல்லவள். டைகர் என்ற அந்தத் துரோகியின் தூண்டுதலால் ஆனந்தி அவளுக்குக் களங்கம் கற்பிக்க முற்பட்டாள். நாமும் அவசரப்படுத்தவருன முடிவுக்கு வந்துவிட்டோம். ஆனந்தி டைகருக்குப் பயந்து செய்த காரியம் அவள் மனச்சாட்சியைக் குடைய ஆரம்பித்தவுடன் உண்மையை நம்மிடம் சொல்ல ஓடி வந்திருக்கிருள். அதன்பிறகுதான் கார் விபத்து...இதுவரையில் நடந்த நிகழ்ச்சிகள் எல்லாமே!..."

"சிந்தாமணி கைது செய்யப்பட்டிருப்பது எப்படி?" என்ருன் அழகு.

"அதுதான் எனக்கும் தெரியவில்லை ... ஒருவேளை அவள் நம்மைப் பார்க்க பெங்களூர் ஓடி வந்திருக்க வேண்டும்—வரும் வழியில் இப்படியொரு அசம்பாவிதம் ஏற்பட்டிருக்கலாம் என்று நான் யூகிக்கிறேன். சிந்தாமணியைப்பற்றி, ஆனந்தி கூறும் பாராட்டுரைகளைக் கேட்கும்போது, அவள் ஒரு பத்தரைமாற்றுப் பசும்பொன் என்றுதான் தீர்மானிக்கவேண்டும். உன் மனத்தைத் திருப்ப முயல்வதாக நினைக்காதே அழகு! உண்மையாகவே சிந்தாமணி மாசற்றவள்!"

"எனக்கு ஒரே குழப்பமாயிருக்கிறது நயினு! என்னால் எதையுமே சிந்திக்க முடியவில்லை..."

"சிந்திக்க நேரம் எடுத்துக்கொள். சிந்தாமணியைப் பற்றி எந்த அவசரமான முடிவுக்கும் இப்போது வரத் தேவையில்லை. மாசு படிந்தவள் என்று நாம் முடிவு கட்டுகிற ஒரு வார்த்தையால் ஒரு பெண்ணின் வாழ்வே அஸ்தமித்துப்போகும் நிலைமை ஏற்படுகிறது என்பதை மட்டும் அடிப்படையாக வைத்து, அவளைப்பற்றிய ஆராய்ச்சியை நடத்தி தீர்க்கமான முடிவுக்கு வருவது நல்லது நண்பா!"

"சரி நயினு .....நீ கூறுவதுபோலவே அவகாசமெடுத்துக்கொண்டு, அதைப்பற்றி முடிவு கூறுகிறேன்.....வா, ஆனந்தியிடம் நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டும்!..."

நயினுவும், அழகுவும் அவர்கள் இருந்த அறையை விட்டுப் புறப்பட்டு ஆனந்தியிருக்கும் அறைநோக்கிச் சென்றார்கள்.....ஆனந்தியைச் சமாதானம் செய்து தன்னுடைய தங்கையாக ஏற்றுக்கொள்ள எண்ணி நடந்தான் அழகு! புயலுக்குப்பின் அமைதி உருவாயிருப்பதாக நினைத்து மகிழ்ந்தான் நயினு.

ஆனால் இந்த இருவரின் எண்ணத்திலும் மண்ணைப் போடுவது போன்ற பயங்கரமான காட்சியை ஆனந்தியின் அறையிலே கண்டார்கள்.

ஆம்; ஆனந்தி, பிணமாகக் கிடந்தாள் கட்டிலின் மீது!...கட்டில் முழுவதும் இரத்தமயமாக இருந்தது. தலையிலேயிருந்து 'குபு குபு' வென்று குருதி பொழிந்து கொண்டேயிருந்தது. கீழே, கட்டிலின் ஓரமாக அம்மிக் குழவியொன்றும் கிடந்தது. நயினு, "அய்யோ!" என்று அலறிவிட்டான். அழகப்பனும் கூச்சலிட்டான். அழகப்பனை நயினு பிடித்துக்கொண்டு, "அடப்பாவி!.....நீதானு இவ்வளவு பெரிய அக்கிரமத்தைத் செய்துவிட்டாய்!...உன் எண்ணம் ஈடேறுத காரணத்தால் இவ்வளவு பெரிய இழி செயலுக்குத் துணிந்துவிட்டாயே; அழகப்பா! எப்போ தடா உன் மனம் இதுபோன்ற கொடூர வேலைகளுக்குத் துணிந்தது?" என்று கதறினான்.

அழகப்பனை திகைத்துப்போய், நயினுவைப் பார்த்து, "அய்யோ! பழியைப்போடாதே, நயினு!.....எனக்கும் இந்தக்கொலைக்கும் சம்பந்தமேயில்லை. வீணாக என்மீது சந்தேகப்படுத்தி என்மீது சண்டாளப்பட்டம் சுமத்தாதே!" என்று அலறினான்.

நயினு, அழகப்பனை நம்பத் தயாராய் இல்லை. முழு நிலவு ஒளியாக்கப்பட்டதுபோல் சிதறுண்டு கிடக்கும் சித்திரப் பொற்பாவையாம் ஆனந்தியின் பிணத்தின்மீது விழுந்து தன்னை மறந்து புலம்ப ஆரம்பித்தான் நயினு.

"அய்யோ ஆனந்தி! உன் வாழ்வுக்கு முடிவுதேடும் காரியத்திற்கு நானல்லவா காரண கார்த்தாவானேன். நம் மிடையே ஏற்பட்ட காதல் அல்லவா — கட்டழகே! உன் வாழ்வை மாய்க்கும் கருவியாக மாறிவிட்டது! அழகப்பா! தியாகம் செய்யமுடியாத பொருளை தேடக்கிடைக்காத இந்தத் திரவியத்தை தியாகம் செய்கிறேன் என்று உன்னிடம் கூறினேனே; அப்படியிருந்தும் ஏனடா பாவி; அவளை அழித்துவிட்டாய்? நீ என்ன செய்வாய்? உனக்குப் பயனில்லாத பொருள் உலகிலே இருக்கவேண்டாமென்று நினைத்துவிட்டாய் போலும்! என் செல்வத்தைச் சீரழித்துவிட்டு என்னிடமே நல்லவனைப்போல நடித்து என்னை மயக்கிவிட்டாயே; கொலைகாரா!"

நமினுவினுல் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ளவே முடியவில்லை. ஆனந்தியோ எந்தக் கவலையுமின்றி நீங்காத் துயிலில் கிடந்தாள். அழகப்பன் அதிர்ச்சியுற்று தன் நிலையை விளக்கமுடியாமல் தவித்தான். அவனுக்கும் அந்தக் கொலைக்கும் எந்தசம்பந்தமுமில்லை. அவன் அதைச்சொன்னுல் நமினு நம்பத் தயாராகவும் இல்லை. என்ன செய்வான்; பாவம் — நடப்பது நடக்கட்டும் என்று மனத்தைத் திட்டப்படுத்திக்கொண்டான் மாடிப்படியில் கனமான 'பூட்சு'கள் ஏழுப்பும் சப்தம் தொடர்ந்து கேட்டபடியிருந்தது. ஏழெட்டுப்பேர் நடந்து வருகிறூர்கள் என்பதை அந்த ஒலி விளக்கியது.

நமினுவும், அழகும் ஒலி வந்த திக்கை நோக்கியவாறு நின்றனர். ஏழெட்டுப் போலீசார் 'திபு திபு' வென்று பிரவேசித்தனர்..

அவர்கள் எப்படி வந்தனர்? யார் அவர்களுக்குத் தகவல் கொடுத்திருப்பார்கள்?

இந்தக் கேள்வி, அழகு — நமினு இருவரையும் வியப்பில் ஆழ்த்தியது! போலீசாரின் பின்னுலேயே வேம்பு வந்துகொண்டிருந்தான் அவன் முகத்தில் சோகம் கப்பிக் கொண்டிருந்தது. அழுதழுது கண்கள் சிவந்திருந்தன அவனுக்கு!

"இவர்களில் யார் நமினு முகம்மது?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர், வேம்புவிடம்! வேம்பு நமினுவை அடையாளங் காட்டினுன். அதற்குள், அழகப்பன் இன்ஸ்பெக்டரிடம் வந்து — "ஏன் சார்?" என்றுன் ஆவலாக!

"நமினு முகம்மது இந்தக் கொலை சம்பந்தமாக கைது செய்யப்படுகிறுன்" என்றுர் இன்ஸ்பெக்டர்.

உடனே அழகப்பன் — "இல்லை சார் இல்லை! நமினுவுக்கும் இந்தக் கொலைக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. நான்தான் ஆனந்தியைக் கொலை செய்தேன்" என்று கூவினன்.

உடனே நமினு — "அழகப்பன் சொல்வது பொய்! நான்தான் அவளைக் கொலை செய்தேன்?" என்று கத்தி

னன். ஆருயிர் நண்பர்கள் இருவரும் ஒருவருக்காக ஒருவர் தங்கள் வாழ்வையே தியாகம்செய்யத் தயாராகி விட்டார்கள்,

அழகப்பன்தான் காமவெறியில் ஆனந்தியைத் தொலைத்துவிட்டான் என்ற உறுதியான கருத்து நயினு வுக்கு இருந்தபோதிலும் நண்பனைக் காட்டிக்கொடுக்க விரும்பவில்லை

அழகப்பனின் கிழத் தாயார் நயினுவுக்கு எதிரே வந்து நின்று கண்ணீர் மல்கியவாறு "என் மகனைக் காப்பாற் றடா!" என்று கொஞ்சுவதுபோல் இருந்தது நயினுவுக்கு!

அழகப்பனே, யார் செய்த கொலைக்கோ தன் நண்பன் பலியாகிருனே என்ற பதட்டத்திலும் — நண்பன் தன்னைச் சந்தேகித்தபிறகும் உயிர்வாழ விரும்பாத விரக்தியிலும் — தானே கொலை செய்ததாகச் சாதிக்கத் துவங்கினன்.

இருவரும் போட்டி போட்டுக்கொண்டு தான்தான் குற்றவாளியென்று வாதாடுவது கண்ட போலீசார் திகைத்தனர்.

வேம்பு சொன்னன்: "எனக்கு இந்த இரண்டுபேர் மேலேயும் சந்தேகம் சார்!" என்று!

திகைப்பிலாழ்ந்த இன்ஸ்பெக்டரும் அழகு, நயினு இருவரையும் கைதுசெய்ய உத்தரவிட்டார். ஆனந்தியின் பிரேதம் பரிசோதனைக்காக பாலையூர் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

எந்தப் பாலையூர் மருந்துவ மனையில் ஆனந்திக்கும் நயினுவுக்கும் காதல் வளர்ந்ததோ, அந்தப் பாலையூர் மருத்துவ மனைக்கு அவனது சவம் பரிசோதனைகாகக் கொண்டுசெல்லப்பட்டது. அழகுவும், நயினுவும் விலங் கிடப்பட்டு அழைத்துச்செல்லப்பட்டனர்.

* * *

வீட்டிலே பிணமாகத் தொங்கிக்கொண்டிருக்கும் தாயா ரின் காலடியிலே தலையை மோதிக்கொண்டு, சிந்தாமணி அழத்தொடங்கினள். "அம்மா! அந்தப் பாதகி ஆனந் தியை என்னுல் பழிவாங்க முடியவில்லை!..... அதற்குள்

யாரோ அந்த வேலையைச் செய்து முடித்துவிட்டார்கள்!'' என்று தன்னைத்தானே நொந்து கொண்டான்!

22

ஆவேசத்தின் எல்லைக்கோடு வரையிலே போய்விட்ட அவளது நெஞ்சத்தில் சிறிது சிறிதாக அமைதியின் சாயல் விழத் தொடங்கியது. ஆனால் அந்த அமைதியிலே சோகத்தின் மயான நிலைமை ஒளித்துக்கொண்டிருக்கத் தவறவில்லை.

''பொழுது விடிந்தால்?'' — இப்படியொரு கேள்வி அவள் இதயத்தின் துடிப்பை அதிகப்படுத்திற்று. ''தாயார் தற்கொலை ஊரெங்கும் பரவும். பஞ்சாயத்து, பிரேத விசாரணை என்றெல்லாம் வேதபுரத்து மக்கள் கூட்டம் கூடுவார்கள். அவர்களுக்கெதிரே நானும் நிற்கவேண்டும்; விபச்சாரி பட்டத்தோடு! அதின் கடைத்தும்போது பிடிபட்டு ஜாமீனில் வந்திருக்கிறாள் என்ற ஊரார் பேச்சைக்காதில் வாங்கிக்கொண்டு! அம்மம்மா! என்னால் முடியாது!..... வேதபுரத்தார் விழிகளிலே நான் படவே கூடாது!'' என்று தனக்குத்தானே கதறினாள். தானும் தன் தாயாரின் எதிரிலேயே உயிரை விட்டு, பக்கத்திலே பிணமாகத் தொங்கலாம் என்றும் யோசிக்கத் தொடங்கினாள். அப்போதும் அவள் மனக்கண் முன்னே ஊரார்தான் வந்து நின்றனர். தானும் தற்கொலை செய்துகொண்டால், நாளைக்கு வேதபுரம் என்ன பேசும்! — காலையிலே வேதபுரம் மூன்று பிணங்களைக் காணும்! ஆனந்தி, சிவகாமி, சிந்தாமணி — மூன்று பிணங்களைப் பற்றியும் என்ன விமர்சனகள் வெளிவரும்?

''அய்யோ; ஊருக்கு எவ்வளவோ உதவியாயிருந்தார்கள் அந்த உத்தமி ஆனந்தி! அந்த அம்மாவைக்கொன்று விட்டார்களே பாவிகள்!'' என்ற விதத்தில் அனுதாபம் எழும்.

''சிவகாமி, பாவம்.....எவ்வளவோ மனக்கோட்டையெல்லாம் கட்டினாள்; அதுக்குள்ளே மண் கோட்டைக்குள்ளே போய்விட்டாள்!'' என்று பரிதாபம் காட்டுவர் —

அம்மாவின் பக்கத்திலே தன்னுடைய பிணமும் இருந்தால் இரண்டு பிணங்களையுமே ஊரார் திரும்பிப் பார்க்காமல் போய்விட்டாலும் போய்விடுவார்கள்.

"சிறுக்கி! செய்வதெல்லாம் செய்துவிட்டுக் கடைசியில் செத்துப்போய்விட்டாயா!" என்று கேலி புரிவர் — கோபிப்பர் உமிழ்வர்!.....வேண்டாம் — வேண்டாம் — சாகவேண்டாம் என்ற தீர்மானமும் பலமாக எழுந்தது. தன்மீது சுமத்தப்பட்டுள்ள இரண்டு குற்றங்களிலுமிருந்தும் விடுபடவேண்டும். அபின் கடத்தியவள் தானல்ல என்பது மட்டுமல்ல; அந்த உண்மையான குற்றவாளியும் அகப்பட்டாகவேண்டும். அதுபோலவே தான் களங்கமற்றவள் என்று தெரிந்து. அழகப்பன் தன்னைக் கல்யாணம் செய்துகொள்ள முன்வரவேண்டும். இந்த இரண்டு காரியங்களும் நடந்து, தான் அழுக்கற்றவள் என்று நிரூபிக்கப்பட்டுவிட்டால் மறு நாளேகூட செத்து விடலாம்; அதுவரையில் உயிரைமாய்த்துக்கொள்வது கூடாது என்று உறுதி எடுத்துக்கொண்டாள். சரி! இப்போது எங்கே போவது? விடிந்து ஊரில் இருக்கமுடியாதே! அவமானச் சின்னம்போல வேதபுரத்து வீதியிலே எப்படித் திரிவது?—என ஏங்கினாள். அவளுக்குப் பாலகங்காதரத் தேவரின் ஞாபகம் வந்தது. அவருடைய வீடு பக்கத்திலே ஐந்துமைல் உள்ள அய்யனூர் பண்ணைதான் — அங்கே போய்விட்டால் என்ன என்று ஆலோசனை செய்தாள். ஆனால் அவர் பெங்களூரிலிருந்து நாளைக்குத்தானே வருவதாகச் சொன்னார் என்ற சந்தேகமும் எழுந்தது! எதற்கும் அய்யனூர் பண்ணைக்குப் போய்விட்டால், அவர் வரும் வரையில் அங்கிருந்து, பிறகு அவரோடு பெங்களூர் சென்று, வழக்குபற்றி ஒரு முடிவுசெய்து, அவரிடமே அழகப்பனைப்பற்றியும் கூறி, தன்னைக் களங்கமற்றவள் என்று அவனை நம்பச்செய்துவிடவேண்டும் என்று மனக்கோட்டைகள் கட்டினாள். தேவர்தான் தன்னை பண்ணையிலேயே தங்கச்சொன்னார் என்று கூறினால் அங்கு இடங்கொடுக்கமாட்டார்களா என்ன? — இப்படியெல்லாம் அவளே கேள்விகளைக்கேட்டு பதிலையும் கூறிக்கொண்டு வெகுவிரைவில் அய்யனூர் பண்ணைக்குப் போய்ச் சேர்ந்து

விடவேண்டுமென்ற முடிவுடன் எழுந்தாள். தன் தாயின் முகத்தைக் கடைசியாக ஒரு முறை தரிசனம் செய்து கொள்ள விரும்பினாள். கால்களால் கண்களில் ஒத்திக் கொண்டாள்.

"அம்மா! இதோ உன் மகன் இந்தக் கண்ணீரால் உன் காலைக் குளிப்பாட்டுகிறாள். இருந்து குளிப்பாட்டி, உன் சவச்சடங்குகளைச் செய்துமுடிப்பதற்கான பாக்கியம் எனக்கு இல்லாமலே போய்விட்டது!...பரவாயில்லை!...உன் மகன்மீதுள்ள குற்றங்களும், மாசுகளும் அகன்றுவிட்டால் அதுவே உனக்கு நான் செய்யும் இறுதிக் கடமைகளைவிட அதிக மகிழ்ச்சிதரக்கூடிய சேதியாக இருக்கும் உனக்கு!... என்னைச் சுமந்து பெற்று வளர்த்தாய்! நானும் சுகம் காணவில்லை! நீயும் சுகம் காணவில்லை!

"பூவோடும், மஞ்சளோடும் போய்விடுவோமென்று தானே தாயே; அப்பாவைப் பின்தொடர்ந்துவிட்டாய்!" மானம் போனதேயென்று அப்பா உயிர் நீத்தார்...கவலைப் படாதேயம்மா!.....மானமுள்ள குடும்பந்தான் சிவநேசர் குடும்பம் என்பதை ஊர் அறியச்செய்கிறேன். வருகிறேன் அம்மா!.....என்னைப்பெற்ற தாயே!..வருகிறேன்!"

சிந்தாமணி அந்த இருட்டில் வீட்டைவிட்டுப் புறப் பட்டாள். அய்யனாரை நோக்கி நடந்துகொண்டிருந்தாள். ஐந்துமைல் தொலைவு!.....விடிவதற்குள் போய்விடலாம் என்ற நம்பிக்கை அவளுக்குப் பூரணமாக இருந்தது. இரண்டு அல்லது மூன்றுமைல் தூரம் போயிருப்பாள்; வழியில் யாரோ ஒருவன் அய்யனார் நோக்கிப் போய்க் கொண்டிருந்தது தெரிந்தது. அவனது நடை நிதான மாயில்லை. தள்ளாடித் தள்ளாடி நடந்துகொண்டிருந்தான். இருட்டில் அவளுக்கு அவனைச் சரியாகத் தெரியவில்லை. அவன் குடிபோதையில் ஏதோ உளறிக்கொண்டு போகிறான் என்பதையும் அவள் புரிந்துகொண்டாள். அதனால் அவனை உற்றுப்பார்க்கவே அவளுக்குப் பயமாக இருந்தது. அவன் பக்கம் திரும்பாமலே வேகமாக அவனைக் கடந்து நடந்துகொண்டிருந்தாள்.

அவனைப் பார்த்துவிட்ட அவன், "ஏய் பொம்பள! யாரது?...யார்?" என்று கத்தினன், வாய் குழறியவாறு! சிந்தாமணி, இன்னும் வேகமாக—ஓட்டமும் நடையுமாக அய்யனூர் நோக்கிச் சென்றாள். அவன் வெகுதூரத்தில் அவளுக்குப் பின்னே வந்துகொண்டிருந்தான். அச்சமும், துக்கமும் ஆட்டிப்படைக்க சிந்தாமணி அய்யனூர் பண்ணைக்கு வந்துசேர்ந்தாள். பண்ணை வாசலிலே உள்ள அழகான வனைவுகளிலே நுழைந்து உள்வாயிற்பக்கம் வந்துசேர்ந்தாள். யாரோ வரும் அரவம் கேட்டு நாய் குரைத்தது....."யாரது?" என்ற ஒரு முரட்டுக்குரலும் அதைத்தொடர்ந்து கேட்டது. சிந்தாமணி பதில் சொல்லாமல் நின்றாள்.

"யார், இடும்பனா?" என்றபடி காவற்காரன் அருகே வந்து, "டார்ச்" விளக்கை மேலே அடித்தான். ஒரு பெண் நிற்பதைப்பார்த்து காவற்காரன் திடுக்கிட்டான், "யாரம்மா—என்ன வேணும்?" என்றான் காவற்காரன். உடனே சிந்தாமணி.....

"தேவர்..." என்று இழுத்தாள்! அதற்குள் அவன், "அய்யா இருக்காரே—பார்க்கணுமா?" என்று கேட்டுவிட்டான். அவளும் "ஆமாம்" என்று தலையசைத்துவிட்டாள். காவற்காரன், "இதோ வந்துவிட்டேன்" என்று சொல்லி உள்ளே போனான். இப்போது சிந்தாமணிக்கு வியப்பு ஏற்பட்டது—"எப்படி தேவர் ஊரிலே இருக்க முடியும்!—பெங்களூரிலிருந்து நானாக்குத்தானே வருவதாகச் சொன்னார்" என்று தனக்குள்ளே பேசிக்கொண்டாள்.

அப்போது காவற்காரன் ஓடிவந்து, "அம்மா! இதோ இந்தவூரில் உட்காரச்சொன்னார்—இப்போது வந்துவிடுவார்!" என்று கூறினன். சிந்தாமணியும் அவன் காட்டிய இடத்தில்போய் உட்கார்ந்துகொண்டாள். காவற்காரன் வெளியே போய்விட்டான்.

சிந்தாமணி தேவரின் வருகையை ஆவலோடு எதிர் பார்த்துக்கொண்டிருந்தாள். "சரக் சரக்" என்ற செருப்பின் சப்தம் கேட்டது. ஒலி வந்த திக்கையே நோக்கியவாறு

அவள் எழுந்துநின்றாள், தேவருக்கு மரியாதை அளிப்பதற்காக! ஹாலின் உட்பக்கக் கதவுப்புறம் போடப்பட்டிருந்த சிகப்புப் பட்டுத்திரை விலகிற்று.

அவர் வந்தார். சிந்தாமணிக்குத் தலை சுழன்றது. அவள் பெங்களூரில் பார்த்த பாலகங்காதரத் தேவரல்ல அவர்! "யாரம்மா?" என்றார் தேவர்! சிந்தாமணி, நடுக்கத்துடன் "மன்னிக்கவும்,...நான்...பாலகங்காதரத் தேவரைப் பார்ப்பதற்காக....." என்று தினறியவாறு கூறினாள்.

"நான்தான் பாலகங்காதரத் தேவர்...இந்த ஊரில் வேறு யாருமில்லை என் பெயர் கொண்டவர்களும், என் அளவு பெருமையுடையவர்களும்!" என்று கம்பீரமாக மொழிந்தார் தேவர். "அப்படியானால் நான் பெங்களூரில் பார்த்த ..பாலகங்காதரத் தேவர்?" என்று கேட்டாள் சிந்தாமணி. தேவருக்கு ஒன்றும் புரியவில்லை. தன் பெயரைச் சொல்லி யாரோ ஒருவன் இவளை ஏமாற்றியிருக்கிறான்போலிருக்கிறது என்று எண்ணினார். ஆனால், அதிலும் தெளிவில்லை. அதில் தெளிவு ஏற்படாததற்குக் காரணமே சிந்தாமணியின் தோற்றந்தான்! அவளைப் பார்த்ததுமே அவருக்குப் போதை தலைக்கு மேலேறி விட்டது.

வேங்கையின் இருப்பிடத்திற்கே மான் விருந்தாக வந்ததுபோல் ஆகிவிட்டது சிந்தாமணியின் கதை! தேவரின் பார்வை அவளுக்கு அச்சத்தை மூட்டினாலும், புதிதாகத் தோன்றியிருக்கும் குழப்பத்தை எப்படியாவது தீர்த்துக்கொள்ளவேண்டுமென்று அவள் துடித்தாள். "உன் பெயர் என்ன?" என்றார் தேவர். "சிந்தாமணி" யென்று கேட்டு இதழோரத்தில் புன்னகையை நெளியவிட்டார். "அப்படியானால் பெங்களூரில் வந்த தேவர் யார்?...உண்மையான தேவர் நீங்கள்தானா?" என்று மறுபடியும் ஆவலோடு கேட்டாள் சிந்தாமணி. "நானேதான் பாலகங்காதரத் தேவர் — அதில் சந்தேகமே வேண்டாம்!" என்று கனைத்துக்கொண்டார் தேவர். அப்போது காவற்காரன் அவசரமாக ஓடிவந்து "எஜமான்!...இடும்பன்..."

என்றான். உடனே தேவர் அவசரமாக எழுந்து, "சிந்தாமணி, கொஞ்சம் இரு! இதோ வந்துவிட்டேன்!" என்று கூறிவிட்டுக் காவற்காரனுடன் வெளியே போனார். சிந்தாமணிக்கு ஒன்றுமே விளங்கவில்லை. பெங்களூரின் தன்னை விடுவித்த டாலகங்காதரத் தேவர் யாராக இருக்கும்?—குழப்பிக்கொண்டாள்.

எழுந்து அந்த ஹாலிலேயே உலவினாள். அங்கிருந்த வாறு தோட்டத்துப்பக்கம் பார்த்தாள். தேவர் காவற்காரனுடன் அவசரமாக அந்தப்பக்கம் வந்தார். ஒரு கதவின் பக்கம் ஒளிந்துகொண்டு என்ன நடக்கிறது என்று கவனித்தாள். அவன் வரும் வழியில் சந்தித்தாளே; அந்த மனிதனுகத்தான் இருக்கவேண்டும்; ஒருவன் தள்ளாடிய படி தேவர் அருகே வந்தான்.

'எஜமான்! காரியத்தை முடிச்சுட்டேன்!" என்று வாய் குழறியபடி சப்தம் போட்டான்.

"டே—இடும்பா! சப்தம் போடாதே!" என்றார் தேவர்.

சிந்தாமணிக்கு இடும்பன் யார் என்று விளங்கிவிட்டது. வழியில் அவன் சந்தித்த ஆளாகத்தானிருக்கவேண்டும்; குரலும் அதுபோலத்தானிருக்கிறது என்று முடிவு கட்டிக்கொண்டாள். காவற்காரன் இடும்பன் மீது "டமர்ச்" விளக்கை அடித்தான்! இடும்பன் ஆடை முழுவதும் இரத்தக்கறையாக இருந்தது. அவன் கையிலே ஒரு பளபளப்பான அரிவாளும் இருந்தது. அந்த அரிவாள் முழுதும் இரத்தத்தால் நனைந்திருந்தது. சிந்தாமணிக்கு மயக்கம் வந்துவிடும்போலிருந்தது, சமாளித்துக்கொண்டு கவனித்தாள். இடும்பனைப் பார்த்துத் தேவர் கேட்டார்—

"என்னடா, என்ன ஆச்சு? யாரும் உன்னைப் பார்க்கலியே?"

"இல்லிங்க எஜமான்! நான் மாடியிலேயே காத்திருந்தேன். யாரோ இரண்டு பசங்கள்; ஒருத்தன் தான் அந்த நயினு முகம்மது; இரண்டு பேரும் ரொம்ப நேரம் முழிச்சிகிட்டு, என்னென்னமோ ரகளை பண்ணினானுங்க! ஆனந்திக்கும் அந்தப் பசங்களுக்கும் வம்புச் சண்டையெல்லாம்

நடந்தது. அந்தச் சண்டையிலே அவள் மயக்கம் போட்டு விழுந்தா !.....யாரும் பக்கத்திலே இல்லே !.....நான் ஓரே போடு அவள் தலையிலே போட்டுட்டு வந்துட்டேன்... இன்னேரம்...அவ தீர்ந்திருப்பா எஜமான் !''

சிந்தாமணிக்கு உடலெங்கும் வியர்த்துக்கொட்டியது. உதடுகள் உலர்ந்துவிட்டன. ''எங்கேயோ ஒரு கொலை காரன் கோட்டைக்குள் வந்து சிக்கிக்கொண்டோமே'' என்ற அதிர்ச்சி அவளைப் படாதபாடு படுத்தியது.

தேவர், இடும்பனைப் பார்த்து, ''சரி சரி !...வேட்டி, சட்டை, அரிவாள் எல்லாத்தையும் குழிவெட்டிப் போட்டு மூடுங்க...உம்.....உடனே.....பாக்கியெல்லாம் காலையிலே பேசிக்கலாம் !''.....என்று உத்தரவிட்டார். காவற்காரன் அந்தத் தோட்டத்து வேலியோரத்திலே ஆழமான ஒரு குழி தோண்டினான். அதிலே அரிவாளும், இரத்தக்கறை படிந்த இடும்பனின் உடைகளும் போட்டு மூடப்பட்டன.

''இடும்பா!...இன்னொரு மொந்தை குடிச்சிட்டு பேசாம போயி தூங்கு—போ ! போ !!'' எனக்கூறி, தேவர் ஹால் பக்கம் வந்தார், சிந்தாமணியுடன் பேசவேண்டுமென்ற ஆசையோடு !

23

அவசரத்தோடும் ஆவலோடும் உள்ளே வந்த தேவர் அங்கே சிந்தாமணி இல்லாதது கண்டு ஆச்சரியமடைந்தார். கனவிலே வந்ததுபோல வந்து மறைந்துவிட்டாளே; யார் அவள் ?—என்ற ஏக்கம் அவரைப் பிடித்துக்கொண்டது. ஆட்களை அனுப்பித் தேடச்சொன்னார். யார் கண்ணிலும் சிக்காமல் சிந்தாமணி தப்பித்துக்கொண்டாள். வேதபுரத்து வழியைத் தவிர வேறுவழி கிடையாது. அவள் அந்தப் பகுதியைவிட்டு வெளியேறுவதற்கு ! ஊருக்குள்ளே போகாமல் வெளிப்புறங்களிலேயே திரிந்துகொண்டிருந்தால் இரவு வந்ததும் ஊரைக் கடந்து போய்விடலாம் என்ற யோசனையும் பிறந்தது அவளுக்கு !

வேதபுரத்து இடுகாட்டுப் பக்கம் போகவேண்டு மென்று ஒரு ஆசை அவளை உந்தித் தள்ளியது. அங்கு தான் அவளுடைய தாயாரின் பிணம் வரவேண்டும். ஊராரின் கண்களில் படாமல் ஒளிந்திருந்தாவது அந்தக் காட்சியைப் பார்க்கவேண்டுமென்று துடித்தாள். மனப் போராட்டத்திற்கு இடமேயில்லாமல் சுடுகாட்டுப் பகுதி வந்துவிட்டாள். சுடுகாட்டைச் சுற்றியுள்ள புதர்கள் அவள் மறைந்துகொள்வதற்கு உதவிபுரிந்தன.

அப்போதுதான் கொலை செய்யப்பட்ட ஆனந்தியின் சவத்தை அடக்கம் செய்துவிட்டுப் போலீசாரும், வேலைக் காரவேம்பு முதலியவர்களும் போய்க்கொண்டிருந்தார்கள். சிந்தாமணியோ, புதரின் மறைவிலிருந்து, தன் தாயாரின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருந்தாள். அம்மாவை அடக்கம் செய்வதற்கு யாராவது அக்கறை எடுத்துக் கொண்டார்களோ; இல்லையோ—நாதியற்ற பிணமாகப் போய்விட்டார்களோ என்னவோ—என்றெல்லாம் எண்ணி யெண்ணிக் கண்ணீர் உகுத்தாள் சிந்தாமணி ஒரு நாலந்து பேர் சிவகாமியின் உடலைச் சுமந்துவந்துகொண் டிருந்ததைச் சிந்தாமணி பார்த்தாள். அந்த வேதனை யிலும் அவளுக்குச் சிறிது ஆறுதல் இருந்தது. அம்மாவை அடக்கம் செய்கிற அளவுக்காவது சிலர் கருணை காட்டினர் களே; என்ற ஆறுதல்தான் அது!

தாயின் உடலிலே தீ பிடித்துக்கொண்டது சிறிது நேரத்திற்கெல்லாம் தாயின் உருவம் சாம்பலாகிவிடும். அய்யோ—அவளைப் பெற்று வளர்த்து சீராட்டிப் பாராட் டிய மாதா, மண்ணோடு மண்ணாகக் கலந்துகொண்டிருக் கிறாள். சுடலைக்கு வந்தவர்கள், தங்கள் கடமை முடிந்து விட்ட திருப்தியுடன் அந்த இடத்தைவிட்டு அகன்றார்கள். சிந்தாமணி புதரின் மறைவிலேயிருந்து அன்னை எரிந்து கொண்டிருக்கும் இடம் நோக்கி ஓடிவந்தாள். தாய் தன லுக்கு இரையாகும் அந்தக் காட்சியைக் கண்ணீர் வடித்த வாறு பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் நெஞ்சிலே

எழுந்த குழுறல்கள் ! ... அப்பப்பா — விவரிக்கவொண்ணு வேதனைச் சுழல்கள் !.....சுடலையைவிட்டுப் புறப்பட்டாள். அய்யோ ; அவள் குடும்பம் எவ்வளவு சீக்கிரம் சிதைந்து விட்டது !.....பக்தியின் எல்லை வரையிலே போனவர் அவளது அப்பா !...ஆண்டவனின் திருவடிகளையே நம்பி வாழ்ந்த அவளது அம்மா !...அந்த இருவரையும் ஆண்டவன் இவ்வளவு பாடுபடுத்திவிட்டாரே ; என்ன குறை செய்தார்கள்—அவர்கள் ஆண்டவனுக்கு !

நாள் நட்சத்திரம் பார்க்காமல், வாயிற்படிகூட தாண்டமாட்டார் சிவநேசர்—அவ்வளவு பெரிய சனாதனி ! அவருடைய வீடு, இப்படி அல்லோலகல்லோலப்பட்டு விட்டது !...பெங்களூர் மாப்பிள்ளை சம்பந்தமாக முதன் முதல் கடிதம் எழுதுவதற்குக்கூட ஒரு நாள் முழுவதும் பஞ்சாங்கத்தைப் புரட்டி, நல்ல லக்னம் பார்த்தே கடிதம் எழுதினர். அப்படிப்பட்ட பக்தசிரோன்மணியை பகவான் பதைக்க விட்டுவிட்டார் ! அவர் குடும்பத்தையே பாலவன மாக்கிவிட்டார் !...மிச்சமிருக்கும் சிந்தாமணி, வேதபுரத் துக்குள்ளே நுழையாமல் வயற்புரங்களிலும், ஆற்றோரங் களிலும் அன்று பகல் முழுவதும் அலைந்துகொண்டே யிருந்தாள்.

அலையும்போதுதான் அவள் காதில் மற்றொரு திடுக் கிடும் செய்தி விழுந்தது. ஆனந்தி கொலை சம்பந்தமாக அழகப்பனும் நயினா முகம்மதும் கைது செய்யப்பட்டிருக் கிறார்கள் என்ற சேதிதான் அது !...அவளால் அந்தச் சேதியைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அழகப்பனை எப்படியும் விடுவித்தாகவேண்டும் என்று முடிவுகட்டினாள்.

அவனை அவள் தன் கணவனுகவே கருதிக்கொண் டிருந்ததால் அந்தத் துடிப்பு அவள் நெஞ்சில் எழுந்தது. ஆனந்தி கொலைக்காக அழகப்பன் கைது என்றதும், அவள் நினைவு, பாலகங்காதரத் தேவர் வீட்டு நிகழ்ச்சியின் மீதே சென்றது. உண்மையான பாலகங்காதரத் தேவரை

சிக்கவைக்கவேண்டுமென்றும், போலி பாலகங்காதரத் தேவர் யார் என்று கண்டுபிடிக்கவேண்டுமென்றும் தீர்மானித்துக்கொண்டாள்.

தீர்மானத்தின்படி அவள் வேலையைத் துவங்குவதற்கு இருளும் வந்து சேர்ந்தது. கால் வலியையும் பொருட்படுத்தாமல் நடந்து நடந்து, 'டி. எஸ். பி.' அலுவலகத்திற்கு வந்து சேர்ந்தாள். 'டி. எஸ். பி. மிக அக்கறையோடு சிந்தாமணி தெரிவித்த விஷயங்களைக் கவனித்தார். சிந்தாமணி தன் கதை முழுவதையும் 'டி. எஸ். பி'யிடம் வர்ணித்தாள். அவருக்குச் சிந்தாமணியின்மீது ஆழ்ந்த அனுதாபம் ஏற்பட்டது.

போலீஸ் படையுடனும், சிந்தாமணியுடனும் 'டி எஸ். பி' புறப்பட்டு நேராக அய்யனூர் சென்றார். அப்போது, பாலகங்காதரத் தேவர் வீட்டிலே பாரத காலட்சேபம் ஒரு பாகவதரால் அதிக விமரிசையாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. தேவர் ஒரு ஆடம்பரமான ஆசனத்தில் அமர்ந்து காலட்சேபம் கேட்டுக்கொண்டிருந்தார். ஊர் மக்களும் குழுமி இருந்தார்கள் போலீஸ் படை நல்ல சமயத்தில் 'திபு திபு' வென உள்ளே புகுந்தது. சிந்தாமணி போலீசாரிடம் தேவரும், இடும்பனும் இரத்தக் கறை படிந்த துணிகளையும். அரிவாளையும் புதைத்து வைத்த இடத்தைக் காட்டினாள். அந்த இடத்தைச் சோதித்ததில் இரத்தத் துணிகளும் அரிவாளும் அகப்பட்டன. அதே இடத்தில் தேவரும் இடும்பனும் கைது செய்யப்பட்டார்கள்!

போலி பாலகங்காதரத் தேவர் யார் என்று கண்டுபிடிக்கவேண்டுமே; அதற்காக சிந்தாமணியின் யோசனைப்படி போலீசார் சிந்தாமணியின் வீட்டில் பதுங்கியிருந்தார்கள். சிந்தாமணியிடம் பெங்களூரில் தெரிவித்திருந்தவாறு, போலி பாலகங்காதரத் தேவர் ஓரு வாடகை மோட்டாரில் வந்து இறங்கினர். போலீசார் அவரைச் சூழ்ந்து

கொண்டார்கள். 'டி. எஸ். பி.' அவரது வேடத்தைக் கலைத்தார். பாலகங்காதரர் மறைந்துவிட்டார். அந்த இடத்திலே டைகர்தான் நின்றுகொண்டிருந்தான். அவன் வலையில் தன்னை சிக்கவைக்கும் கருத்துடனேதான் தனக்கு உதவி செய்திருக்கிறான் என்பதைச் சித்தாமணி புரிந்து கொண்டாள். போலீசாருக்கு ஒரே மகிழ்ச்சி! தங்களை ஏமாற்றி ஓடிவிட்டவன் அகப்பட்டுக்கொண்டானே என்ற பூரிப்பு! அவர்கள் சிந்தாமணிக்கு நன்றி தெரிவித்து விட்டுப் பிறகு வந்து சந்திப்பதாகச் சொல்லி, டைகரை விலங்குமாட்டி இழுத்துக்கொண்டு புறப்பட்டார்கள்.

மறுநாள் காலையில் நயினா முகம்மதும், அழகப்பனும் விடுதலை செய்யப்பட்டார்கள். அவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. வேலைக்காரன் வேம்புவிடம் விவரம் கேட்டார்கள். அவன், "எனக்கு இந்தக் கொலையைப்பற்றி எதுவும் தெரியாது. வெளியில் எங்கேயோ போய்விட்டு, மருத்துவமனைக்குத் திரும்பும்போது யாரோ ஒருவன் மருத்துவமனையிலிருந்து ஓடிவந்து என்னைத் தெரிந்தவனைப்போல் "டே வேம்பு! ஆனந்தியை நயினா முகம்மது கொலை செய்து விட்டான்! இதோ, போலீசை அழைத்துவருகிறேன்"— என்று ஓடினான். போனவன் திரும்பவில்லை. அதற்குள் போலீஸ்வேன் ஒன்று இந்தப் பக்கம் போகவே அவர்களை நிறுத்தி அழைத்துக்கொண்டு மேலே வந்தேன். எனக்கு அப்போது அவ்வளவுதான் தெரியும்!" என்றும் விளக்கினான்.

"ஆனந்தியைப் பாலகங்காதரத் தேவர் கொலைசெய்ய வேண்டிய அவசியமென்ன?" என்று கேட்டான் அழகப்பன்.

அதற்கு வேம்பு, "சில நாட்களாகவே தேவர், ஆனந்தியை அவரது பங்களாவுக்கு வருந்தி வருந்தி அழைத்ததாகவும்—அதை அந்த அம்மாள் மறுத்ததால் இப்படிச் செய்திருப்பார் என நினைக்கிறேன்" என்றும் யூகம் தெரிவித்தான்.

இந்த உண்மைகளையெல்லாம் சிந்தாமணிதான் வெளிப்படுத்தித் தங்களையும் விடுவித்தாள் என்ற செய்தி கேட்டு அழகப்பன், சிந்தாமணிமீது அடங்காத மதிப்பு வைத்தான். சிந்தாமணிகளங்கமற்றவள் என்பதற்குவேம்பு வும் ஆதாரங்களை அள்ளி வீசினான்.

சிந்தாமணியிடம் சென்று மன்னிப்புக் கேட்டுக் கொள்ளவேண்டுமென்று நயினுவிடம் தெரிவித்தான். நயினுவுக்கோ ஆனந்தியின் முடிவால் ஏற்பட்ட சோகம் தீரவில்லை. அவன் ஊமையாகவே ஆகிவிட்டான், கண்ணீர் வடித்தவாறு தலையசைத்தான்.

பிறகு, அழகப்பனும் நயினுவும்சிந்தாமணி வீட்டுக்குப் புறப்பட்டார்கள். வழியில் அன்றைய தினசரிப் பத்திரி கையை வாங்கிப் புரட்டிப் பார்த்தான் அழகப்பன். அதில் பெங்களூர் இரயில் அபின் கடத்தல் வழக்கில் உண்மை யான குற்றவாளி சிக்கிவிட்டாள் என்றும், சிந்தாமணி மீது குற்றமில்லையென்று ருஜுவாகிவிட்டதென்றும் செய்தி காணப்பட்டது.

சிந்தாமணி சபதம் எடுத்துக்கொண்டது போலவே, விபச்சாரப் பட்டத்திலிருந்தும்—அபின் கடத்தல் குற்றத்தி லிருந்தும் தன்னை விடுவித்துக்கொண்டு — தாமுரு மாசற்ற மணிவிளக்கு என்பதை உலகுக்கு நிரூபித்து விட்டாள். அந்த மணிவிளக்கிடம் மன்னிப்புக் கோர அழகப்பன் ஓடிவந்தான் நண்பன் நயினுவுடன்...!

சிந்தாமணி, அன்றைய தினசரிப் பத்திரிகையைப் பார்த்தவாறு ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள். அழகப்பன் ஓடிவந்து அவள் காலைக் கட்டிப்பிடித்துக் கொண்டு "சிந்தாமணி! என்னை மன்னித்துவிடு!" என்று கதறினான். அவள் அவன் காலில் விழுந்துக் கண்ணீர் பொழிந்தாள்.

"இப்போதாவது என்னை நம்புகிறீர்களா?" என்று கேட்டாள் சிந்தாமணி—அவள் குரல் தழுதழுத்தது!

"நம்புகிறேன்-சிந்தாமணி! என்னை மன்னித்துவிடு!" என்று அழுதான் அழகு!

"அப்படியானால்.....இப்போதே நமது திருமணம் நடைபெற்றுக வேண்டும்!"—சிந்தாமணி தேம்பியவாறு கூறினாள்.

அழகு தன் மோதிரத்தைக் கழற்றி அவள் கையில் அணிவித்தான். இருவரும் ஒருவரையொருவர் புன்னகை தவழப் பார்த்தனர்.

அழகப்பன் அவளைப் பார்த்துக்கொண்டிருக்கும் போதே அவள் தடாலெனத் தரையில் சாய்ந்தாள்.

"சிந்தாமணி" என்று தாவித் தூக்கினான் அழகப்பன். அவள் மெல்ல விழி திறந்து இதழசைத்தாள்.

"என்னை மன்னித்துவிடுங்கள்: நான் கொடிய விஷம் சாப்பிட்டிருக்கிறேன்" என்றாள். அழகப்பனும் நினைவும் திடுக்கிட்டனர்.

"ஒரு நாள்...வெள்ளிக்கிழமை...உங்கள் வருகையை ஆவலோடு எதிர்பார்த்தேன்.....இன்றுகூட வெள்ளிக் கிழமைதான்...அந்த ஆவல் பூர்த்தியாயிற்று!" என்றபடி அவன் முகத்தில் ஒரு முத்தமிட்டான்...பிறகு அவள் கண் விழிக்கவேயில்லை!

சபதத்தை நிறைவேற்றிக்கொண்டு அந்தப் புள்ளி மயில் சவமாகிவிட்டது, வெள்ளிக்கிழமையிலே!

வெள்ளிக்கிழமையிலே பெண்வீடு பார்க்க வந்த நண்பர்கள் இருவரும்..... தங்கள் வாழ்க்கை ஏட்டிலே அழியாத இடம் பெற்றுவிட்ட இரண்டு பெண்மணிகளையும் நினைத்து நினைத்து நெஞ்சு நெகிழ்ந்தவாறு பெங்களூர் திரும்பினர்கள்.

